(சக) அஹோ குருகந்தந! மோக்ஷார்த்தி செய்யவேண்டிய சாஸ்தி ரோக்தமான ஸகலகர்மங்களுக்கும்வேண்டியது (வியவஸாயரூபமான) ஞ புத்தி ஒன்றுதான். வியவஸாயமாவது நிச்சயம். காமியார்த்திசெய்யும்கருமங் களுக்கோ (வியவஸாயமென்கிற நிச்சயமல்லாததான) ட புத்தி பலவாயிரு க்கும். அதேனென்னில்:—முதலிற்சொன்ன மோக்ஷார்த்தியானவன் மோக்ஷ மென்கிற ஒரேபலத்தைநாடியவனுகையாலும், (சாஸ்திரமும் அந்த ஒருபலத் தைக்குறித்தே ஸகல கருமங்களையும் விதிப்பதுபற்றி) சாஸ்திரார்த்தம் ஒன்று கையாலும் * ஒன்றேயாம். இந்த காமார்த்திக்கோ, புத்திரன், பசு அன் னம் என்று பலம் பலவாயிருக்கையாலே புத்தியும் பலவாயிருக்கும். அதிலு ம்தர்சபூர்ணமாஸாதி கருமங்கள், (ஒருபலத்துக்காக விதிக்கப்பட்டவையா யினும் அவற்றுள் ஆயுஸ்முதலிய அவாந்தரபலங்களையும் அபேக்ஷிக்க வே ண்டுகையாலே அதற்குத்தக்கபடி) ஒவ்வொன்றும் பல கிளைகளுடன் கூடி யதாயிருக்கும். [ஆக இதனால் நித்யநைமித்திககருமங்களில் பிரதானமாயும் அப்பிரதானமாயும் கூறப்படுகிற எல்லா பலங்களிலும் ஆசையற்று, மோக்ஷ மொன்றையே உத்தேசித்து ஸகல கருமங்களையும் அநுஷ்டிக்கவேண்டுமெ ன்றும், தன் வருணத்துக்குவகுத்த காமியகருமங்களையும் அப்படியே நித் ய நைமித்திக கருமங்களோடு ஒன்றுபடுத்திச் சக்திக்குத்தக்கபடி அநுஷ்டி க்க வேண்டுமென்று மாயிற்று.]

(அ-கை.) காம்யகர்மாதிகாரிகளை நிந்திக்கிறார்.

யாதிஸாஉ ஷிதாம்வாவம் வ்யவஹத்ருவிபஶ்சிதः।
வெஹவாஹுரதாःவாயுந நாநாஜ்யஹ்ஸீதிவாதிநः॥ சஉ॥

காமாதாநஷ்வாரா ஜந்மகர்மபலப்ரதாம்।
க்ரியாவிஶேஷபஹுலாம் ஹொமெஶ்வர்யகதிம்ப்ரதி॥ சஊ॥

ஹொமெஶ்வர்யஜுஷாம்தாந ஜ்யாவஹ்யதவெதவாம்।
வ்ருவஹ்யாயாதிகாவை-ஜி ஹ்ஸாயள நவியீயதெ॥ சச॥

ஞ இதுவும் ஆத்மாவினுடைய யதார்த்தக்ஞாநத்தோடு அதாவது-'ஆத் மா, தேஹாதிவிலக்ஷணன் நித்யன்' இத்யாதியான முற்கூறிய ஞாநத்தோடு கூடியிருக்கவேண்டும்.

ட இதற்கு ஆத்மாவின் யதார்த்தக்ஞாநம் வேண்டுவதில்லை; கேவலம் தேஹத்தைக்காட்டிலும் வேறான ஆத்மா உண்டு' என்கிற அறிவுமாத்திரம், போதும்; அவ்வளவுமாத்திரத்தில் சுவர்க்கம்முதலிய பலனைக்கோருகையும், அதின் ஸாதநத்தை அநுஷ்டிக்கையும், அந்த பலத்தை அநுபவிக்கையும் விரோதமின்றி ஸம்பவிக்கலாமிறே?

* என்போலென்னில்:—ஆக்நேயம் முதலிய ஆறுயாகங்களும், (பிர யாஜம் அநுயாஜம்முதலியஅங்கஸஹிதமாய் ஸ்வர்க்கமென்கிற ஒரேபலத்து க்கு ஸாதநமானமைகொண்டு) சாஸ்திரார்த்த மொன்றுகையால் எப்படி த த்விஷயமான புத்தியும் ஒன்றுயிற்றே! அப்படியே யிங்கு மோக்ஷமென்கிற ஒரேபலத்தை உத்தேசித்தமைகொண்டு சாஸ்திரார்த்த மொன்றுகையால் ஸ கல கர்மங்களுக்கும் வேண்டிய புத்தியும் ஒன்றேயாம்.

(சஉ-சங-சச)சுவர்க்காதிபோகங்களில் மிக்க வாசையுடையராய், அந்த சுவர்க்காதிகளைக்காட்டிலும் வேறு புருஷார்த்தம் கிடையாதென்று வாதிக்கின்ற சில அறிவீனர்கள், வேதத்தில் மேலெழப் பார்க்கும்பொழுது ரமணீயமாய்த்தோற்றுகிற ஸ்வர்காதிபலங்களைச்சொல்லும் சில வாக்கியங்களைப் பற்றிக்கொண்டு, அவை போகைசுவரியங்களைப்பற்றிச் சொல்லுமவையென்றும், தத்வஞானமில்லாமலே கேவலம் கிரியாவிசேஷங்களை மாத்திரம் அதிகமாயுடையனவென்றும், சுவர்க்காதி பலங்களைக்கொடுத்து முடிவில் புனர்ஜன்ம கரும மென்கிற பலத்தைத் தருமவையென்றும்; இப்படி அந்த போகத்திலுண்டான ஆசையிலால் வீண்வாதம் செய்கிறார்கள். போகைசுவரியங்களைச்சொல்லும் அந்த வாக்கியத்தால் அவாளுடைய ஞானம் அபஹரிக்கப்பட்டமையால், அவர்மனதில் ஒருபொழுதும் முற்கூறிய விவசாயரூப நிச்சயம் உண்டாகவேமாட்டாது. ஆகையால் அவர்களைப்போல் மோக்ஷார்த்தியானவன் ஒருபொழுதும் காம்யகருமங்களில் சிறிதும் மனம் வைக்கலாகாது.

(அ-கை.) மேற்சொல்லியபடி புனர்ஜன்மாதிகளைக்கொடுக்கின்ற அற்பபலத்துக்குஸாதகமாகக் காம்யகருமங்களும் சில உண்டென்று வேதத்தில் சொல்லுகிறதாகத் தெரிகிறபடியால், ஜீவன் உஜ்ஜீவிக்கிற விஷயத்தில் ஆயிரம் மாதாபிதாக்களுக்கு அதிகமாக நன்மைசெய்வதான வேதம், அவைகளை ஏன் சொல்லுகிறது? அப்படி வேதம் விதித்தபின்பு அக்கருமங்களைத்தான் எப்படி த்யாஜ்யமாகச் சொல்லலாமென்னில் சொல்லுகிறார்.

த்ரைகு3ண்யவிஷயாவேதா3 நிஸ்த்ரைகு3ண்யோ4வார்ஜுந|
நிர்த்3வந்த்3வோநித்யஸத்த்வஸ்தோ2நிர்யோக3க்ஷேம ஆத்மவான்॥ சுரு॥
யாவாநர்த2உதா3பாநே ஸர்வதஸ்ஸம்ப்லுதோத3கே|
தாவாந்ஸர்வேஷுவேதே3ஷுப்3ராஹ்மணஸ்ய விஜாநத:॥சுசு॥

(சரு-சசு) ஸாத்விகர்-ராஜஸர்-தாமஸர் என்கிற மூன்றுவிதமான புருஷர்கள் உலகத்திலுளர்; அவரவர் குணத்துக்குத்தக்கபடி இதமாக ஸ்வர்க்க முதலிய இந்த அற்பபலன்களை வேதம் தெரிவிக்கிறது. அப்படி தெரிவிக்காமற்போனால் இவர்கள் ரஜோகுண தமோகுணங்களுக்கு வசப்பட்டவராகையாலே ஸாத்விகமான மோக்ஷபலத்தைக் கண்ணெடுத்தும் பாராமல், தங்களுக்கிஷ்டமான ஸ்வர்க்காதிபலத்திற்கு உபாயம் இதில் ஏதேனும் உண்டோவென்று பார்த்து இதில் காணுவிடில் அந்தபோகத்தில் உண்டான ஊற்றத்தினால் உபாயமாகாதவைகளையெல்லாம் உபாயமாகப்பற்றி அழிந்துபோவார்கள். ஆனதுபற்றியே வேதம் த்ரிகுணவிஷயமாயுள்ளது. நீயோ அதில் கட்டுப்படாமல் இப்பொழுது நீ இருக்கிற ஸத்வகுணத்தையே வளர்த்துவந்து ஸம்ஸாரஸ்வபாவத்தில் தட்டாமலிருக்கக்கடவாய்; எப்படியெனில்-ஆத்மப்ராப்திக்கு உபாய மெதுவோ அதற்குப் புறம்பாகவருமதையும் வந்திருப்பதையும் விட்டு, கேவலம் ஆத்மஸ்வரூபத்தை மாத்திரம் தேடுவதில் முயன்றவனாயிரு; இப்படியிருக்கிற உனக்கு ரஜஸ்ஸு,தமஸ்ஸு என்கிற குணங்கள் கெட்டு ஸத்வம் ஒன்றே தலையெடுத்திருக்கும்; வேதத்தில் எல்லாம் சொல்லியிருந்தேயாகிலும் யாவும் யாவருக்கும் வேண்டியதில்லை; ஸகலருக்கும்

உபயோகமான ஒருகுளத்தில் தாகமெடுத்தவனுக்குத் தண்ணீர் ஒன்றுமாத்திரம் வேண்டுமோ மற்றதும் வேண்டுமோ? அதுபோல மோக்ஷகாமனுக்கு மோக்ஷ உபாயத்தைத் தவிற மற்றொன்றும் வேண்டுவதில்லை.

(அ-கை.) ஆகையால் ஸாத்விகனை மோக்ஷார்த்திக்கு இவ்வளவுதான் வேண்டியதென்கிறார்.

கஉ-ணை ?)வாயிகாரஸ்வை ஸாஹஸ்ரை-கஹாவ-ந ॥
ஸாகஉ-ஹமுஹை-ஹ-ஹு-ம உ-ராதவஸ்ஹாஸ்வகஉ-ணி॥ சஎ॥

(சஎ) ஏதேனும் ஒருபலத்தைத் தருவதாய்ச் சொல்லப்படுகிற (நித்யநைமித்திக காம்ய) கருமங்களைச்செய்வதில்மாத்திரம் உனக்கு அதிகாரமேயல்லது அந்த பலத்தைக்கோறுவதிலில்லை. ஏனெனில்! பலத்தில் ஆசையுண்டாகில் அது ஸம்ஸாரத்தை உண்டாக்கும்; ஆசையில்லையாகில் அது எனது ஆராதநத்தில் சேருமாதலால் மோக்ஷத்தை உண்டாக்கும். கருமத்திலும் அதின்பலத்திலும் 'நான் செய்தே'னென்கிற (கர்த்ருத்வ) புத்தியும் கூடாது. ஆனால் (யுத்தம் செய்யமாட்டேனென்று நீ இப்பொழுதுசொன்னது போல) கருமத்தைமாத்திரம்ஒருபொழுதும் கைவிடலாகாது.

(அ-கை.) இதையே பிரகாசப்படுத்துகிறார்.

யொ-மஹ்ஸ:கு-ர-கஉ-ராணி ஸஜ்ஜ்ஹ்ருக்³ராய நஜ்ஜய।
ஸிஜ்ஹ்ருஸிஜ்ஜ்ஹ்ருராஸ்ஹஸொ-ஹ-மிக்³ரா ஸஉக்³ரம்யொ-மஹஉவ்ருதே॥ சஅ॥

(சஅ) இராஜ்யம், பந்து முதலியவற்றில் பற்றையொழித்து யோகநிஷ்டனாய், அதாவது-யுத்தாதிகளில் ஜயம் முதலியது கிடைத்தாலுங் கிடையாவிட்டாலும் அதனால் மனம் சலியாமல் ஒரேமனதாயிருந்து யுத்தாதிகருமங்களைச் செய்யக்கடவாய். (இங்கே யோகமாவது - ஸித்தி அஸித்திகளிரண்டிலும் மனந்தாழாமை.)

(அ-கை.) ஏனிப்படி இதைப் பலகாலும் அருளிச்செய்கிறதென்றால்.

உ-மரணஹ்ருவ்ரம்கஉ-ந வை-ஜியொமாஜ நஜ்ஜய।
வை-ஜளஸ்ரரணஉந்நிவ கூ-ரவணாஸ்ஹவஹ்ருஹ தவ்ம்॥ சக॥

(சக) மேற்சொன்ன † புத்தியோகத்துடன் கூடிச்செய்கிற கருமத்தைத்தவிர மற்ற கர்மமெல்லாம் மிகவும் இழிவானது; ஏனெனில்! இது பரமகல்யாணமான மோக்ஷத்தைத்தருமது: மற்றது நித்தியதுக்கமானஸம்ஸாரத்தை. ஆகையால் மேற்சொன்ன புத்தியை விடாமலிரு. பலனில் ஸங்கத்தோடு கருமம் செய்பவர்கள் ஸம்ஸாரத்தில் கட்டுண்பார்கள்.

வை-ஜிய-கௌ-ஜஹா-தீஹ உ-ஹவ-கூ-ய-தஉ-ஹ்ரூ-ய-தெ।
தஹ்ரா-உ-ராமாயய-ஜ்ருவ்ர யொ-ம: கஉ-வ-கள-ஸ்ரமு॥ ரo॥

(ரo) புத்தியோகத்துடன் கூடியவனே கர்மத்தைச் செய்தவனுய்க்கொண்டு, அநாதிகாலமாய்ப் அளவில்லாமல் ஸம்பாதித்த ஸம்ஸாரஹேதுவா

---

† பிரதானபலத்திலும் இடையிலுண்டாகும்பலமான ஸித்தி அஸித்திகளிலும் மனம் வையாமையாகிற புத்தியோகத்துடன்.

ன புண்ணியபாபங்க ளிரண்டையும் ஒழிக்கிருன். ஆகையால் நாம் சொன் ன புத்தியோகத்தையடைய ஸித்தப்படி. கருமஞ்செய்வதில் இதுதான் விசே ஷலாபமார்த்தியம். [மஹாஸமர்த்தரூலே ஸாதிக்கத்தக்கதென்று பொருள்.]

கஉ-ஜ்ஜம்வை-ஜ்யா-காஹி ஹ்ரும்-தரு-க்ரூா஫-நீஷிணஃ।
ஜந்மை-நவி-நி஫-ந்-தூ-காஃ வ஫ம்மவ்ய-ந்-நாஶயந்॥ ஙக॥

(ஙக) புத்தியோகத்தோடு கூடியவர்கள் பலாபேக்ஷையின்றிக் கரும த்தைமாத்திரம் செய்துவந்து, அதனல் ஜந்மமென்கிற கட்டைவிட்டுநீங்கி ஆரோக்கியமான பதத்தை (மோக்ஷத்தை) அடைகிரு்கள். இது ஸகல உபநிஷத்துகளிலும் பிரஸித்தம்.

யஜ்ஞா-தஜ்ஞோஹகஅ்யும் வை-ஜ்ஜிவ-ந்-தி-தாரிஷ-ந்-தி।
தஜ்ஞாமஜ்ஞாஸி-நிவெ-ந்-ஜ்ஞம் ஸ்ரூா-தவ்-ய-ஸ்ரூ-தஸ-ந்-ய॥ ஙஉ॥

(ஙஉ) நாம் கீழ்ச்சொன்னபடி கருமத்தில் நின்று பாபங்களைத் தொலைத்து, உன்புத்தியானது அற்பபலங்களில் கால்தாழப் பண்ணும் மோ ஹமென்னுங் கலக்கத்தை எப்போதடக்குமோ அப்பொழுது, நாம் முன்னை தியாஜ்யமாகச்சொன்னதும் இனிசொல்லப்போகிறதுமான பலம் முதலிய வற்றில் உனக்கே வைராக்யம் உண்டாகும்.

(அ-கை) ஆத்மாவை உள்ளபடி அறிந்து, மோக்ஷத்தைத் தவிர மற் றதை நாடாமையாகிற புத்திவிசேஷத்துடன் கூடிக் கருமத்தை அநுஷ்டித் தால் யோகம் ஸித்திக்கு மென்கிரு். [யோகம் - ஆத்மதரிசநம்.]

ஸ்ரூ-திவி-ப்ரதிவ-ந்-ந தெ யஜ்ஞாஸ்யாவ்ய-ந்-தி நிஸ்ச்ரூலா।
ஸமாதாவசலாவை-ஜ்ஞி ததா யோகமவாப்ஸ்ய-ந்-ஸி॥ ஙங॥

(ஙங) அர்ச்சுந! நம்மிடத்தில் கேட்டபின்பு, ஆத்மாவானது ஸகல பதார்த்தங்களிலும் வேரூய் நித்ய நிரதிசய சூக்ஷ்மமாய் இருக்கிறதென்று தெளிந்து (எப்பொழுதும் ஒரே ரீதியாயிருக்கிற) உன்புத்தியானது, (பற் றின்றிச்செய்த கருமாநுஷ்டாநத்தால் நிர்மலமான) மனதில் எப்பொழுது நிலைக்குமோ அப்பொழுதுதான் யோகத்தை அடைவாய். [என்ரூல் சாஸ்திர த்தால் பிறந்தஆத்மஞாநத்துடன்செய்யுங் கருமயோகமானது (ஸ்திதப்பிரக் ஞதை என்கிற) ஞாநநிஷ்டையை உண்டாக்கும்; அது (யோகமென்னும்) ஆத்மதர்சநத்தை உண்டாக்குமென்றதாயிற்று.]

(அ-கை.) இவ்வாறு கண்ணன் அருளிச்செய்ய அர்ச்சுநன், கர்மயோக த்தால் ஸாதிக்கவேண்டியதாயும் யோகத்துக்கு ஸாதகமாயுமிருக்கிற ஸ்திதப் பிரக்ஞதை என்னும் ஞானநிஷ்டையின் ஸ்வரூபத்தையும், அந்த நிஷ்டை யுள்ளவன் செய்யும் அநுஷ்டாநத்தின்விதத்தையுங் கேட்கிரு்.

கஜ்ஜ-நஉவாச।ஸ்தி-தப்ரஜ்ஞ-ஸ்ய காபாஷாஸமாதிஸ்தஸ்ய கெஶவ।
ஸ்தி-ததீஃ கிம்ப்ரபாஷெத கிமாஸீத வ்ரஜெத கிம்॥ ஙச॥

(ஙச) கிருஷ்ண! ஸ்திதப்பிரக்ஞனுடைய ஸ்வரூபமெப்படிப்பட்ட து? ஸமாதிநிஷ்டனஅவன் பேசுவ தென்ன? நடப்பதெப்படி? எவ்விதஆ ஸநத்திலிருப்பான்? அதை அருளிச்செய்யவேண்டும்.

(அ-கை) வருதத்தியை (அதாவது நடவடிககையைச்) சொன்னபோதே ஸ்வரூபமும சொனனதாகுமெனறு வருதத்தியை அருளிசசெடகிறார.

ஸ்ரீஹமவா நுவாவ॥ வுஜஹாதியஹாகாசாநு ஸவடுாநுவாயுடுஜெநாமதாநு। கூதெநுவாதநாதுஷுः ஸ்ரிதவுஜுகுத வுதெத॥நுநு॥

(நுநு) கேளாய் பார்ததனே' ஆத்மா ஒனறையே பறறிகொண்டு ஸகதுஷ்டணய, அதனல் அதறகுப் புறம்பாயுளள ஸகலமான காமங்களையும எப்பொழுது வாஸனையோடே விடுகிறானே, அப்பொழுது இவனை ஸ்திதபிரகஞனெனகிறது இதுதான ஞாநநிஷடையின் எல்லையான நானகாம் அவஸதை. [அவஸதை=நிலைமை.]

(அ-கை) இப்படி ஞாநநிஷடையின நான்காம் அவஸ்தையை அருளிசசெயது, அதறகுமுநதிய § மூனறும அவஸதையை இநிலஅருளிசசெயகிறார.

உழுவெஷுநுஜிஹுஜிநா ஸுவெஷுவிமதஷவுபுஹः।
வீதாராமஹுயகுரூாயः ஸ்ரிதயீஜுுநிரவுதெத॥நுகூ॥

(நுகூ) (தனகுப பிரியமானதொனறு தவறிபபோதல முதலிய) துகக ஹேதுகளுணடானபோது துகிகாமலும சுகஹேதுவான அவை நேநதபோது அவறறிலாசைவையாமலும † ராகம, * பயம, ‡ கோபம இவைகளறறு ஆதமாவைச சிநதிததுககொணடேயிருபபவன, ஸ்திதபிரகஞன என்னபபடுவான [இநத அவஸததை நான்காம் அவஸதையோடு ஒததிருநதாலும நெருப்பிலபூதத கீறுபோல இதில் விஷய வாஸனை மாததிரமிருக்கும, இதுவுமிலலை அதில எனபது விசேஷம.]

(அ-கை) அதறகும் முநதிய $ இரண்டாவது அவஸ்தையை அருளிசசெயகிறார.

யஸுவுதாநஹிவுஷுஹ ஸுதகுவுாவுபுஷுஹாபுஷுஹுः।
நாஹிநநுதிநவெஷுடி தவுவுஜுாவுதிஷ்டிதா॥நுஎ॥

(நுஎ) தனக்குப்பிரியமானது எது கிடைததாலும் அதில அதிகஸநேகம்வையாமல, சுப அசுபஙகளை யடைநதபோது ஸநதோஷமும துயரமுமிலலாமலிருப்பான யாவன, அவன ஸ்திதபிரக்ஞனெகிறான

---

§ மூனறும் அவஸ்தை - இதறகு ஏகேநதிரியாவஸதையெனறு பெயர.

† ராகம்=தான அடையாத வஸதுவிலுண்டான ஆசை

* பயமாவது=பிரியமானது தவறுகைகாகும, அபபிரியமானது நேருகைக்கும ஹேதுவைகாணபதால வரும துககம.

‡ கோபமாவது=பிறருககு துக்கம உணடாகுவதறகாகத தனமனதில் உண்டாகும விகாரம.

$ இதறகு வயதிரேகாவஸததை யெனறு பெயர.

(அ-கை) அதறகு மூநதிய § முதல அவஸததை சொல்லுகிறது.

யோவஸம்ஹரதெதவாயம கூர்மொஜோஜா நீவலவஜுஸ |
இந்ரியாணீந்ரியாயெப்ய ஸ்தவ ஸ்ரஜ்ஞாப்ரதிஷ்டிதா॥ நுஅ॥

(நுஅ) இநதிரியஙகள விஷயங்களினததேடி யோடுமபொழுது அவைக ளைப் போகவொடடாமல (ஆமையானது தன அவயவததை யிழுதது கொ ள்ளுவதுபோல) இழுதது, மனதை ஆதமாவில ஸ்தாபிககிறுன யாவன, அவ னும ஸ்திதபபிரகஞனுவான , [இநநானகு நிலைகளில்லும முநதிய நிலைகளுப் பிநதியநிலை, காரணமெனறறிக]

(அ-கை.) இபபொழுது ஞாநநிஷடையை அடைவது துலபமெ றும, அதை அடைவதறகு உபாயம ாதெனறும அருளிசசெயகிறுர.

விஷயாவிநிவதநதெ நிராஹாரஸ்யதெஹிநஃ |
ரஸவஜுஂரஸொபயுஸ்ய பரம்ருஷ்ட்வாநிவதநதெ॥நுக॥

(நுக) இநதிரியஙகளுகது ஆஹாரம * சபதாதிவிஷயஙகள, அநதஆஹா ரததை அவறறிறகுகொடாமல யாவனுருவன படடினிபோடுகிறுனே அவனை அவவிஷயஙகள அணுகமாடடா, ஆலை அவறறிலமாதரம அவ னுகது ருசி இருகதும. அதுவும (விஷயஙகளைசகாடடிலும உதகிருஷடனுய அதிகசுகருபனுயிருகதிற) ஆதமாவை ஸாகஷாதகாரிததால அடியறறுபபோம.

யததொஹ்யவிகுளஸ்ய புருஷஸ்ய விபஶ்சிதஃ |
இந்ரியாணிப்ரமாதீநி ஹரந்திப்ரஸபம்மநஃ॥சுo॥

(சுo) ஆதமதரிசநமினறி விஷயஙகளில ஆசைபறறறுது, அநத ஆசை யொழியாமல் ஆதமதரிசநததுகது யததநமசெயதால அவன எததனைவித்து வாலுகிலும இநதிரியஙகள பலமுளளவையாகையால அவன மனதை மேல் விழுநது அபஹரித்துவிடும [இபபடி இந்திரியஜயமும, ஆதமதரிசநமும "இது ணடாலை அதுணடாகும, அதுணடாலை இதுணடாகும எனறு" ஒனறுக் கொனறு காரியமாயும் காரணமாயுமிருபபதுபறறி ஞாநநிஷடைகிடைபப து அரிது]

தாநிஸவஜாணிஸம்யமய யுக்தஆஸீதமத்பரஃ |
வஶெஹியஸ்யேந்ரியாணி தஸ்யப்ரஜ்ஞாப்ரதிஷ்டிதா॥ சுக॥

(சுக) ஆனதுபறறி விஷயததில ஆசையிலை பாயகினற இநதிரியங் களை அடககி (மனதுகது) கேஷமஸதானமான எனனிடததில் மனதை நிறு ததி ஒரேமனதாயிருகககடவன [மனது, எனவழியிலதிரும்பினபொழுதே ஸகலபாபமும தொலைகினறமையால விஷயததில நசையறறு நிர்மலமாய

---

§ இதறகு யதமாநஅவஸததையெனறு பெயர

* சபதாதி விஷயஙகளாவன - சபதம், ரூபம், ரஸம், கந்தம், பரி சம, முதலியன.

விடுவதோடு இந்திரியங்களையும் தனக்கு வசப்படுத்திக் கொள்ளுகிறது. *]
இந்திரியங்கள வசமாலல் (ஆத்மதரிசனத்துக்குப்) போதுமான வல்லமை
மனதிலுண்டாகின்றமையால் ஆத்மஸாக்ஷாத்காரம் ஸித்தம்.

யதாயதெதாவிஷயாநுவர்ம ஸஹவைஷமவைஜாயதெ|
ஸஹாதத்ஜாயதெதகாமஃ காமாதெத ராயொஹிஜாயதெ||சூஉ||

கெராயாஹவதிஸதொஹ ஸதொஹாசுஷ்யதிவிஸ்ரஃ|
ஷ்யதிஸ்ரம்ஸாஹ புத்நாசெத் நாஸாசுவ்ரணஸ்ருதி||சூக||

(சூஉ-சூக) விஷயத்தில் ஆசை அறுமலும் எனனிடத்தில மனதை நிறுத்தாமலுமிருக்கிற ஒருவன் இந்திரியங்களை அடக்கிவைத்தாலுகிலும், அவனுக்கு அநாதியான பாபவாஸனை உண்டாகையாலே, விஷயசிந்தை ஒருக்காலும் அவனல்ஒழிக்கப்போகாது; அப்படி விஷயத்தில்சிந்தையுள்ளவனுக்கு ஸங்கமானதுமென்மேலும் விருத்தியாகிறது. அதினால் † காமம் விளைகின்றது; அதுகோபத்தை உண்டாக்கும்; எப்படியென்றால்:—ஆசைப்பட்டதுகிட்டாவிடில் கிட்டநிற்பவர்களைப்பார்த்து அவரால் தன் இஷ்டம் கெட்டுப்போனதாக நினைத்துக் கோபிக்கிறன். கோபத்தால் இது செய்யலாகும், இது செய்யலாகாதென்று தெரியாததான மோஹம் விளைகிறது. அதனல் தனக்குத் தோன்றியபடியெல்லாம் செய்கிறன். பிறகு இந்திரிய ஜயத்துக்கு முயற்சி செய்தோமென்பதையே மறந்துவிடுகிறன். மறப்புண்டாலல் ஆத்மஞானத்துக்காக இவன்கொண்டிருந்தபுத்தி நசித்துப்போகிறது. புத்திநாசத்தாலே மீண்டும் ஸம்ஸாரத்தில் மூழ்கிக் கெட்டுப்போகிறன்.

ராகத்வெஷவியுக்தைஸ்து விஷயாநிந்த்ரியைஸ்சரந்|
ஆத்மவஸ்யைர்விதெயாத்மா ப்ரஸாதமதிகச்சதி||சூச||

(சூச) கீழ்ச்சொன்னபடியே மனதுக்கு சுபஸ்தாநமாயிருக்கிறஸர்வேசுவரனை என்னிடத்தில் மனதை நிறுத்தியவன், ஸகலபாபங்களையும் தொலைக்கின்றமையால் ராகத்துவேஷங்களற்று இந்திரியங்கள் தனக்கு வசப்பட்டிருக்கிறபடியால் விஷயங்களைக் கணிசியாமலிருந்துகொண்டு சித்த ஸ்வாதீனம்பொருந்தி நிர்மலாந்தஃகரணனுகிறன்.

ப்ரஸாதெஸர்வதுஃகாநாம் ஹாநிரஸ்யொபஜாயதெ|
ப்ரஸந்நசெதஸொஹ்யாஸு புத்திஃபர்யவதிஷ்டதி||சூரு||

(சூரு) இந்த புருஷனுக்கு (ஆத்மக்ஞானவிரோதியான) தோஷங்களெல்லாம் நீங்கி மனம் தெளிவுற்றதாகில் (ஆத்மஞானம் நிலைக்கின்றமையால்) பிரகிருதிஸம்பந்தத்தால் வரும் துயரங்களெல்லாம் தன்னடையே நசிக்கின்றன.

---

* இவ்வர்த்தம் யயாத்ரிதிதஸ்ரிவ்ருகுக்ஷம்ஹதிவாநிலஃ|
தயாவிதக்ஷிதெதாவிஷ்ணொமிநாம்லவ்கிலுவ்ருஷ்டி என்று சொல்லப்பட்டது.

† காமம் - ஆசைப்பட்டதை அநுபவிக்காமல் தீராத ஆசை.

நாஸ்திவை ஜிதயேந்த்ரியஸ்ய நவாயேந்த்ரியஸ்யாவநா।
நவாஹாவயதஸ்ஸாந்தி ரஸ்ஸாஜ்ஞவஸ்ய கதஸ்ஸுக வ்ழி॥சுசு॥

(சுசு) என்னிடத்தில் மனதை நிறுத்தாமல், தானே இந்திரியங்களை ஜயிப்பதாயிழிந்தவனுக்கு ஒருக்காலும் விலக்ஷணமான ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஸித்திக்கமாட்டாது. ஆனதபற்றியே * ஆத்மபாவனையும் ஸம்பவிக்க இடமில்லை. ஆத்மபாவனை யில்லாவிடில் விஷயத்தில் நசையறுவதில்லை, அதில்லாதவனுக்கு நித்தியமானசுக மெப்படி கிடைக்கும்?

(அ-கை.) முன் சொன்னபடி இந்திரிய ஜயம்பண்ணுதவனுக்கு வரும் அநர்த்தத்தை மீண்டும் அருளிச்செய்கிறார்.

ஐந்த்ரியாணாம்ஹிசரதாம் யந்நமநோநுவிதீயதே।
ததஸ்ய ஹரதிப்ரஜ்ஞாம்வாயுர்நாவமிவாம்ப்ஹஸி॥சுஎ॥

(சுஎ) விஷயங்களைத் தேடியோடும் இந்திரியங்களின்வழியே மனதைச் செலுத்துவானுகில் அம்மனதானது, ஆத்மாவை நாடியிருக்கின்ற புத்திவிசேஷத்தை இழுத்து, ஜலத்திற்செல்லும் ஓடத்தை எதிர்காற்றுனது பலாத்காரமாய் அடித்துக்கொண்டோடுவதுபோல சப்தாதிவிஷயங்களில் மூட்டிவிடும்.

தஸ்மாத்யஸ்யேந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஸ்ஸர்வஸ்ய நிக்ருஹீதாநிவக்ருஸ்ஸ்யுஃ।
இந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஸ்தஸ்ய ப்ரஜ்ஞாப்ரதிஷ்டிதா॥சுஅ॥

(சுஅ) ஆகையால் கீழ்ச்சொன்னபடியே சுபஸ்தாநமான என்னிடத்தில் யாவனொருவன் மனதை நிறுத்தி இந்திரியங்களை விஷயத்திற்செல்லவொட்டாமல் சுத்தமாய் அடக்குகிறானே, அவனுக்குத்தான் ஆத்மாவினிடத்தில் பிரக்ஞையானது நிலைத்திருக்கும்.

(அ-கை.) இப்படி இந்திரிய ஜயம்பெற்று மனந் தெளிந்தவனுக்கு உண்டாகும் ஸித்தியை அருளிச்செய்கிறார்.

யாநிஸாஸர்வபூதாநாம் தஸ்யாம்ஜாகர்திஸம்யமீ।
யஸ்யாம்ஜாக்ரதிபூதாநி ஸாநிஸாபஸ்யதோமுநேஃ॥சுக॥

(சுக) ஸகலப் பிராணிகளுக்கும் இரவாயிருக்கின்ற (அதாவது பிரகாசிக்காத) ஆத்மவிஷயமானபுத்தியில், இந்திரியங்களைஜயித்து உள்ளந்தெளிந்திருப்பவன் விழித்துக் கொண்டிருக்கிறான்; என்றால் எந்தவேளையும் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கிறான். அப்படியே ஸகலப்பிராணிகளுக்கும் பிரகாசமாயிருக்கின்ற சப்தாதி விஷயகமான புத்தியானது (ஆத்மஸாக்ஷாத்காரம் பண்ணுகிற) அம்முனிக்கு இரவுபோலிருக்கிறது (அதாவது பிரகாசிக்கிறதில்லை.)

---

* ஆத்மபாவனை-எந்தவேளையும் ஆத்மஸ்வரூபத்தையே நாடியிருத்தல்.

கூவெமயூசாணஃவமவுதிஷ்ம் ஸஃஉசாவப்வுவிஸ்ருஜியஷ்யஹ்।
தஷ்டுகாமாயம்வுவிஸ்ருஜிவெடு ஸஸ்யாத்ரிசாவெொதிந்கூகாஃகூகீ॥

(எ0) தனக்குத்தானே நிறைந்து ஏகரூபமாயிருக்கிற ஸமுத்திரத்தில் ஆற்றுநீர் முதலியவை போய்விழுந்தாலும் விழாவிட்டாலும் அதிலுல் அந்த ஸமுத்திரமானது எப்படி சிறுத்தல் பெருத்தல் முதலிய விகாரத்தை அடைவதில்லையோ, அப்படிபோல இந்திரியங்களுக்கு சப்தாதிவிஷயங்கள் கிடைத்தாலும் கிடையாவிட்டாலும் அதைக்கணிசியாமல் யாவனொருவன் ஆத்மஸாக்ஷாத்காரத்திலுல் திருப்தனாயிருக்கிறானே, அவனுக்குத்தான் சாந்தியுண்டு; மற்றப்படிசப்தாதிகளில் சாபல்யமுள்ளவனுக்குக்கிடையாது.

விஹாயகாமாநுயஷ்வாநு வர்தாம்ஸ்ருஸ்பதிநிஷ்ப்ருஹஃ।
நிர்மமோநிரஹம்காரஸ்ஸஸ்யாத்திமதிகச்சதி॥எக॥

(எக) யாவனொருவன் சப்தாதி விஷயங்களை யெல்லாம் துறந்து கசையற்று எனது என்கிற புத்தியும், தேஹமே ஆத்மாவென்கிற ப்ராந்தியும் விட்டிருக்கிறானே, அவன் ஆத்மஸாக்ஷாத்காரத்தாலே சாந்தியடைகிறான்.

வஷாஷ்ப்ராஹ்யஸ்திதிஃவாயுர் னைநாம்ப்ராவ்யவிதாஹ்ருதி।
ஸ்திகூவாஷ்யாஃஇதகாலெவி ப்ரஹ்மநிவர்ணஸ்ப்ருஹதி॥எஉ॥

(எஉ) அர்ச்சுந! ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை யறிந்து அத்துடன் பலத்தில் அபேக்ஷையின்றிச் செய்யவேண்டியதாக இப்பொழுது நாம் சொன்ன கர்மநிஷ்டையானது, ஞானயோகமென்கிற ஸ்திதப்பிரக்ஞதைக்குச் சாதனமாயுள்ளது; இது ப்ரம்மத்தை அடைவிக்குமது; புருஷன் அந்திமகாலத்தில் இந்த நிலையிலிருந்தானுகில் ஆனந்தமயமான ஆத்மாவை அடைகிறான். [ஆகஇப்படி ஆத்மாவின் உண்மையையும், அவ்வாத்மாவை அடைவதற்கு ஸாதனமான யுத்தமென்னுங் கருமத்தையும் அறியாது, சரீரமே ஆத்மாவென்றுபிரமித்து அதிலுல் யுத்தத்தினின்றுங்கையொழிந்த அர்ச்சுநனுக்குக் கண்ணன் அந்தப்பிரமம் தீருகைக்காக நித்திய ஆத்மவிஷயமான ஸாங்கியபுத்தியும், அந்த புத்தியுடன் கூடியதாய் ஸ்திதப்பிரக்ஞதையென்னும் ஞானநிஷ்டைக்கு ஸாதகமாய் கர்மயோகத்துகது வேண்டியதாயிருக்கிற புத்தியும் இரண்டாவது அத்தியாயத்தில் அருளிச்செய்தார். இதை நிதர்ஶநாவஷ்டகஶ்லோகா மொவராவலாஷ்ட்யொமயீஃ | ஸ்திதீயெஸ்திதயீயுக்ஷாவெர்ஷாகூதஷ்டநாஹஸ்ராஜ்ஞயெ என்று ஸ்ரீஆளவந்தாரும் அருளிச்செய்தார்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஶ்ரீ:.

ஶ்ரீமதே ராமானுஜாயநமः.

மூன்றுவது அத்யாயம்.

அவதாரிகை,

இதுவரையில், மோக்ஷகாமர்களுக்குப் பலமாக வேதாந்தத்திற்சொல்லப் பட்ட * பரப்பிரம்மமான புருஷோத்தமனை அடைதற்குத்தகுந்த உபாயம் o பக்தியோகமென்று அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அதற்கு அங்கமான (யக்ஞதாநவ்ரதவாதா இத்யாதி ஏ பிரஜாபதி வாக்கியத்திற் சொன்

---

* இங்கே, "அவித்யாதிகளான ஸகல தோஷங்களையும் வாஸனையோடே ஒழித்து, அபார அதிசயமாய் அளவிறந்தவையாயுள்ள ஸகல கல்யாண குணங்கள் பொருந்திய" என்று சேர்த்துக்கொள்வது.

o இங்கே "வேதநம், உபாஸநம், தியாநம் என்கிற சப்தங்களாலே சொல்லப்பட்டதும், பல தசையிலுங்கூட பிராப்யப்பிராபக பூதனை அவன் திருவடிகளில்மாத்திரம் பண்ணத்தக்கதுமான" என்று சேர்த்துக்கொள்வது.

ஏ பிரஜாபதிவாக்யத்திலோ! யஜ்ஞோ தாநம் நவிஜ்ஞாநாதி என்றுப்ராப்தாவான ஜீவாத்மாவின் தர்சநமானது, தஹரவாக்யத்தில் சொன்னபரவித்தைக்கு சேஷப்பட்டதென்று சொல்லி; ஜாகரிதம், ஸ்வப்நம், ஸுஷுப்தி இவைகளைக்கடந்த அந்த ஜீவஸ்வரூபமானது சரீரவிலக்ஷணமென்றுபிரதிபாதித்து; வைவஹ்நிர்வைஷ ஸம்ப்ரஸாதோஸ்மாச்சரீராத்ஸமுத்தாய பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே என்று ஜீவன் சரீரத்தினின்றும் வெளிப்பட்டுப் பரஞ்சோதியான பரமபுருஷனையடைந்து தனது நிஜரூபத்தோடு விளங்குகிறானென்று தஹரவித்தைக்குப் பலன்சொல்லி முடிக்கப்பட்டது. அப்படியே இங்கும் ஸ்யோ தயொமாயிமஜ நவ்யம் ஸ்ருஷ்டீரொஹரஸாகளஜஹாதி இத்யாதிகளில் ஸ்ருஷ்டிக்கா என்று தேவனை யறியவேண்டியதாக விதிக்கப்படும் பரவித்தைக்கு அங்கமாக ஸ்யோதயொமாயிமஜ நவ்யம் என்று ஜீவாத்மஞாநத்தையும் விதித்து, நஜாயதே ம்ரியதேவாவிபஶ்சிந் இத்யாதியால் ஜீவாத்மஸ்வரூபம்ஜநமரணராஹித்யமென்று சோதித்து; ஸுஷுப்தாவுபஸம்பத்ய ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே என்று ஆரம்பித்து ஸ்ருஷ்டிம் விஸ்ருஷ்டாதாரஸ்ருஷ்டிக்கா யீரொநரொவதி|| நாயமாத்மாப்ரவசநேந லப்யோ நமேதயா நபஹுநாஶ்ருதேந நாயமேவைஷவ்ருணுதேதேந லப்யஸ்தஸ்யைஷ ஆத்மாவிவ்ருணுதேதநூம்ஸ்வாம் இத்யாதிகளால் பரஸ்வரூபத்தையும் அவனை உபாஸிக்குந்தன்மையையும் அவ்வுபாஸநமும் பக்திரூபமாயிருக்கவேண்டுமென்பதையும் பிரதிபாதித்து விஜ்ஞாநவாந்யஜ்ஞம்தநுதே ஸர்வாணிகர்மாணி | யொயுநஃவாஶாம்வாதிதஶிஷ்ரோபூவாஜஃவம் ஏழு என்று பரவித்தைக்குப் பலம் விஷ்ணுவினுடைய பரமபதமென்று சொல்லி முடிக்கப்பட்டது.

ன) ஜீவாத்ம ஸாக்ஷாத்காரம் * கர்மயோகத்தால் ஸம்பாதிக்கத்தக்க ஞான யோகத்தாலேல ஸாதிக்கத்தக்கதென்று அருளிச்செய்தார். இதற்குமேல் நான்கு அத்யாயங்களால் அந்த ஜீவஸாக்ஷாத்காரத்தையும், அதற்கு உபாயத்தையும் விவரித்தருளுகிறார்.

கூஜு-நஉவாச ॥ ஜ்யாயஸீசெத்கர்மணஸ்தே மதாபுத்திர்ஜநார்தந | தத்கிம்கர்மணிகோரேமாம் நியோஜயஸிகேஸவ॥ க॥

வ்யாமிஸ்ரேணேவவாக்யேந புத்திம்மோஹயஸீவமே |
ததேகம்வத நிஸ்சித்ய யேந ஸ்ரேயோஹமாப்நுயாம்॥உ॥

(க-உ) அர்ச்சுனன் சொல்வது—ஓ ஜநார்த்தந! இதுவரையில் தேவரீர் அருளிச் செய்ததில், ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்கு ஞாநநிஷ்டைதான் நேரான ஸாதநமென்றும், கருமநிஷ்டையோ அநத ஞாநநிஷ்டையை உண்டாக்கித் தருமென்றும், அநத ஞாநநிஷ்டையும் ஸகலமான இந்திரிய வியாபாரங்களையும் ஒழித்தே பெறவேண்டியதென்றும் ஏர்ப்பட்டது; இதனால் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கும் விஷயத்தில் கருமநிஷ்டையைக் காட்டிலும் ஞாநநிஷ்டையே சிறந்ததென்று தேவர் திருவுள்ளமாகத் தெரியவருகிறது. இப்படியாகில் அடியேனுக்கு ஆத்மஸாக்ஷாத்காரம் ஸித்திக்கவேண்டுமானால் இந்திரியவியாபாரத்தை யொழித்துப பெறவேண்டியதான ஞாநயோகத்தைச் செய்யும்படி நியமிக்கலாயிருக்க அது செய்யாது அதற்குவிரோதமாய் இந்திரியவியாபாரரூபமான கருமயோகத்தைச் செய்யும்படி நியமித்தீரே! இதைப்பார்த்தால் ஒன்றுக்கொன்று விரோதமான வாக்கியங்களைச்சொல்லி அடியேனைக் கலங்கச்செய்வதுபோல் காண்கிறது. ஆகையால் அடியேனுடைய க்ஷேமத்தைக்கோறி அடியேன் செய்யவேண்டியதை நிச்சயித்துக் கொள்ளும்படி ஒருவாகயமாக அருளிச்செய்யவேணடும்.

(அ-கை.) அதறகுக் கண்ணன் அருளிச்செய்கிறார்.

ஸ்ரீபகவாநுவாச ॥ லோகேஸ்மிந்த்விவிதாநிஷ்டா புராப்ரோக்தாமயாநக | ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம்॥ங॥

(ங) அர்ச்சுந' நாம் முன்னே சொன்னதைச் செவ்வையாயறிந்திலை. உலகத்தில் ஜநங்களுக்கு யோக்கியதை பலவிதமாயிருக்கையால் அவரவர் யோக்கியதைக்குத் தக்கபடி ஞாநநிஷ்டையென்றும் கருமநிஷ்டையென்றும் இரண்டுவகை உண்டெனறு சொனனேனும்: அதாவது விஷயத்தில் வியாகுலமான புத்திகளான யோகிகளுகக்குக கருமயோகத்தில் அதிகாரமென்றும் ஆத்மாவையேநாடுகிற புத்தியுடனகூடிய ஸாங்கியருக்கு ஞாநயோகததில் அதிகாரமெனறும் பிரித்துச்சொன்னேனும்; அதுவேயல்லது சிறிதும் விரோதமாய்ச் சொன்னேனில்லை. [மோக்ஷாத்தியான வென்னை நேரே ஞாநயோக

---

* இங்கே-ஆத்ம யாதாதம்ய ஞாநபூர்வகமாய் பலாபேக்ஷையின்றிச செய்த எனறு கூட்டிகொள்ளவும்.

ஸ்திலை நியமிசலாயிருகக கருமததில் பிரவேசிகக செயவேதனைருல் லோகததில் மோகூதாமருகெலலாம உடனே ஞாநயோகததில் அதிகாரம வருமா? வரமாட்டாது பலாபேகூயினறிக கேவலம எமபெருமானிடை ய ஆராதநரூபமாகக கருமததை அநுஷடித்து ரு அதலால மனகலக்கமற று இநதிரியவியாகூலந தொலநத பினபுதான ஞாநநிஷடைகரு யோகதிய தையுண்டாம் ஆகையாலே கருமததைச செயயுமபடி நியமிததோமிதனை யெனறு திருவுளளம]

(அ-கை) லோகததில எலலாருகரும மோகூததில இச்சை பிறநத போதே ஞாநயோகம செயயுமபடியான நிலையுணடாவது அரிதெனகிறார.

நகூரிகூஷ்ணாரிநாரயம்லா லெநஷ்டிரும்வாரவாஷ்டாரெ।
நவஸ்நாயுலநாதெவ லிஜிம்ஸுரியிமஷ்டதி॥சூ॥

(சூ) (பரமபுருஷனுடைய ஆராதநரூபமாகச சாஸ்திரங்களில் சொல்லப்படுந) கருமங்களைச செயயத்தொடங்காமலிருப்பதிலுலாவது தொடங்கி நடுவில விடுவிடுவதிலுலாவது ஞாநநிஷ்டை ஸிதிதிகருமெனறு நினைக கவேண்டாம், பலாபேகூயற்ற கருமங்களால எமபெருமானை ஆராதிகாமல அதனால் அநாதிகாலமாய ஸமபாதிதத பாபஙகளைத தொலையாதவருக கு,இந்திரிய வியாகூலமறறுப பெறவேணடிய ஆதமநிஷடை கிடைபபது ஸுரிது

(அ-கை) இதததான தககநியாயங்களைகொண்டு நிரூபிக்கிறார்.

நஹிகூஸ்சிகூஷணவி ஜாதாதிஷ்டதுகூகூ।
காயகூலெதஹ்யவஸ்டுகூ வவகூத்வாகூதிலெஜமகூனெஃ॥ரு॥

(ரு) லோகததில் ஒருவனும் ஒருகாலும ஒருகாரியமும் செய்யாமலிருகமாட்டான். அப்படி யிருப்பதாக ஒருவன தான்ஒழிந்திருந்தாலுகிலும, பிருகிருதியில உணடாய் இவனுடைய பூர்வ கர்மாநுஸாரமாக விருததியடைந்த ஸத்வம,ராஜஸ,தமஸ எனகிற மூன்றுகுணஙகளும் இவனையு மறியாமல இவனுககு உசிதமான சிலகாரியஙகளிலமூடிவிடும [ஆகையால் முன் சொன்ன கருமயோகததால் பழைய பாபஙகளைத தொலதது ஸத்வா திகுணஙகளை வசப்படுத்தி நிரமலமான ஆதமஃகாரணததாலே ஞாநயோக ம் ஸம்பாதிக்கததககது]

(அ-கை.) அப்படியில்லாமல ஞாநயோகததில் இழிந்தால அநாத்தம் விளையுமெனகிறார.

கரிஷ்யாணிலம்யசெ யகூஞெஜி நலாஷ்டரநு।
ஜநி பாயகூநுவிசமயா தா தியெராவாரஷ்டஉவெதி॥சூ॥

ரு காமாநுஷடாநம, பரமபுருஷாராதநரூபமென றும் மிடம்யதிற் வெவ்வேறாகூமிகா நாம்யெ நலவகூதிஜ்ஞெதெ। ஷ்டகரிஷ்ணாதிஜ்ஞெவெ-ரெவிஜிம்விஜ்திரோ நவஃ என்று மேலே அருளிச்செய்யபபோகிறார்.

(சு) பாபந் தொலையாமையாலே அந்தஃகரண பஹிஃகரணங்கள்வ சப்படாமலிருக்கிற ஒருவன் ஆத்மஞாநத்தை ஸம்பாதிக்க விழிந்தாலுகில், அவன் சப்தாதிவிஷயங்களில் ஆசையுற்றவனுகையால் ஆத்மாவைத்தேடி மனம் செல்லாமல் விஷயத்தையே நிஜனத்துக்கொண்டிருப்பான். அப்படி ஒன்று செய்யக்தோலி ஒன்று செய்கின்ற அவன் பொய்யேசெய்பவனுகையால் அதனுல் அநர்த்தப்படுவான்.

யஷ்டிர்யாணிஶநகா நியச்சாரஹதேஜஸ:।
கஶ்சிந்நியச்சேத்கஶ்சாயமஶக்ஷஷ்விதி॥ஏ॥

(ஏ) யாவனொருவன், தான் முன்பு பழகியிருக்கிற கருமங்கள்போலே சாஸ்திரோக்தமான கருமங்களும் சிலவாகையால் அவைகளில், (ஆத்ம தரிசநத்திலுன்றிய மனதைக்கொண்டு) இந்திரியங்களைச் செலுத்தி அவைக ளைப்பற்றின்றிச் செய்யத்தொடங்குகிறானே அவனுக்கு யாதொரு பிரமாத மும் நேரிடமாட்டாதாகையால் அவன் முன்சொன்ன ஞாநநிஷ்டனைப்பார் க்கச் சிறந்தவனுவான்.

நியதம்குருகுரு கர்ம ஜ்யாயோஹ்யகர்மண:।
ஶரீரயாத்ராபிசதே ந ப்ரஸித்யேத்அகர்மண:॥அ॥

(அ) அநாதிவாஸனையாலே பிரகிருதியில் அகப்பட்ட புருஷனுக்குக் கருமஞ்செய்வது ஸ்வபாவமாய் பழகிப்போனபடியால் அது செய்வதற்குச் சுகமாயும் பிரமாதத்தைத் தராததாயுமிருக்கிறது. ஞாநநிஷ்டையோ பழக் கமில்லாமையால் செய்வதற்குக் கஷ்டமாயும் அநர்த்தஹேதுவாயுமிருக்கிற து. இப்படி கர்மம்செய்வதற்கு சுகமாயிருக்கையாலும்(இதைச்செய்யும்பொ ழுது ஆத்மாவின் உண்மையான நிலையையறிந்து ஆத்மா கர்த்தாவல்லனென் றுநிஜனக்கவேண்டுகையாலே) ஞாநயோகம் இதற்குட்படுகையாலும்இது ஞா நயோகத்தைக் காட்டிலும் சிறப்புற்றது. [ஆனல் ஞாநநிஷ்டையை விசே ஷமாகச் சொல்வதெதுவெனில்:—அது தகுந்தஅதிகாரமுள்ளவன் விஷ யம்.] மேலும் ஸகல கருமங்களையும் விட்டுக் கேவலம் ஞாநநிஷ்டையில் இழிந்தவனுக்கு முதலில் அந்த நிஷ்டைக்கு வேண்டிய சரீரதாரணமே ஸி த்திக்கமாட்டாது. [ஏனெனில்:—நியாயார்ஜிதமான திரவியங்கொண்டு செ ய்த யக்ஞசேஷத்தாலே சரீரத்தைக்காப்பாற்றவேண்டுமென்று ஏற்பட்

⊕ மூலத்தில் குருகு சப்தம் இங்கே ஞாநநிஷ்டையைச் சொல்லு கிறது, ஏனெனில் குரவோ வேதாந்தா: என்றபடியே வேதாந்தங்களுக்கு குரு என்று பெயர்தொடங்குகையாலே.

ஃ ஆஹாரஶுத்தௌ ஸத்வஶுத்தி: ஸத்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி: என்று ஆஹாரம் சுத்தமானுல் ஸத்வம் சுத்தியாம்; அதினுல் சலியா த சிந்தையுண்டாமென்று வேதம் சொல்லுகையாலும் அந்த சிந்தை ஞாந யோகத்துக்கு உபகாரகமாகையாலும் யக்ஞசேஷங்கொண்டே சரீரத்தைத் தாங்கவேண்டுமென்றறிக. இவ்வர்த்தத்தை தெகூவம் இத்யாதியில் மே லே அருளிச்செய்யப்போகிறார்.

⚘ சரீரமானது ஸ்தாதரம் தலைக்கூடுகிறவனையில் இருந்தே நீரவேண் டுமென்றறிக.

டபினபு கருமமினறி யகளும செயவதெபபடி?] [ஆக ஞாநநிஷ்டனுககும சரீரமுளளவனாயில நிதநிய நைமிதநிக கருமஙகள செயவது ஆவசியகமானையாலும, கருமயோகதநிலும ஆதமஞாநம் உடபடடமையாலும, பிராகிருதபுருஷனுக்குக் கருமமசெயவது சுலபமாயும் பரமாதநதையுணடுபணணுதநாயுமிருகனையாலும ஞாநநிஷடாதிகாரிகளுகனகூடக் கருமயோகமே சிறபபுறறது. ஆனையால நீ கருமயோகநதனதையே செயயெனறு திருவுளளம.]

(அ-கை) இபபடியாலுல நிரவியநதேடலமுதலிய கருமங்கள (அஹங்காரம் மமகாரம முதலிய) இந்திரியவியாகூலதனதை யுணடாகுமானையால் புருஷனுகனகுக் கருமவாஸனைபிறநது அதனுல் ஸமஸாரபநதம உணடாகாதோ? என்ன அருளிசசெயகிறார.

யஜ்ஞாயிரதகரமணோ நரதர லொகொயமகரமபநதநஃ।
ததரயமகரமகளனெய முகதஸஙகஸமாசர॥கூ॥

(கூ) சாஸதிரதநதில்சொனன யாகாதிகருமங்களுக்காகத் நிரவியநதேதல முதலிய கருமஙகளனிவிட்டுத தன்ப்ரயோஜநதநதுகனகாகச செயயுங கருமமெலலாம (பந்தமென்கிற) ஸம்ஸாரதநதுகனகுக காரணமாம. ஆனையால யகஞத்துக்காகத நிரவியஸமபாதநம முதலிய கருமஙகளனிச செயயுமபொழுது அதில் பறறினறிசசெய் [பறறின்றிசசெயயும யகஞாதிகளுனகாகக கருமஞ செயதுவநதால அநத யகஞாதிகளால எமபெருமான ஆராதிகனபபடடவரா ய அநாதிகாலமாய இவனைப் பறறிகனகிடநத கருமவாஸனையைத் தொலைத்து வியாகுலமற்ற ஆத்மதரிசநதனதைப் பண்ணிக் கொடுக்கிறானென்று திருவுளளம.]

(அ-கை.) எந்த புருஷாத்ததனதை ஸாதிகன முயனறவரும யக்ஞசேஷத்தாலேயே சரீரத்தைததரிகனவேணுமெ; மறறபபடி தரிதநதால் தோஷமுணடெனகிறார்.

யஸ்ஸ்வாத்மரதிரேவ ஸ்யாதாத்மதருபதிஶ்ச மாநவஃ।
ஆத்மந்யேவ ச ஸந்துஷடஸ்தஸ்ய கார்யம ந வித்யதெ॥கo॥

(கo) ஸகலப் பிராணிகளுனகும பதியான ஸ்ரீமநநாராயணனை சிருஷ்டிகாலதநதில, அநாதிகாலமாயதனதொடாநத அசெதநஸமபநதநதாலே பரவசர்களாய நாமரூபங்களனையிழநது தனக்குள லயிதது ஒருபுருஷார்ததநதையும் அடைவதறகு யோக்கியமிலலாதவராய அசெதநம்போலகனகிடநதப் பிராணிகளனைக் கடாக்ஷித்து, பரமதயாளுவாகையாலே அவர்கள உயவதறகாகத தன் ஆராதநரூபமான யகஞதனதைச் செயயும்படி யகஞங்களோடுகூடவே அவர்க

ஏ இங்கே வ்யுஜ்ஜாவதி சபதமானது நிருபாதிகமாயகனகொண்டு ஸாவகாசவரணய விசுவதநதுக்கு சிருஷ்டிகாதநதாவாய விசுவாத்மாவா யெழுநதருளியிருகனிற ஸ்ரீமநநாராயணனையே சொல்லக கடவது, வதீம் விஶ்வஸ்ய ஆதிதஶ்ரம் எனறு நிருபாதிகபபிரஜாபதி ஸ்ரீமநநாராயணனெனறலலவோ வேதஞ்சொலலுகிறது?

னையும சிருஷ்டித்து, "இந்த யகளுதனைக்கொணடே நீஙகள முன்னுகளு வாரகடவீர, இதுதான உஙகளுகளு மோகூஷதனையும மறறுமம பலஙகளையுமகொ டுபபது" எனறு திருவாயமலாநதருளினன.

(அ-கை) ஆதெபபடியெனறுல —

ஔவாநுஹாவய்தாதெந ஔதெஔவாஹாவயனூவ்।
வுஹுவுஹுஂஹாவய்தெ ஸ்ருயஂவுஹுவாவ்யுஷ்॥கக॥

(கக) தேவதாராதநரூபமான இந்த யகளுதாலே, எனகளு ॥ சரீரபூதர்களாய என ரூபமாயிருகிற தேவாகளை ஆராதநம செயயுங்கள, அபபடி ஆராதிக்கப்பட்ட அவாகள, தம் ஆராதநதனுகளு வேணடிய அநுபாநாதிகளை தந்து உகளைபபோஷிபபாகள இபபடி ஒருவருகொருவா பாவித்துகொணடு மோகூஷமெனகிற பரமபுருஷாாதனதை அடையுங்கள

ஐஷ்டாநுஹோஹாநுஹிவொஔவா ஏஷ்யுஞையஜ்ஹாவிதாஃ।
தைர்தத்தாநப்ரதாயைப்யோ யோஹுங்க்தெஸ்தேந ஏவஸஃ॥

(கஉ) யக்ஞதால ஆராதிக்கப்பட்ட அநத தேவாகள உங்களுக்கிஷ்டமான போகஙகளை மென்மேலும கொடுதது வருவாகள. ஆகாள் தம ஆராதநதனுகெனறு தநதவைகளை அவாகளுக்குக்கொடாமல எவன புஜிகிறானே அவன் திருடனேவான. [திருடாவது —பிறருடைய பிரயோஜநதனுகாக ஏறபபட்ட வஸ்துவில் தனனுடையதெனகிற புதநிலையைச்செய்து அதிலுல் தன ஆதமாவைப போஷிதது கொளளுவதுதானே? இதனால இவனுக்கு பரமபுருஷாாதநங கிடையாமறபோவதுமாதிரமனறு, நாகமும ஸமப விகுமெனறு ஜபிபபிராயம.]

(ஆ-கை) அதையே விவரிகிறார.

யஜ்ஞஶிஷ்டாஶிநஸ்ஸந்தோ முச்யுந்தெ ஸர்வகில்பிஷைஃ।
புஞ்ஜதெ தெ த்வகம் பாபா யெபசந்த்யாத்மகாரணாத்॥ கஈ॥

(கஈ) இநதிராதிகளுகளு அநதராதமாவா யெழுநதருளியிருகிற பரமபுருஷனை ஆராதிக்கவேணடுமென்று நிரவியங்களை தெடிச்சமைத்து அவறறைகொணடு அபபடிபபடட பரமபுருஷனை ஆராதிதது அதில் மிகுதியைபபுசிதது சரீரத்தைக காபபாறறுகிறாரயாவா, அவர்கள்தான் அநாதிகாலமாய் ஸமபாதிகபபடடனவைகளாய ஆதமாவினுடைய யதார்தஜ்ஞாநதை மறகுவிதோதிகளாயிருகிற ஸகல பாபங்களினினறும விடுபடுவாகள்; எவாகளாலுல அபபடிபபடட பரமபுருஷ ஆராதநதனுகெனறு வகுதத நிரவியங்களை தமகென்னறு ஸமபாதிதது அதைச சமைதது உணபாகளோ, அநத பபாவிகள பாவதனதையே உணகிறாகள. அதாவது.—ஆத்மஜ்ஞாநத்தில் கண்ணையாமல் ரஜஸதமுகெனகிற சமைதது உணகிறார்கள்.

॥ கூஹாஹிலவுஞயஜ்ஞாஶிஷ்டாஶிநஸ்ஸர்வகில்பிஷைஃ। ஸ்ருவஸனறு ஸகலமான யகஜ்ஞகளுகளுக்கும எமபெருமானே போகதாவெனறு மேலே அருளிசசெயகிறதாகையாய நிரதேசவாதிகளோச் சரியலலெனகிறது

(அ-கை.) திரும்பவும் லோகாதியாகவுமாம், சாஸ்திராதியாகவுமாம், யாவும் யக்ஞத்தாலுண்டானதென்பதை யெடுத்துக்காட்டி, யகஞத்தை அனுஸரிப்பது அவசியமென்றும் அதைச் செய்யாமற்போனால் தோஷமுண்டென்றும் அருளிச்செய்கிறார்.

ஈநாஹுவதிலாமதாநி வஜ்ஞோநயாஹநலாம்லவ:।
யஜ்ஞாஹுவதிவஜ்ஞோநயா யஜ்ஞேகூடிஹுவஸ்ஹூவ:॥கச॥
கூடிஹு ஷ வ்ருஹ்ஹோஹுவம்விஷி வ்ருஹ்ஹாகக்ஷாஸவஸ்ஹூவ்ஹுவ்ழ்।
தவ்ஹாதவ்ஹுமதம்வ்ருஹ்ஹு நிதயம்யஜ்ஞேவ்ருதிஷ்டிதழ்॥கரு॥
வனவம்வ்ருவதிஹுதம்வக்ரம் நாநாவதிஹுயதீஹபஃ।
ஈவாயாஸிந்த்ரியாராஸோ தோவம்வாயஹுவஜீவதி॥கசு॥

(கச-கரு-கசு) ஸகல பூதங்களும் அன்னத்தாலுண்டாகிறதென்பதும், அந்த அன்னம் வருஷத்தாலுண்டாகிறதென்பதும் எல்லாருக்கும் பிரத்யக்ஷம். அந்தவர்ஷம் யக்ஞத்தாலுண்டாகிறதென்று (ஈஹளவ்ராவஸாஹாதிவஸிதயுஷ்டாதிஷ்டித। ஈஷிதயாஜ்ஜாயதெதவ்ருஷ்டிஃ இத்யாதியான) சாஸ்திரம் சொல்லுகிறது. அந்த யக்ஞம் (புருஷவியாபாரரூபமான) கருமத்தாலுண்டாகிறது; அந்தகருமம் (பிரகிருதியின் பரிணமமான) சரீரத்தாலுண்டாகிறது, அந்த சரீரமோ ஜீவனாலே: அதெப்படியெனில் - அந்தந்த பாதாதிகளால் திருப்தியடைந்த ஜீவாத்மாவோடு கூடியிருந்தால் மாதத்திரத்தான் சரீரம் கருமம் செய்யக்கூடும். ஆகவிதனால் எந்தசரீரமும் யக்ஞத்தால் தான் நிலைக்கிறதென்றதாயிற்று. இப்படி ஜீவனுடன்கூடிய சரீரத்துக்கு அன்னமும் அன்னத்துக்கு வருஷமும்வருஷத்துக்குயக்ஞமும் யக்ஞத்துக்கு(கர்த்தாவின்வியாபாரமான)கருமமும்,கருமத்துக்கு (ஜீவனுடன்கூடிய) சரீரமும் சரீரத்துக்குத் திரும்பவும் அன்னமுமென்று ஒன்றுக் கொன்று காரியமாயும் காரணமாயும் பரமபுருஷனால் ஏற்படுத்தப்பட்ட இந்தசக்கிரத்தை, (ஞாநயோகாதிகாரியோ கருமயோகாதிகாரியோ) யாவனொருவன் நடத்துகிறானில்லையோ அதாவது யகஞசேஷத்தாலே தேஹயாத்திரை தரிக்கிறதில்லையோ அவன் தன்வாழ்நாளையெல்லாம் பாவத்துக்கே ஒப்புவிக்கிறான். ஆனதுகொண்டே அவன்புலன்களைத்தன் திருப்திசெய்யவல்லதாத்மாவுக்கு நலனை, அவன் சரீரத்தையும் மனதையும கெட்ட அனைத்தாலே வளர்த்தலையால் ரஜஸ்ஸாதமஸ்ஸா என்கிற இரண்டிகுணங்களைத் தலையெடுத்து ஆத்மதரிசனத்தில் கண்ணையாமல் விஷயபோகத்தில் மணதுகிறான். ஆகையால் அவன் ஞாநயோகாதிகளில் முயறசிசெய்பவனுமிலும அது நிஷ்பலமாகையாலே வீணுக்கே ஜீவிக்கிறான்.

ஈ வ்ருஹ்சப்தம் பிரகிருதியின் விகாரரூபமான சரீரத்தைச் சொல்லக்கடவது. தவ்ஹாதெதயுஷ்ஹுஸ்ஹாரிஸவெதி நஹுஜாயதெ என்று வ்ருஹ்சப்தத்தாலே பிரகிருதியை நிர்த்தேசிக்கையாலும்; ஸ்ரீயொநிஹுருஹசவ்ருஹ்க் என்று மேலே ப்சால்லப்போகிறபடியாலும் சரீரவாசகம்.

(அ-கை.) ஸாத⁴நமில்லாமலே ஆத்மதரிசநம்கிடைத்தவனுக்கோ இந்த வருணாசிரமகருமம வேணடாமெனகிறா.

யஸ்மாத்³ராதி³ரவஸ்யா ஊர்த்⁴வபுண்ட்³ரஶோப⁴நவ்ʼ।
கூ ஃ
கூர்த⁴ருவிவஸ்தே³ஷு ஸ்வஸ்யகாயம்நவிஶ்ருதே॥கள॥
ஃ
லெநவ்தஸ்யகூர்தநாயெஶ்வர நாகூர்தெநெநஹகர்ஹ்யதே।
நஸ்வாஸ்யஸ்வஸ்ய்ஹஸ்தே³ந கர்ஹ்யிஷ்யெவ்யாஸ்ரயஃ॥கஅ॥

ஸ்ஸ்யஸ்யஸ்ய கூர்த⁴ம் கூர்த⁴ம் கூர்த⁴ம்கூர்த⁴ஸ்ஸ்யவர்।
கூஸ்ஸ்யகூர்தஹ்யஸ்யாவர்தநுகூர்த⁴ வர்ஶாவெர்தி³வெர்ஷஃ॥கக॥
தத

(கள-கஅ-கக) ஞாநயோக கருமயோகங்களிரண்டையும் அபேக்ஷித்காமல் தனக்குததானே ஆத்மதரிசநமபண்ணுகிறுன் யாவனொருவன் அவன் இதரமான அந்பாகாதிகளாலல்லாமல் ஆத்மாவிலுலேயே திருப்தனும், உதயாகம், மாலை, சாதனம், பாட்டு, வாத்தியம், நர்த்தநம் முதலியவற்றிலின றி, கேவலம் ஆதமாவில் ஸந்தோஷமுற்றவனுய், $ தாரகம் ∆ போஷகம் Ψ போக்கியம் எல்லாம் ஆத்மாவேயாயிருப்பவனுகையால் அவனுக்குச் செய் யவேண்டுங் கருமம் ஒனறுமில்லை. (ஆதமதரிசநமெனகிற) பலம் கைபுகுநதவ னுகையாலே செய்வதால் பயனுமில்லை; செய்யாமையால் தோஷமுமில்லை. ஏக்கனவே ஆத்மஸாதஷ்டனுய் எல்லாவஸ்துக்களையும் உபேக்ஷித்திருபப வனுகையால் பிரகிருதியின் விகாரங்களான ஆகாசமுதலிய பூதங்களினுலா வது அவற்றின் காரியங்களினுலாவது அவனுக்கு என்னப் பிரயோஜநம்? ஸாதநம்செய்வதெல்லாம் அவறறில் உபேக்ஷையுண்டாகைக் காகத்தானே? இவனுக்கோ அது உண்டாயவிட்டது. இனி இவன் கருமம்செய்வதேன்? ஆக, தனக்குத்தானே ஆத்மதரிசநம்பண்ணவனுக்கு ஸாதநத்தில் பிரவாத்திக்க வேண்டாமையாலும், பிரவர்த்திததவனுக்கு இநதகர்மயோகம் சுலபமாயும் அநர்த்தஞ்செய்யாததாயும் ஆதமஞாநத்தை யுட்கொண்டதாயு மிருக்கின்ற மையாலும், ஞாநயோகிக்கும் இதில் சிறிது செய்யவேண்டுகையாலும் கரு மயோகமே ஆத்மதரிசநத்துக்குச சிறநதது. ஆகையால் அர்ஜுந! பற்றின் றிக் கருமஞ் செய்யவேண்டுமென்கிற எண்ணததுடன் பலஸித்தியாமளவும் கருமத்தையேசெய்.

கூஉஞெனைவஹிவஸம்வஹி ஶாஶ்வீதாஜநகாதயஃ।

(ககஉ) ஞாநயோக அதிகாரிக்கும் கருமமே சிறநதிருக்கையால்தான ஞாநிகளில் தலைவரான ஜநகாதிராஜருஷிகளும் கருமயோகத்தாலேயே ஸித் திபெற்றாகள.

(அ-கை.) இவ்வாறு-மேகூறார்த்தியானவன் ஞாநயோகத்துக்குத்தகா தவனுகையாலே கருமயோகமே செய்யத்தக்கதெனறு அருளிச்செய்து, ஞா நயோகத்துக்குத் தகுந்தவனுக்கும் கருமயோகமே சிறநததென்பதை கா ரணத்தோடு அருளிச்செய்கிறார்.

லொகஸஜ்ரஹஸ்தவாவி ஸம்பஶ்யந்குகர்துமர்ஹஸி॥உ०॥

$ தாரகம் - தரிக்கசெய்யும் அன்னமுதலியன.

∆ போஷகம் - பருக்கச்செய்யும் பால்முதலியன.

Ψ போக்யம் - சுகத்தைத்தரும் தாம்பூலமுதலியன.

யதா₄வாதிப்ரபூ₄தம் ஸ்தமெவமாஜ்ஞ:।
ஸயக்வ்யோணாகூரூதெ தொகஸ்ய நாவதூ₄தி॥உக॥

(உ0-உக) அர்ச்சுந! நீ லோகத்தாருடைய கேஷமத்தைப்பார்த்தாலும் கருமமே செய்யத்தகுந்தவனாகிறாய். ஏனெனில் ஸகலசாஸ்திரங்களையும் அறிந்து அப்படியே அநுஷ்டித்து பிரஸித்தனை ஒருபுருஷன், (எந்தப் பிரமாணங்கொண்டு எந்த அங்கத்தோடு) எதைச்செய்கிறானே அது தன்னையே ‡ முழுதும் தெரிந்துக்கொள்ளாத ஜநமும் அப்படியே அநுஷ்டிக்கும். ஆகையால் லோகரக்ஷணைத்துக்காக அந்த சிரேஷ்டனுங்கூட தன்வருணாசிரமங்களுக்கு உசிதமான ஸகலகருமங்களையும் அநுஷ்டிக்கக்கடவன். இல்லாவிடில் லோகநாசத்தாலுண்டானபாபம் இவனை ஞாநயோகத்தினின்றுங்கூட நழுவப்பண்ணும்.

நஇவாயுராஸ்திகதுவ்யம் த்ரிஷுலொகேஷுகிஞ்சந।
நாநவாவாஸவாவவ்யம் வர்துஏவசகர்மணி॥உஉ॥

(உஉ) ஸர்வேசுவரனுய் நினைத்ததெல்லா மடைந்து ஸகலமுந் தெரிந்தவனுய் நினைத்தது செய்யவல்லவனுய், தேவனுகவும் மனிதனுகவும் இன்னும் பலவிதமான சரீரங்களுமெடுத்து மூன்றுலோகத்திலும் இஷ்டப்படி திரிபவனுயிருக்கிற எனக்குச் சிறிதும் கருமம் செய்யவேண்டுவதில்லை; ஏனெனில்-வேறு ஒருவிதத்தாலும் அடையப்படாமல் கருமத்தாலேயே அடையவேண்டும்படியானது எனக்கேதாகிலும் உண்டாகிலன்றே செய்யவேண்டுவது? அதில்லை. அப்படியிருக்க, நானுங்கூட லோகரக்ஷணைத்துக்காகக் கருமத்தையே அநுஷ்டிக்கிறேன் பார்.

யதி ஹ்யஹம் நவர்தேயம் ஜாதுகர்மண்யதந்த்ரித:।
மமவர்த்மாநுவர்தந்தே மநுஷ்யா: பார்த₂ ஸர்வஶ:॥உந॥
உத்ஸீதேயுரிமெலொகா நகுர்யாங்கர்மசேதஹம்।
ஸங்கரஸ்யசகர்தாசமுபஹந்யாமிமா: ப்ரஜா:॥உச॥

(உந-உச) ‡ ஸர்வேசுவரனுய் ஸத்தியஸங்கல்பனுய் ஸங்கல்பமாத்திரத்தாலே ஜகத்தினது உத்பத்தி ஸ்திதி லயங்களை லீலையாகச்செய்பவனுயிருக்

---

‡ முழுதுந் தெரிந்துகொள்ளாத-சாஸ்திரார்த்தங்களில் ஏகதேசந் தெரிந்துகொண்ட.

‡ முன் சுலோகம், மூன்றுலோகத்திலுமென் றருளிச்செய்கையால் ஸ்தாவராதாரபரம்; இதுவோ மநுஷ்யர்கள் என்கையாலே கிருஷ்ணாவதாரத்தைமாத்திரம் பொறுத்தது என்று ‘அஹம்’ என்கிற நிர்த்தேசம் ஈசுவரஸ்வபாவத்தைவிடாத கிருஷ்ணாவதார ஸாதாரணமென்று வியாக்கியானித்தது.

கிற நான், லோகோபகாரமாக என் இச்சையாலே மநுஷ்யனுய் அவதரித்
தேனுகிலும் சிஷ்டஜநங்களிற்றலிலவரான வசுதேவ திருமாளிகையில அவ
தரித்தமையால் அந்த குலத்துக்கேறற கருமங்களைச் சோம்பலில்லாமல் எப்
போதும் நான் செயயாதொழிவனேயாகில் "சிஷ்டஜநங்களிறறலிவராய் வ
சுதேவர் (மைந்தனான) கண்ணன் போனவழியே நமக்கும வழியாகககடவது"
என்று நினைத்து ஸகலமுந்தெரிந்துகொளளாத சில சிஷ்டர்கள் அனைதையே அ
நுஸரிப்பாகள. அபபொழுது அவர்கள தாம் செய்யவேண்டிய கருமநுகளைச்
செயயாமையாலே ஆத்மாவை அடையாதவராகளாய் நரகத்துக்கும் ஆளாக
நிற்பர்கள. நாலை சாஸ்திரோக்தமான ஆசாரத்தைப் பரிபாலிகாமையா
ல் ஸகலமான சிஷ்டகுலங்களுக்கும் $ ஸங்கரத்தைச்செய்து இந்தபபிரா
ணிகளையெல்லாம் அழித்தவனுவேன். ஆகையால் நீயும் இப்படியே சிஷ்டஜந
சிகாமணியான பாண்டவின் புத்திரனுப் தருமன் தம்பியாய் அர்ச்சுநனென்
றுப பிரஸித்தனுயிருந்துகொண்டு ஞாநிநிஷ்டையில் இழிவாயாகில் (மோ
க்ஷத்தைமாத்திரம் ஆசைப்பட்டவாகளாய் சாஸ்திரார்த்தத்தை முழுதும்
தெரிந்துகொள்ளாத) சிலசிஷ்டர்கள உனது ஆசாரத்தையே அநுஸரித்துத்
தமகேறற கருமத்தில் நில்லாமல் நசித்துப்போவர்கள. ஆகையால் பிரஸித்
தனுங்கூட கருமமே செய்யக்கடவன்.

ஸக்தாஃகர்மண்யவித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத।
குர்யாத்³விதா்ம்ஸ்ததாஸக்தஶ்சிகீர்ஷுர்லோகஸங்க்³ரஹம்॥ உ7॥
ந பு³த்³தி⁴பே⁴த³ம் ஜநயே தஜ்ஞாநாம் கர்மஸங்கி³நாம்।
ஜோஷயேத்ஸர்வகர்மாணி வித்³வாந்யுக்த꞉ ஸமாசரந்॥உ8॥

(உ7-உ8) (ஆத்மவிஷயதத்தில் ஸகலமுந் தெரியாதவாகளாய் கருமத்
தில் விடப்போகாத ஸம்பந்தமுளளவர்களான) கருமாதிகாரிகள், அந்த ஆத்
மாப்பியாஸரூபமான ஞாநயோகதத்தில் பிரவேசிப்பது தம்மாலாகாதென்று
தங்களுக்குப் பழக்கமான கருமயோகத்தில் எப்படி இழிகிறார்களோ, அப்
படியே (ஆத்மவிஷயத்தில் முழுதுந் தெரிந்தவனுய் கருமத்தில் பற்றற்று
ஞாநயோகத்துக்கு யோக்கியனுய் பெயர் பெற்றிருக்கிற) சிஷ்டனுங்கூட த
னது ஆசாரத்தால் சிஷ்டஜநங்களுக்குத் தருமநிச்சயம் பண்ணிக்கொடுக்கை
யாகிற லோகரக்ஷணைத்துக்காகக் கருமயோகதத்தையே செய்யக்கடவன். அது
வேயன்றி ஆதமவிஷயதத்தில் ஸகலமுந் தெரியாதவனுகிய கருமயோகாதிகா
ரிக்கோ ஞாநயோகாதிகாரிக்கோ எவனுக்கும், கருமதத்தைக்காட்டிலும் ஞாந
மென்று வேறு ஓர் உபாயமுணடென்கிற புதத்தியைச் சிறிதும் உண்டுபண்ணை
க்கடவனல்லன, பின்னை என்செய்வதென்றுல்-ஞாநயோகாபேக்ஷயின்றிக்
கே கருமயோகமே ஆத்மஸாக்ஷாத்காரதத்துக்கு ஸாதநமென்கிற புதத்தியோடு
கூடித் கருமத்தையே செய்துவந்து முழுதுந்தெரிந்துகொள்ளாதவர்கள்ளுக்கு
ஸகலகருமங்களிலும் பிரீதியை உண்டுபண்ணுகடவன்.

$ ஸங்கரம் (வாணசிரமாசாரங்களின்) கலப்பு.

(அ-கை.) கருமயோகத்தை அநுஷ்டிப்பதில் தெரிந்தவனுக்கும் தெரியாதவனுக்குமுண்டான வாசியைக்காட்டா நின்றுகொண்டு, கருமயோகத்துக்குவேண்டியதான "நான் பண்ணவில்லை" யென்று நினைக்குந் தன்மையை அருளிச்செய்கிறார்.

ப்ரக்ருதேர்க்ரியமாணானி கு³ணைர்கர்மாணி ஸர்வஶ꞉।
அஹங்காரவிமூடா³த்மா கர்தாஹமிதி மன்யதே॥உன॥

தத்துவித்து³ஸ்துமஹாபா³ஹோ கு³ணகர்மவிபா⁴க³யோ꞉।
கு³ணா கு³ணேஷு வர்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே॥உஅ॥

(உன-உஅ) * அஹங்காரத்தால் ஆத்மஞானத்தை யிழந்தமூடன், பிரகிருதியின் குணங்களானஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸுக்களால் செய்யப்பட்டகருமங்களைத்தான்செய்ததாகநினைக்கிறான். குணங்களின் வகுப்பையும் அவற்றின் காரியங்களின் வகுப்பையும் நன்கறிந்தவனே குணங்கள் தந்தங்காரியங்களைச்செய்கின்றன வென்று தெரிந்தவனுகையால் அதில் நான்செய்தேனென்கிற பற்றைவைக்கமாட்டான்.

ப்ரக்ருதேர்கு³ணஸம்மூடா⁴꞉ ஸஜ்ஜந்தே கு³ணகர்மஸு।
தானக்ருத்ஸ்நவிதோ³ மந்தான் க்ருத்ஸ்நவின்ந விசாலயேத்॥உக॥

(உக) ஸகலமும் தெரிந்துகொள்ளாமல் கொஞ்சந் தெரிந்துக்கொண்டு ஆத்மதரிசநத்துக்காகப் பிரயத்நப்படுமவர்கள், பிரகிருதியோடு சேர்ந்திருப்பவராதல்பற்றி, அதின் குணத்தாலே ஆத்மாவினது உண்மை நிலைதெரியாமல்மூடர்களாய் குணக்கிரியைகளிலே மோக்கமுள்ளவர்களாய் அதைக்காட்டிலும்வேறுன ஆத்மாவைச் சிறிதும்நினையார்கள். ஆகையால்இவர்கள்ஞாநயோகத்துக்குத் தக்கவர்களல்ல; கருமயோகத்திலேயே இவர்களுக்கதிகாரம்.இப்படி செவ்வையாய்த் தெரிந்துகொள்ளாத இம்மூடர்களை, செவ்வையாய்த்தெரிந்தவன் தன்னுடைய ஞாநயோகத்தி லிருப்பைக்காட்டிமயக்கக்கடவனல்லன். ஏனெனில் இவர்கள் மந்தர்களாகையால் (சிரேஷ்டஜநங்களிஞசாரத்தைப்பார்த்து அநுஷ்டிப்பவராதல் பற்றி) சிரேஷ்டனை இவனைப்போலவே தாங்களும் கருமத்தைக்கைவிடுவர்கள். ஆகையால் இவனுங்கூடகருமயோகத்திலிருந்தபடியே ஆத்மாவின் உண்மையைநிரூபித்து "நாம்செய்கிறுமில்லை"யென்று மநித்து ஆத்மஸாக்ஷாத்காரத்துக்குக் கருமயோகந்தான் தலையானஉபாயமென்றறுதியிட்டு, முழுதுந் தெரிந்துகொள்ளாத அவர்களுக்குப்பிரீதிசெய்யக்கடவன். [இதனால் பிரகிருதிக்கவ்வருகான ஆத்மஸ்வபாவத்தை நன்கறிவதனால் கர்த்ருத்வத்தைக் குணங்களிலேறிட்டுக் கருமத்தைஅநுஷ்டிக்க வேண்டுமென்றதாயிற்று. இங்கே அசேதநமானகுணங்களில்கர்த்ருத்வத்தையேறிடுகையாவது ஆத்மாவுக்கு ஸ்வபாவத்தாலே கர்த்ருத்

---

* அஹங்காரமாவது - அஹம் (நான்) என்பதற்கு அர்த்தமல்லாத பிரகிருதியில் அஹம் என்கிற அபிமாநத்தைச்செய்வது.

வமில்லாம லிருக்கச்செய்தே குணஸம்பந்தத்தாலே கர்த்தாவாகத் தோற் றுகிறதென்று நினைக்கை.]

(அ-கை.) இப்பொழுது, ஆத்மாக்கள் பரமபுருஷனுக்குச் சரீரமாயிரு ப்பது பற்றி அவனுக்கு சேஷப்பட்டிருக்கின்றமையை நினைத்து, குணத் தால்வரும் கர்த்ருத்வத்தை (ஸர்வ ஆத்மபூதனுன) பரமபுருஷனிடத்தில் ஏறிட்டுக் கருமம் செய்யவேண்டுமென் றருளிச்செய்கிறார்.

உயிலவ-ாணிகூ-ாணி வஸ்ருவ்ராயர்ாதெவதவா|
நிராஶீர்நி-ுஷ்-ுரொஹமிகூவா யுாயர்வுவவிஹதஜ்வரஃ॥கூ0॥

(கூ0) அர்ச்சுந! ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியே அறிந்து ஸகல கருமங்களையும் நம்மிடத்தில்வைத்து பலத்தில் ஆசையின்றி என்னுடைய தென்கிற வெண்ணத்தையுமொழித்து வருத்தமில்லாமல் யுத்தம்செய்.

என்றால்:—"இந்த ஆத்மாவானது ஸர்வேசுவரனை பரமபுருஷனுக் குச் சரீரமாய் அவன் ஏவிக்காரியங்கொள்ளும்படி அவனுக்கு அதீநமாயிரு க்கையாலே ஸகல கருமங்களும் ஸர்வபூதாந்தராத்மாவான அவனாலே செய் யப்படுகின்றன" * என்று அநுஸந்தித்து, (அவைகள் கேவலம் பரமபுருஷனை நம்முடைய ஆராதநரூபமாயிருக்கையாலே) அவைகளின் பலத்தில் ஆசை யையும் எனதென்கிற எண்ணத்தையு மொழித்து மனவருத்தமில்லாமல் தாராளமாய் யுத்தமுதலிய கருமங்களைச்செய். அதாவது:— ¶ ஒ வரன் தன் ஆராதநத்துக்காகத் தன்ஆத்மாக்களைக்கொண்டு தன் உபக களாலே தன்கருமங்களைச் செய்வித்துக்கொள்ளுகிறானென்று நினைத்து கருமங்களில் எனதென்கிற புத்தியைவிட்டு, "அநாதிகாலமாய் நம்மைப்பற் றிக்கிடக்கிற பழையபாபங்களுக்கு நாமென்செய்வோம்" என்கிற பயத்தை யுமொழித்து, "கருமத்தால்ஆராதிக்கப்பட்ட பரமபுருஷனே நம்மை ஸம் ஸாரத்தினின்றும் விடுவிப்ப"னென்கிற உறுதியோடு சுகமாகக் கருமயோகத் தையே செய்யென்று திருவுள்ளம்.

---

*இவ்வர்த்தம் பல ஶ்ரு-திஸ்ம்ருதிகளில் பிரஸித்தம்: எங்ஙனேயென்னில்- கூஹ்ஹ் வ்ருவிஷ்டஶ்ராவ்ராஜ்நா நாம்ஸவ-ோ-தா - கூஹ்ஹ் வ்ருவிஷ்டம்க தா-ோஸ்ரஜ்தி-யகூ-தநி திஷ்டந்நா-தநாஹ்ரொ யஶ்தா நவெஷ்ய வ்ருகூ-தாஶரீரம்யகூ-தா நஜ்ஞரொயஶ்யதிவ்ஸ்த கூ-தாஹ்ரவ்ருஶ்ச ஊத இத்யாதி ஶ்ரு-திகள், எம்பெருமானே பிரவர்த்திப்பிக்கு மவனுகவும் ஜீவனை அவனுல் பிரவர்த்திப்பிக்கப்படுமவனுகவும் சொல்லுகின்றன. வ்ர ஶ்ராவஸ்தி தா-ாம்ஸவெ-ுஷ்டாம் இத்யாதி ஸ்ம்ருதிகளும், அப்படியே. ஸவ-ு வ்ருவாஹம்ஹ்ரஜ்ஞி வஸ்நிவிஷ்டாஶ்தவ்ரதிஜ்ஞ-ோந ஶவொஹநஜ்ஞ-ாம்ஶ்ராம் வ்ஸவ-ுஹ்ருத்தா நாம்ஹ்ரஜ்ஞெஶ்வ உஜ்ஜ-ுர்நதிஷ்ஷதி | ஹ்ரஶ்ய வ்ஸவ-ுஹ்ருத்நியஜ்ரா-ாஶ்ரயாநிஶாயயா என்று மேலும் அருளிச் செய்யப்போகிறார்.

¶ பரமபுருஷனுடைய ஸர்வேசுவரத்வமும் ஸர்வசேஷித்வமும் தீ ஶ்ரா-ணாம்வ-ாஶ்ரஶ்ரவெஶ்ரா-ம் தஜ்ஞெவதாநாம் வ-ாஶஜ்ஞவெஶவ வ்தம்-வதிம்விஶ்வஸ்ரு-வதிம்வெதீநாம் இத்யாதி ஶ்ரு-தி ஸித்தம்.

(அ-கை.) இதுதான் உபநிஷத்துக்களில் திரண்ட ஸாரமான பொருளென்கிறார்.

யெஜ்ஜ தீஜ்ஞம்நித்ய உந்-தீஷ்தேரோ நவாஃ।
ஸ்ரு ஜாவஞ்சொ நஷ்மயஞ்சொ உ-உ3ஞ்செதவிகூஜ்ஹுஃ॥ ஈக॥

(ஈக) சாஸ்திரத்தை அநுஷ்டிக்கத்தக்கவரில் யாவர்கள், இதுதான் சாஸ்திரார்த்தமென்று நாம் நிஷ்கர்ஷித்தபடி இவ்வர்த்தத்தை இப்படியே அநுஷ்டிக்கிறார்களோ, அநுஷ்டிக்காவிட்டாலும் யாவர்கள் இதில் சிரத்தையோடிருக்கிறார்களோ, சிரத்தையில்லாவிடினும் யாவர் இதில் அசூயை கொள்ளாமலிருக்கிறார்களோ, அதாவது இதில் தோஷத்தை ஏறிடாமலிருக்கிறார்களோ, இவர்கள் யாவரும் அநாதிகாலமாய்ப் பற்றிக்கிடக்கிற (ஸம்ஸாரஹேதுவான) ஸகல கர்மங்களினின்றும் விடுபடுவார்கள். [அநுஷ்டிப்பவர்விடுபடுவது யுக்தம்; மற்றவரும் விடுபடுவார்களென்பது எப்படியெனில் - அநுஷ்டியாவிடினும் இதில் சிரத்தை பண்ணுவதிலாலும் அசூயை கொள்ளாமையிலாலும் அவர்களுக்கு ஸகல பாபங்களுந் தொலைகின்றன; அதனால் நாளடைவிலே இந்த அர்த்தத்தை அநுஷ்டித்து அப்புறம் விடுபடுவர்களென்று திருவுள்ளம்.]

(அ-கை.) எம்பெருமானுக்குத்திருவுள்ளமான உபநிஷத்தின்அர்த்தத்தை அநுஷ்டியாதவருக்கும் அதைப்பேணுதவருக்கும் அதில் அசூயை கொண்டவருக்கும் வரும் கெடுதி சொல்லுகிறது.

யெகெ தஜ்ஹ்யஸ்மயஞ்சொ நாநு-தீஷ்தந்தி தே மதம்।
ஸர்வஜ்ஞா நவிமூடாம்ஸ்தாந்து வித்தி நஷ்டா நசெதஸஃ॥ ஈஉ॥

(ஈஉ) "இந்த ஆத்மவஸ்துவெல்லாம் எனக்குச் சரீரமாயிருக்கையாலே என்னைப்பற்றியதாய் எனக்கு சேஷப்பட்டதாய் நான் ஏவிலுல் பிரவிருத்திக்குந் தன்மையதாயிருக்கிறது" என்கிற என் ஸித்தாந்தப்படி அநுஷ்டியாதவர்களும், இதில் சிரத்தைபண்ணுதவர்களும், இதில் அசூயை கொண்டவர்களும் ஒன்றிலும் ஒன்றுந்தெரியாத பெரும் மூடர்களாய்க் கெட்டுப்போவர்கள். [மனதுக்குக் காரியம் வஸ்துவை உள்ளபடி அறிகை;இவர்கள்மனதுக்கோ அதில்லை; அதில்லாமையாலே விபரீதஞானமுண்டாய்க் கெட்டுப்போகிறார்களென்று தாத்பரியம்.]

(அ-கை.) ஆக விப்படி "பிரகிருதியி லகப்பட்டவனைக் கர்த்தாவென்று நினைப்பது, அந்தப் பிரகிருதி குணங்களின் ஸம்பந்தத்தாலன்றி வேறில்லையென்றும் ஆனல்அந்தகர்த்ருத்வம் பரமபுருஷாதீநமென்றும் அநுஸந்தித்து, கருமயோகத்துக்குத் தக்கவனுகிலும் ஞானயோகத்துக்குத் தக்கவனுகிலும் இருவரும்கருமயோகமே செய்யக்கடவர்கள். பிரஸித்தமே மிகுதியும்அதையே செய்யவேண்டியது" என்றருளிச்செய்து, இனி இந்த அத்தியாயத்தின் மீதியாலே ஞானயோகம் செய்வது கஷ்டமென்றும் பிரமாதத்தை உண்டாக்குமென்றும் அருளிச்செய்கிறார்.

ஸஞ்ஜாயதேகாமஸ்காமாத்க்ரோதோபிஜாயதே |
காமாதீர்யாதிலோபஸ்தாந்நிர்ஹ்ருஷ்கிம்கரிஷ்யதி ||கக||

(கக) பிரகிருதிக்குப்புறம்பான ஆத்மவஸ்துவைத்தான் எப்போதும் அநுஸந்திக்கவேண்டுமென்று சொல்லுகிற சாஸ்திரஞானமுள்ளவனும், தன்னைத்தொடர்ந்த பிரகிருதியினது பழைய வாஸனையின்படி சப்தாதி விஷயங்களிலேயே பயிற்சிசெய்கிறான். ஏனெனில்-அசேதநத்தோடு கலசினஜந்துக்கள் அநாதி வாஸனையைத் தொடராமலிருக்குமோ? அவைகளை சாஸ்திரக்ஞன் கட்டுப்படுத்தினமட்டில் இவன் செய்யும் கட்டு என்பயனுடைத்தாம்?

(அ-கை.) பிராணிகள் பிரகிருதியைத் தொடரும் வகை சொல்லுகிறது.

இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்தே ராகத்வேஷௌவ்யவஸ்தி தௌ | கஉ.

(கஉ) காது முதலியஞானேந்திரியத்துக்குசப்தம்முதலியவற்றிலும் வாக்கு முதலிய கருமேந்திரியத்துக்கு வசநம் முதலியவற்றிலும் அநுபவிக்கவேண்டுமென்கிற ஆசையான்று பழைய வாஸனையின் வலிமையால் ஒழிக்கப்போகாதபடி வந்து சேருகிறது; அந்த ஆசை நிறைவேறுவதற்குஏதேனும் விரோதம் வருமாகில், அதனிடத்தில் அமோகமான குரோதம் விளைகிறது. [இவ்விரண்டும்; அதாவது-காமம் குரோதமென்கிற விரண்டும், ஞானயோகத்திலிழிந்து ஸகல இந்திரியங்களையு மடக்கியவனையும் தாம் வசப்படுத்தி, பலாத்காரமாய் தங்காரியங்களோடு கொண்டுசேர்க்கின்றன. பின்பு இவன் ஆத்மஸ்வரூபத்தை நாடாமல் நசித்துப்போகிறான்.$]

தயோர்ந வஶமாகச்ச தௌஹ்யஸ்ய பரிபந்திநௌ ||கச||

(கச) புருஷனால் ஜயிக்கக்கூடாத சத்துருக்கள் காமமென்னும் குரோதமென்னு மிரண்டுண்டாகையாலே வீணிலே ஞானயோகத்திலிழிந்து அவற்றிற்கு வசப்படக்கடவனல்லன்.

ஸ்ரூயாந்ஸ்வதர்மோவிகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டி தாத் |
ஸ்வதர்மேநிதநம்ஸ்ரேய: பரதர்மோபயாவஹ: ||கந||

(கந) பிரகிருதியிலகப்பட்ட புருஷன் தனக்கேலாத ஞானயோகத்தைச் சிறிதுகாலம் குறைவற அநுஷ்டித்துவந்து இடையில் விட்டு விட்டுஅதனால் பிரமாதத்தைவிளைவித்துக்கொள்வதைப்பார்க்கிலும், தனக்கு அடுத்ததாய் சுகமாய் செய்யக்கூடியதான கருமயோகத்தைச்செய்துவந்து அதில் ஸித்திபெறுமற்போலுங்கூடமிக நலமாம். அதெப்படியென்றால்:—ஞானயோகத்துக்கு விரோதியான பாவமொன்று மில்லாமையாலே மறுஜந்மத்திலாவது இந்திரியவியாகூலமற்றுச் செய்யும்படி ஸம்பவிக்குமன்றோ? ஆகையால் தன்தர்மமானகருமதத்தைவிட்டுப் பிறர்தர்மமான ஞானத்தைமேற்கொள்வதுளப்போதும் அநர்த்தந்தான்.

$ [] இதற்குள்ளகப்பட்ட விஷயம் - பூர்வ சுலோகத்தோடு இந்த சுலோகத்தை ஒன்றுபடுத்துவதால் ஏற்பட்ட தாத்பரியம்.

(அ-கை.) அர்ச்சுனன் பிரசினம்பண்ணுகிறான்.

கஜுர்நஉவாச ॥ கயாகநவ்ரபாகாயம்யொவஜ்ஞாதிவ்ய
ஸுஷ்டிகநிஉநவிவாஷ்யவைஸ்வாநராதிபாஜித ॥ கசு॥

(கசு) ஞாநயோகத்திலிழியுமவன் "நான் விஷயாநுபவத்தில் இழிய க்கடவேனல்லேன்" என்கிற உறுதியோடிருக்கச்செய்தே அவனை வலிவில் இழுத்து விஷயங்களை அநுபவிக்கும்படி செய்வது யாது? என்று கேட்டான்.

ஸ்ரீபகவாநுவாச ॥ காமஏஷகோயமேஷ ரஜோகுணஸமுத்பவ:
மஹாஸநோமஹாபாப்மா வித்யேநமிஹவைரிணம் ॥ கஎ॥

(கஎ) அதற்குக் கண்ணன் திருவாய் மலர்ந்தருளியது - அர்ச்சுந! தோன்றுவதுந்திரிவதுமாயிருக்கிறப் பிரகிருதியோடு சேர்ந்திருக்கிறவனையில் புருஷன் ஞாநயோகத்தை ஆரம்பித்தாலுகில் ரஜோகுணத்தின் காரியமாய் பழைய வாஸனையாலுண்டான காமமென்னும் பகையானது, இவனைச் சப்தாதிவிஷயங்களில் ஏவாமல் விடாது. அப்போது இவனுக்கு அபேக்ஷிதம் நிறைவேறுமற் போமாகில், அதற்கு விரோதிகளாய்த் தோன்றும் பிராணிகளிடத்தில் (அந்த காமமே) கோபமாகத்திரிந்து, ஹிம்ஸைமுதலான கொடுஞ் செயலையுஞ்செய்யும்படி செய்கிறது. ஆகையால் ஞாநயோகத்துக்குஇதுவே விரோதியென்றறி.

யமேநாவ்ருயதேதவஹ்நி ராதர்ஶோமலேநச
யதோல்வேநாவ்ருதோகர்பஸ்ததாதேநேதமாவ்ருதம் ॥ கஅ॥

(கஅ) அக்னியைப் புகையும் கண்ணழியை அழுக்கும் கர்பபத்தைக் கருப்பையும் மூடிக்கொள்வதுபோல இந்தப் பிராணி ஸமூஹத்தைக் காமமானது மூடிக்கொண்டிருக்கிறது.

(அ-கை.) அது மூடும்படியை அருளிச்செய்கிறார்.

கூவ்ருதம்ஜ்ஞாநமேதேந ஜ்ஞாநிநோநித்யவைரிணா
காமரூபேணகௌந்தேய துஷ்பூரேணாநலேநச ॥ கக॥

(கக) ஞாநஸ்வபாவனை இந்த ஜந்துவின் ஆத்மஞாநத்தை, (விஷயமோஹத்தைச்செய்யும் நித்திய சத்துருவான) காமமானது, எட்டாதவஸ்துவிலெல்லாம் ஆசையை விளைவித்து, அவை கிடைத்தாலும் போதுமென்கிற திருப்தியை உண்டுபண்ணுமல் மூடிவிடுகிறது.

(அ-கை.) எவ்வித உபகரணங்கள் கொண்டு மூடுகிறதென்றும் அருளிச்செய்கிறார்.

இந்த்ரியாணிமநோபுத்திரஸ்யாதிஷ்டாநமுச்யதே
ஏதைர்விமோஹயத்யேஷ ஜ்ஞாநமாவ்ருத்ய தேஹிநம் ॥ கக॥

(கக) ஞாநஸ்வபாவனை இந்த ஜந்துவின் ஆத்மஞாநத்தை, (விஷயமோஹத்தைச்செய்யும் நித்திய சத்துருவான) காமமானது, எட்டாதவஸ்துவிலெல்லாம் ஆசையை விளைவித்து, அவை கிடைத்தாலும் போதுமென்கிற திருப்தியை உண்டுபண்ணுமல் மூடிவிடுகிறது.

(அ-கை.) எவ்வித உபகரணங்கள் கொண்டு மூடுகிறதென்றும் அருளிச்செய்கிறார்.

இந்த்ரியாணிமநோபுத்திரஸ்யாதிஷ்டாநமுச்யதே
ஏதைர்விமோஹயத்யேஷ ஜ்ஞாநமாவ்ருத்ய தேஹிநம் ॥ கக॥

(சo) காமமானது, இந்திரியம் மனது புத்தி இவைகளோடு ஆத்மாவில் இருந்துகொண்டு, (விஷயமென்ருல்கொண்டாட்டமான) அவைசஹாக்கொண்டே பிரகிருதியோடு கலசிய ஞாநஸ்வரூபனான இந்த ஜீவனை மூடி, நாணவிதமாய்மோஹிக்கச்செய்கிறது. அதனல் ஆத்மஞாநத்தில் கண் வைக்கவொட்டாமல் விஷயத்தில் திருப்பிவிடுகிறது.

தஸ்மாத்த்வமிந்த்ரியாண்யாதௌ நியம்யபாரதர்ஷபம்
பாப்மாநம்ப்ரஜஹிஹ்யேநம் ஜ்ஞாநவிஜ்ஞாநநாஸநம்॥சக॥

(சக) இந்திரிய வியாபாரங்களையெல்லா மொழித்துச் செய்யவேண்டியதான ஞாநயோகத்தில் இழிந்தவனுக்கு, இந்தக் காமமென்னும் சத்துருவானது விஷயத்தில் உண்டான ஊற்றத்தாலே ஆத்மஞாநத்தை விரோதிக்கின்றமையால், (பிரகிருதியுடன் கலசி இந்திரிய வியாபாரங்களிற் பழகிய) நீ, மோக்ஷோபாயந் தேடத்தொடங்கும்போதே (இந்திரியவியாபாரரூபமான) கருமத்திலிழிந்து, (ஆத்மஸ்வரூபஞாநத்தையும் அதின் விவேகத்தையும் போக்கடிக்கின்ற) நாசமான பாசத்தை ஒழிக்கப்பார்.

(அ-கை.) ஞாநவிரோதிகளுக்குள் இதுதான் பிரதாநமென்கிறார்.

இந்த்ரியாணிபராண்யாஹுரிந்த்ரியேப்யஃபரம்மநஃ।
மநஸஸ்துபராபுத்திர்யோபுத்தேஃபரதஸ்துஸஃ॥சஉ॥

(சஉ) இந்திரியங்கள் விஷயத்தைத் தேடப்புக்கால், ஆத்மாவின் விஷயத்தில் ஞாநம் பிறவாதாகையாலே ஞாநவிரோதிகளில் முக்கியம் இந்திரியங்கள்: அவை அடங்கிஞலும் மனது விஷயத்தைத் தேடுமாகில் அந்த ஞாநம் உண்டாகமாட்டாதாகையாலே அவற்றிலும் மனது முக்கியம்: அம்மனது அடங்கிஞலும் புத்தியானது, விபரீதமாகஎண்ணத்தொடங்குமாகில்அது உண்டாகமாட்டாதாகையால் அதிலும் புத்தி முக்கியமாம்: இவையெல்லாம் அடங்கிஞலும் (வாஸனையாலுண்டான இச்சையென்கிற) காமம்இருந்தாகில்,அதுவே அவ்விந்திரியம் முதலானவைகளைத் தன்வசமாக்கி ஞாநமுண்டாகாதபடி செய்துவிடும். ஆகையா லிதுவே யெல்லாவற்றிலும்சீரியது.

வநவுத்வெளபராபுத்தௌ ஸம்ஸ்தப்யாத்மாநமாத்மநா।
ஜஹிசத்ருங்மஹாபாஹோகாமரூபம்துர்ஜயம்॥சக॥

(சக) ஓ மஹாபாகுவே! ஞாநவிரோதிகளுக்குள் புத்தியைக்காட்டிலும் காமமானது மேலானதென்றேர்ந்து அந்த புத்தியைக்கொண்டு மனதைக் கருமயோகத்தில் நிறுத்தி, காமமென்னும் இக்கொடும்பகையை வெல்லப்பார்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

ஶ்ரீ:.

ஶ்ரீமதே ராமானுஜாயநம:.

நான்காவது அத்யாயம்

அவதாரிகை,

மூன்றுவது அத்தியாயத்தில் பிரகிருதியோடு கலசிய புருஷனுக்கு, மோக்ஷாபிலாஷையுண்டானாலும் உடனே ஞாநயோகத்தில் இழியப்போகாதாகையாலே கருமயோகமே செய்யதக்கதென்றும், ஞாநயோகத்தில் அதிகாரமுள்ளவனுக்கும் (நான் செய்யவில்லையென்கிற வெண்ணத்துடனே) கருமயோகம் செய்வதே மேலானதென்றும்; அதில் விசேஷமாய்ஞாநாநுஷ்டாநங்களால் பிரஸித்தனுக்கோ மிகுதியும் அதுவே செய்யத்தக்கதென்றும் தகுந்த காரணத்தோடு அருளிச்செய்து, நான்காவதில் - கருமயோகமானது லோகரக்ஷணத்துக்காக இந்த மன்வந்தரத்தின் ஆதியிலே தம்மால் அருளிச்செய்யப்பட்டமையால் கருமத்தை அவசியம் செய்யவேண்டுமென்று திடப்படுத்தி; இந்த கருமயோகமும் ஞாநத்தை உட்கொண்டமையால் இதுவே ஞாநயோகரூபந்தானென்று மருளிச்செய்து கருமயோகதத்தின் ஸ்வரூபம், அதின் பேதம், அதில் ஞாநபாகத்துக்குப் பிராதாநயம், இவைகளையெல்லாம் அருளிச்செய்கிறார். * பிரஸங்கமாய் எம்பெருமானுடைய அவதாரஹஸ்யமும் சொல்லப்படுகிறது.

ஶ்ரீ ஹமவாந வாச ॥ இமம்விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாநஹமவ்யயம்। விவஸ்வாநுமநவேப்ராஹ மநுரிக்ஷ்வாகவேப்ரவீத்॥க॥

ஏவம்பரம்பராப்ராப்த மிமம்ராஜர்ஷயோவிது:।
ஸகாலேநேஹமஹதா யோநஷ்டப்பரந்தப॥உ॥

ஸஏவாயமயாதேத்ய யோகப்ரோக்தஸ்புராதந:।
ஹிகோவிஜிஜ்ஞாஸவாவேதி ரஹஸ்யம்ஹ்யேததுத்தமம்॥ங॥

(க-உ-ங) அர்ச்சுந! இப்பொழுது நம்மால் சொல்லப்பட்ட இந்த யோகமானது கேவலம் உன்னை யுத்தத்தில் புகவிடுவதற்காகச் சொன்னதாக நினையாதே கொள். மந்வந்தரத்தின் ஆதியில், ஸகலலோகமும் கடைத்தேறு நிமித்தம் மோக்ஷஸாதநமாக இதை நாம் விவஸ்வானுக்குச் சொன்னேம்; அவர் மநுவுக்கும் அவர் இக்ஷ்வாகுவுக்கும் சொல்ல இப்படி பரம்பரையாய் வந்தது; இதை ராஜருஷிகளெல்லா மறிவார்கள். கேட்பவரின புத்திக்குறைவினல் வெகுகாலத்துகுமுன் இது நஷ்டப்பிராயமாய்விட்டது. அதையே இபபொழுது சிறிதும் பிசகாதபடி, (நமக்குத் தோழனும் நமமிடத்தில் மிகுதியும் பக்தியுடன் நம்மையே சரணமடைந்தவன்) உனக்கு விஸ்தா

---

* பிரஸங்கமாவது - ஒன்றினமீதொனறுப் வரும் பேசசு.

ரமாகச்சொன்னேனும். இது, வேதாந்த ரஹஸ்ய ஞாநமாகையால் நம்மாலல்லது மற்றொருவராலும் சொல்லுந் திறத்ததன்று.

(அ-கை.) இதனிடையில் எம்பெருமானுடைய அவதாரத்தின் உண்மையை அறிவதற்காக அர்ச்சுநன் பிரசிநம் பண்ணுகிறான்.

சுஜ்ஞ நஉவாச||சுவாரஜ்ஜவி தாஜ்ஜ வாரம்ஜ்ஜநவிவஸ்வ தः |
கயஶித ஶ்ரேஜ்ஜா நீயாம் கஶாஶ்ளவ்ரோக்தவாந் இதி||சு||

(சு) கிருஷ்ண! காலஸங்கியையைப்பார்த்தால் அடியேன் பிறந்த (ஸம) காலத்தில்தான் தேவரீரும் அவதரித்ததாகத் தெரிகிறது; விவஸ்வானுடைய பிறப்போ இருபத்தெட்டு சதுர்யுகமானதாகத் தெரிகிறது; இப்படியிருக்க, ஆதியில் விவஸ்வானுக்குத் தேவரீர் அருளிச்செய்ததாகச் சொன்னல் அதை யெங்ஙனம் நம்புவது? [மஹான்கள் ஜந்மாந்தரவிருத்தாந்தம் அறிந்து சொல்லக்கூடுமாகையாலும், கண்ணன் மஹானென்றும் ஸர்வேசுவரனென்றும் அர்ச்சுநனுக்குத்தெரியுமாகையாலும் ¶ கண்ணன் வார்த்தையில் விரோதமில்லையென்று தெரிந்திருக்கச்செய்தே, அர்ச்சுநன் தெரியாதவன் போல் கேட்பதைப்பார்த்தால் (நிகிலஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாநஞ் ஸார்வஜ்ஞ ஸத்தியஸங்கல்பாதிகளுடையனை) பரமபுருஷனுக்கு, (கருமாதீனரான தேவமனுஷ்யாளோடொத்திருக்கு) மிந்த ஜந்மம் என்ன இந்திரஜாலம்போல் மாயமா? இல்லையென்று ஸத்யமா? ஸத்யமானால் ஜந்மத்தின் பிரகாரமென்ன? திருமேனி என்ன ஸ்வரூபம்? எப்பொழுது ஜந்மம்? எதற்காக வெடுத்ததென்கிற சங்கையைப் பரிஹரிப்பதற்காகக் கேட்டதாய்த் தெரியவருகிறது.]

(அ-கை.) இப்படி வினவிய அர்ச்சுனனைப்பார்த்து கண்ணன் அருளிச்செய்கிறார்.

ஶ்ரீ ஹபவாந உவாச || பஹூநிமெ வ்யதீதாநி ஜந்மாநி தவ
சார்ஜ்ஜுந| தாந்யஹம்வெதஸவ்ராணி நத்வம்வெத்த பரந்தப||ந||

(ந) அர்ச்சுந! எனக்கும் பல ஜந்மங்கள் கழிந்தன, உனக்குமப்படியே; ஆனல் அவை யாவும் எனக்குத்தெரியும் உனக்குத் தெரியாது. [இங்கே உனக்கும் என்று அர்ச்சுனன் ஜந்மத்தைத் திருஷ்டாந்தமாகச் சொல்லுகையாலே எம்பெருமானுடைய அவதாரம் ஸத்யமென்றதாயிற்று.]

(அ-கை.) அவதாரத்தின்படியும், திருமேனியின் உண்மையும், திருவவதாரத்துக்குக் காரணமும் அருளிச்செய்கிறார்.

அஜோவிஸ்நவ்யயாத்மா ஹபூதாநாமீஶ்வரோவிஸ்நு|
ப்ரக்ருதிம்ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா||அ||

¶ அர்ச்சுனன் ப்ரம்ஹ ஹவாம்யாதீஜ தர்ஷியாக மேலே சொல்லப்போகிறபடியாலும், க்ருஷ்ணவஹிரொகா நாத்ரு தத்வ தः இத்யாதியாக பீஷ்மாதிகள் ராஜஸூயயாகாதிகளில் சொல்லக்கேட்டாணுகையாலும் தெரியும்.

(சு) பிறப்பில்லாமை, அழிவில்லாமை, ஸர்வேசுவரத்வமென்கிற பரமேசுவரன் தன்மைகளிலொன்றும் விடாமல் * ஸ்வஸ்வரூபத்துடனே என இச்சையிலுல் அவதரிக்கிறேன; அதாவது - ஸமஸ்தகல்யாண குணாத்மகமாயிருக்கையாகிற ஸர்வேசுவர ஸ்வபாவத்தைவிடாமல் என ஸ்வரூபத்தையே என்ஸங்கல்பத்தால் தேவாதிரூபமாகச்செய்துக்கொண்டு அவதரிக்கிறேனென்றபடி. இவர்த்தம் (சுஜாயோ நாலுஹாயாவிஜாடே த) எனுஞ் சுருதியும் சொல்லுகிறது.

[இப்படி அர்த்தம் சொல்லாதபோது பஹூநீவை ருதீதாநி ஜாநாதிதவாஜுர்ந | தாநருஹம் வேதவாணிதஸ்தாநம்ஸ்ய ஜாரருஹி || ஜநகஸ்ருவெதிவருவேவம்யொ வெதிதத்தஃ என்கிறமுன்பின்னுரை விரோதிக்கும்.] ஸாயாவயர்நம்ஜாநம் என்று நிகண்டுக்காரர் சொல்லியபடி, மூலத்தில ஸாயா சப்தம் ஸங்கல்பரூபமான ஞாநபரம். ஸாயயாவஸதம்வெதி பூராணிநாது ஸர்வாஸர்வாஹி என்று முன்னோர்களும் மாயாசப்தத்தாலே ஞாநத்தைச்சொன்னார்கள. அப்படியே பிரகிருதியென்பது இங்கே ஸ்வபாவபரம்.

(அ-கை.) அவதாரகாலத்தை அருளிச்செய்கிறார்.

யதாயதாஹியதர்மஸ்ய க்லாநிர்பவதிபாரத|
அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம்ஸ்ருஜாம்யஹம்||ள||

(எ) நாம் அவதரிப்பதற்கு ஒருகால நியமமில்லை; வேதத்திற் சொன்ன வருண ஆசிரம ஆசாரங்களுக்கு வாட்டமுண்டாய் எப்பொழுதெப்பொழுது அதர்மத்துக்குக் கிளர்ச்சியுண்டாகுமோ, அப்பொழுதப்பொழுது முற்கூறியபடியே நாம் அவதரிக்கிறோம்.

பரித்ராணாயஸாதூநாம் விநாஸாயசதுஷ்க்ருதாம்|
தர்மஸம்ஸ்தாபநார்தாய ஸம்பவாமியுகேயுகே||அ||

(அ) அவதரிப்பதற்குப் பிரயோஜநம் அருளிச் செயகிறார். ஸாதுக்களை ரக்ஷிக்கவும, துஷ்கர்மாக்களை நாசம்செய்யவும், தருமததை ஸ்தாபிக்கவும் யுகந்தோறும் அவதரிக்கிறேன் [என்று சப்தார்த்தம்.]

ஸாதுக்களாவார் கீழ்ச்சொன்ன லக்ஷணமுள்ள ஸ்ரீவைஷ்ணவசிகாமணிகள்: அவர்கள் நம்மை ஆஸ்ரயிக்கப்பிரவர்த்திதது, (நமது நாம கர்ம ஸ்வரூபங்கள் வாக்குக்கும் மனதுக்கு மெட்டாமையாலே நம்மைக்கண்டாலல்லது தமக்கு ஆத்மயாத்ரை நடவாமல், ஒருக்ஷணத்தை ஆயிரங்கற்பமாக நினைத்

---

* ஸ்வஸ்வரூபமோக்ஷிதருவணருக்தேஷ்வாஹாக || க்ஷயத்தேஜஸ்வரூஜஸ்ரீவாராக || யவஷொடஸாஹிதருஹிரண்யஸ்ரவராஷஃ || தஸ்மிந்யம்வராஷொஷநாசயஃ ஸுஹிதாஹிரண்யஃ|| ஸவெருநிதேஷொஜஜ்ஞிரெவிதருதஸ்வராஷொஹயி || ஹாரமிவஹ்வா தருவஜ்ஞ கூகாஸகூதா|| ஸவருகூருர ஸவருகாதேஸவருமந்யஸவருராவஃ தேஹாராஜதம்வாவஃ என்று சுருதியில் பிரஸித்தம்.

தவர்களாய் உருமாய்ந்துப்போவர்கள் என்று நமது ஸ்வரூபம், சேஷ்டிதம், கடாக்ஷம், ஸம்பாஷணம் முதலியவைகளைத் தந்து அவர்களை ரக்ஷிப்பதற்காகவும்; அப்படியில்லாமல் கெட்டநடையில் இருப்பாரை யழிப்பதற்காகவும், நமது ஆராதநரூபமானவைதிகத்தருமம் க்ஷீணமாய்ப்போனால் அதை (ஆராத்யனை) நம் ஸ்வரூபத்தைக்காட்டி ஸ்தாபிப்பதற்காகவும், தேவமநுஷ்யாதிரூபமாய் யுகந்தோரும் அவதரிக்கிறேம். [கிருதயுகமென்றும் திரேதாயுகமென்றும் இப்படி யுகவிசேஷ நியமமுமில்லை] [என்று பாஷியம்.]

ஜநகஉத்வஜிவ ஜெவம்யொவெத்தி தத்த்வத:।
தயுக்ரூாஜெஹம்வைநஜந்ம நைதிசாஜெதிலொஜந்ரூந॥ கூ॥

(கூ) திவ்யமான என் ஜந்மத்தையும் கர்மத்தையும் உள்ளபடியே எவன் அறிகிறானோ, அர்ச்சுந! அவன் தேஹத்தைவிட்டு என்னை அடைகிறான்; மீண்டும் வருகிறதில்லை [என்று சப்தார்த்தம்.] இதற்கு பாஷியம்:—

(இப்படி) கர்மாதீநமாய், (ஹேயத்ரி குணரூபப்) பிரகிருதி ஸம்பந்தரூபமாயிருக்கிற ஜந்மமில்லாதவனும், ஸர்வேசுவரத்வம் ஸர்வக்ஞத்வம் ஸத்யஸங்கல்பத்வந் தொடக்கமான ஸமஸ்த கல்யாண குணத்மகனுமிருக்கிற நம்முடைய ஸ்வரூபமும் சேஷ்டையும் அப்ராக்ருதமாய் நமக்கே அஸாதாரணமாயிருக்கிறதென்றும், ஸாதுக்களை ரக்ஷிப்பதும் பிராணிகள் நம்மை ஆஸ்ரயிப்பதுமே அதற்குப்பிரயோஜநமென்றும், உள்ளபடியே எவன் அறிகிறானோ, அவன் அப்பொழுதுண்டான தேஹத்தைவிட்டவுடன் மறுபடியும் ஜந்மமெடுக்காமல் நம்மையே யடைகிறான். நம்முடைய திவ்யமான ஜந்மசேஷ்டிதங்களை உள்ளபடியே அறிந்தமையால், நம்மை ஆஸ்ரயிக்கவொட்டாமல் விரோதிக்கிற ஸகலபாபங்களும் நசித்து இந்த ஜந்மத்திலேயே முன் சொன்னபடி நம்மை ஆஸ்ரயித்து நம்மையே விரும்பி நம்மையே நினைத்திருந்து நம்மையே அடைகிறான். [என்று பாஷ்யம்.]

(அ-கை.) அதையே அருளிச்செய்கிறார்.

வீதராகபயக்ரோதா மந்மயா மாமுபாஸ்ரிதா:।
பஹவோ ஜ்ஞாநதபஸா பூதா மத்பாவமாகதா: கo॥

(கo) ராகம், பயம், குரோதம் இவற்றையொழித்து நம்மை ஆஸ்ரயித்து நாமே கதியாயிருந்த வெகுபேர்கள் நமது ஜந்மகர்மங்களை யுள்ளபடியே அறிவதென்கிற பெருந்தவத்தால் பரிசுத்தர்களாய் நமது ஸ்வபாவத்தையடைந்தார்கள். இப்படியே * வேதமும் சொல்லுகிறது.

யெயதாசாம்வேவஜ்ஞாநெதாம் ஸ்ருயெவஹஜாமஜ்ஞே।
உவதூாநாவதூெ மநுஷ்ஜ்ாஸ்வாயம்ுவஸ:॥கக॥

(கக) என்னை எவர்களெப்படி ஆஸ்ரயிக்கிறார்களோ, அவர்களை நான் அப்படியே அடைகிறேன்; ஸகலமநுஷ்யர்களும் என் மார்க்கத்தையே அநுஸரிக்கிறார்கள். [என்று சப்தார்த்தம்.] இதற்கு பாஷியம்:—

---

* தவ்யாரூவரிஜாநதியொநிே. புத்திமான்களுக்குள் சிறந்தவர்களை அவனுடைய ஜந்மப்பிரகாரத்தை அறிகின்றார்களென்றர்த்தம்.

நம்மை ஆஸ்ரயிக்கவேண்டுமென்கிற அபேக்ஷையுள்ளவர்களே நாம் கேவலம் தேவமநுஷ்யாதி ரூபமாய் மாத்திரம் அவதரித்துப் பரிபாலிக்கிறோமில்லை. பின்னே நம்மை அடையக்கோரி எவர்கள் எந்தபிரகாரம் தம் அபேக்ஷைக்குத்தக்கபடி நமஸ்கரித்து ஆஸ்ரயிக்கிறார்களோ, அவர்களுக்கு அவரிஷ்டப்படி நம் தரிசனம் கொடுக்கிறோம். இவ்விஷயத்தில் அதிகமாய்ச் சொல்லுவதென்ன? ஸகலமநுஷ்யாகளும் நம்மை அநுஸரிக்கவேண்டுமென்றே விரும்பியவராகளாய், யோகிகளுடைய வாக்குக்கும் மனதுக்கு மெட்டாத நமது ஸ்வபாவமெல்லாவற்றையும் தமது கண் முதலிய கரணங்களாலே தாம் அபேக்ஷித்ததபடியெல்லாம் அநுபவித்து மீண்டும் நம்மைத் தொடர்ந்து நாமிட்ட வழக்காயிருக்கிறார்கள்.

(அ-கை.) இப்படி பிரஸங்கமாய்ச் சொல்லிவந்த விஷயத்தை முடித்து, பிரகிருதம் கருமயோகத்துகே ஞானகாரணமுண்டென்று அருளிச்செய்வதற்காக, அப்படிப்பட்ட கர்மயோகாதிகாரி கிடைப்பது அரிதென்கிறார்.

காஶ்ய꞉ கர்மணோ(அ)ஸித்திம் யஜந்தஇஹதேவதா꞉।
க்ஷிப்ரம்ஹிமானுஷேலோகே ஸித்திர்பவதிகர்மஜா॥கஉ॥

(கஉ) கர்மஸித்தியை அபேக்ஷித்து இந்த தேவதைகளைமாத்திரம் ஆராதிக்கிறார்கள்; காரணம்:—* மநுஷ்யலோகத்தில் உடனே கர்மஸித்தியுண்டாகிறது. [என்று சப்தார்த்தம்.] இதற்கு பாஷ்யம்:—

லௌகிக புருஷர்கள் யாவருமே அநாதிகாலமாய்த்தொடர்ந்த பாவங்கள் தோஷமாமையாலே விவேகமற்றவராகளாய்த் தங்களுக்கு உடனே பலம் கிடைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு, மோக்ஷவிரோதியான புத்திரன் பசு அன்னம்முதலிய பலன்களுக்காக ஸகல கர்மங்களையும் இந்திராதிதேவதைகளின் ஆராதநார்த்தமாகமாத்திரஞ் செய்கிறார்கள். அதுவேயல்லது ஒருவகையிலும் ஸம்ஸாரத்தை வெறுத்து மோக்ஷகாமனை முன் சொன்ன கருமயோகத்தைப் பலத்தில் அபேக்ஷையின்றி,(இந்திராதிதேவதைகளுக்கு ஆதமாவாய் ஸகல யக்ஞங்களுக்கும் போக்தாவான) நமக்கு ஆராதனமாகச் செய்பவனில்லை.

(அ-கை.) கீழ்சொன்ன கர்மயோகத்தை ஆரம்பிக்கவொட்டாமல் தடைசெய்கிற பாபம் நசிக்கும் வழி அருளிச்செயகிறார்.

யாதவுகுணகர்ம்யாவஸ்யஷ்ம꞉ மானகோவிஹாமஸ꞉।
தஸ்யகுகதகாரஶவிஶோம விஜ்யகுகதகாரஶவ்யயம்॥கஊ॥

(கஊ) குணகர்மங்களின் பிரிவின்படி என்னல் நான்குவர்ணம் சிருஷ்டிக்கப்பட்டது; நான் அதற்குக் கர்த்தாவாயிருக்கச செய்தேயும் கர்த்தாவல்லேனென்று நிர்விகாரனை யென்னையறி [என்று சப்தார்த்தம்.] பாஷ்யம்:—

---

* 'மநுஷ்யலோகசப்தம் ஸ்வாக்காநிகளையுங் காட்டக்கடவது.

நான்குவர்ணங்களுடன்கூடிப் பிரம்மாதி ஸ்தம்பபர்யந்தமான ஸகல லோகமும், ஸத்வம்முதலியகுணங்களின் பிரிவுக்குத்தக்கபடியும், அதுக்கேற்ற சமம் முதலிய கருமள்களின் பிரிவுக்குத்தக்கபடியும் பிரித்து என்னல் * ஸ்ருஷ்டிக்சப்பட்டது. என்னாலேயே ரகூஷிக்கப்படுகிறது. என்னாலேயே ஸம்ஹரிக்கப்படுகிறது. இப்படி விசித்திரமான இந்த ஸ்ருஷ்டி முதலியவற்றிற்கு நான் கர்த்தாவாயிருந்தாலும் கர்த்தாவல்லேனென்றுமறி. [இந்த அம்சம் மேல் சுலோகததில் விவரிக்கப்படும்.]

(அ-கை.) எப்படியென்றால் அருளிச்செய்கிறார்.

நசாம்கூடாணிஇ உதி நசிகூடாவைவுஜாஹா|

(கஞ உ) என்னைக் கர்மம் ஸம்பந்திக்கமாட்டாது; எனக்குக் கர்மபலத்திலு அபேகைகூயில்லை [என்று சப்தார்த்தம்.] இதற்கு பாஷியம்:—

விசிததிரமான இந்த ஸ்ருஷ்டி முதலிய வியாபாரங்களில் நமக்கு யாதொரு ஸம்பந்தமு மில்லை; (அதாவது - தேவர்க ளென்றும் மனிதர்க ளென்றும் பலவிதமாகப் படைக்கப்பட்டுள்ள இந்த விசித்திரமெல்லாம் நம்மால் வருமதல்ல; அர்ச்சுந! அந்தந்த ப்ராணிகளின் புண்ணியபாபங்களுக்குத்தக்கபடி உண்டாகின்றன. ஆனதுபற்றியே நாம் சிருஷ்டிகர்த்தாவா யிருக்கச் செய்தேயும் நம்மைக் கர்த்தாவல்லவென்கிறது. மேலும் சிருஷ்டிக்கப்படும் பிராணிகள், சிருஷ்டியில் தங்களுக்குக் கிடைத்த சரீரம்முதலியவைகளைக் கொண்டு, (பலாபேகைகூக்கு ஹேதுவான தம் கர்மத்துக்குத்தக்கபடி) நமது சிருஷ்டியிலகப்பட்ட போக்யபதார்த்தங்களை அநுபவிக்கிறபடியால, சிருஷ்டிமுதலிய வியாபாரங்களாலுண்டாகும் பலத்தி லபேகைகூயும் அவர்களுக்கேயல்லது நமகில்லை. [இப்படியே ஸூத்திரகாரரும் சொன்னார். ஸ்ரீபராசரபகவானும் அப்படியே $.]

ஐதிசாம்யொஹிஜாநாதி கூடாஹி நாவஸைஷ்வதெதிகசஅ

(கச) இவ்வாறு சிருஷ்டிமுதலிய வியாபாரங்களுக்கு நாம்கர்த்தாவாயிருக்கச்செய்தேயும் கர்த்தாவல்லோமென்பதையும், அப்படியே சிருஷ்டி

---

* ஸ்ருஷ்டியென்றது - ரகூஷணாதிகளுக்கும் உபலகூஷணம்.

0 ஸஅ|| வைஷம்யநைர்க்ருண்யே நவாவைகூஷகூவாகூ என்று.

$ நிதிதசாதுசவிசைஷ்யஜ்ஞாநாம்ஸமுகூடாணி | ப்ரயாந காரணீஹூதாயதாவைஷ்யஜ்ஞாயகூயः ||நிதிதசாதுடாகூஷ்டகூ ஹ்ம் நாநாவ்யக்திஸ்வரூபைகூதை | நீயதேதவதாம்ஸ்ருஷ்வஸகூதாவ வஸ்வஸ்தாழ்|| சிருஷ்டிக்கப்படுகிற ஜீவர்களின் சிருஷ்டிக்குமாதிரம் இந்த பரமபுருஷன் நிமித்தமேதவிர தேவாதிரூபமான விசித்திரத்துக்கெல்லாம் சிருஷ்டிக்கப்படும் ஜீவாகளின் பிராசீந கருமசக்திதான் பிரதானகாரணம்; ஆகையால் இந்தஜீவராசியானது நிமித்தத்துக்குமாத்திரம் எம்பெருமானை அபேகூஷித்துத் தனது பிராசீந கர்மவாஸனையின்படி தேவாதிபேதத்தை யடைகிறதென்று பொருள்.

முதலிய வியாபாரங்களால் வரும் பலத்தில் நமக்குச் சிறிதும் ஸம்பந்தமில்லையென்பதையும் எவனறிகிறானே! அவனைக் (காமயோகத்தி லிழியவொட்டாமற்றடுக்கிற) பலாபேக்ஷை முதலிய எவ்விதத் தொல்வினையும் கட்டுப்படுத்தமாட்டாது.

வஸவம்ஜ்ஞாகூவாக்யதம்கூஜு வம்வைவஸ்வதாஜ்ஞாஹ்ரீஃ|
கூரகூவைஜுவதஜ்ஞாதம் வம்வைவஸ்வதாவம்க்யாதம்॥கரு॥

(கரு) இப்படி நமது ஸ்வரூபம் ஸ்வபாவம் முதலியவற்றை யறிந்து அதனால் ஸகல பாபங்களையும் போக்கடித்து, பூர்வீகமோக்ஷார்த்திகள் பலரும் கர்மத்தையே அநுட்டித்தார்கள். ஆகையால் நீயும் அப்படியே இப்பொழுது நாம் சொன்னபடி நம்மை அறிந்து அதனால பாவமற்றவனாய் விவஸ்வான் மநு முதலான பூர்வீகர்களால் செய்யப்பட்டதாயும் அக்காலத்திலேயே நம்மால உபதேசிக்கப்பட்டதாயும் புராதனமாயுமுள்ள கர்மயோகத்தை நாம்சொல்லுகிறபடியே அநுஷ்டிக்கக்கடவாய்.

(அ-கை.) இப்போது தாம் அருளிச்செய்கிறபடி கர்மத்தைக்கண்டறிவது மிக துர்லபமென்கிறார்.

கிங்கூஜுகிஜகூவெஜுதி கவயோவ்யுத்ரஜோஹிதாஃ|
தத்தகூஜுவ்ரூவக்ஷ்யாமி யஜ்ஜ்ஞாக்வாமோக்ஷ்யஸேஜுஹாகூ॥கசு॥

(கசு) மோக்ஷத்தைக்கோரியவன் செய்யவேண்டிய கர்மம் இன்னவிதமென்றும் அதற்குளபட்ட (ஆத்மயதார்த்த) ஞாநம் இன்னவிதமென்றுந் தெரியாமல் மஹத்தான வித்வான்களும் மயங்கிக்கிடந்தார்கள். (ஞாநத்தையுட்கொண்டதான) அப்படிப்பட்ட கருமதத்தை இப்பொழுது நாமுனக்கு உபதேசிக்கிறேரும். அதைக்கேட்டறிந்து அப்படியே அநுஷ்டித்தாயாகில் ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுபடுவாய். [அறிவதற்குப் பயன் அநுஷ்டாநமென்று திருவுள்ளம்.]

(அ-கை.) இதை அறிவது துர்லபமென்கிற தெதிலுலென்றால் சொல்லுகிறார்.

கூஜுணோஹ்யுவிவைோஜவ்யம் வைோஜவ்யம்வவிகூஜுணஃ|
கூகூஜுணஹ்யுவைோஜவ்யம் ஹஹநாகூஜுணோகதிஃ॥கள॥

(கள) * கர்மம் ○ விகர்மம் ¶ அகாமம் என்னுமிவற்றுள் ஒவ்வொன்றிலும் சிறிது விஷயம் அறியவேண்டியதுண்டாகையாலே மோக்ஷகாமன் செய்யுங் கர்மத்தின் வழியைக்கண்டறிவது மிகவும் துர்லபம். [இதில் விகர்மத்தி

---

* காமமாவது - மோக்ஷத்துக்கு ஸாதநமாகச்செயயும் வியாபாரம்.

○ விகர்மமாவது-வெவ்வேறுவிதமான காமம்; அதாவது - நித்யமென்றும் நைமித்திகமென்றும் காம்யமென்றும் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட காமங்களும்; அதற்கு வேண்டிய் த்ரவியதனை ஸம்பாதித்தல் முதலிய கர்மங்களும். ‡ அகர்மமாவது - ஞாநம்.

ல் அறியவேண்டிய அம்சமென்னவெனில்-நித்யம் நைமித்திகம், காம்யம் திரவ்யார்ஜநம் முதலிய அந்தந்த கர்மங்களுக்குத்தக்கபடி பலன் வெவ்வேறு விதமாயிருந்தாலும் அவைகளில் மனம்வையாமல் இவைகளுக்கெல்லாம் பலன் மோக்ஷமொன்றுதானென்று சாஸ்திரப்பொருளை ஒன்றுபடுத்தி நினைக்கை. இவ்விஷயம் வ்யவஸாயாத்மிகா புத்திரேகா என்கிற விடத்தில் சொல்லப்பட்டபடியால் இங்கே விவரிக்கிறோமில்லை.]

(அ-கை.) கர்மத்திலும் (அகர்மமென்கிற) ஞாநத்திலும் அறியவேண்டுமதை யருளிச்செய்கிறார்.

கஉ-ருணை₃கஉ-யஏவமு₃ உகஉ-ருணிவகஉ-யः|
வஐ-ஜீஏ நு நு-வஷ₃ஷ- வய-க்ஃக்ஷ்ரதகஉ-க்ஷ்ரகூ॥கஅ॥

(கஅ) அர்ச்சுந! கர்மத்தில் ஞாநத்தையும் ஞாநத்தில் கர்மத்தையும் பார்க்கவேண்டும். (அதாவது-செய்யுங் கர்மத்துக்கு ஆத்மஸ்வரூபத்தின் வாஸ்தவஞாநம் வேண்டுகையாலே அந்த கர்மத்தையே ஞாநமாகவும்; அந்த ஞாநமுங் கர்மத்துக்குட்பட்டிருக்கையாலே அதையே கர்மமாகவும் * அறியவேண்டுமென்பதாம்.) இப்படி எவன் அறிகிறானே புத்திமானாகிய அவன்தான் மனிதருக்குள் மோக்ஷத்துக்கேற்றவன்; அவன் ஸகல சாஸ்திரார்த்தங்களும் அநுஷ்டித்தவனாகிறான்.

(அ-கை.) பிரத்யக்ஷத்தில் இவன் செய்வது கர்மமாயிருக்க, அதை ஞாநமாக எப்படி நினைக்கத்தகுமென்றால் அருளிச்செய்கிறார்.

யஷ₃ஷவெ-ருஷசாஸ்₂ஹ்ரீ காசிஷஜ்ஞ வஜி-ருதாः|
ஜ்ஞாநாக்₂நிதி₃ஹ்யகஉ-ருாணம் தமாஹு-ர்பண்டி₃தம்பு₃-யாः॥கக॥

(கக) எந்த மோக்ஷார்த்திக்காலில் தான் செய்யும் o ஸகல கர்மங்களும் பலாபேக்ஷையற்றதாயும் (நான் செய்கிறேனென்கிற) ‡ ஸங்கல்பமில்லாததாயு மிருக்குமோ அவன் கர்மம் செய்யும்பொழுதெல்லாம் (பிரகிருதியைக்காட்டிலும் வேறுபட்ட) ஆத்மஞாநத்துடனே செய்கிறபடியால் அவனைத் தத்துவமறிந்த பெரியோர்கள் ஆத்மஞாநமென்னுந் தியிலால் ஸகல பாபங்களையுந் தஹித்துவிட்ட மஹாபண்டிதனாகச் சொல்லுகிறார்கள். ஆனபின்

---

* ஆத்மஸ்வரூபத்தின் வாஸ்தவஞாநத்தோடு கர்மம் செய்துவந்தால் அவ்விரண்டையும் அறிந்தவனாகிறானென்றறிக.

o ஸகல கருமங்கள் அதாவது - நித்யமென்றும் நைமித்திகமென்றும் சொல்லப்பட்ட வைதிக கர்மங்களும், திரிவியந்தேடல் முதலிய லௌகிககர்மங்களுமாம்.

‡ ஸங்கல்பமாவது - பிரகிருதியோடும் அதன் குணங்களோடுந் தன்னை ஒன்றுபடுத்தி நினைக்கை; அதாவது - கர்மஞ்செய்யும்பொழுது பிரகிருதியின் குணத்தால்வந்த கர்த்ருத்வத்தைத் தானேற்றுக்கொண்டு "நான் செய்தேனென்று" நினைக்கை.

பு இவன் செய்யுங் காமங்களெல்லாம் ஞாநரூபமாக நினைப்பதற்கு ஆகாம பமுண்டோ?

(அ-கை.) இதையே விவரிக்கிறார.

தூகாகூஷுஹுவாவஜ்ஜம் நிதூத்வொநிராஸ்ரயः|
கூஷுணூலிவ்யவ்யதோவி நெநவகிஞ்சித்கரோதிஸः॥உ०॥

(உ0) கர்மபலத்தில் பற்றை ஒழித்து, நித்யமான தன் ஆத்மாவில் தானே திருப்தியடைந்தவனுய் (அசாசுவதமானப் பிரகிருதியில் "இது ஆதாரமென்கிற" நினைவையையாமல் எவன் கர்மஞ்செய்கிறானே, அவன் காமத்தைச் சிரத்தையுடன்செய்ய விழிந்தாலுகிலும் சிறிதுங் கர்மஞுசெய்தவனுகச் சொலலப்படான். [என்றால் - கர்மமென்கிற வியாஜத்தாலே ஞாநத்தையே செய்கிறானென்று பொருள்.]

(அ-கை.) மறுபடியும் கர்மத்துக்கு ஞாநரூபத்வமுண்டென்பதையே தெளிவிக்கிறார்.

நிராஸீரூதவித்தாத்மா தூகூஸவவுவரிஹ்ரஹஃ|
ஸாரீரம்கேவலம்கூஷுந்நாவ்நொதிகில்பிஷம்॥உக॥

(உக) பலத்தில் அபேகூஷையிலலாமல் சித்தத்தையும் மனதையுமடக்கி ஆத்மா ஒன்றையே நம்பியவனுய் பிரகிருதியிலும் அதைச்சேர்ந்த வஸ்துக்களிலும் எனதென்கிற அபிமானத்தை ஒழித்தவன், வாழ்நாளுள்ளளவும் கேவலம் சரீரஸம்பந்தமான கர்மத்தையே செய்துவந்தபோதிலும் அதனல் கர்மபலமான ஸம்ஸாரத்தை ஒருக்காலும் அடையமாட்டான், [ஞானநிஷ்டையில் இழியாமல் இவ்வித கர்மநிஷ்டையிலிருந்தபடியே ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை யடைகிறானென்று பொருள்.]

யத்ருச்சாலாபஸந்துஷ்டோ த்வம்யாதீதோவிமத்ஸரஃ|
ஸமஸ்ஸித்தாவஸித்தௌசு க்ருத்வாபிந நிபத்யதே॥உ॥

(உ) புருஷன் தன்சரீரத்தைத் தரிப்பதற்கு உபயோகமாய் ஏதேனும் சிறிது தானுகவே நேர்ந்ததாகில் அவற்றைப்பெற்று திருப்தியடைந்து ஸாதநம் முடிகிறவனையில் நேரிடும் சீதம் உஷ்ணம்முதலியவைகளைப் பொறுத்து, அப்படி நேரிடுகின்ற அநிஷ்டங்களுக்கெல்லாங் காரணம் தன்னுடைய பாவமென்கிற வெண்ணத்திலல் பிறரிடத்தில் மாச்சரியங்கொள்ளாமல், யுத்தமுதலிய கர்மங்களில் ஜயம்முதலிய ஸித்தி உண்டானுலும் உண்டாகாவிட்டாலும் அதில மனந்தாழாமலிருந்தாலுகில், அவன் ஞானநிஷ்டையின்றி கேவலம் கர்மத்தையே செய்துவருதபோதிலும் அதினல் ஸம்ஸாரத்தில் கட்டுபடமாட்டான்.

கதவஜ்ஞஸ்யமுக்தஸ்ய ஜ்ஞாநாவஸ்தி்தசேதஸஃ|
யஜ்ஞாயாசரதஃகர்ம ஸமக்ரம்ப்ரவிலீயதே॥உகூ॥

(உங) ஆத்மஞானத்தில் மனமூன்றி அதனால் இதர ஸம்பந்தங்களற்று பிரகிருதிப் பிராகிருதங்களினின்று விடுபட்டவனுய் கீழ்ச்சொன்ன யாகாதி கர்மங்களை நிறைவேற்றுவதற்கென்றே இருக்கும் புருஷனுக்கு, ஸம்ஸார ஹேதுவான கர்மம் முழுதும் நசித்துப்போகிறது.

(அ-கை.) பிரகிருதிக்குப் புறம்பான ஆத்மஸ்வரூபத்தை நினைப்பதனால் கர்மம் ஞானரூபமாகிறதென்றூர் கீழ்; இங்கு, ஸகல கர்மமும் பரப்ரம்மமான பரமபுருஷ ஸ்வரூபமென்று நினைப்பதனால் ஞானரூபமாகுமென்கிறூர்.

ब्रह्मार्पणं ब्रह्महविर् ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम्।
ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्मसमाधिना॥उச॥

(உச) "ப்ரம்மமயமான (* ஸ்ருக்முதலிய) கருவிகளோடுகூடிய ப்ரம்மமயமான $ ஹவிஸ்ஸானது ப்ரம்மஸ்வரூபமான அக்நியில் ப்ரம்மரூபணிய கர்த்தாவால் ஹோமம் செய்யப்பட்டது" என்று ஸகல கர்மமும் ப்ரம்மஸ்வரூபமென்று எவன் நினைக்கிறூனே அவனால் † ப்ரம்மமான ஆத்மாவே அடையத்தக்கதாகும். [என்றூல் - மோக்ஷத்தை விரும்பியவன் செய்யுங் கர்மமெல்லாம் பரப்ரம்மமேயென்கிற எண்ணத்தோடுகூடி செய்யப்படுமாதலால் அதுதானே ஞானரூபமாய்க்கொண்டு, ஞானநிஷ்டையை யெதிர்பாராமலே ஆத்மஸாக்ஷாத்காரத்தை யுண்டுபண்ணிக் கொடுக்குமென்று பொருள்.]

(அ-கை.) இப்படி கர்மமே ஞானரூபமாகிறதென்றருளிச்செய்து, இப பொழுது அந்த கர்மத்தின் உட்பிரிவுகளை யருளிச்செய்கிறூர்.

दैवमेवापरे यज्ञं योगिनः पर्युपासते।

(உசஅ) சில கர்மயோகிகள் தேவதார்ச்சனரூபமான யக்ஞத்தையே அநுஷ்டிக்கிறூர்கள்.

ब्रह्माग्नावपरे यज्ञं यज्ञेनैवोपजुह्वति॥உரு॥

(உரு) சிலர் ப்ரம்மஸ்வரூபமான அக்நியில் யக்ஞத்துக்கு ஸாதனமாயிருக்கிற $ ஹவிஸ் ஸ்ருக் முதலியவைகளைக்கொண்டு ஹோமம்செய்துவருகிறூர்கள். [என்றூல் - யாகத்தையும் அதைச் சேர்ந்தவைகளையும் ப்ரம்மஸ்வரூபமாக நினைத்து ஹோமம் செய்வதே தொழிலாயிருக்கிறூர்கள் என்றர்த்தம்.]

श्रोत्रादीनीन्द्रियाण्यन्ये संयमाग्निषु जुह्वति।

---

* ஸ்ருக் என்பது - ஹவிஸ்முதலியவற்றை அக்நியில் சேர்ப்பதற்கு ஸாதகமாயிருப்பதோர் கருவி. இது ப்ரம்மத்தாலுண்டாக்கப்பட்டதுபற்றி இதை யிங்கே ப்ரம்மமயமென்கிறது.

$ ஹவிஸ் என்பது - தேவதாராதநத்துக்கென்று அக்நியில் ஹோமம் பண்ணப்பட்ட வஸ்துவிசேஷம்.

† ப்ரம்மத்துக்கு ஆத்மா சரீரமாயிருப்பதுபற்றி அதை ப்ரம்மமென்கிறது.

(உருந) பின்னும் சிலர் செவிமுதலான இந்திரியங்களைப் புறம்போக வொட்டாமல் தகைவதில் முயற்சிசெய்கிறார்கள்.

ஸஜ்ஹோதீந்ரியாணயந்ய ஜுஹ்வதி॥உசு॥

(உசு) மற்றும் சிலர் இந்திரியங்களைச் சப்தாதிவிஷயங்களில் மண்டவொட்டாமற் றகைகிறார்கள்.

ஸர்வாணீந்ரியகர்மாணி ப்ராணகர்மாணிசாபரே।
ஆத்மஸம்யமயோகாக்ன ஜுஹ்வதி ஜ்ஞானதீபிதே॥உள॥

(உள) ஞானத்தால் ஜ்வலிப்பதாய் மனதை அடக்குவதான யோகமென்னும் அக்நியில், இந்திரிய வியாபாரங்களையும் பிராணவியாபாரங்களையும் சிலர் ஹோமஞ்செய்கிறார்கள். [அதாவது மனதை இந்திரியங்களோடும் பிராணனோடும் சேரவொட்டாமல் தகைவதில் முயல்கின்றார்களென்று பொருள்.]

த்ரவ்யயஜ்ஞாஸ்தபோயஜ்ஞா யோகயஜ்ஞாஸ்ததாபரே।
ஸ்வாத்யாயஜ்ஞானயஜ்ஞாஸ்ச யதயஸ்ஸம்ஶிதவ்ரதாः॥உஅ॥

(உஅ) விடாமுயற்சி செய்பவரும் த்ருடஸங்கல்பமுள்ளவருமான சில கர்மயோகிகள் நியாயமாய் ஸம்பாதித்த திரவியத்தைக்கொண்டு தேவதார்ச்சநம் செய்வதிலும், சிலர் தானஞ்செய்வதிலும், சிலர் யாகஞ்செய்வதிலும், சிலர் ஹோமஞ்செய்வதிலுமாக யத்தநம் செய்கிறார்கள். இந்நால்வகையோருக்கும் திரவிய யக்ஞஞ் செய்பவர்களென்று பெயர்; சிலர் கிருச்சிரம் சாந்த்ராயணம் உபவாஸம் முதலிய தபோயக்ஞம் செய்கிறார்கள்; பின்னுஞ் சிலர் புண்ணியதீர்த்த ஸ்நாநமும் புண்யக்ஷேத்ரவாஸமுஞ் செய்கிறார்கள்; சிலர் வேதாப்யாஸத்தில் நிஷ்டராயிருக்கிறார்கள்; சிலர் அதின் அர்த்தஞானத்தில் ஊக்கமாயிருக்கிறார்கள்.

அபாநே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேঽபாநம்ததாபரே।
ப்ராணாபாநகதீ ருத்வா ப்ராணாயாமபராயணாः॥உக॥
அபரே நியதாஹாராः ப்ராணான்ப்ராணேஷு ஜுஹ்வதி।

(உக-உகந) பிராணயாமஞ்செய்வதில் சிலர் நிஷ்டைபண்ணுகிறார்கள். இவர்கள் பூரகனென்றும் ரேசகனென்றும் கும்பகனென்றும் மூவர். அபாநத்தில் பிராணனை ஹோமஞ்செய்யுமவர் பூரகர். பிராணனில் அபாநத்தை ஹோமம் செய்பவர் ரேசகர்: அவ்விரண்டையும் செல்லவொட்டாமல் தடுத்துப் பிராணனைப் பிராணனில்தானே அடக்குமவர்கள் கும்பகர்: ஆகிய இம்மூவரும் ஆகாரநியமத்தோடு கூடியவர்கள்.

ஸர்வேঽப்யேதேயஜ்ஞவிதோ யஜ்ஞக்ஷபிதகல்மஷாः॥கo॥
யஜ்ஞஶிஷ்டாம்ருதபுஜோ யாந்திப்ரம்ஹஸநாதநம்।

(கo-கoந) (திரவ்ய யக்ஞம்முதல் பிராணயாமம் வரையிலுள்ள கீழ்ச்சொன்ன கர்மயோகங்களின் உட்பிரிவுகளில் தங்கள் தங்களுக்கிஷ்ட

மானவைகளை அநுஷ்டிக்கின்ற) இவர்கள்யாவரும் (ஸஹயஜ்ஞைர்யாஜா
ஸ்ரவ்ய
ஸ்ச) என்று கீழ்சொல்லப்பட்ட) மஹாயக்ஞும் முதலான யக்ஞங்க
ளை யநுஷ்டிப்பவர்கள். ஆனதுபற்றியே இவர்கள் ஸகல பாபங்களையு மொ
ழித்தவர்களாய் யக்ஞசேஷமான அமிருதத்தால் சரீரத்தைக் காப்பாற்றிவ
ந்து சாசுவதமான ப்ரம்மத்தை அடைகிறார்கள். [யக்ஞசேஷத்துக்கு அமிரு
தமென்றுபெயர்.]

நாயம்லொகோஸ்த்யயஜ்ஞஸ்ய குதோந்ய:குருஸத்தம॥கக॥

(கக) கீழ்சொன்னவர்களைப்போல் மஹாயக்ஞும் முதலிய நித்யநை
மித்திக கர்மங்கள் செய்யாதவனுக்கு இந்த லோகமே கிடைக்கமாட்டாது.
அதாவது இந்த லோகஸம்பந்தமான அரம் பொருள் இன்பம் என்கிற மூன்
று புருஷார்த்தங்களுங் கிடைக்கமாட்டா. அல்பங்களான இவையே கிடை
யாவிட்டால் *மோக்ஷமென்னுங் கனமான புருஷார்த்தமெங்ஙனங் கிடை
க்கும்?

வனவம்பைஹ்ரவியாயஜ்ஞா விததாவ்ருஹணைஸ்த்ரவே!
கரூஜ்ஞாநிஜ்ஞிதாநுஷவ்ரா நெநவம்ஜ்ஞாக்வாவிஸோக்ஷ்யஸி॥ கஉ॥

(கஉ) ஆக விப்படி ஆத்மப்ராப்திக்கு ஸாதகமான கர்மயோகங்கள்
பலவாயிருக்கின்றன. இவைகளெல்லாம் தினந்தோறும் அநுஷ்டிக்கவேண்
டியதான (நித்யநைமித்திக) கர்மங்களைச்செய்வதால் ஸித்திக்குமவைகள். இ
வைகளைக் கீழ்சொல்லியபடி யநுஷ்டித்தாயகில் மோக்ஷத்தையடைவாய்.

(அ-கை.) கர்மம் ஞாநத்தை யுட்கொண்டிருக்கையாலே அதுவே ஞா
நரூபமாகிறதென்றூரன்றே கீழ்? (ஞாநத்தை யுட்கொண்ட) அக்கர்ப்பத்தில்
ஞாநாம்சந்தான் பிரதானமென்கிறாரிங்கு.

ஸ்ரேயாநத்ரவ்யயாத்யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ்ஞ: பரந்தப!
ஸர்வம்கர்மாகிலம்பார்த்த ஜ்ஞாநேபரிஸமாப்யதே॥கக॥

(கக) சத்துருக்களை அழிக்கவல்லவனே! அர்ச்சுந! கர்மம் *(திரவி
யத்தாலும் ஞாநத்தாலும் ஸாதிக்கவேண்டுகையால் இரண்டம்சமாயன்றே
இருக்கிறது?) அதில் திரவியமயமான அம்சத்தைக்காட்டிலும் ஞாநமயமான
அம்சந்தான் சிறந்தது. ஏனெனில் - ஸகல கர்மங்களும் மற்றவையும் முடி
வில் ஞாநத்தைக்கொண்டல்லவோ முடிகின்றன. [அதாவது - எந்த ஸாதநத்
தை யநுஷ்டித்தும் பெறவேண்டியது ஆத்மஸாக்ஷாத்காரம். அது கர்மஞ்
செய்யத்தொடங்கின நாள்முதல் அப்பியஸிக்கப்பட்டுவந்து கடைசியில் அது
வே ஸாக்ஷாத்காரஞாநமாய் பழுக்கிறது; இப்படியான பின்பு கர்மத்தில் திர
வியாம்சத்தைப்பார்க்க ஞாநாம்சம் சிறந்ததென்னக்குறையில்லையிறே!]

தத்வித்திப்ரணிபாதேந பரிப்ரஸ்நேந ஸேவயா
உபதேக்ஷ்யந்திதேஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வதர்ஸிந:॥கச॥

---

* திரவியமென்றால் - தட்டுமுட்டு முதலிய வெல்லாப்பொருளுக்கும் பெயர்.

(ஙசு) அர்ச்சுந! நீ கர்மயோகத்தைச் செய்ய விழிந்து அப்பொழுதை க்கப்பொழுது * ஞானிகளிடஞ்சென்று, அவர்களைத் தண்டன் ஸமர்ப்பித்து அவர்களுக்குத் தகுந்த பணிவிடைசெய்து உன் உள்ளத்தின் பரிபாகத்துக்கு த்தக்கபடி நாம் சொன்ன † ஆத்மஞானத்தை அவர்களிடங் கேட்பாயாகில், அவர்கள் (ஞானந் தெரியவேண்டுமென்று பலகாலும் பல்படியுங் கேட்கின் ற) உன் நிணைவறிந்து உனக்கு அந்த ஞானத்தைத் தெளிவாயுபதேசிப்பார்கள்.

(அ-கை.) ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியே பார்க்கின்ற ஸாகூாத் கார ஞானத்தின் லக்ஷணம் இத்தன்மையதென்கிறார்.

யஜ்ஜ்ஞாத்வா நவ புநர்மோஹ மேவம்யாஸ்யஸி பாண்டவ|
யேந பூதாந்யஷேஷேண த்ரக்ஷ்யஸ்யாத்மந்யதோ மயி||ருரு||

(ருரு) ஓ பாண்டவ! அந்த ஆத்மஞானத்தை யறிந்தாயாகில் மறுபடி யும் இப்படி மோகத்தை அடையமாட்டாய். [அதாவது - தேஹமே ஆத்மா வென்று பிரமித்தல், அத்தால் எனதென்கிற மமதை கொள்ளுதல் முதலிய வைகளுக்குக் காரணமான மோஹத்தை அடையமாட்டாய்.] மேலும் அத னல் தேவனென்றும் மனிதனென்றும் இன்று மிப்படி பலவிதமாயுள்ள ஸக லப் பிராணிகளையும் உன் ஆத்மாவிலேயே பார்ப்பாய். [அதாவது- $ ஸ்தாலீ புலாக நியாயமாய் ஸகலப் பிராணிகளும் நம்மைப்போலவேதான் பிரகிரு திக்குப் புறம்பாய் ஞானமே ஸ்வரூபமாய் ¶ ஓன்மாதிரியா யிருக்குமென் றறிவாய்] அநந்தரம் நம்மிடத்திலும் அப்படியே பார்ப்பாய். [அதாவது - அப்படி உன்னைப்போ லிருப்பதாக நீ யறிந்த அவ்வாத்மாக்களெல்லாம் ஸர் வேசுவரனை என்னைப்போலவு மிருப்பதாகவும் § அறிவாய்.]

[ஆக இதனல் பிரகிருதிக்குப் புறம்பான ஆத்மஸ்வரூபமானது ஒன் றைப்போ லொன்றுயிருப்பதுந்தவிர ஸர்வேசுவரனுக்கு ஸமமாகவு மிருக்கு மென்றதாயிற்று.]

---

* இங்கே ஞானிகளாவார் - ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஸித்தித்தவர்கள்.

† நாம் சொன்ன - அதாவது சுவிநாபரிதாதஜ்ஜி என்பதுமுதல் வனஷாதஜ்ஜிஹரிதா என்று மளவாக நாம் சொன்னவென்றபடி.

$ ஸ்தாலீபுலாக நியாயமாயென்றது - ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றைப் பதம் பார்ப்பதுபோலென்றபடி.

¶ பிரகிருதியைக்காட்டிலும் வேறுபட்ட ஆத்மஸ்வரூப மெல்லாம் ஸமமென்கிறவிஷயம் நிதோஷம்ஹிஸமம்ப்ரஹ்மதஸ்மாத் ஹ்ரணிதஸ்ரீதாஃ என்றுமேலே சொல்லுகிறார்.

§ நாமரூபங்களற்ற முக்தஸ்வரூபமான ஆத்மாவானது பரமாத்மா வோடொத்திருக்குமென்கிறவிஷயம் ஜ்ஞாநஸ்வரூபஸ்ரீதரூபஸ்யாய ருரூபாமதாஃ என்று மேலே சொல்லப்போகிறார். அப்படியே தயாவி ஹாநுவாணரூபாவை வியமயநிராஜ்ஜநரூபம் வாசரூவைதி இத்யாதியாகச் சுருதிகளுஞ் சொல்லுகின்றன.

கூவிவெஹவிவாவெஹ வ்ஹவெ-ஹ ர்ப்வாவக்ஷ்ய-தஜ:|
வவ-ஹ்ம்ஜ்ஞாநவ்வெவெநவ வ்ஜி நம்வஹ்ஹாரிஷ்ரவி॥கசு॥

(கசு) அர்ச்சுந! நீ பாவஞ்செய்தா ரெல்லாரிலும் மிக்க பாவியாயிருந்தாலும் நெடுங்காலமாய் ஸம்பாதித்த அந்த பாவக்கடலை ஆத்ம ஸாக்ஷாத்காரமென்னும் ஓடத்தாலே தாண்டிவிடுவாய்.

யயெயாம்விவிதிஜொஜ்ஞி ஹ-ஹ்வவாத-ர-ர-தஜ-ஹ-ந|
ஜ்ஞாநாஜ்ஞிவவ-ஹ்கூ-ஹ்ணி ஹவ்வவாத-ர-ம்தி தயா॥கஎ॥

(கஎ) நன்றாய்ப்பற்றியெரியும் நெருப்பானது விறகுகளைச் சாம்பலாக்குவதுபோல் ஆத்மஞாநமென்னுந் தீயானது தொன்றுதொட்டுத் தொடர்ந்துவருந் தீவினைகளைப் பொசுக்கிச் சாம்பலாக்குகின்றது.

நஹ்ரிஜ்ஞாநெந நவஹ்யம் வவித்ரமிஹவித்ய்தெ|
தத்யம்யொமவம்விஜ்ஞ கூவெநாத்ம நிவிந்ததி॥கஅ॥

(கஅ) லோகத்தில் ஆத்மாவைப்போல் பரிசுத்தமான வஸ்து ஒன்றுங் கிடையாதன்றோ? [ஆகையால்தான் அவ்வாத்மஞாநமானது ஸகல பாவங்களையும் நாசஞ்செய்கிறது.] அப்படிப்பட்ட ஞாநத்தைப் பெறவேண்டுமாகில் நாம் சொன்னபடி கர்மயோகத்தை யநுஷ்டித்து ஸித்திபெற்றால் அதை வருத்தமின்றி உன் ஆத்மாவில்தானே நாளடைவில் பெறுவாய்.

(அ-கை.) அதையே தெளிவாய் அருளிச்செய்கிறார்.

ஸ்ரத்தாவாந்லபதெ ஜ்ஞாநம் தத்பர:ஸம்யதெந்த்ரிய:|
ஜ்ஞாநம்ல்வாபராம்ஶாந்தி மசிரெணாதிகச்சதி॥கக॥

(கக) இப்படி உபதேசத்தால் ஞாநத்தைப்பெற்று அந்த ஞாநம் விருத்தியடையும் விஷயத்தில் மிகவும் சிரத்தையோடு கூடியவனுய் ஓர் மனதாயிருந்து, இந்திரியங்களை மற்ற விஷயங்களில் செல்லவொட்டாமல் அடக்கினால், வெகு சீக்கிரத்தில் முன் சொன்ன பரிபக்குவமான ஞாநத்தையடைந்து அதனால் மேலான ஆநந்தத்தையு மடையலாகும்.

கூஜ்ஞாஸ்ரூயாநஸ்ல ஸம்ஸயாத்மாவிநஸ்ரதி|
நாயம்லொகொஸ்தி நபரொ நஸுகம்ஸம்ஸயாத்மந:॥சo॥

(சo) இப்படி உபதேசத்தாலே ஞாநத்தைப் பெறுமலும் பெற்றாலும் அதை விருத்திசெய்வதில் முயற்சிசெய்யாமலு மிருப்பவன் மனதில் ஸம்சயமுற்றவனுய்க் கெட்டுப்போகிறான். அப்படி ஸந்தேஹிப்பவனுக்கு இந்த லோகமுமில்லை, பரலோகமுமில்லை. அதாவது இவ்வுலகஸம்பந்தமான தர்மம், அர்த்தம், காமமென்கிற மூன்றும் பரலோகமான மோக்ஷமுமற்றுச் சிறிது சுகமும் அடையாமற்போகிறான்.

[புருஷார்த்தங்களெல்லாம் சாஸ்திரோக்தமான கர்மத்தால் ஸித்திக்கவேண்டுகையாலும், அந்த கர்மம் ஸித்திக்கும்போது தேஹத்தைக்காட்டி

லும் வேரூன ஆத்மஸ்வரூப நிச்சயம் வேண்டுகையாலும், அதில்லாதவனுக்கு ஒருபுருஷார்த்தமும் கிடைக்கமாட்டாதென்று திருவுள்ளம்.]

யொமவ நவுலகூடுணம் ஜ்ஞா நவஸம்வி நவஸம்ஸயழ|
கூதிவதம் நகூடுணி நிவையதிய நஜ்ஜுய||சக||

(சக) இப்படி உபதேசிக்கப்பட்ட யோகத்தாலே கர்மத்தை விட்டு (அதாவது செய்யுங் கர்மத்தை ஞாநாகாரமாக நினைத்து,) அப்படியே உபதேசத்தால் பெற்ற ஆத்மஞாநத்தைக்கொண்டு ஸகல ஸம்சயங்களையு மொழித்து, கேட்ட அர்த்தத்தில் திடமான மனதுடன் கூடியிருப்பவனை ஸம்ஸாரத்துக்கு வேர்முதலான பழைய கர்மங்களில் யாதொன்றுங் கட்டுப்படுத்தமாட்டாது.

தஸ்மாதஜ்ஞா நஸம்பூ தம் ஹ்ருத்ஸ்தம்ஜ்ஞா நாஸி நாத்மந:|
ஸ்ஸித்வை நம்ஸம்ஸயம்யொம ஸாதிஷ்டோத்திஷ்ட பாரத||சஉ||

(சஉ) ஆகையால் அர்ச்சுந! அக்ஞாநத்தால் உன் மனதிலுண்டான (ஆத்மவிஷயமான) ஸந்தேஹத்தை நாமுபதேசித்த ஆத்மஞாநமென்னுங் கத்தியாலறுத்து நம்மால் உபதேசிக்கப்பட்ட கர்மயோகத்தைச் செய்வாயெழுந்திரு.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
நான்காவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஐந்தாவது அத்யாயம்

அவதாரிகை.

நான்காம் அத்தியாயத்தில் கர்மயோகத்தின் ஞாநத்தன்மையும் அதன்உட்பிரிவும் அதில் ஞாநபாகந்தான் பிரதாநமென்பதும் சொல்லப்பட்டது. கர்மயோகம் ஞாநத்தை யுட்கொண்டிருக்கையாலும், செய்வதற்கு எளிதாயிருக்கையாலும் பிரமாதத்தை உண்டுபண்ணுமையாலும், பயன் ஸித்திக்கும்பொழுது மற்றொன்றை அபேக்ஷிக்காமையாலும் ஞாநயோகாதிகாரிக்குக்கூட கர்மயோகமே செய்யவுடக்குமென்கிற விஷயமோ, மூன்றுவது அத்தியாயத்தில்தானே அருளிச்செய்யப்பட்டது. இப்பொழுது கர்மயோகம் ஞாநயோகத்தைப்பார்க்க ஆத்மப்பிராப்திக்குச் சுருக்கான உபாயமென்றும், அதைச்செய்யும்பொழுது அதில் தனக்குக் கர்த்ருத்வம் இல்லையென்று நினைக்கவேண்டுமென்றுஞ் சொல்லி அதற்குக் காரணமான ஞாநமும் சோதிக்கப்படுகிறது.

சுஜுஃநஉவாவ॥ லஸந்ந்யாஸஸ்துகுணாம்க்ரியோகம்துநிஷ்ரேயஸகராவுபௌ
தயோஸ்துகர்மஸந்ந்யாஸாத்கர்மயோகோவிஸிஷ்யதே॥

(க) அர்ச்சுநன்சொல்லுவது:—வாரீர் கிருஷ்ண! கர்மத்தை விட்டே பற்றவேண்டியதான ஞாநயோகத்தைச் செய்யும்படி முதலில் அருளிச்செய்து மீண்டும் கர்மத்தையே செய்யும்படியாய் அருளிச்செய்தீர். [அதாவது மோக்ஷத்தை விரும்பியவன் கர்மத்தைச்செய்து அதிலுல் மனதிலுண்டான கல்மஷத்தையெல்லாமொழித்துப் பிறகு ஞாநயோகத்தாலே ஆத்மாவை ஸாக்ஷாத்காரம் பண்ணக் கடவனென்று முதலில் சொல்லி, பிறகு மூன்று நான்கு அத்தியாயங்களில் ஞாநயோகஞ்செய்யத் தகுந்தவனுக்குக்கூட கர்மநிஷ்டையே சிறந்ததாகுமென்றும், அது ஞாநநிஷ்டையை எதிர்பாராமல் தானே ஆத்மப்பிராப்தியை ஸாதிக்குமென்றும் கர்மயோகத்தை அதிகமாய்ப் புகழ்ந்துபேசினீர்.] ஆகையால் அந்த ஞாநயோக கர்மயோகங்களில் எது சீக்கிரமாயும் எளிதாயும் ஆத்மப் பிராப்தியைச் சாதிக்குமென்று தேவரீர் நிச்சயித்திருக்கிறதோ அதை அருளிச்செய்யவேண்டும்.

ஸ்ரீபகவாநுவாச ॥ லஸந்ந்யாஸஸ்துகுயோமஸ்துநிஸ்ரேயஸகராவுபௌ
தயோஸ்துகர்மஸந்ந்யாஸாத்கர்மயோகோவிஸிஷ்யதே॥உ॥

(உ) அதற்குப் பகவான் அருளிச்செய்கிறது:—அர்ச்சுந! ஸந்யாஸமென்று சொல்லப்படும் ஞாநயோகமும், கர்மயோகமும் இரண்டும் மோக்ஷத்தையளிப்பவைகளே; ஆனாலும் அதில் ஞாநயோகத்தைக் காட்டிலும் கர்மயோகமே சிறப்புற்றது.

(அ-கை.) ஏனென்றால் அருளிச்செய்கிறார்.

ஜ்ஞேயஸ்நித்யஸந்ந்யாஸீ யோநத்வேஷ்டிநகாங்க்ஷதி|
நிர்த்வம்ஹ்யோஹிமஹாபாஹோஸுகம்பந்தாத்ப்ரமுச்யதே॥ங॥

(ங) கர்மயோகத்தைச் செய்பவன் அதற்குட்பட்ட ஆத்ம அநுபவத்தாலே திருப்தியடைந்து அதற்குப் புறம்பானதொன்றையும் விரும்பாமலும் அப்படியே ஒன்றையும் பகைக்காமலும் இன்பதுன்பங்களைப் பொறுத்திருக்கிறபடியால் அவனை நித்தியஸந்யாஸியான ஞாநயோகியென்று அறியத்தக்கது. ஏனெனில்-(அவன் எளிதில் இயற்றக்கூடிய கர்மத்தைச்செய்தபடியே) சுகமாய் ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுபடுகிறான்.

(அ-கை.) ஞாநயோக கர்மயோகங்களிரண்டும் ஆத்மஸாக்ஷாத்காரத்தைச் சாதிக்கும் விஷயத்தில் ஒன்றை யொன்று எதிர்பார்க்கமாட்டாது என்பதை விளக்குகிறார்.

ஸாங்க்யயோகௌபிருதக்பாலாப்ரவதந்திநபண்டிதாஃ|
ஏகமப்யாஸ்திதஸ்ம்யக்உபயோர்விந்ததேபலம்॥சு॥

(சு) ஞாநயோக கர்மயோகங்களிரண்டும் வெவ்வேறென்று, தெரியாதவர்கள் சொல்லுவார்களே யல்லது நன்றாய்த் தெரிந்தவர் சொல்லமா

ட்டார்கள். [அதாவது-"கர்மயோகம்ஞாநயோகத்தை மாதரிக்கும் ஸாதிக்கும்; ஆத்மஸாக்ஷாத்காரத்தை ஸாதிக்கமாட்டாது. ஞாநயோகமொன்றுதான ஆத்மஸாக்ஷாத்காரதத்தைச் சம்பாதிபபது; ஆகையாலே இரண்டுகும் பலம் வெவ்வேறுயிருக்கையால இரணடும் வெவ்வேறு" என்று சொல்லுமவர்கள் நன்றாய்த் தெரிந்தவர்களல்லவென்று பொருள்.] ஏனெனில்-இரண்டுக்கும் ஆத மதரிசநமொன்றே பயனுகையால் எதையபுக்ஷிததாலும் அந்த படியனையே யடைகிறான்.

(அ-கை.) இதையே விவரிகிறார.

யதாஹ்யுக்தம்ப்ராக்தயோகம் ததாபரமவிமுச்யதே।
வநகுஂஸாஜ்ஞுயொமகு யத்ஸாங்கியைரபி॥ரு॥

(ரு) ஞாநயோகிகளால் எநதபலம் அடையப்படுமோ அதுவேதான் கர்மநிஷ்டாகளாலும் அடையட்படும், இப்படி பலம் ஒன்றுகையால் ஞாந யோக கர்மயோகங்களிரண்டும் ஒன்றுதானென்று எவன் பார்க்கிறானே அவனே பண்டிதன்.

(அ-கை.) இவற்றுள் இவ்வளவுதான் விசேஷமென்கிறார்.

ஸந்ந்யாஸஸ்துமஹாபாஹோ துஃக்கமாப்துமயோகதஃ।
யொமயுக்தோமுநிர்ப்ரஹ்ம நசிரேணாதிகச்சதி॥சு॥

(சு) ஞாநயோகமானது கர்மயோகத்தோடு ஸம்பந்தப்படாமல் ஸித்திப்பது வருத்தம்; கர்மயோகியோ எப்போதும் தனக்குத்தானே ஆத்மாவைச் சிந்தித்துககொண்டிருப்பவனுகையால் சுகமாகக் கர்மயோகத்தைச் சாதித்து அற்பகாலத்தில் ஆத்மாவை அடைகிறான். [ஞாநயோகத்தை மிகவும் வருத்தப்பட்டு ஸாதிக்கவேண்டுகையாலே வெகுகாலஞ் சென்றபின்பு ஆத்மாவை யடையவேண்டும். இதுதான்விசேஷமென்று அபிப்பிராயம்.]

யொமயுக்தோவிஶுத்தாத்மா விஜிதாத்மாஜிதேந்த்ரியஃ।
ஸர்வபூதாத்மபூதாத்மா குர்வந்நபி நலிப்யதே॥ள॥

(ள) கர்மயோகஞ் செய்பவன் பரமபுருஷனுடைய ஆராதநமாக சாஸ்திரத்திற் சொல்லபபடுங்கர்மங்களைச் செய்தபடியே அதனால் மனந்தெளிந்து, (தனக்குப் பழகுகமான காமததில் இழிநதமையால்) மனதையும் இந்திரியங்களையும் வருத்தமின்றிஜயித்து, "தேவர் மனிதர் என்று விதியாஸமாயிருப்பதெல்லாம் பிரகிருதியின் விகாரம், ஆத்மாவானது எந்தசரீரத்திலும் ஒரேவடிவமாய் ஞாநஸ்வரூபமாய் ஸமமாயிருகிறது" என்று ஆத்மஸ்வரூபத்தின் உண்மையை எந்தவேளையுஞ் சிந்தித்திருகிறுதலால் அவன் கர்மத்தைச்செய்து வந்தபோதிலும் தேஹமே ஆதமாவென்கிற எண்ணைத்தால் கட்டுப்படான் [ஆகையால் வெகு சீக்கிரத்தில் ஆத்மாவை யடைவானென்று தாத்பர்யம்.]

(அ-கை.) செய்வதற்கு எளிதாயும் விளைவில் பலனைத்தருவதாயு மிருப்பதுபற்றி கர்மயோகஞ் சிறந்திருக்கையால் அதற்கு வேண்டுமவற்றைச் சொல்லுகிறேன்கேள்.

நைவகிஞ்சித்கரோமீதி யுக்தோ யுக்தத்தவித்|
பஶ்யஂஶ்ருண்வன்ஸ்ப்ருஶஞ்ஜிக்ரந்நஶ்நன்கச்சன்ஸ்வபஂஶ்வஸன்||அ||
ப்ரலபன்விஸ்ருஜன்க்3ருஹ்ணன்னுன்மிஷன்நிமிஷன்னபி|
இந்த்ரியாணீந்த்ரியார்தே3ஷு வர்தந்த இதி தா4ரயன்||கூ||

(அ-கூ) ஆத்மஸ்வரூபத்தின் உண்மைதெரிந்தவன், "செவிமுதலிய ஞானேந்திரியங்களும் வாய்முதலிய கர்மேந்திரியங்களும் பிராணனும் தந்தம் விஷயங்களில் செல்லுகின்றனவேயல்லது நான் சிறிதும் செய்யவில்லை" என்று நினைத்திருப்பன் [அதாவது-ஞானமேஸ்வபாவமான எனக்கு (நான் செய்தேனென்கிற) எண்ணமானது இந்திரியாதிகளின் ஸம்பந்தத்தால் வந்ததேயல்லது என் ஸ்வரூபத்தால் வந்ததல்லவென்று நினைத்திருப்பன் என்று தாத்பரியம்.]

ப்3ரஹ்மண்யாதா4யகர்மாணி ஸங்க3ம்த்யக்த்வாகரோதியஃ|
லிப்யதே நஸபாபேந பத்3மபத்ரமிவாம்ப4ஸா||கo||

(கo) யாவனொருவன் கர்த்ருத்வத்தைப் பிரகிருதியில் வைத்து (அதாவது இந்திரிய வியாபாரங்களெல்லாம் கர்மாதீனமென்று கர்மபலத்தில் ஸம்பந்தப்படாமல் "நான் சிறிதுஞ் செய்கிறேனில்லை" என்று நினைத்தவனாய்) கர்மங்களைச்செய்து வருகிறானோ, அவன் பிரகிருதியோடு கலந்திருந்தாலும் பந்தத்துக்குக் காரணமான பாவத்தால் கட்டுப்படான்.. அதென்போலென்னில் - தாமரையிலையானது ஜலத்திலிருக்கச்செய்தே அதில் ஒட்டாததுபோ லென்றறியவும்.

காயேந மநஸாபு3த்4யா கேவலைரிந்த்ரியைரபி|
யோகி நஃகர்ம குர்வந்தி ஸங்க3ம்த்யக்த்வாத்மஶுத்தயே||கக||

(கக) யோகிகளாயிருப்பார் அநாதிகாலமாய் ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிக் கிடக்கிற கருமப்பிணை தீருகைக்காகச் சரீரம் மனது புத்தி இந்திரியம் இவைகளைக்கொண்டு கர்மயோகத்தைப் பலாபேக்ஷையின்றிச் செய்துவருகிறார்கள்.

யுக்தஃகர்மப2லம்த்யக்த்வா ஶாந்திமாப்நோதி நைஷ்டி2கீம்|
அயுக்தஃகாமகாரேண ப2லே ஸக்தோ நிப3த்4யதே||கஉ||

(கஉ) இதரமான பலங்களில் சபலிக்காமல் ஆத்மா ஒன்றையே நாடிக்கேவலம் ஆத்மசுத்திக்காகக் கர்மஞ்செய்யுமவன் ஆத்மாநுபவ மென்னும் ஸ்திரமான சுகத்தை யடைவான். அப்படி ஆத்மாவைப் பார்க்கவேண்டுமென்கிற எண்ணமில்லாமல் பலனில் அபேக்ஷையோடு கர்மஞ்செய்யுமவன் அக்

கர்மத்தால் கட்டுப்பட்டு நித்திய ஸம்ஸாரியாவான். [ஆக விதனால் புருஷன், தான் செய்யுங் கர்மங்களெல்லாம் இந்திரியரூபமாய் விகாரப்பட்டிருக்கிற பிரகிருதியைச் சேர்ந்ததென்று நினைத்தவனுய் ஆத்மாவைப் பிணையினின்று விடுவிக்கைக்காகப் பலாபேக்ஷையின்றிக் கர்மத்தையே செய்யக்கடவனென்றதாயிற்று.]

(அ-கை.) அநந்தரம் தேகரூபமாய் விகாரப்பட்டிருக்கும் பிரகிருதியில் கர்த்ருத்வத்தை வைக்கும்படி சொல்லுகிறது.

ஸவ்ருகூ-ரணிஃ நஸா ஸந்ருஸ்ரஷ்டவ்யவம்வஸீ।
நவஷாரெவ-ரெஷஹீ ஸெநவக-வ்ருந்கூாரயநு॥கஈ॥

(கஈ) "ஆத்மாவுக்கு நான் செய்தேனென்கிற கர்த்ருத்வமானது சுபாவத்தாலுண்டானதல்ல; பழையகர்மமடியாகவந்த சரீர ஸம்பந்தத்தால் வந்தது" என்கிற மனதோடு புருஷன் தான்செய்யுங் கர்மங்களையெல்லாம் நவத்துவாரபட்டணமான சரீரத்தில்வைத்து, தேஹத்தில் தானிருப்பதற்கு வேண்டும் பிரயத்தினங்களைச்செய்யாமலும் அத்தேஹத்தைக்கொண்டு செய்விக்காமலும் சுதந்திரனுய் சுகமாயிருக்கக் கடவன்.

(அ-கை.) ஆத்மாவுக்கு ஸ்வதஸ்ஸித்தமான ரூபம் இன்னதென்கிறார்.

நகுத-ர்ஸ்ரூவம்நகுரு-ரணி மொகுவஸ்ருஸ்ரஜதிவ்ரஹ-ஃ।
நகுரு-ர்வமுவஸம்யொமம் வஸுஹாவவஸ-வ்ரவதி-ர்ஒதி॥கச॥

(கச) தேவர் விலங்கு மனிதர் தாவரமென்று பிரகிருதியின் ஸம்பந்தத்தால் பலவகையாயுள்ள இந்தப்பிராணிகளுக்கு, கர்மஞ்செய்யுந் திறமையும், கர்மமும்,அக்கர்மப்பயனில் ஸம்பந்தமும் ஆத்மாவால் வந்ததல்ல; ஆத்மாசுதந்திரனுய் கர்மத்துக்கு வசப்படாமலிருக்கிறான். ஆனல் யாருண்டாக்குகின்றரென்றால் ஸ்வபாவம் அப்படி பிரவர்த்திக்கிறது. [என்றால் அநாதிகாலமாய்த் தொடர்ந்த தொல்வினைப்பயனுகிய (பிரகிருதியின்) சேர்க்கையினல் 'நான்தேவன் நான்மனிதன்' என்று பிரகிருதியையே ஆத்மாவாகநினைத்துப் பிரமிப்பதால் வரும்வாஸனை உண்டுபண்ணுகிறதென்று தாத்பரியம்.]

நாஶுதத்தகுஸ்ருவிதாவம் நவிவஸ-கூ-தம்விஹ-ஃ।
கூஜ்ஞாநெநாவ்ருதம்ஜ்ஞாநம் தெநமுஹ்யந்திஜந்தவஃ॥கரு॥

(கரு) புருஷன் தனக்கு உறவினராக மதிக்கப்பட்ட புத்திராதிகளுக்கு ஒரு நன்மை செய்யவேண்டுமென்று அவர்களுடைய பாவத்தைப்போக்கவாவது, தனக்குப் பகையாக மதிக்கப்பட்ட ஒருவனுடைய புண்ணியத்தை யழிக்கவாவது செய்பவனல்லன். [ஏனெனில் - இவன் ஒரு இடத்தில் இது என்னுடையதென்று நிலையாயிருப்பவனுகில் இவனுக்கு உறவென்றும் பகையென்றும் ஏற்படும். இவனே எங்குமிருப்பவனுகையால் தேவர் மனிதர் முதலிய எந்த சரீரங்களிலும் நிலையாயிருப்பவனல்ல.] ஆனல் இவனுக்

கு இந்த விபரீதவாஸனை ஏன் உண்டாயிற்றென்றால் - (ஞானவிரோதியான) பழைய கர்மமானது தன் பயனைப் புசிப்பிக்கவேண்டுமென்று இவனுடைய ஞானத்தை மறைக்க, அதனால் தேவாதி சரீரங்களில் சேர்க்கையும் அதனால் 'நான் தேவன் நான் மனிதன்' என்கிற மமப்புமுண்டாய், அதனால் அதேதீதியான மமப்புக்குக் காரணமான வாஸனையும் அதற்கேற்ற கர்மவாஸனையும் அதனால் (ஒன்றுகிடக்க ஒன்றாய் தேஹமே ஆத்மாவென்கிற) மோஹமும் கர்மஞ்செய்யுந் திறமையுங் கூடுகிறது.

(அ-கை.) ஸகலமான அக்ஞானத்தையும் ஞானமென்னுமோடத்தாலே கடக்கிறானென்றும் ஞானத்தீயானது ஸகல கர்மங்களையும் சாம்பலாகச்செய்யுமென்றும் ஞானத்தைப்போல் பரிசுத்தமானது உலகத்தில் வேறொன்றுங் கிடையாதென்றும் முன்பு சொன்னானன்றே? அதற்கு இப்போது ஸமயமாயிருக்கையால் அதை இவ்விடத்தில் கொண்டு கூட்டுகிறார்.

ஜாதெ நஷ்டே ஜடஜ்ஞானம் யெஷாம் நாஸ்தி தயோ ததா |
தெஷாமாதித்யவஜ்ஜ்ஞானம் ப்ரகாஸயதி தத்பரம் ||கசு||

(க்சு) முற்கூறிய லக்ஷணமான ஆத்மகோடிகளுக்குள் எவர்களாலே ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியே உபதேசிக்கப்பெற்று (அதை நாடோறும் அப்பியாஸம் செய்துவந்து) அதனால் மிகவும் பொலிவுபெற்ற பரிசுத்த ஞானத்தாலே, அதற்கு விரோதியும் ஊழ்வினையின் பயனுமான அக்ஞானத்தை நாசப்படுத்துகிறார்களோ அவர்களுக்கு, தங்களுடைய ஸ்வாபாவிகஞானமானது மென்மேலும் விருத்தியடைந்து சூரியனைப்போல் விளங்கி ஸகலபதார்த்தங்களையும் பிரகாசப்படுத்துகிறது. (அதாவது ஸர்வக்ஞராகிறார்கள்.)

[இங்கே 'அவர்களுக்கு' என்று அக்ஞானமொழிந்தவர்கள் பலருண்டாயிருப்பதாகச் சொல்லுகையாலே நகெவலாஹம்ஜாத- நாவஸம் என்கிறவிடத்தில்ஊஹிக்கப்பட்ட ஆத்மாக்களின்பன்மை. இங்கு நன்கு விளக்கப்பட்டது. ஆனால் அவ்விடத்தில் சொன்னதுபோலவே இந்தபன்மையும் உபாதியால்வந்ததுதானென்றாலோ அதுகூடாது.ஏனெனில்-அக்ஞானம் ஒழிந்தவர்களுக்கு உபாதியின்மணந்தானேது?மேலும் இங்கே இன்னொருவிசேஷம்,அதாவது:— அவர்களுடைய ஞானம் ஆதித்தியனைப்போலென்று சூரியனை திருஷ்டாந்தமாகச்சொல்லுகையாலே, ஞானம் ஆத்மஸ்வரூபத்தைச் சேர்ந்ததர்மமென்றும், ஒளியும்ஒளிக்கிடமான சூரியனும்போல் ஞானமும் ஞானத்துக்கிடமான ஆத்மாவும் தர்ம தர்மிகளென்றும் சொன்னதாயிற்று. ஆனதுபற்றியே ஸம்ஸாரதசையில் ஞானத்துக்கு மறைவும் மோக்ஷதசையில் மலர்ச்சியும் கூடும்.]

தேஷ- மாதயவஸ்ஹாதா நவ நிஷ்டா ராவ தராயணாஃ |
கச்ச்ந்த்யபுனராவ்ருத்திம் ஜ்ஞாநநிர்தூதகல்மஷாஃ ||கள||

(கள) அவ்வித ஆத்மதரிசநத்தில் திடமான உத்தேசங்கொண்டவர்கள் மனதில் எந்தவேளையும் அதே நினைவாயிருந்து அதையே நன்கு பழகி இனி இதற்குமேல் வேறு பிரயோஜநமில்லையென்று நினைத்தவர்களாய், தாம்

அப்பியஸிக்கின்ற அந்த ஞாநத்தைக்கொண்டே ஸகல பாபங்களையும் போக்கடித்து மறுபடியுந் திரும்பாத தசையான ஆதமஸ்வரூபமாத்திரத்தில் நிற்கிறார்கள்.

விஜ்ஞாவிநயஸ்ஸந்ந ப்ராஹ்மணேமவிஹஸ்தி நி|
ஸுநிசெவஸுவாகெஇ வணீதாஸ்ஸுஜுஸி நஃ||கஅ||

(கஅ) அப்படிப்பட்ட பண்டிதர்கள், "இவன் படித்து விநயத்தோடு கூடியவன், இவன் பிராம்மணன், இது பசு, இது யானை, இது நாய், இவன் நீசன்" எனறு ஒன்றை உயர்ந்ததாகவும் ஒன்றைத் தாழ்ந்ததாகவும் பாராமல் எங்கும் ஆதமவஸ்துவானது ஒரே ரீதியாய் ஞாநவடிவமாயிருக்கிறதென்று எல்லாவறறையும் ஸமமாய்ப் பார்க்கிறார்கள்.

இஹைவதைர்ஜிதஸ்ஸர்கோ யேஷாம்ஸாஜ்யஸ்திதம்நஃ|
நிர்தோஷம்ஹிஸமம்ப்ரஹ்ம தஸ்மாத்ப்ரஹ்மணிதேஸ்திதாஃ||ககூ||

(ககூ) இப்படி ஸகல வஸ்துக்களிலும் ஆத்மா ஞாநவடிவமாய் ஒரே ரீதியாயிருக்கிறதென்று பார்ப்பவர்கள் ஆத்மப்பிராப்திக்காகச் சாதநம் செய்யும்பொழுதே ஸம்ஸாரத்தை ஜயித்தவாகளாவார். எப்படியெனில்-ஸம்ஸார ஜயமாவதென்ன? ப்ரம்மமெனகிற ஆத்மாவில் நிலைத்தல்; அதாவது-பிரகிருதிக்கு அவ்வருகாய் எங்கும் ஏகரூபமாயிருக்கிற ஆத்மாவில் மனதை ஸ்தாபிக்கை: அது இவாகளுக்கு உண்டாய்விட்டதன்றோ? ஆனபின்பு இவர்கள் ஸம்ஸாரத்தை ஜயித்தார்களென்னக் குறையுண்டோ? [ஆத்மவஸ்துவெல்லாம் ஞாநமே வடிவாய் ஸமமாயிருக்குமென்றுநினைத்திருப்பவர்கள் முக்தர்களே யென்று தாத்பரியம்.]

(அ-கை.) எப்படியிருந்தால் கர்மயோகிக்கு அந்த ஸமபுத்தியுண்டாகுமோ அதை உபதேசிக்கிறார்.

நவ்ருஹ்யஷ்டவ்ருதீயம்வ்ராவ்ருவாநெநாஜிஜ்ஞாவ்ருவாவியது|
ஸ்ரீராவ்ருஸ்ரீமஸ்ரீஜுஷ்டோயதோவ்ருஹவிஷ்ருஹ்ணீஸ்வி நஃ||உ0||

(உ0) புருஷன் எந்த சரீரத்திலிருக்கும்பொழுது(இவனுக்குப் பழைய கர்மத்தின்படி)எது இஷ்டமாயும் எது அநிஷ்டமாயுமிருக்குமோ, அவைகளில் ஸ்தோஷம் வெறுப்பு இரண்டுமற்று இருக்கக்கடவன் - அதெப்படி யிருக்கலாகுமென்றால் - ஆத்மா ஸ்திரனென்றும் சரீரம் அஸ்திரமென்றும் அறிந்து அதனால் தேஹமே ஆத்மாவென்கிற மயக்கத்தைத் தீர்த்தாலிருக்கலாம். அதெப்படி மயக்கத்தைத் தீர்க்கலாமென்றால் - ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியே உபதேசிக்கப்பெற்று அதையே பழகிக்கொண்டிருந்தால் தீர்க்கலாம்.

[என்றால் தத்வந்தெரிந்தவர் செய்த உபதேசத்தால் ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியறிந்து அதையே பழகிவந்து அதனால் தேஹமே ஆத்மாவென்கிற அபிமாநத்தைவிட்டு ஸ்திரமான ஆத்மாவைத் தரிசிப்பதாலுண்டாகும் ப்ரீதியால், அஸ்திரமான ப்ரகிருதியால் வரும் இஷ்டாநிஷ்டங்களில் ஸ்தோஷமாவது வெறுப்பாவது அடையக்கூடாவனல்லனென்று தாத்பரியம்.]

வாஹ்யவிஷயேஷ்வஸக்தாத்மா விந்தத்யாத்மநியத்வம்।
ஸப்ரஹ்மயோகயுக்தாத்மா ஸுகமக்ஷயமஶ்நுதே॥உக॥

(உக) இப்படி ஆத்மாவைக்காட்டிலும் புறம்பான விஷயங்களில் பற்றில்லாமல் ஆத்மாவில்மாத்திரம் சுகத்தையடையுமவன் பிரகிருதியோடியிற்சியைவிட்டுப் பிரம்மத்தில் அப்பியாஸஞ்செய்பவனுய்ப் ப்ரம்மாநுபவமென்னும் சாசுவதமான சுகத்தை அடைகிறான்.

(அ-கை.) பிரகிருதியால் வரும் போகத்தை எளிதில் விடலாமென்கிறது.

யெஹிஸம்ஸ்பர்ஶஜாஹ்யோகா துக்கயோநயஏவதே।
ஆத்யந்திகாஸ்தேகௌந்தேய ந தேஷுரமதேபுதஃ॥உஉ॥

(உஉ) விஷயங்களாலும் இந்திரியங்களாலுமுண்டாகும் போகம் துக்கத்தைத்தருவதும் ஆதியந்தமுள்ளதுமென்று தெரிந்துகொண்டவன் அதில் சுகபுத்தியைப் பண்ணமாட்டான்.

ஶக்நோதீஹைவயஃஸோடும் ப்ராக்ஶரீரவிமோக்ஷணாத்।
காமக்ரோதோத்பவம்வேகம் ஸயுக்தஃஸுகீநரஃ॥உங॥

(உங) யாவனொருவன் சரீரம் விடுவதற்கு முன்பு ஸாதநத்தையநுஷ்டிக்கும்பொழுதே ஆத்மாநுபவத்திலுண்டான பிரீதியால், காமக்குரோதங்களின் வேகத்தை ஜயிக்கிறானே, அவன்தான் ஆத்மாநுபவத்துக்கு யோக்கியனுய் சரீரம் விட்டபின்பு அவ்வநுபவத்தை யடைந்து சுகிப்பான்.

யோந்தஃஸுகோந்தராராமஸ்ததாந்தர்ஜ்யோதிரேவயஃ।
ஸயோகீப்ரஹ்மநிர்வாணம் ப்ரஹ்மபூதோதிகச்சதி॥உச॥

(உச) யாவனொருவன் புறம்புண்டான அநுபவத்தையெல்லாம் விட்டு உள்ளுக்குள்ளே சுகமடைந்தவனுய் ஆத்மாவே பூங்காவனமாய் அதாவது ஆத்மகுணங்களே இனியவிஷயமாய் எப்போதும் ஆத்மஞானியாகவே யிருக்கிறானே அந்த யோகியே ஆத்மாநுபவமென்னும் சுகத்தை யடைவான்.

லபந்தேப்ரஹ்மநிர்வாணமிருஷயஃக்ஷீணகல்மஷாஃ।
சிந்நத்வைதாயதாத்மாநஃ ஸர்வபூதஹிதேரதாஃ॥உரு॥

(உரு) தீதோஷ்ணாதிகளால் விடுபட்டவராய் ஆத்மாவில் தானே மனம் வைத்துத் தங்களைப்போலவே ஸர்வப்பிராணிகளும் கடைத்தேறவேண்டுமென்கிற சிரத்தையுடையவர்களாய் ஆத்மாவைத் தரிசிப்பவராயிருக்கிறார்கள் யாவர், அவர்கள் ஆத்மப்பிராப்திக்கு விரோதமான ஸகல பாபங்களையுந் தொலைத்து பிரம்மாநந்தத்தை யடைவார்கள்.

(அ-கை.) கீழ்ச்சொன்ன குணமுடையவர் எளிதில் ப்ரம்மத்தை அடைவர்களென்கிறார்.

காமக்ரோதவியுக்தாநாம் யதீநாம்யதசேதஸாம்।
அபிதோப்ரஹ்மநிர்வாணம் வர்தேவிதிதாத்மநாம்॥உசு॥

(உசு) காமக்குரோதங்களற்று யத்நசிலராய் மனதை ஜயித்திருப்பவருக்குப் பிரம்மாநந்தம் எங்கே வேண்டுமானாலும் கைம்மேல் கிடைக்கும்.

(அ-கை.) இப்படி சொல்லிய கர்மயோகத்தை அதற்கிலக்கான யோகத்துடன் கூட்டித் தலைக்கட்டுகிறார்.

ஸ்பர்சாந்க்ருத்வாபஹிர்பாஹ்யாம் ஸ்சக்ஷுஸ்சைவாந்தரே ப்ருவோः |
ப்ராணாபாநௌ நஸாப்யந்தரசாரிணௌ ||
யதேந்த்ரியமநோபுத்திர் முநிர் மோக்ஷபராயணः |
விகதேச்சாபயக்ரோதோ யஸ்ஸதா முக்த ஏவ ஸः ||உஅ||

(உஎ-உஅ) புறம்புண்டான பற்றுக்களையெல்லாம் ஒழித்து யோகத்துக்கு யோக்கியமான ஆஸனத்தில் நேராகவிருந்து கண்களிரண்டையும் புருவத்தின் நடுவில் மூக்கு நுனியில் வைத்து, மூக்குக்குள்ளோடும் பிராண அபாநங்களை அதாவது உள்மூச்சு வெளிமூச்சுகளைச் சமமாகச்செய்து, இந்திரியம் மனம் புத்தி இவைகளை ஆத்மாவைத்தவிர மற்றொன்றிலும் போகவொட்டாமல் மடக்கி, காமம் குரோதம் பயம் இவையற்று, மோக்ஷமே கதியென்றெண்ணி ஆத்மதரிசநமே காரியமாய் எவனிருக்கிறானே அவன் ஸித்தியுண்டாவதற்கு முன்னமுங்கூட முக்தனென்னப்படுவான்.

(அ-கை.) நித்திய நைமித்திக கர்மங்களைச் செய்யவேண்டியதாய் யோகத்தை முடிவாய்க்கொண்ட இக்காமயோகத்தை யெளிதில் அடையுமவகை சொல்லுகிறது.

ஹோகாரம்யஜ்ஞதபஸாம் ஸர்வலோகமஹேஸ்வரம் |
ஸுஹ்ருதம்ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வாமாம்ருச்சதி || உக||

(உக) யக்ஞம் தவம் இவைகளைப் புசிப்பவனும், தீர்க்காணாம்பரமேஸ்வரனென்கிறபடியே ஸகல லோகேசுவரருக்கும்மஹேசுவரனும்ஸர்வப்பிராணிகளுக்கு மினியனுமிருக்கும் நம்மையறிந்தவன், கர்மயோகம் நமக்குஆராதநமென்கிற நினைவினால் அதில் சுகமாயிழிந்து அநுஷ்டிப்பான்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீः.

ஸ்ரீமதேராமாநுஜாயநமः.

ஆறாவது அத்யாயம்.

அவதாரிகை.

இதுவரையில் கர்மயோகத்தை ஸாங்கமாக விதித்து, இப்பொழுது ஞாநயோக கர்மயோகங்களால் ஸாதிக்கவேண்டியதான (ஆத்ம ஸாக்ஷாத்கார ரூப) யோகாப்பியாஸம் செய்யும் பிரகாரத்தை விதிக்கிறார். அதில் காம

யோகம் மற்றொன்றை யெதிர்பாராமல் தானே ஆத்மப்ராப்தியை ஸாதிக்கி றதென்பதைத் திடப்படுத்துவதற்காக, அதை ஞாநரூபமாகவும் யோகத்தைக்கொண்டு முடிவதாகவும் அநுபாஷிக்கிறார்.

ஸ்ரீ ஹமவாந-வாவ|| கநாஸ்ரி தர்கூஜ-ுஹலம் கார ுங்கூஜ-ுக
ொதியः| லலந்ந ுாஸீவயொகீவ நநிரஸ்ரிந-ுவாகி்யः||க||

(க) கர்மத்துக்குப்பயனுக ஸ்வர்கம் முதலியவைகளை விரும்பாமல் (அவ சியம் அநுஷ்டிக்கவேண்டியதான) அதை "எல்லாவிதத்தாலும் நமக்கன்பரு கிய பரமபுருஷனுக்கு இந்த கர்மம் ஆராதநமாகக்கடவது; இத்தால் அடைய வேண்டும் பயன் எனக்குச் சிறிதுமில்லை" என்று எவன் செய்கிறானோ அவன்தான் ஸந்யாஸியும், யோகியும். [அதாவது - ஆத்மதரிசநத்துக்கு ஸாதகங்களான ஞாநகர்மங்களிரண்டையுஞ் செய்தவனென்று தாத்பர்யம்.] அதுவே யல்லது அக்நிகாரியஞ் செய்யாமலும் மற்றுங் கர்மங்களைச் செய்யாமலும் கேவலம் ஞாநத்தில்மாத்திர மிருப்பவனல்ல. [அப்படிசெய்யாம விருப்பவனுக்கு ஞாநநிஷ்டை யொன்றுதானுண்டு; கர்மநிஷ்டனுக்கோ அவ்விரண்டு முண்டென்று தாத்பர்யம்.]

(அ-கை.) இந்த கர்மயோகத்தில்தானே ஞாநமும் உண்டென்கிறார்.

யம்லந்ந ுாலஇதிவ ுாஹ- ரொ ுாமம்தம்விதீவாணவ|
நஹ ுலந்ந ுலலஜூலெ ா யொகீஹவதிகூஜூந||உ||

(உ) அர்ச்சுந! பெரியோர்கள் எதையானால் ஸந்யாஸமென்கிறார்களோ அதாவது (ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியே யறிவதான) ஞாநமென்கிறார்களோ அதுதான் கர்மயோகமென்றறி. எப்படியெனில் - ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி யறிந்து அதனால் (முன் பிரகிருதியைப்பார்த்து இதுதான் ஆத்மாவென்று) தான் கொண்டிருந்த அபிமாநத்தை விடாதவன் கீழ்ச்சொன்ன கர்மயோகிகளில் எவனுகிலும் ஒருவனுண்டா? யஸ்ய ஸர்வே ஸமாரம்பாः காமஸங்கல்பவர்ஜிதாः என்று ஸங்கல்பத்தை விட்டவனே கர்மயோகியாவானென்றன்றோ கீழ்ச்சொன்னது?

(அ-கை.) கர்மயோகந்தான் பிரமாதமில்லாமல் யோகத்தைச் சாதிக்குமென்கிறார்.

கூர-ர-கெஷாஜு-ெநரொ ுாமம் கூஜுகார ணஜ-வ ுதெ|
யொமார ுஜஸ ுதலெ ுவ ஸஜ்ஜகார ணஜ-வ ுதெ||ங||

(ங) புருஷன் ஆத்மதரிசநமென்னும் யோகத்தைச்செய்ய விரும்புவானுகில் அவனுக்குக் கர்மம் ஸாதகமாமென்றும், யோகம் நிலைத்தபிறகே (கர்மநிவ்ருத்தியான) ஞாநம் ஸாதகமாமென்றும் சொல்லப்படுகிறது. [இதனால் ஆத்மதரிசநமென்னும் மோக்ஷமுண்டாமளவும் கர்மயோகமே செய்யத்தக்கதென்று தாத்பர்யம்.]

(அ-கை.) புருஷனுக்கு எப்பொழுது யோகம் நிலைக்குமென்னில் சொல்லுகிறார்.

யதா ஹரி நந்ி யாயெ ுஷ- நகூஜு ுவ ந-ஷஜ ுதெ|
லவ ுலஜூல லந ுாலீ யொமார ுஜஸ ுதொவ ுதெ||ச||

(ச) இந்த யோகியானவன் எப்பொழுது ஆத்மாநுபவஞ் செய்வதே சுபாவமாய் விஷயங்களினும் விஷயாதீனமாய வரும வியாபாரங்களினும ஸம்பந்தத்தை யொழித்துகொள்ளுகிறானே, அப்பொழுதுதான (ஸகல ஸங்கல்பத்தையு மொழிதத) இவனுக்கு யோகம் நிலைத்ததாகச சொலலக்கூடும். [யோகஞ்செயய வாரம்பிததவனுககு ஆரம்பததிலேயே விஷயததில வைராக்யமுண்டாக மாட்டாதாகையால அதுண்டாவதற்குச் செயயும் அப்பியாஸரூபமான கர்மயோகமே யோக ஸாதநமாகையால யோகஸித்தியை விரும்பியவன் அதையே செய்யக்கடவன்]

(அ-கை.) அதையே அருளிசசெயகிறார.

உத்³த⁴ரேதா³த்மநாத்மாநம் நாத்மாநமவஸாத³யேத்।
ஆத்மைவ ஹ்யாத்மநோ ப³ந்து⁴ராத்மைவ ரிபுராத்மந꞉॥ரு॥

(ரு) மனதை விஷயததில பறறவொட்டாமல் ததது அதைக்கொண்டு ஆதமாவைக கடைததேறச செயயவேண்டுமே யலலது, கணடதையுந் தேடியோடும்படியான மனதைக்கண்டபடியேவிட்டு ஆதமாவைக் கெடுகக லாகாது.ஏனெனில்-ஆத்மாவுக்குப் பநதுவும் மனந்தான் பகையும மனநதான.

ப³ந்து⁴ராத்மாத்மநஸ்தஸ்ய யேநாத்மைவாத்மநா ஜி꞉தः।
அநாத்மநஸ்து ஶத்ருத்வே வர்தேதாத்மைவ ஶத்ருவத்॥சு॥

(சு) எநத புருஷன் தனக்குத்தானே மனதை விஷயங்களிற் செல்லவொட்டாமல் ஜயிககிறானே, அவனுக்கு அம்மனமே பந்துவாகிறது. அபபடி ஜயிக்காவிடில் அதுவே இவனுக்குப பகையாய் இவனை நறகதியடையவொடாமற் கெகெகிறது. [இவ்வாததத்தை உநவனவ உந்ஷ்ருணாம்காரணம் யநஸோக்ஷயொ꞉, யந்நாயவிஷயாவஜ்ஜி꞉ஸ்ம்ருதிநிர்ஷயஹ நः என்று பராசரபகவானும்சொன்னார்.]

(அ-கை.) யோகாரம்பஞ் செய்யத்தக்க நிலை சொலலுகிறது.

ஜி தாத்மந꞉ப்ரஶாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித꞉।
ஶீதோஷ்ணஸுக²து³꞉கே²ஷு ததா² மாநாவமாநயோ꞉॥எ॥

(எ) வெபபம குளிர்சசி சுகம் துககம் மாநம் அவமாநம் இவைகளில மனஞ்சலியாமலிருநதால அவன மனதில ஆதமஸ்வரூபம மிகவும நிலைதிருககும்.

ஜ்ஞாநவிஜ்ஞாநதருப்தாத்மா கூடஸ்தோ விஜிதேந்த்ரிய꞉।
யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந꞉॥அ॥

(அ) ஆத்ம ஸ்வரூபததை ஸாதாரணமா யறிவதனலும், பிரகிருதியைக்காட்டிலும் வேறுபட்டிருக்கிறதென்று அதையே விசேஷமாயறிவதனலும் திருப்தனும், தேவர் மனிதர் என்று விதம்விதமான நிலைகளிலுமிருநதாலுமே வடிவாயிருக்கின்ற ஆத்மாவில நின்றவனும், இந்திரிய ஜயமபணணி

பொன்னையும் புழுதியையும் ஸமமாகவெண்ணியிருக்குங் கர்மயோகிதான் ஆத்மதரிசநமென்னும் ஞாநயோகத்துக்குத் தக்கவனுவான்.

ஸுஹ்ருந்மித்ரார்யுதா³ஸீந மத்⁴யஸ்தே²ஷ்யத்³வேஷ்யபந்து⁴ஷு।
ஸாத⁴ுஷ்வபி சபாபேஷு ஸமபு³த்³தி⁴ர்விஶிஷ்யதே॥கூ॥

(கூ) 1 ஸுஹிருத்துக்கள், 2 மித்திரர்கள், 3 அரிகள், 4 உதாஸீநர்கள், 5 மத்தியஸ்தர்கள், 6 த்வேஷிகள், 7 பந்துக்கள், 8 ஸாதுக்கள், பாவமேதொழிலாயிருப்பவர்கள் இவர்களிடத்தில் ஸமமாயிருப்பவன் (அதாவது-ஆத்மா ஒன்றே பயனுய் பகைவரால் விரோதமும் நண்பர்களால் பிரயோஜநமும் இல்லாமையால் யாவரையும் ஸமமாக நிநைப்பவன்) யோகாப்பியாஸஞ் செய்யத்தக்கவனுவான்.

யோகீ³ யுஞ்ஜீத ஸததமாத்மாநம் ரஹஸி ஸ்தி²த:।
ஏகாகீ யதசித்தாத்மா நிராஶீரபரிக்³ரஹ:॥கo॥

(கo) கீழ்ச்சொன்ன கர்மயோகியானவன், திநந்தோறும் யோகஞ் செய்யுங்காலத்தில் ஜநங்களில்லாமல் நிச்சப்தமாயிருக்கிற விடத்தில் தனியாயிருந்து சித்தத்தையும் மனதையுமடக்கி ஆத்மாவைத் தவிர மற்றவைகளில் அபேக்ஷையற்று ஒன்றிலும் எனதென்கிற எண்ணம்வையாமல் ஆத்மாவைத் தன்னைத்தான் பார்க்கும்படியான நிலையில் வைக்கக்கடவன்.

ஶுசௌ தே³ஶே ப்ரதிஷ்டா²ப்ய ஸ்தி²ரமாஸநமாத்மந:।
நாத்யுச்ச்²ரிதம் நாதிநீசம் சைலாஜிநகுஶோத்தரம்॥கக॥

தத்ரைகாக்³ரம் மந: க்ருத்வா யதசித்தேந்த்³ரியக்ரிய:।
உபவிஶ்யாஸநே யுஞ்ஜ்யாத்³யோக³மாத்மவிஶுத்³த⁴யே॥கஉ॥

(கக-கஉ.) அசுத்த புருஷர்களாலும் அசுத்த வஸ்துக்களாலும் தீண்டப்படாத பரிசுத்த ஸ்தாநத்தில், கட்டைமுதலியவற்றால் செய்ததாய் அதிக உயரமும் அதிக தாழ்வுமில்லாமல் ஸமமாயிருக்கிற ஓர் ஆஸநத்தில் தர்ப்பை மான்தோல் வஸ்திரம் இவைகளை ஒன்றின்மீ தொன்றுய்ப்பரப்பி அதில் சார்ந்து உட்கார்ந்துகொண்டு, மனதை ஒரு நிலையாகச்செய்து இந்திரிய மநோவியாபாரங்களைச் சுத்தமாயடக்கி, தான் இந்தப் பிரகிருதியினின்றும் விடுபடுகைக்காக ஆத்ம ஸாக்ஷாத்காரம்பண்ணக்கடவன்.

---

1 ஸமான வயதாயில்லாமலிருக்கச்செய்தே தனக்கு இதத்தைக் கோருமவர்கள். 2 ஸமான வயதாயிருக்கையால் தனக்கு இதத்தைக் கோருமவர்கள். 3 இவனிடத்தில் ஒரு காரணத்தைக்கண்டு இவனுக்கு அநர்த்தந்தேடுமவர்கள். 4 உறவு பகை இரண்டுக்கும் காரணமில்லாமையால் உறவு கொளளாமலும் பகைக்காமலு மிருப்பவர்கள். 5 ஸ்வபாவமாகவே உறவாடாமலும் பகைக்காமலுமிருப்பவர். 6 ஸ்வபாவமாகவே பகைப்பவர். 7 ஸ்வபாவமாகவே இதம் செய்பவர். 8 தர்மசீலர்கள்.

ஸஜ்ஜாயஸ்திரொ தீ்ரவம் யாஸ்ய நஸ்வஷ்ணுஸ்ஸுரழி|
ஸம்வ்யெகஸ்ருநாஸிகாக்ரஸ்வம் திஸாஸ்சா நவலொகயந்||கூ||

வ்யஸா நாத்மாவிமதஹீ ப்ரஹ்மசாரிவ்ரதெஸ்தி:|
மநஸ்ஸம்யஜ்ய சித்தொ யுக்த ஆஸீத மத்பர:||கூ||

(கூ-கூ.) உடல் தலை கழுத்து இவைகளை அசையாமல் † சாய்த்தாற் போல் ஸமமாய்நிறுத்தி திசைகளைப்பாராமல் தன்மூக்கு நுனியைப்பார்த்துக்கொண்டே அடங்கிய மனதோடு பயமின்றிப் * பிரம்மசரிய வ்ரதத்தில் இருந்தவனுய் மனதை நம்மிடத்தில்திருப்பினவத்து இடைவிடாமல் நம்மையே சிந்தித்திருக்கக்கடவன்.

யுஞ்ஜந்நவம்ஸதாத்மாநம் யொகீநியதமாநஸ:|
சாந்திம்நிர்வாணஸம்யாம மத்ஸம்ஸ்தாமதிகச்சதி||கூ||

(கூ.) இப்படி மனதுக்கு கேஷமஸ்தானமான நம்மிடத்தில் இடைவிடாமல் மனதை நிறுத்தியவன் நம் ஸம்பந்தத்தால் பரிசுத்தமாய் அசையாமலிருக்கும் அம்மனதைக்கொண்டு நம்மிடத்திலுண்டான மேலான ஆநந்தத்தை யடைகிறான்.

(அ-கை.) இப்படி ஆத்ம யோகஞ்செய்ய ஆரம்பித்தவன் மனதை னியதற்காக சுபஸ்தானமான பகவானிடத்தில் மனதை நிறுத்தவேண்டுமென்பதை யருளிச்செய்து யோகத்துக்கு உபகரணமான மற்றவைகளையும் அருளிச்செய்கிறார்.

நாத்யஸ்நதஸ்து யொகொஸ்தி நைகாந்தமநஸ்நத:|
நசாதிஸ்வப்நஸீலஸ்ய ஜாக்ரதொநைவசார்ஜுந||கூ||

யுக்தாஹாரவிஹாரஸ்ய யுக்தசெஷ்டஸ்ய கர்மஸு|
யுக்தஸ்வப்நாவபொதஸ்ய யொகொபவதிது:கஹா||கஅ||

(கூ-கஅ.) அதிகமாயுண்பதும் மூதலே உண்ணுமலிருப்பதும் அளவற்ற காரியஞ்செய்வதும் காரியமே செய்யாமலிருப்பதும் அப்படியே அதிகமாயுறங்குவதும் உறங்காமலே யிருப்பதும் அதிக ஆயாஸப்படுவதும் சிறிதும் ஆயாஸப்படாம விருப்பதும் இவையெல்லாம் யோகத்துக்கு விரோதிகள். ஒவ்வொன்றும் மிதமாயிருப்பவனுக்குத் தான் துக்கநிவர்த்தகமான யோகம் ஸித்திக்கும்.

யதா விநியதம்சித்த மாத்மந்யெவாவதிஷ்டதெ|
நிஸ்ப்ருஹஸ்ஸர்வகாமெப்யொ யுக்த இத்யுச்யதெததா||கஅ||

---

† சாய்த்துக் கொள்ளாமற்போனால் நடுவில் பின்பக்கத்தைத் தரிப்பதற்காகப் பிரயத்தநஞ் செய்வதனால் ஸமாதி நிலைகுலையுமென்று அதற்காகச் சாய்த்தாற்போலென்கிறது.

* பிரம்மசரியவிரதமானது - பிரம்மமென்கிற ஆத்மாவையே நிஷ்டித்திருக்கும் நிலை.

(கஅ.) மனது ஆத்மாவில்தானே விசேஷமாய் நிலைத்து எப்பொழுது அசையாமலிருக்குமோ அப்பொழுதுதான் ஸகலகாமங்களிலும் ஆசையற்று யோகத்துக்குத் தக்கவனுவான்.

யயோபரமிவாதிஷ்டே²ந்நேங்க³தே ஸோபமாஸ்ம்ருʼதா|
யோகி³நோயதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோக³மாத்மந꞉||கக||

(ககூ.) மனோவியாபாரமற்று ஆத்மயோகம் செய்பவனுடைய ஆத்மாவுக்கு, காற்றில்லாவிடத்தில் அசையாமல் விளங்கும் விளக்கைச் சமமாய்க் கூறப்படும்.[காற்றில்லாமையால் அசையாமல் காந்தியோடு விளங்கும் விளக்குபோல் ஆத்மாவானது ஸகல வியாபாரங்களையுமொழித்த மனதுடன் கூடினமையால் அசையாமல் ஞானமென்னும் காந்தியோடுகூடி விளங்குமென்று தாத்பரியம்.]

யத்ரோபரமதே சித்தம் நிருத்³தம்யோக³ஸேவயா|
யத்ரசைவாத்மநாத்மானம் பஸ்யந்நாத்மநி துஷ்யதி||உ०||

ஸுக²மாத்யந்திகம்யத்தத்³பு³த்³தி⁴க்³ராஹ்யமதீந்த்³ரியம்|
வேத்தியத்ர நசைவாயம் ஸ்தி²தஸ்சலதி தத்த꞉||உக||

யம்லப்⁴யாவாபரம்லாப⁴ம் மந்யதே நாதி⁴கம்தத꞉|
யஸ்மிந்ஸ்தி²தோ ந து³꞉கே²ந கு³ருணாபி விசால்யதே||உஉ||

தம்வித்³யாது³꞉கஸம்யோக³ வியோக³ம்யோக³ஸஞ்ஜ்ஞிதம்|
ஸநிஶ்சயேந யோக்தவ்யோ யோகோ³நிர்விண்ணசேதஸா||உங||

(உ0-உக-உஉ-உங.) யோக ஸித்திக்காகத் தகையப்பட்ட மனதானது எந்த யோகத்தில் சுகப்படுமோ, எந்த யோகத்தில் ஆத்மாவைப் பார்ப்பதினால் அதில்தானே அதிகமாய் ஸந்தோஷிக்கிறதோ, இந்திரியங்களாலறியப்படாமல் கேவலம் ஆத்மாவினாலும் புத்தியினாலும் அறியக்கூடிய வின்பத்தையெந்தயோகத்தில்பெற்று அதனால் மற்றவிஷயங்களில் சபலிக்கமாட்டாதோ, எந்த யோகம்செய்பவன் யோகத்தைவிட்டு நீங்கிய பின்பும் மற்றொன்றை யபேக்ஷிக்காமல் அந்த யோகத்தையே விசேஷமாய் நினைப்பதோ, எந்த யோகம் ஸித்தித்தவன் அந்த யோகத்தைவிட்டு நீங்கியபின்பும் (குணமுள்ள புத்திரன் இறத்தல் முதலியவற்றாலுண்டாகும்) பெருந்துயரங்களுக்கும் சலிக்கமாட்டாதோ) அப்படிப்பட்ட யோகம் இதுவென்று யோகம்செய்ய வாரம்பித்தபொழுதே நிச்சயித்து மனக்கலக்கமற்று செய்யக்கடவன்.

ஸங்கல்பப்ரபவான்காமாம்ஸ்த்யக்த்வாஸர்வானஶேஷத꞉|
மநஸைவேந்த்³ரியக்³ராமம் விநியம்ய ஸமந்தத꞉||உச||

ஶநை꞉ஶநைருபரமேத்³பு³த்³தி⁴ம்ருʼத்⁴ருʼதிக்³ருʼஹீதயா|
ஆத்மஸம்ஸ்தம்மந꞉க்ருʼத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத்||உரு||

(உச-உரு.) பெண்டு பிள்ளை விடுவாசல் முதலியவற்றில் தனக்குண்டான கோரிக்கையை, (அவர்களுக்கும் தனக்கும் ஸம்பந்தமில்லையென்கிற வெண்ணத்தைக்கொண்டு) ஒழித்து, சீதம் உஷ்ணம் முதலியவற்றாலுண்டாகும் விருப்பையும், வெறுப்பையுந்தொலைத்து, புலன்களையெங்கும்செல்லவொட்டாமல் தடுத்து மெள்ளமெள்ள விவேகத்தைக்கொண்டு மனதை ஆத்மாவில் நிறுத்தி, மற்றொன்றையும் நினையாமலிருக்கக்கடவன்.

யதோயதோநிஶ்சரதி மநஶ்சஞ்சலமஸ்திரம்।
ததஸ்ததோநியம்யைதத் ஆத்மந்யேவவஶம்நயேத்॥உசு॥

(உசு.) சஞ்சலஸ்வபாவமான மனது ஆத்மாவில் நிலையாமல் எந்தெந்தவிஷயத்தைத் தேடியோடுமோ, அதை அவ்வவற்றில் செல்லவொட்டாமல் வலுவிலிழுத்து ஆத்மாவில் தானே நிறுத்தி 'இது அதிக சுகமாயிருக்கிறது' என்கிற உத்தேசத்தோடு ஸ்வாதீனம் செய்யக்கடவன்.

ப்ரஶாந்தமநஸம்ஹ்யேநம் யோகிநம்ஸுகமுத்தமம்।
உபைதிஶாந்தரஜஸம் ப்ரஹ்மபூதமகல்மஷம்॥உள॥

(உள.) மனதை ஆத்மாவில் அசையாமல் நிறுத்தி அதனால் ஸகலபாபங்களையுந்தொலைத்து ரஜோகுணத்தையுமொழித்து ஸ்வஸ்வரூபத்தில் நிற்குமிந்த யோகிக்கு ஆத்மானுபவமென்னும் உத்தம சுகம் கிடைக்கும்.

யுஞ்ஜந்நேவம்ஸதாத்மாநம் யோகீவிகதகல்மஷஃ।
ஸுகேநப்ரஹ்மஸம்ஸ்பர்ஶம் அத்யந்தம்ஸுகமஶ்நுதே॥உஅ॥

(உஅ.) இப்படி ஆத்மயோகத்திலிருப்பவன் தொல்வினையாவுமொழித்து அதனால் நிர்மலின்பமான பிரம்மானுபவத்தை எளிதில் அடைகிறான்.

(அ-கை.) யோகம் பக்குவமாம்போது அதனுடைய நான்குவிதமான நிலைமைகளையும் அருளிச்செய்கிறார்.

ஸர்வபூதஸ்தமாத்மாநம் ஸர்வபூதாநிசாத்மநி।
ஈக்ஷதேயோகயுக்தாத்மா ஸர்வத்ரஸமதர்ஶநஃ॥உக॥

(உக) யோகஞ் செய்யுமவன் தன்னை மற்ற பூதங்களிலும் எங்கும் * ஸமமாய்ப்பார்க்கிறான். அதாவது-ஆத்மாக்களெல்லாம் பிரகிருதிக்கவ்வருகாய் ஞானமே வடிவாய் தன்னைப்போலவே யிருப்பதாக நினைக்கிறான். [ஏகரூபமாயிருக்கிற ஆத்மாக்களில் ஒன்றைப் பார்த்தபோதே மற்றவைகளையும் பார்த்தவனாகிறானென்று தாத்பரியம்.]

---

* ஸர்வபூதஸ்தமாத்மாநம் என்றும், நிஜஜ்ஞாநேந்த்ரியேண ஹ்ருதா என்றும் சொல்லுகையாலும், யோயம்யோகஸ்யாக்ருதிஸ்தாகலாதே என்று அநுவதிக்கையாலும் பிரகிருதிக்கவ்வருகாய் ஞானாகாரமாயிருக்கையாகிற ஆத்மாக்களின் ஸாம்யமே இங்கு சொல்லப்படுகிறது.

யொசாம்வை ஃதிஸவ்ருத்ர ஸவ்ரம்வஷயிவை ஃதி|
தஸ்ஃயாஹம்நவ்ரணஸ்ஃயாஸி ஸவஷாநவ்ரணஸ்ஃதி||கூ0||

(கூ0) மூந்திய நிலையைக்காட்டிலும் பக்குவமான நிலையை (அதாவது என்னிடத்தி லாம்மியத்தை) எவன் அடைகிறானே அவன் ஆத்மாக்களையெல்லாம் என்னிடத்திலும், என்னை ஸகல ஆத்மாக்களிலும் பார்க்கிறன். (அதாவது-புண்யபாபங்களற்று ஸ்வஸ்வரூபமாயிருக்கும் ஆத்மாக்களெல்லாம் நிரஞ்ஜநரூபரமம்ஸாம்யமுபேதி என்கிறபடியே பரமபுருஷனை என்னைப்போலிருப்பதாகப் பார்க்கிறன். [ஸ்வஸ்வரூபமாத்திரனை அவன் பரமபுருஷனுக்கு ஸமனையிருக்கையாலே தன்னைப்போன்ற மற்ற ஆத்மாக்களும் அப்படிதானிருக்குமென்று பார்க்கிறனென்று தாத்பரியம்.] அப்படி தன்னை என்னைப்போல் பார்க்குமவனுக்கு அந்த ஸாம்யத்தைவிட்டு நான் காணுமற்போவதில்லை. அவனும் அப்படி (எனக்கு ஸமமாகக்) காணுமற்போவதில்லை.

(அ-கை.) அதற்கும் முந்திர்ந்த நிலை சொல்லுகிறது.

ஸவ்ருஹ்மதஸ்ஃதிதம்யொசாம் ஹஜதை ஃகக்வசாஸ்ஃதிதஃ|
ஸவ்ருயாவதாத்ஃமாநம்நவாத்மந்யயொகீஃயிவாதாத்ஃதி||கூக||

(கூக) தேவர் மனிதர் என்று பிரகிருதியால் வரும் பேதத்தைவிட்டு, சுருங்காதஞானமே வடிவான ஆத்மாவிலொன்றியவனுய் யாவனொருவன் ஸர்வபூதங்களிலுமுள்ள நம்மை யோகநிலையில் திடமாய் ஸேவிக்கிறானே, யோகமில்லாத நிலையிலுங்கூட அவன் தன் ஆத்மாவையும் மற்றப் பிராணிகளையும் பார்த்துக்கொண்டிருந்தும் நம்மிடத்திலேயே யிருக்கிறன். [என்றால் - தன்னிடத்திலும் பிறரிடத்திலும் நமது ஸாம்யத்தையே பார்க்கிறன் என்று தாத்பரியம்.]

(அ-கை.) இதற்கும் முந்திர்ந்த முடிவான நிலை சொல்லுகிறது.

ஸர்வபூதஸ்ஃதமாத்மாநம்ஸர்வம்சாயஸ்ஃதியொஜ்ஞ்ந|
ஸர்வதாவர்ததாபிஸோயோகீமயிவர்ததாஃதி||கூஉ||

(கூஉ.) ஆத்மாக்களெல்லாம் சுருங்காத ஞானமே வடிவமாய் ஸமமாயிருக்கையால் (புத்திரன் பிறத்தல் இறத்தல் முதலியவைகளாலுண்டாகும்) இன்பதுன்பங்களோடு ஒரு ஆத்மாவுக்கும் ஸம்பந்தமில்லையென்று பார்த்து, அதனால் தன்னிடத்திலும் பிறரிடத்திலும் சுகதுக்கங்களைச் சமமாய்ப் பார்ப்பவன் அதாவது பிறருடைய புத்திரஜந்ம மரணாதிகளுக்குச் சமமாகத் தன் புத்திரஜந்ம மரணாதிகளையும் பார்ப்பவன் யோகத்தின் முடிவான நிலைமையிலிருப்பவனுவான்.

(அ-கை.) அர்ச்சுநன் சொல்லுவது.

ஸஜ்ஞ்நயஉவாச || யொயம்யொமஸ்யாவைராக ஸாம்யேந
யஃஸம்ஜ்ஞ்நஃஸ்ஃதிரமநாஃயாத்மாஸ்ஃதிதிம்ஸ்ஃதிராம்

ஸுலபம்ஹிஸநாகூஷ் வ-ஜாயிவைதவத்ருஷி|
தஸ்யாஹம்நிக்ரஹம்மந்யே வாயோரிவஸுதுஷ்கரம்||கூ-கூ||

(கூ-கூக.) ஸ்வாமி! தேவர் மனிதர் என்கிற பேதத்வத தெடுங்காலமாய்ப் பார்த்துவந்தவனை, யிப்பொழுது "ஆத்மாக்கள் ஞானஸ்வரூபராய்" ஒருவாக்கொருவர் ஸமமாயிருக்கிறார்களென்று நினைக்கும்படியாகச்சொன்னால் அதைப்படி நினைக்கக்கூடும். ஆகையால் நீர் சொன்ன இந்த யோகம் நிலைக்குமென்று எனக்குத் தோன்றவில்லை; ஏனெனில்.—சலிப்பதே ஸ்வபாவமான மனதை பழக்கமானவிஷயத்தில் நிறுத்தும் பொழுதே அது ஒனைறை நினைக்கும்போது மற்றொன்றில் பாய்கிறது, அப்படியிருக்க, பழக்கமில்லாத ஆத்மாவில் இம்மனதை ஸ்தாபிக்கிறதென்றால் எதிர்காற்றை விரைவென்று தடுப்பதுபோல் மிகவும் வருத்தமாமென்று நினைக்கிறேன். [ஆகையால் மனதையடக்கும் உபாயஞ் சொல்லவேண்டுமென்று கருத்து.]

(அ-கை.) அதற்கு எம்பெருமான் அருளிச்செய்கிறார்.

ஸ்ரீபகவாநுவாச || கூஸம்ஸயம்மஹாபாஹோ தூர்நிக்3ரஹம்சலம் | கூபா4யேந துகௌந்தேய வைராக்3யேண சக்3ருஹ்யதே||கூ-கூ||

கூஸம்யதாத்மநாயோகோ து3ஷ்ப்ராப இதிமேமதி:|
வஸ்யாத்மநாதுயததாசக்3ருஹ்யோபாயதஃ||கூ-கூ||

(கூ-கூ-கூ.) பெருந்தோள் மன்னா! சஞ்சல ஸ்வபாவமான மனதை அடக்குவதென்பது வருத்தமே! ஆயினும் ஆத்மா குணஸ்வரூபமாயிருக்கிறதென்று பழகுவதால் அதில் அன்பும், இதரவிஷயங்கள் தோஷரூபமாயிருக்கின்றனவென்று அறிகையால் அவைகளில் வெறுப்புமுண்டாய் நாளடைவில் மனதை யெப்படியாவது கட்டிப்பிடிக்கவேண்டும். மனதை ஜயிக்காவிடில் யோகம் ஸித்திப்பது மிகவும் துர்லபம். உபாயத்தாலே மனதை ஸ்வாதீனம் செய்தவனுக்கோ, அதாவது-நாம் முன்சொன்னபடி நமது ஆராதநரூபமான கர்மயோகத்தாலே மனதை ஜயித்தவனுக்கோ (எல்லாவற்றையும் ஸமமாய்ப்பார்க்கையாகிற) யோகம் ஸித்திப்பது மிகசுலபம்.

(அ-கை.) அநந்தரம் நெஹாலிகூ3 நாஸொஉவிதியாதிகளில் கேட்ட யோகமாஹாத்மியத்தையே * உள்ளபடி கேட்கவேண்டுமென்று அர்ச்சுநன்பிரச்நம் பண்ணுகிறான்.

---

* அங்கே கர்மயோகத்தின் மஹிமையன்றோ சொல்லப்பட்டதென்றால், அது யோகத்துக்கு அங்குரமான ஞாநத்தையுட்கொண்டதாயும் யோகத்தைக்கொண்டு முடிவதாயும் சொல்லப்பட்டமையால் அங்கும் யோகமே சொல்லப்பட்டது; என்றால் யோகத்துக்கு அங்கமான கர்மயோக மாஹாத்ம்யஞ் சொன்னபோதே அங்கியான யோகமும் சொன்னதாமென்று அபிப்பிராயம்.

கஜுர்நஉவாச॥ கயதிஸ்ரூயொவைதாயொமாஹ்வயிதோ
நஸ்ஃ। கஷ்யாவ்யொமஸம்ஸ்தித்ம் காம்மதிம்க்ருஷ்ணஹ்ருதி॥கஎ॥

கஹ்ரிந்நாலயவிஹ்ருஷ்ட ஸ்ரீநாஹ்ருதிவநஸ்ருதி।
கஷ்யதிஷ்ணோஸ்ஸாவொஹ விஜ்ஞொஷ்யத்ருஷிஸ்தவ॥ கஅ॥

வததிஷ்ணோம்ஸ்யம்க்ருஷ்ண ஸ்தத்ருஷிர்ஹ்ருஸ்ருஷ்டதீஃ।
கஷ்நஸ்ருஸ்ம்ஸ்யஸ்ருஸ்ருஷ்ட ஸ்தத்நஹ்ருவவஷ்ருதே॥ கக॥

(கஎ-கஅ-கக) அர்ச்சுநன் சொல்லுவது:—மிகவும் ஊற்றத்துடன் யோகஞ்செய்ய விழிந்த ஒருவன், தான் திடமான அப்பியாஸம செய்யமாட்டாமல அதனல் யோக ஸித்தியடையாமல் யோகத்தினின்றும் மழுவிழுகில் அவன் அதனல் என்ன கதியடைகிறான்? ஒருபெரிய மேகத்தினின்றுகண்டுபட்ட ஒரு சிறுமேகமானது மற்றொரு பெருமேகத்தையுமடையாமல் நடுவில் அழிந்துபோவதுபோல், ¶ காமமார்க்கமும் கெட்டு பிரம்மமார்க்கமுங்கெட்டு அழிந்து போகிறனே! இல்லையென்று ஏதாகிலும் இவனுக்குக்கேடுமுண்டா? இந்த ஸம்சயத்தை நன்றாய்ப் போக்கியருளவேண்டும். ஸ்வயம் ப்ரத்யக்ஷமாய் ஏககாலத்தில் எல்லாவற்றையு மெப்போதுங் காணவல்லராகிய தேவரீரைத் தவிர மற்றொருவராலும் இந்த ஸம்சயம் போக்ககூடியதல்ல.

(அ-கை.) அதற்குக் கண்ணன் அருளிசெய்வது.

ஸ்ரீபகவாநுவாச॥பார்த்தநைவேஹநாமுத்ரவிநாஸஸ்தஸ்ய
வித்யதே। நஹ்யகல்யாணக்ருத்கஸ்சித்துர்கதிம் தாதகச்ச்ஹதி॥சஅ॥

(சஅ) ஊற்றததோடு யோகத்திலிழிந்தவன அதினின்று நழுவிழுகில் அவனுக்கு இஹபரங்களிரண்டிலும் அழிவில்லை. அதாவது-பிரகிருதியைச்சேர்ந்த ஸ்வர்க்காதிபோகத்திலும் ப்ரம்மாநுபவத்திலும் (கோரியதைப்பெறுமல் போவதும் அநிஷ்டத்தை யடைவதுமான) நாசமுண்டாகமாட்டாது. மிகவும் மங்களகரமான யோகத்தைச் செய்பவனுக்கு முக்காலத்திலுங் கேடுவரமாட்டாதன்றே?

(அ-கை.) ஆனல் இவன் என்னகதியடைகிறான்? என்றல் அருளிச்செய்கிறார்.

ப்ராப்யபுண்யக்ருதாம்லோகாநுஷித்வாஸாஸ்வதீஸ்ஸமாஃ।
ஸுசீநாம்ஸ்ரீமதாம்கேஹே யொகப்ரஷ்டோபிஜாயதே॥ சக॥

¶ இவன் (கர்மத்தைப் பலாபேக்ஷையுடன் செய்யாமையால் அதனல்வர்க்காதிபலன்களை ஸாதிக்கமாட்டாதாகையால்) அதிலும் ஆதாரமற்று, (தான் ஆரம்பித்தப் பிரம்மமார்க்கமான யோகந் தலைக்கட்டாமையால் இதிலும் ஆதாரமற்றுப்) போகிறான்.

(சக) யோகத்தினின்றும் நழுவியபோது எவ்விதபோகத்தில் ஆசையில் நழுவினரோ இவன் சரீரத்ததில் மஹா புண்ணியசாலிகளடையும்படியான லோகங்களையடைந்து அவ்விதபோகங்களை யோகமஹிமையினாலே அநுபவித்தவனைப்,அந்தபோகத்தில் நசையறுமளவும் வெகுகாலம் அங்கிருந்து நசையற்று, பின்பு பரிசுத்தாகளாயும் ஸ்ரீமான்களாயுமே யோகஞ்செய்யத் தக்கவராயுமுள்ள மஹாத்துக்களின் கிருஹத்தில் அந்த யோக மஹிமையைக்கொண்டே வந்து பிறக்கிறான்.

கூயவாயொகி நாதெவ கூலெலவதியீத்ருஶம்|
வதத்தியூலுஹதரம் லொகெஜந்மநதீத்ருஶம்||சுஉ||

(சுஉ) யோகந் தவிக்கூடுகிறஸமயத்தில் நழுவிட்போனாலில் அவன், தாமும் யோகஞ் செய்து பிறருகளும் உபதேசிக்கத் தக்கவர்களான மஹான்களின் குலத்தில்வந்து பிறக்கிறான். இப்படி யோகஞ்செய்யத் தக்கவர்களுடையவும் யோகிகளுடையவும் குலதத்தில்வந்து பிறப்பதென்பது லோகத்தில் ஸாதாரணமாய் எல்லாருக்கும கிடைப்பதன்று; கேவலம் யோகமஹிமையினால்பெறத்தகுந்தது.

தத்ர தம்புத்தியொகம் லபதெபௌர்வதெஹிகம்|
யததெததொ பூய ஸம்ஸித்தௌ குருநந்தந||சுக||

வபவுராஹ்ருதொஹெந தெநைவ ஹ்ரியதெஹ்யவஶொபிவஃ

(சுக-சுகஎ) இவன் அந்த மறுஜந்மத்திலும், முன்ஜந்மத்தில் பழகிய யோகபுத்தியையே யடைந்து தூங்கியெழுந்தவன்போல் மறுபடியும் அந்த யோக ஸித்தியைக்குறித்தே எப்படியானால் இடையூறு சேரிடாதோ அப்படியத்தநம்செய்கிறான். இவன் முன்செய்த அப்பியாஸமானது இவனை மறுபடியும் அந்த மார்க்கத்திலேயே இழுக்கிறது. இப்படி இந்த யோகத்தினை மகிமை எங்கும் பிரஸித்தமன்றோ?

ஜிஜ்ஞாஸுரபியொகஸ்ய ஶப்தப்ரஹ்மாதிவர்ததெ||சஎ||

(சஎ) யோகஞ்செய்யத் தொடங்காமல் யோகமார்க்கத்தை யறிய விரும்பியவன் அதினின்று மனஞ்சலித்தானாகில் அவனும் அப்படியே மறுபடியும் அந்த யோகவிசாரத்தையே செய்யததொடங்கி கர்மயோகமடியாக யோகத்தை யநுஷ்டித்து அதனால் சப்தப்பிரமத்தை (அதாவது - பிரகிருதியைக்) கடக்கிறான். [அதாவது பிரகிருதியினின்றும்விடுபட்டு தேவன் மனிதன் என்பதுமுதலான சப்தங்களைக்கொண்டு சொல்லப்போகாமல் ஞானாநந்த ஸ்வரூபனான ஆத்மாவை யடைகிறானென்று பொருள]

ப்ரயத்நாத்யதமாநஸ்து யொகீ ஸம்ஶுத்தகில்பிஷஃ|
அநெகஜந்மஸம்ஸித்தஸ்ததொ யாதி பராங்கதிம்||சஅ||

(சஅ) யோகத்தின் மஹிமை யிவ்வண்ணமாயிருக்கையால், அனேகஜந்மங்களாய் புண்ணியததை யோஜனமாகச்செய்து அதனால் பாவங்களைத்

தொலைத்த யோகஞ்செய்ய விழிந்தவன் அந்த யோகத்தினின்றும் கழுவிய போதிலும் மறுபடியும் நற்கதியேயடைகிறான்.

(அ-கை.) உயர்ந்த புருஷார்த்தத்தைக் கோரியவனுகையால் யோகியானவன் யாவரினும் பெரியனென்கிறார்.

தவஸ்விஹ்யாஉயிகோயொகீ ஜ்ஞாநிஹ்யாவிஶிதோயிகஃ।
கர்மிஹ்யஶ்சாயிகோயொகீ தஸ்மாத்3யோகீபவார்ஜுந॥சஅ॥

(சஅ) கேவலந் தவங்களால் எந்த புருஷார்த்தங்களை யடையலாகுமோ ஆத்மஞானந் தவிர மற்ற ஞானங்களாலெவைகளை யடையலாகுமோ கேவலம் அசுவமேதம்முதலிய கர்மங்களால் எவையடையப்படுமோ அவையெல்லாவற்றிலும் சிறந்த புருஷார்ததததை யோகம் ஸாதிக்குமாகையால் இந்த யோகி அவர்கள் யாவரினும்பெரியவன். ஆகையால் அர்ச்சுந! நீ யோகியாகும் வழியைபபார்.

(அ-கை.) இதுவரையில் பரவித்தைக்கு அங்கமான பிரஜாபதிவாக்கியத்தில் சொன்ன ஜீவாத்மதரிசநம் சொல்லப்பட்டது. இனி பரவித்தையைச்சொல்லுகிறார். [பரவித்தை பகவத் உபாஸநம்.]

யொகி நாஶ்விலவெஷாம் ஶ்ரீதி நாஞ்ஞாத நா।
ஸ்ரூயதாவாநுஹஜதி கயொஶாம் ஸயொகக்ஷேமதொஶிதஃ॥சள॥

(சள) அகச்செயல் புறச்செயல்களுக்கு ஆதாரமாயுள்ள மனது நம்மையே நாடியிருக்கையாலே பரமபுருஷனை நம்மைவிட்டால் ஒரு க்ஷணங்கூட ஆத்மாவைத் தரிக்கமாட்டாத ஸ்வபாவத்தைப் நம்மை யடையவேண்டுமென்று தரிதப்பட்டு எவன் நம்மை ஸேவிக்கிறானே அவனை கீழ்ச்சொன்ன யோகிகளிலும் மற்றும் தவசிமுதலானர் யாவரினும் மிகவும் மேலானவன என்று ஸர்வக்ஞனை நாம் நிஶ்சயிக்கிறோம். [மேருவுக்கும் கடுகுக்கும் உண்டான விதந்தியாஸமபோல் இந்த பிரம்ம உபாஸகனுக்கும் மற்ற யோகி தவசி முதலானருக்குமுண்டான வித்தியாஸம்; ஆனல் கடுகுக்குள் ஒன்றுக்கொன்று சிறிதுபெரிதென்கிற விதந்தியாஸம்போல் ஜீவாஸாக்ஷாத்காரம் பண்ணிய யோகிக்கும் மற்ற தவசிமுதலானேருக்கும் வித்தியாஸமென்றறிக.] அதென்ன? (ஜீவஸாக்ஷாத்காரம்பண்ணும்) யோகிக்கும் பிரம்மநிஷ்டனுக்கும் அவ்வளவு தாரதம்யம் எங்ஙன முண்டாவதென்னில்:—விசித்திரமாய் எண்ணிறந்த போக்கிய பதார்த்தங்களும போக்தாக்களின் கூட்டங்களும் போகத்துக்குவேண்டும் கருவிகளும் அதறகேற்ற ஸ்தாநங்களும் நிறைந்த இவ்வெல்லா உலகங்களுக்கும் உத்பத்தி ஸ்திதி லயம் என்கிற மூன்று நிலைமையையும் விளையாட்டாய்ச் செய்பவனுய், ஒரு தோஷத்தாலும் தட்டிப்படாமல் எல்லையும் ஈடுமற்ற ஞானம்பலம் ஐசுவரியம்வீரியம் சக்தி தேஜஸ்ஸுமுதலிய எண்ணிறந்த கல்லியாணகுணங்களுக்கு நிதியாய், நமக்கு ஸம்மதமாய் நமக்குத்தக்கதாய் ஏகரூபமாய் சிந்தைக்கெட்டாததாய் திவ்யமாய் அற்புதமாய் நித்தியமாய் குற்றமற்றதாய் நிரதிசயமாய் பிரகாசம் ஸௌந்தரி

யம் பரிமளம் ஸௌகுமாரியம் லாவண்யம் யௌவநம் முதலிய அநந்த குணங்களுக்குமிடமான திவ்யமங்கள விக்ரகத்தையுடையவனும், வாக்குக்கும் மனதிற்குமெட்டாதஸ்வரூபஸ்வபாவங்களுடையனுயிருக்கச்செய்தே, அபாரமானகருணை, ஸௌசீல்யம், வாத்ஸல்யம், ஔதார்யம் இவைகளுக்குஸமுத்திரமாயும் ஒருவிசேஷமுங் காணுமலே எல்லாப்பிராணிகளுக்கும் புகலிடமாயு மிருக்கையாலும் அடுத்தவரின் துயரத்தை யொழிப்பதற்காக ஆர்ந்த வாத்ஸல்லிய ஸாகரமாய், ஸகலமனுஷ்யருக்கும் நேத்திரவிஷயமாய், தன் ஸ்வபாவத்தைவிடாமலே வசுதேவர் திருமாளிகையில் வந்தவதரித்து ஈடில்லாதகாந்தியால் ஸகல லோகத்தையும் பிரகாசப்படுத்திவளர்த்துக்கொண்டிருக்கிற நம்மையே உபாஸிக்கு மிந்தப் பிரம்மநிஷ்டனுக்கும், கேவலம் பிரகிருதிக்குப் புறம்பாய் ஞானாகாரனுயிருக்கும்ஜீவஸ்வரூபத்தை உபாஸிக்கிறயோகிக்கும் ஒப்புச்சொல்ல சிறிதாகிலும்-இடமுண்டோ? ஆகையால் அவன் எல்லாரிலும் மிருதியும் சிரியவனென்று நம் ஸித்தாந்தம்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

ஆறுவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:.

ஸ்ரீமதேராமாநுஜாயநமः.

ஏழாவது அத்யாயம்.

அவதாரிகை.

இப்படி பரமபலனுய் பரப்பிரம்மமாய் நித்தியனுய் குற்றமற்றவனுய் எல்லாவுலகங்களுக்கும் முக்கியகாரணனுய் யாவுமறிந்தவனுய் எப்பொருட்குமுயிராய் நினைத்ததைத் தப்பாமல் செய்யவல்லனுய் மஹத்தான ஐசுவரியவானுயிருக்கும் ஸ்ரீமந்நாராயணனைக் கிட்டுகைக்கு உபாயம், அவனை உபாஸிப்பதுதானென்றருளிச்செய்வாராய், அதற்கு ஆதமனுநாத்தோடுகூடிக் கர்மத்தைச்செய்து பெறவேண்டிய ஜீவாத்மதரிசநம் அங்கமாயிருக்கையாலே அதையருளிச்செய்தார். இப்பொழுது நடுவிலுள்ள இந்த ஆறு அத்தியாயங்களால் பரப்பிரம்மமான பரமபுருஷஸ்வரூபத்தையும் அவனை உபாஸிப்பதான ‡ பக்தியையும் அருளிச்செய்கிறார். ‡

---

‡ இவ்வர்த்தத்தை “யதப்வப்ரதிஷ்டாநாமைநஸவ்ரதிஷ்டதி| ஸகஸ்ரஸ்ணாதஸ்ரஸ்யாவ்ருஷ்டிம்விந்ததிதாநவः என்றுதொடங்கி விஷ்வுநிஷ்ஷ்ணாவைதொப்பை ஹஸ்துயாயகஸ்துதே | ப்ரஹஸ்தி தப்வஸ்நாதாநஸ்ரஸ்யாவதிநகாஜ்தி | ஸதிஸ்வெஷ்டஸ்ரஸ்தி ஷ்ஜிம்ஹஸ்தி தவாஸ்ரஜ என்று மேலே சுருக்கியருளிச்செய்கிறார்.

‡ எம்பெருமானை உபாஸிக்கும்போது அவ்வுபாஸநமென்னும் ஞானம் பக்தியாய்த் திரிந்தால் மாத்திரக்கான் பரமபுருஷனை யடையலா மென்கிற

அதில் இந்த ஏழாவது அத்யாயத்தில (உபாஸ்யனான) பரமபுருஷ ஸ்வரூபத்தின் உண்மையும் அது பிரகிருதியால் மறைக்கபபட்டிருக்குந்தன் மையும் அம்மறைவு நீங்குகைக்காக எமபெருமானிடத்தில்பண்ணும் பிரபத்தி யும் உபாஸிப்பவர்களின் உட்பிரிவும் அதில் ஞானிகளுக்குண்டான சிறப்பும் சொல்லப்படுகிறது.

* ஸ்ரீ ஹமவா ந॒வாவ॥ உயு॒ஷ்மாஸ்வாத்மா॒ஸ்வாயு॒யொமம்ய॒ஜ்ஞ॒ஸ்ய ஜோஷ்ய॒ஃ| கூஷம்ஸாயம்ஸஶ்ரு॒ம்ஶோம் யயாஜ்ஞாஸ்ய॒ஸ்விதஷ்டஷ்ய॒ண॒॥ க॥

(க) அர்ச்சுந! நீ நமது ஸ்வரூபம் குணம் சேஷ்டை! விபூதி இவைகளைப் பிரியும்படி நேரிட்டால் அந்த க்ஷணமே நம்மிடத்தில் விருப்பத்தால் நீர்ப்பண்டம்போல் உருகிப்போம்படியான மனதைக்கொண்டு நம்மையே நாடிய வனாய்,(அப்படியே நம்பிரிவில் தரிக்கமாட்டாமல்) நம்மையே ஆதாரமாக நம்பியவனாய் யோகஞ்செய்யத துவகஙி, (அந்த யோகததுக்கிலககான நம் மை ஸம்சயமில்லாமல் முழுதும் எப்படியாஞல் அறிவுதியோ (அவ்வித ஞா நத்தை யுனக்கு உபதேசிக்கிறேரும்) அதை ஸாவதாநமாகக் கேட்பாயாக.

விஷயம் வேதாந்தவாகியஸிததம. எஙஙனேயென்னில:—"க. அவனையறிந் தால் தான்மிருத்யுவைக்கடக்கலாம்"என்றும்,"உ. அவனை இப்படிஅறிபவன் இங்கே அழிவிலலாதவனகிறான்"என்றும்,இன்னுமிப்படி வேதாந்தவாகிய ங்களில் சொல்லும் அறிவானது, "ங. பரமாத்வைக் காணவேண்டுமாகில் தி யாநஞ் செய்யவேண்டும்" என்றும், "ச. ஆத்மாவையே பிரத்தியக்ஷமாயக் கண்டு உபாஸிக்கக்கடவன்"என்றும்,"ஞ. ஸத்வம் சுத்தமாஞல இடைவிடாத சிந்தை யுணடாம், சிந்தையுண்டாகில் எல்லா முடிச்சுகளும் அவிழ்ந்து போம்" என்றும்"ட. அநத பரமாத்மாவைக் கண்டவுடனே உள்ளத்திலுண் டான முடிச்சு அவிழ்ந்துபோகிறது; ஸகலஸமசயங்களும் அற்றுப்போகி ன்றன ; இவனுடைய கர்மங்களெல்லாம் அழிந்துபோகின்றன " என்று மி வைமுதலிய வாக்கியங்களோடு ஒருபொருட்படுகையாலே இடைவிடாத சி ந்தைபாயும் பிரத்யக்ஷம்போன்றதாயு மிருக்கவேண்டுமென்றும் அது தியா நம் உபாஸநம் முதலிய சப்தங்களால் கூறப்படுமென்றும் தெரியவருகிறது.

மறுபடியும் "எ. இந்த பரமாத்மா மநஸத்திஞலாவது தியாநத்திஞலா வது பலகாலுங்கேட்பதிஞலாவது அடையக்கூடியவனல்ல; இந்தபரமாத்மா எவனையாஞல் வரிக்கிறானே அவனுல்மாத்திரம் தானடையப்பட்டு தன் ஸ்வ ரூபத்தை அவனுக்குப் பிரகாசிப்பிக்கிறான்" என்று சிறப்பித்துச் சொல் லுகையாலே 'உபாஸநம்' என்னுஞ்சொல்லுக்குப் பொருள், பரமபுருஷன்

க. தவேவம்விதுஷோ தீ॒ர்க॒தீ॒ர்॒ஜதி॥ உ. தவேவம்விதோ ந தீ॒ர்க॒ஸ॒ஸ்ரவதி॥ ங. ஸ்தாவாரெஉ॒ஷு॒வெ॒ரா..:....நிஷியா॒ஸி தவ॒॥ ச. ஸ்தா நவேவமொகஶ்॒வாஸீத॥ஞ. ஸகுஶ॒ஷ்ணுயு॒॒ வாஸ்ய॒தீ॒ஃ |ஸ்ய॒தீ॒ஸ்தஶ்ஸ்ஸவ॒ஸ்ரு॒ஸ்டீ நாம்விவ॒ரொகஷ்ஃ॥ ட. ஸிஷ்ரு॒ வெதஹ்ரு॒ஷயஸ்ரு॒ஸ்டீஃ ஸிஷ்ரு॒ஸ்தைவஸவ॒ஸ்ரு॒ஸம்ஸயாஃ| ஸ்ரீயஸ்தைவாஸ்ய॒ஸ்ரு॒ஸ உஶ்॒ணி தஷ்ணுஸ்ரு॒ஷ்ரு॒வெஷ்டவாரவரொ॥ எ. நாயஶா தாவ॒ரவவெந ஸ்ரவேஸ்ரு॒ நயேயாநமெஸ்ர॒ நாஸ்ரு॒ஸ்தெந| யஸ்தவெவஷ்ரு॒ணு॒

ஜ்ஞாநமேஷாம்மவிஜ்ஞாந மீஷ்டம்வக்ஷ்யாம்யஶேஷதஃ|
யஜ்ஜ்ஞாத்வேஹாநுஷ்டேயமவஶிஷ்யதேநாந்யஜ்ஜ்ஞாதவ்யமவஶிஷ்யதே॥உ॥

(உ) அர்ச்சுன! ஞாநத்தை விஜ்ஞாநஸஹிதமா யுபதேசிக்கிறேம் [ஞாநமாவது பகவத் ஸ்வரூபஞாநம், விஜ்ஞாநமாவது அதைப்பிரித்தறியும் ஞாநம்; அதாவது:—ஸர்வேசுவரனுடையகாம் ஈடான வெல்லாப்பொருளுக்கும் ஏதிராய் அளவிலாவதிசயமும் எண்ணற்கரிய கல்யாணகுணங்களும் அநந்தமான விபூதியும் உடைத்தாயிருக்கையால சேதநாசேதநங்களெல்லாவற்றிலும் வேறுபட்டிருக்கிறேமென்பதை யறியும்படியான ஞாநம்; இவைகளை யுபதேசிக்கிறேமென்றபடி.] அதிகவார்த்தையென்ன? இதைக்கேட்டாயாகில் பிறகு நம்விஷயமாய்க் கேட்கும்படியான அம்சம் சிறிதுங் கிடைக்கமாட்டாது.

(அ-கை.) இப்பொழுது நாம் உபதேசிக்கப்போகிற ஞாநம் எளிதில் கிடைப்பதல்லவென்கிறார்.

உநஷ்யாணாம்ஸஹஸ்ரேஷு கஶ்சித்யததிஸித்தயே|
யததாமபிஸித்தாநாம் கஶ்சிந்மாம்வேத்திதத்த்வதஃ॥கூ॥

(கூ) சாஸ்த்ராப்பியாஸத்துக்கு யோக்கியமான மநுஷ்ய ஜாதிக்குள் எவனே ஒருவந்தான் நம்மைத்தெரிந்த நமமிடத்தில் ஸித்தியையபேக்ஷித்து யத்நம்செய்பவன். அதிலும் எவனே ஒருவந்தான் நம்மை உள்ளபடியே அறிபவன். [ஸஹஸ்ரத்வ-ஏ-ஆவ்ருத்தி] இவனை வரிப்பதற்குக் காரணமாய் இவன் செய்யும் இடைவிடாத சிந்தையானது, சிந்திக்கப்படும் பகவானைப்போல் இனியதாயிருக்கையென்று நிச்சயிக்கப்படுகிறது. இனி பக்தியாவதென்ன இதுதானே? "அ. ஸ்நேகத்தோடு இடைவிடாமல் சிந்திப்பதுதான் பக்தியென்னப்படும்" என்றன்றோ சொல்லப்படுகிறது?

இப்படி ஸமந்வயம்பண்ணல் மாத்திரந்தான் "க. அவனை இப்படியறிபவன் இங்கே அழிவற்றவனாகிறான்! கதிக்கு அதைவிட வேறுவழியில்லை" என்றும் "கo. நான் வேதங்களாலாவது தவத்தாலாவது தாநத்தாலாவது யாகத்தாலாவது அர்ச்சுந! நீ இப்பொழுது பார்த்ததுபோல் பார்க்கக்கூடியவனல்ல; ககo. மற்றப்படி யென்னையே விஷயீகரித்த பக்தியொன்றினால் மாத்திரந்தான் என்னை உள்ளபடி யறியவாவது பார்க்கவாவது அடையவாவதுகூடும்; நான் இப்படிப்பட்டவன்" என்னும்வாக்கியங்களுக்கு ஏகார்த்தத்வம்ஸித்திக்கும்.

தேதேநலஹ்ருஷ்டவேஷகூதா விவரணாதேதநம் வ்யாக்ருதம்॥
அ. ஸ்வஹவஸ்வரூபநாயாநம்ஹ்ருதிஸ்திதம்ஹியேயதே॥கூ. தேஷாம்
விஷாநஜ்ஞதஜ்ஞாவதி | நாநாரூபாநாயவிஷ்டம்॥ கo.
நாஹம்வேதைர்நதபஸாநதாநேநசேஜ்யயா| ஶக்யவாவம்
விதோஜ்ஞஷ்டுஞ்ஜ்ஞஷ்டவாநஸிமாம்யதா॥ ககo. ஭க்த்யாத்வநந்யயா
ஶக்யஃ அஹமேவம்விதோர்ஜுந | ஜ்ஞாதுஞ்ஜ்ஞஷ்டுஞ்சதத்வேந
ப்ரவேஷ்டுஞ்சபரந்தப॥

னென்றும் மேலே சொல்லப்போகிறபடியால் உள்ளபடியே அறிபவன் ஒருவனுமில்லையென்று தாத்பரியம்.]

ஸுஶீராவொஉநொவாயஂடூ வம்ஶெநாவைஂஜிரவஷு।
கூஹஜூராஜதீயம்ஶெ ஹிநாவ்யகூயதிராஷுயா॥சு॥

(சு) இந்தப் * பிரகிருதியானது கெந்தம்முதலான குணங்கள்பொருந்திய பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்று பஞ்சபூதங்களென்றும் மனம் முதலிய இந்திரியங்களென்றும் மஹத்தென்றும் அஹங்காரமென்றும் இப்படி யெட்டுவகையாய்ப் பிரிக்கப்பட்டு நமக்கு ஆதீனமா யிருக்கிறதென்றறி.

கூவொயதி தவ்நயாம வ்யக்தி ம்விஜ்ஞெவாயு।
ஜீவஹம்தாம்ஶஹாவொஹா யயெஉம்யாயு ஸுதெஜஸுமசு॥ரு॥

(ரு) அர்ச்சுந! நமக்கு இரண்டுப் பிருகிருதிகளுண்டு; அதில் கீழ்ச் சொன்ன பிரகிருதி மிகவும் இழிவானது. இதைக்காட்டிலும் வேறான ஜீவனென்னும் மற்றொருப் பிரகிருதியானது (இதைப்புரிப்பதாகையால்) இதைக் காட்டிலும் சிறந்ததாய் ஞானவடிவமாயிருக்கின்றது. இது தான் அசேதனமான இவ்வுலகங்களெல்லாவற்றையும் தரிக்கின்றது.

வஹதெஉயாநீநிஹம்தாநி ஸவ்பூாணீத்யுவயாராய।
கூஹம்க்ருத்ஸ்நஸ்யஜகத்ப்ரபவ்ப்ரலயஸ்ததா॥சூ॥

(சூ) சேதநமாயும் அசேதநமாயும் நமக்கு சேஷப்பட்டதாயுமிருக்குமிவ்விருவகைப் பிரகிருதியினின்றுந் தான், பிரமன்தொடங்கித் தாவரமிறுய்ஏற்றமுந்தாழ்வுமாய் சித்தும் அசித்துமாயுள்ள இந்தப்பூதங்கள்யாவும் உண்டாகின்றன. நமது பிரகிருதியால் உண்டானது பற்றி இவையாவும் நம்முடையவைகளே; ஆகவிப்படிஸகலலோகங்களுக்கும் பிரகிருதிகள் காரணமாயிருப்பதுபோல் அப்பிரகிருதிகளுக்கு நாமகாரணமாய் சேஷியாயிருக்கையால எலலாவுலகங்களுக்கும் நாமே $ காரணமென்றும் நாமே ஈசகமென்றும் நாமே சேஷியென்றுமறி.

---

* பிரகிருதியென்றுல் புரிக்கும் பண்டங்களாகவும் புரிப்புக்குவேண்டுங்கருவிகளாகவும் புரிக்கத்தக்கவிடங்களாகவும் விசித்திரமாய் எண்ணிறந்தவைகளாயுள்ள இவ்வுலகத்தின் முதற்காரணம்.

$ சேதநா சேதநங்களின் தொகையான பிரகிருதி புருஷாளுக்கு, பரம்புருஷன் காரணமென்றுமிடம் ஶ்ரு-தி ஸ்மிருதிஸித்தம். எங்ஙனேயென்னில்:-ஶ்ரு-॥ஶஹாநவ்யகூயதெகஸுவ்யகூஉகூஷொயதெ॥ கூகூஷாம் கஶவிஶியதெகதஜ்ஞவொவஹகீஹவதி॥ விஷொஸ்ஸாமவாதவ ரதொகிதெஉ ஈமவெவ்யாநம் வா-ரா-ஷஜ்ஞவிவ்ய॥ ஸ்ய॥ வ்யக்தாரயாயாவ்யாதா வ்யகூாவ்யகஸ்ஸாமவிணீ। வா-ரா-ஷஜ்ஞாவ்யா-ஹாவெதளயியெதெ வாரோதநி। வாரோதாவஸவெஷாரோயாரஜ்வாரஶஜ்ஞாஃ। விஷ்ணா-நாரோவஸவெஉஷ-வெஹாஎதெஷ-வ்யதிரிதெ இவ்வுரைகளினை.

உத்பாதயாம்யஹம் நித்யமுத்திஷ்ட நரோத்தம!

(கூ0) நாம் ஸர்வகாரணமானப் பிரகிருதிகளிரண்டுக்கும் காரணமாயிருக்கையாலும், ஸகலஅசேதநத்துக்கும் சேஷியான சேதநனுக்கும் சேஷியாயிருக்கையாலும், எப்படி பராத்பரமாயிருக்கிறோமோ அப்படியே ஞாநம் சக்தி பலம்முதலியவைகளாலும் நாமே பராத்பரம். ஞாநத்தாலாவது பலத்தாலாவது மற்றெவ்விதத்தாலும் நமக்கு மேற்பட்டதத்வம் ஒன்றுங் கிடைக்கமாட்டாது.

ரஸோஹமப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மி சந்த்ரஸூர்யயோ:।
ப்ரணவ: ஸர்வவேதேஷு ஸப்தே பௌருஷம் ந௃ஷு॥ அ॥
புண்யோ கந்த: ப்ருதிவ்யாம் ச தேஜஸ்சாஸ்மி விபாவஸௌ।
ஜீவநம் ஸர்வபூதேஷு தபஸ்சாஸ்மி தபஸ்விஷு॥ கூ॥
பீஜம் மாம் ஸர்வபூதாநாம் வித்தி பார்த ஸநாதநம்।
புத்திர்புத்திமதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம்॥ க0॥
பலம்பலவதாம்சாஹம் காமராகவிவர்ஜிதம்।
தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப॥ கக॥

(அ-கூ-க0-கக) ஓ! பரதகுலத்தரசே! ஜலத்தில் ரஸமாயும் சூரியசந்திராளில் காந்தியாயும் வேதங்களில் பிரணவமாயும் ஆகாயத்தில் சத்தமாயும் பிராணிகளில் ஆண்மையாயும் புவியில் நல்லமணமாயும் தீயில் சுடராயும்

---

(1) ஜகத்தும் பிரம்மமும்முறையேசரீரமும்ஆத்மாவுமாயிருக்குமென்கிற விஷயம் யஸ்ய ப்ருதிவீ சரீரம்...யஸ்ய சூக்ஷ்மா சரீரம் வஸுஸ்வஹம் தாதேராதாரதாஉவஹதவாஜ்ஞாவிவ்யாதெவ வாகோநாராயண: என்கிற அந்தரியாமிப் பிராம்மணாதிகளில் பிரஸித்தம்.

(2) பிரகாரமாயிருக்கையாவது - குடம்முதலியவற்றைவிட்டுக் குடத்தன்மைமுதலியவை பிரிக்கப்படாததுபோல் பரமாத்மாவைவிட்டு பிரகிருதியும் ஜீவனும் பிரிக்கப்படாமலிருக்கை.

யும் ஸகலஜந்துக்களிலும் ஜீவனமாயும் சலசரங்களில் தலமாயும் ஸர்வஜந்துக்களுக்கும் அழியாத வேர்முதலாயும் புத்திமான்களுக்குள புத்திமானுயும் பராக்கிரமமுள்ளவைகளுள பராக்கிரமமாயும் பலமுள்ளவைகளுள் ஆசாபாசங்களற்ற பலமாயும் பிராணிகளுள் தருமத்துக்கு விரோதமில்லாத ஆசையாயுமிருக்கிறேனும் [எனறுல்:—இப்படி பலவாறுயுள்ள பதார்த்தங்களாவும் நம்மிடத்தினின்றுமுண்டாய்நமக்குச்சேஷப்பட்டுநமக்குச்சரீரமாய் நம்மிடத்திலேயே யிருக்கின்றன. ஆகையால் அவ்வவ்விதமாக நாமே யிருக்கிறேமென்று பொருள்.]

(அ-கை.) பிரித்துப் பிரித்தென்னசொல்வது ?

யெவெவஸாகூகிகாஹாவா ராஜஸாஸ்தாஶஸாஶ்ரயெ|
உதவனவெதி தாந்நிஷ்டி நகுஹம்தெஷுதெதயிகஉ||

(கஉ) ஸாமான்னியமாய் லோகத்தில்சரீரங்களாகவும் இந்திரியங்களாகவும் மற்றும்போக்கியவஸ்துக்களாகவும் போகத்துக்குரிய கருவிகளாகவுமிருக்கின்ற வெல்லாப்பொருள்களும் என்னிடத்திலிருந்துண்டாய் எனக்குச்சரீரங்களாய் என்னிடத்தில் நிலைபெற்றிருக்கின்றன. நம்நிலையோ அவைகளாலுண்டாகவருவதல்ல [என்றுல்சரீரஸ்திதி ஆத்மாதீநமாறுலும் ஆத்மஸ்திதிக்குச்சரீரத்தாலும் சிறிது உபகாரமுண்டு உலகத்தில்; நமக்கோ இந்தபதார்த்தங்களெல்லாம் சரீரமாயிருந்தாலும் இவைகளால் சிறிதும்உபகாரமில்லை கேவலம் லீலைதான் இதற்குப பிரயோஜநமென்று திருவுள்ளம்.]

தீ³ஹிம்ருணாயெலுகாவெ ரொஹிஷ்யவுதீ³ஷ்ணஜமஸு|
ஸொஹிதம்நாஹிஜாநாதி ஶாஶ்வோஸவ யுயுழ்||கஊ||

(கஊ) [இப்படிசேதநா சேதநமாய் நமக்கு ஆதீனப்பட்டுள்ள இவ்வுலகங்களெல்லாம் அந்தந்தகாலத்தில் நம்மிடத்திலிருந்துண்டாய் நம்மிடத்தில் லயமடைந்து நம்மிடத்தில்தானே நிலைக்கப்பெற்று நமக்குச்சரீரமாய் நம் ஸ்வரூபமாயிருக்கையால், காரணமான நிலையிலும் காரியமன நிலையிலும் ஸர்வத்தையும்நாமே சரீரமாகத்தரித்து ஸர்வப்பிரகாரமாகவுமிராநின்றேம். இப்படி காரணமாயும் சோதியாயுமிருக்கிற நாம் ஞாநம்முதலிய அளவிறந்த கல்யாண குணங்களாலும் சிறப்புற்று மேன்மையாய் விளங்குகிறேம். அந்தப்குணத்தாலாவது நம்மைக்காட்டிலும் சிறந்தவஸ்து உலகத்தில் ஒன்றுங் கிடைக்கமாட்டாது.]இப்படிப்பட்ட நாம் ஸத்வராஜஸ்தமோ குணங்களின்விகாரமாயுள்ள ஸகலபதார்த்தங்களிலும் சிறந்து நமக்கே உரியவைகளான கல்யாண குணங்களாலும் அவ்வவைகளின் இனிமையாலும் எப்பொழுதும் ஏகரூபமாய் மிகவும் சிறந்திருக்கிறேமென்பதை இவ்வுலகமானது அறிகிறதில்லை. ஏனெனில்:—குணவிகாரங்களாய் ஈனங்களாய் கூநணந்தோறும் அழிவனவாய் பூர்வ கர்மாநுஸாரமாகச் சரீரங்களாயும் இந்திரியங்களாயும் புகுக்கும்பண்டங்களாயுந் திரிந்துள்ள பதார்த்தங்களால் மயக்கப்பட்டமையால் அறிகிறதில்லை.

(அ-கை.) ஸ்வாமி! உலகத்தில் வின்பந்தரு மெப்பொருளுக்கும பெலாய், அந்தமில்பேரின்ப வடிவமாய், எந்தகாலும் ஒரே ரூபமாயெழுந்தருளியிருக்கிற தேவரீரைவிட்டு, பிராணிகள் மிகவும் இழிவுற்றகுணங்களின் விகாரமாய் அசாசுவதமாயுள்ள பண்டங்களை யநுபவிக்க விரும்புகிறார்களே இதற்கென்னகாரணம்! என்றருள் அருளிச்செய்கிறார்.

ஸெஷவீஹெ ஹுஷாஹுணஶ்ரீ ஶஶிராயாஷுராதயா।

(கஉ) ஸதவம், ரஜஸ்ஸு, தமஸ்ஸுஎன்கிறமுக்குணக்களின் விகாரமான இந்த என் *பிரகிருதியென்னும் மாயையானது என்னுடைய லீலைக்காக என்றுலேயே ஏர்ப்படித்தப்பட்டதாகையால் இதைக்கடப்பதறகு ஒருவராலுமாகாது.

(அ-கை.) ஆனால் அதைக்கடக்கும் வழிதானெது! என்றருள் அருளிச்செய்கிறார்.

ஶாஶெவயெவ்ஹுவஹுஷெ ஶாயாஶெதாம்தராஜ்ஜிதே॥கச॥

(கச) ஸத்யஸங்கல்பனுய் பெருங்கருணை வள்ளலாய் எல்லாவுலகத்தையும் சிறிதும் கைம்முதலுக்கோராமல் காப்பவனுகிய நம்மையே எவர்கள் சரணுகப்பற்றுவார்களோ, அவர்களதான குணவிகாரமானஇம்மாயையைக்கடந்து நம்மை உபாஸிப்பார்கள்.

(அ-கை.) ஆகில் அப்படிப்பட்ட சரணுகதியை எல்லாரும் என் அநுஷ்டிக்கிறதில்லை! என்றுல் அருளிச்செய்கிறார.

நஶாம்ஹுக்ஷ்யதிநாஶமஶாஃ வ்யவஹ்ருஷ்ணே நராயஶாஃ।
ஶாயயாவஹ்ருதஜ்ஞாநா க்ரூவ்ஹாவஶாஸ்ரீ தாஃ॥கஞ॥

---

* ஆசுராஸ்திரம் ராக்ஷஸாஸ்திரம் முதலியவைபோல் விசித்திரமான செயல்களைச்செய்கையாலே இந்தப்பிரகிருதியைமாயையென்கிறது. எப்படியெனில் தவிதாஹவதாதவ்ருக்ஷாயுஞ்வக்ருஹ்ணதி। க்ருஹமாஶவஶாஜ்வம் ஜ்ஞாயாஶாஸ்வஹுநி। தநஶாயாவஹ்ருஸ்ம்தவ ஶ்ரவ்ருக்ஷ்ஹாரி நா। வாயவ்ருக்ஷதாஹ்ஹம் வஜ்ரகக்ஷஹ்ரு நவ்ஸஹி தி॥ இத்யாதியிலும் சொல்லப்பட்டபடியால் மாயை என்பது பொய்யான விஷயத்தை சொல்வதல்ல. இந்திரஜாலவித்தை முதலிய விடங்களில்கூட பொய்யான விஷயத்தை யுட்கொண்ட மெய்யறிவை யுண்டுபண்ணும்படியான சில மந்திரம் ஔஷதம் முதலியவை யுண்டாகையாலே அங்கும் மாயாவியென்று வழங்குகிறார்கள். எங்கும் ஒரு சொல்லுக்கு ஒரேவிதமாய் பொருளுரைப்பது யுக்தமாகையாலே இந்திரஜால வித்தையிலும் மாயையென்கிறது மந்திரம் ஔஷதம் முதலியவைகளைத்தான். அங்கே பொய்யான விஷயத்தை மாயையென்ப தெதிலுலென்றுல் மஞ்சத்திலிருப்பவர் பேசக்கண்டு மஞ்சம்பேசுகிறதென்று வழங்குவதுபோல் மாயையென்று சொல்லப்பட்ட மந்திரம் ஔஷதம் முதலியவைகளின் காரியத்தைக்கண்டு மாயையென்று வழங்குகிறது.

(கஏ) அர்ச்சுந! பிராணிகளில் புண்ணியம் செய்தார் சிலர், பாவஞ் செய்தார சிலர. அபபடி பாவஞ்செய்தவர்களில் சிலர் 2.மூடர், சிலர் 3. நரர செய்தார சிலர. அபபடி பாவஞ்செய்தவர்களில் சிலர் 2.மூடர், சிலர் 3. நரர் கமர்; சிலர்4. மாயையால் அறிவிழந்தவர்; சிலர 5. அசுரதனமையடைந்த வர்; இந்நால்வரும் நம்மைச் சரணடையார்கள். இவர்கள் முதலிலிருந்துஒரு வனைப்பார்க்க ஒருவர் மஹாபாபிகள்.

ய தவிமாயாஹரிதோ நாஸ்ருதிநாஜ்ஞ:
ஸ்ருதொராஜிஜ்ஞாஸயாயீஜ் ஜ்ஞாநீவஹாதஷஜ்ஞ:॥கசு॥

(கசு) புண்ணியஞ் செய்தவர்களோ! நம்மையே சரணடைந்து நம் மையே ஸேவிக்கிறார்கள. இவர்களும் அப்படியே 6. ஆர்த்தனென்றும் 7.ஜி ஜ்ஞாஸுவென்றும் 8. அர்த்தார்த்தி யென்றும் 9. ஞாநி யென்றும் நாலுவ கைப்பட்டு தங்கள் தங்கள் புண்ணியச் சிறப்புக்குத் தக்கபடி முதலிலிருந்து ஒருவனைப்பார்க்க ஒருவர் அதிக சுகிருதஞ்செய்தவர்கள்.

தேஷாம்ஜ்ஞாநீநித்யயுக்த ஏகபக்திர்விஷிஷ்யதே।
ப்ரியோஹிஜ்ஞாநிநோத்யர்த மஹம் ஸபரஸ்யவீர்யஃ॥கஎ॥

(கஎ) இவர்களில் ஞாநிதான் மிகுதியுஞ்சிறந்தவன். ஏனெனில்:—அவ ன் நம்மையடையவேண்டுமென்று நமமையே எப்போதும் நாடியவனாய் ம ற்றொன்றிலும் பற்றின்றி விசேஷமாய் நம்மிடத்தில் மாத்திரம் பக்தியுடை யவனாயிருக்கிறான். (மற்றவர்களோ தமது இஷ்டம் ஸித்திக்குமளவும் மாத் திரம் நம்மை நாடியிருந்து நம்மையும் தாம்கோரிய பலத்தையும் விரும்பியிரு

அதுபோல் இங்கும் குணமயமானப் பிரகிருதியென்னும் மாயையா னது பரமார்த்தமேயல்லது பொய்யல்ல; இது பரமபுருஷனுடைய ஆதீனம் என்று ஸாயாதைவ்யாதிம்விந்ருராயிநதை:ஹெஹ்வாழ்இத்யாதிக ளில் சொல்லப்படுகிறது. இதற்குக் காரியம் பகவத்ஸ்வரூபத்தை மறைத்துத் தன் ஸ்வரூபத்தை யினியதாகத் தோற்றுவிக்கை. ஆகையால் எம்பெருமானு டைய பரமார்த்தமான மாயையால் மோஹிக்கப்பட்டுள்ள இஜ்ஜகமெல்லா ம் ஈறிலின்பவெள்ளமான பகவத்ஸ்வரூபத்தை யறியமாட்டாது.

2. எல்லாப்பொருளும் எம்பெருமானுக்கு ஆட்பட்டிருக்கஅதைத்தனக் காட்பட்டதாக நினைப்பவர்கள் 3. ஸாமான்யமாய் பகவத்ஸ்வரூபம் அறியப் பட்டாலும் அவ்வழியில் திரும்பமாட்டாதவர்கள் 4. ஈசுவரனும் அவனுக்கு ஐசுவரியமு முண்டாயிருப்பதாகத் தெளிவுபிறந்தாலும் அதை வஞ்சகமான யுக்திகளைக்கொண்டு போக்கிக்கொண்டவர்கள் 5. ஈசுவரனும் அவன் விபூதி களும் (யுக்திகளைக்கொண்டும் இல்லை செய்யப்போகாமல்) திடமாய் ஏற்ப்பட் டாலும் அவற்றைக் கேட்டபோதே பகைப்பவர்கள் 6. இழந்துபோன செல் வத்தை மீண்டும் அடையவிரும்பியவன்; 7. செல்வமில்லாமையால் புதிதாய் அடையக்கோரியவன்; 8 பிரகிருதிக்குப்புறம்பான ஆத்மாவை யடையக்கோ ரியவன்; 9. ஐதவ்யநாம்வ்யாக்யாதிம்விஷ்ணுஹெவாழ்இ என்று சொன்னபடி யே ஆத்மஸ்வரூபம் எம்பெருமானுக்கே சேஷப்பட்டிருக்குந்தன்மையை”

க்கிறார்கள். ஆகையால் இவர்களைப்பார்க்க அவனேசிறந்தவன். எனனில்:— அவன் நம்மை யடையவேண்டியவறுகையால் எப்பொழுதுமநம்மோடு அவனுக்குச்சேர்க்கையுண்டு; இவர்களுக்கோபயன்கைப்படுமளவுத்தான். அப்படியே அவன் நம்மைத்தவிர மற்றொன்றை விரும்பான். இவர்களோ நம்மையும் விரும்பி தமக்கென்று ஒருபயனையும் விரும்புவார்கள். ஆகையால்இவர்களைப்பார்க்க அவனே சிறந்தவன். மேலும் நாம் ஞானிக்கு மிகவும் இனியனாகிறோம். அதாவது-இனிமைக்கு இவ்வளவென்கிற இறுதியில்லாமையால்அவனுக்கு காமினியருமிடம் இவ்வளவுதானென்று ஸர்வக்ஞனானம்மாலும்சொல்லப்போகாதபடி (ஞானிகளிற்றலைவரான *. பிரஹ்லாதாழ்வானுக்குப்போலே) இனியனாகிறோம். அப்படியே அந்த ஞானியும் நமக்கு இனியனாகிறான்.

உதாராஸ்ஸர்வ ஏவைதே ஜ்ஞானீத்வாத்மைவமே மதம்।
ஸ்தி தஸ்ஸ ஹியுக்தாத்மா மாமேவானுத்தமாம் கதிம்॥கஅ॥

(கஅ) இவர்களெல்லாரும் மஹா உதாரர்கள். [அதாவது-நம்மிடத்திலிருந்து யாவர்களானும் சிறிதாயினுங்கொள்ளுகிறார்களோ அவர்களைநாம் நமக்குஎல்லாச்செல்வத்தையும் வழங்கிய பெருங்கொடையாளிகளாக நினைக்கிறோம்.] ஞானியோ! நம்ஸ்வரூபத்தைத் தரிக்கின்ற ஆதமாவென்றே நம்முடைய ஸித்தாந்தம். அதெதிறுலென்றால்— அவன் நம்மைவிட்டுப்பிரிந்தால் தரிக்கமாட்டாததுபோல் நாமும் அவனைப் பிரிந்தால் தரிக்கமாட்டோம்; ஆதலையால் அவன் நமக்கு ஆத்மாவே.

பஹூனாம்ஜந்மனாமந்தே ஜ்ஞானவான்மாம்ப்ரபத்யதே।
வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸமஹாத்மாஸுதுர்லபஃ॥கக॥

(கக) “ இப்படி எம்பெருமானுக்கு ஆட்பட்டிருக்கையே ஆத்மாவுக்குஸ்வரூபம்” என்கிற ஞானவாறுய் நம்மைச்சரணப்புகுவதென்கிற விஷயம் ஸாமான்னியமாய் சில ஜந்மங்களிற்செய்த புண்ணியவசதத்தால் வருவதல்ல;கேவலம் புண்ணிய ஜந்மங்களைத்தினையோ எடுத்த பிறகுதான் “நான் †வாஸுதேவனுக்கே ஆட்பட்டவன்,எனது ஸ்வரூபம் ஸ்திதிபிரவிருத்தியை

என்கிற அறிவுடையறுய் அவ்வாத்மவஸ்துவோடு நில்லாமல் எம்பெருமானைப்பெற வாசைப்பட்டு அவனையே பெரும்பேறுக நினைத்திருப்பவன்.

* ஸக்ருதாஸுக்ருதிர்க்ருஷ்ணே ஹ்லாதோநாரதிஹாரமெ:।
நவிவேஹாதிநாமாத்ருஜ்ஞாத்வாஹ்லாஹவம்ஸ்மிதஃ என்று பிரஹ்லாதாழ்வான் கண்ணனிடத்தில் பற்றிய மனதாயிருக்கையாலே மஹாஸர்ப்பங்களால் கடிக்கப்பட்டிருக்கச்செய்தேதும் அவ்வெம்பெருமானை நினைப்பதால் மிகவும் ஸந்துஷ்ட ஹிருதயராய் தம்சரீரம் இன்னபடி யிருக்கின்றதென்று அறிந்தாரில்லை.

† வ்ரியொஹிஜ்ஞானிநாத்யர்த்தம் என்றும் க்ஷுல்லகாஸ்தாவதேவாந்யான் என்றும் தொடங்கின படியால் வாஸுதேவவஸ்து என்றதற்கு இதுவேபொருள். ஞானவானென்பதும்இங

வ்லாம் அவனுடைய ஆதீனம்”என்கிற நினைவுபிறந்து “நான் அடையவேண்டி
ம்பயனும் அப்பயனை யடைவிக்குமுபாயமும் மற்றும் நான் கோரியவெல்லா
ம் அந்த வாஸுதேவனே”என்று நம்மை உபாஸிப்பன். அப்படிப்பட்ட பெ
ருந் தன்மையோடுகூடிய புருஷன் கிடைப்பது லோகத்தில் மிகவும் அரிது.

(அ-கை.) அந்த ஞானியின் அருமையைப்பற்றியே உபபாதிக்கிறார்.

காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஜ்ஞானாஃ ப்ரபத்யந்தேঽந்ய
தாஃ |தம்தம்நியமமாஸ்தாய ப்ரக்ருத்யாநியதாஸ்வயா॥உ०॥

(உ0) உலகத்திலுள்ள புருஷர்கள் யாவருமே தங்களுக்கு ஸ்வபாவ
மான பாபவாஸனைக்குத்தக்கபடி எப்போதும் சப்தாதிவிஷயங்களில் ஆசை
கொண்டு, அப்படி தாம் ஆசைப்பட்டவைகளைப் பெறவேண்டி கேவலம்
(நம்மையொழிந்த) இந்திராதி தேவர்களையடைந்து, அத்தேவர்களுக்குப் பிரீதி
கரமான சிலநியமங்களை யநுட்டித்து அவர்களை யர்ச்சிக்கிறார்கள்.

யோயோயாம்யாம்தநூம்ப்ருக்தே ஸ்ரத்தயார்சிதுமிச்சதி|
தஸ்யதஸ்யாசலாம்ஸ்ரத்தாம் தாமேவவிததாம்யஹம்॥உக॥

(உக) அப்படி அவர்கள் அர்ச்சிக்குந் தேவர்களெல்லாம் நமக்குச்
சரீரமென்று (*-சாஸ்திரஞ்சொல்லுகிற விஷயம் தெரியாமல்) எந்த எந்த
பக்தன் (நம்சரீரமான) எந்த எந்த தேவதையைச் சிரத்தையோடு அர்ச்சிக்க
விரும்புகிறானே (அவன் நம்மையறியாமற்போனாலும் உள்ளபடியே நம்சரீ
ரத்தைத்தானே யர்ச்சிக்கிறானென்று நாம்நினைப்பிட்டு) அவனவனுக்கு அவ்
வவ்விதமான சிரத்தையைத் திடப்படுத்துகிறோம்.

ஸ தயாஶ்ரத்தயா யுக்தஸ்தஸ்யாராதநமீஹதே|
லபதேசதஃ காமாந்மயைவவிஹிதாந்ஹிதாந்॥உஉ॥

கே சொன்னவனைத்தான்; முன்சொன்ன ஞானியுமிவந்தான். ஸுதுராவ
என்று தொடங்கி சுஹுராஸுதீயதுஷ்கர்மாவ்ருத்தாஸுராத்மநாம் | சுவ
ரயதிதஸ்மாந்மாம்வ்ருத்திம்விந்தேவாரா | ஜீவஹும்தாழ் என்றும
ளவாக,சேதநம் அசேதநம் என்று இருவகையானப்பிரகிருதிகளும் பரம பு
ருஷனுக்கு சேஷப்பட்டிருக்கின்றன வென்று சொல்லப்பட்ட தன்றோ?
மேலும் சுஹம்க்ருத்ஸ்நஸ்யஜகதஃப்ரபவஃப்ரலயஸ்தா | தத்ப்ரஸாத
ஸுந்நாந்ருத்திங்துஷ்யதிநஜ்ஜ என்றுதொடங்கி யெவெவ வாகூகா
ஹாவாராஜவாஸுவாஸுவாஸுவாஸுயெத வனவெதிதாந்நிஜி நகுவம் தெ
ஷுதெதயி என்று காரியமாயுங் காரணமாயு மிருவகைப்பட்ட பிரகிருதி
களின் ஸ்வரூபமும் ஸ்திதியும் பிரவிருத்தியும் பரமபுருஷாதீனமென்றும் பர
மபுருஷன் ஸர்வவிதத்தாலும் ஸர்வஸ்மாத் பரனென்றும்சொல்லப்பட்டது.
ஆகையால் அவனையே யிங்கே ஞானியென்கிறது.

* ஸ்ரு ॥ யகூஜிதெ ருதி ஷுங்யசோஜிதெ ரா நவெஜயவ் ராஜித ரு
ஸ்ரீராழ் முதலியன.

(உஉ) இப்படி நம்மாலருளப்பட்ட (நிர்விக்கினமான) சரத்தையைக் கொண்டே, அந்த இந்திராதி தேவதையின ஆராதநத்தைச் செய்து (நம்சரீரமான) அத்தேவதையினிடத்தில் தான்கோரியபயனை நம்மாலளிக்கப்பெற்று அநுபவிக்கிறான். [ஆராதிக்கும்பொழுது இந்திராதிகள் நமக்குச் சரீரமென்கிற விஷயத்தை அவன் அறியாமற்போலும், உள்ளபடியே அது நம்மாராதனமாகையால் அவன் கோரிக்கையை நாம் நிறைவேற்றுகிறோம்.]

கூதேவதாஹவுதைஷாம் தர்ஶவதாயுயெவாழி|
ஸெவாநுஸெவயஜோயாதி ஸ்ரத்தயாஸ்ரிதோஸவிஉக||

(உக) ஆனல் இந்திராதிகளை யாராதிக்கும் அவ்வற்பமதிகளுக்குக்கிடைக்கும் அற்பப்பயனெல்லாம் அறபமாயும் முடிவுள்ளதாயுமிருக்கும். ஏனெனில்.—இந்திராதி தேவர்கள் அநுபவிக்கும போகங்களெல்லாம் இவ்வளவென்றும் இத்தனை காலமென்றும் வரையறையுற்றவையாகையால் அவ்விந்திராதிதேவர்கள் போகம்நித்து நழுவும்பொழுது (அவர்களை யாராதிக்கும்) இவர்களும் நழுவுவர்கள. நம்பக்தர்களோ அதேகர்மங்களை நம்மாராதநமாக நினைத்து அற்பபலங்களில் பற்றில்லாமல் நமக்கினிமை செய்வதே பயனாய் நம்மையடைந்து மீண்டுந் திரும்பாமலிருக்கிறார்கள. [ஸோஹவைதாந்கூளதெயவாந்நஜ்ஞநவிதாவிதெ எனறு மேலே அருளிச்செய்யப்போகிறான்றோ?]

(அ-கை.) மற்றவர்களோ பிராணிகளெல்லாம் சுகமாய் நம்மை ஆஸ்ரயிக்கவேண்டுமென்று நாம் மனுஷ்யாதிகளிடத்தில் வந்தவதரித்தால் அதைப்பயன்படவொட்டாமற் செய்கிறார்களென்கிறார்.

கவுதூம்வுதிஸாவந்ம் உநுவெதோஸவொஉய|
பரம்ஹாவஜோநதோ ஸோவுயஸந்தி||உச||

(உச) நாம் ஸர்வகர்மங்களாலும் ஆராதிக்கப் படுமவனும் ஸர்வேசுவரனும் வாக்குக்கும் மனதுக்குமெட்டாத ஸ்வரூப ஸ்வபாவமுடையனுமிருக்கச்செய்தேயும், கணைகடந்த கருணையாலும் அடியார்களிடத்திலுண்டான வன்பினாலும் யாவரும் நம்மைகண்டு பற்றவேண்டுமென்று நம் ஸ்வபாவத்தைவிடாமலே வசுதேவர்மைந்தனுப் வந்தவதரித்தோம். இப்படிவிகாரமில்லாத நம்பரத்துவத்தை யறியாமல், நாம் இதற்கு முன்பு தோன்றுமல் மறைந்திருந்து இப்பொழுதுதான் கர்மவசத்தால் ஒரு ராஜகுமாரனைப்பிறந்து தோன்றியதாய் இம்மூடர்கள நினைத்துவிடுகிறார்கள். ஆனது பற்றியே நம்மை ஆஸ்ரயிப்பதுமில்லை, நம்மை யாராதிப்பதுமில்லை.

(அ-கை.) அப்படியாகில தேவரீர் ஏன அப்படி டாவர்க்கும் விளங்குவதில்லையென்றால் சொல்லுகிறார்.

நாஹம்ப்ரகாஶஸ்ஸவ-ஸ்ய யொமஶோயாஸஶாவ்ருதः|
ஶூமொயம்நாஹிஜ்ஞாநாதி லொகொ மாமஜமவ்யயம்||உருII

(உரு) (ஜீவர்களுக்கேற்ற மானிடததன்மை முதலியவற்றை யடைந்திருக்கையென்கிற)மாயையால் நாம் மறைக்கப்பட்டமையால் யாவர்க்கும்

பிரகாசிக்கிறதில்லை. நாமிபபடி மனுஷ்யாதிகளிடத்தில்வந்து பிறந்தமாதத்திரத்தில் இந்த மூடஜநம் நம்மை ஸாதாரணமாய் நினைத்துவிடுகினறதே யல்லது, இந்திரனவாயுஇவர்களின செயலையும் சூரியன் அக்கினி இவாளுடைய தேஜஸ்ஸையும்கடந்து உத்பத்தி விநாசங்களற்று எலலா வுலகங்களுக்கும் முக்கியகாரணனுய் ஸர்வேசுவரனுயிருக்கிற நாம், பிராணிகளெல்லாம் ஆஸ்ரயிப்பதற்காக மனுஷ்யாதிரூபமாய் வந்தவதரித்தோமென்றறிகிறதில்லை.

வெஹாஹம்ஸ்ரீதாநி வதூஸோநாநிவாஜூந|
ஸவிஷ்ஸாணிவஹூதாநி ஸாதூவெஹநகூஜூந||உசு||

(உசு) இதுவனையில் கடந்ததும் இப்பொழுது நிகழ்வதும் இனி வருவதுமான ஸகலப்பிராணிகளையும் நாம அறிவோம்; நமமை மாத்திரம் ஒருவனும்,அறிவதிலலை. [அதாவது நம் சிந்தைக்கெட்டியப் பிராணிகளிலொருவருகிலும் பரமபுருஷநதான் இப்படி யாவருந் தன்னை ஆஸ்ரயிக்கும்படி வசுதேவன் மைந்தனுய் அவதரித்திருக்கிறுன்,, எனறு அறிபவனில்லை.] ஆகையால் ஞாநியைக்கிடைப்பது மிகவரிது.

(அ.கை.) அதெப்படி யென்றுல் அருளிச்செயகிறுர்.

இச்சாத்வேஷஸமுத்தேந த்வந்த்வமோஹேந பாரத|
ஸர்வபூதாநிஸம்மோஹம் ஸர்கயாந்திபரந்தப||உள||

(உள) விருப்பம் வெறுப்பு என்கிற விரண்டாலுமுண்டான சீதம் உஷ்ணம் முதலிய துவந்தவமெனகிற மோஹத்தாலே ஸகலப் பிராணிகளும் பிறக்குமபொழுதே மயங்கிப்போகின்றன. [என்றுல்-குணவிகாரமான ஸுகம் துக்கம் என்கிற துவந்த்வங்களில் எந்தெந்த விஷயத்தில் பிராணிகள் பூர்வஜநமங்களில் விருப்பமும் வெறுப்பும் பாராட்டிவந்தார்களோ, மறுபடியும் அந்தந்த துவந் துவங்களே விரும்பப்பட்டவைகளாயும் வெறுக்கப்பட்டவைகளாயுமிருந்துகொண்டு ஜநநகாலத்தில்தானே ஸகல ப்பிராணிகளையும் மயங்கச்செய்கின்றன; இதனுல் நம்மை அடைந்தபோது சுகித்தும் நம்மைப் பிரிந்தபோது துக்கிததும் இருக்கவேண்டியவைகளானப் பிராணிகள்,அவைகளில்தானே விருப்பத்தையும் வெறுப்பையும் பாராட்டுகின்றன. ஞாநியோ நம்மைக்கிட்டியபோது இன்பமும், பிரிந்தபோது துன்பமுமே ஸ்வபாவமாயிருப்பன்; அப்படிப்பட்ட ஸ்வபாவத்தோடுகூடிய ஞானியாக ஒருப்பிராணியாவது உண்டாகிறதில்லை என்றபடி.]

யேஷாம்த்வந்தமதம்பாவம் ஜநாநாம்புண்யகர்மணாம்|
தேத்வந்தமோஹநிர்முக்தா ப்ரஜந்தேமாம்த்ருடவ்ரதாஃ||உஅ||

(உஅ) எவர்களாலுல் பலபிறப்பும்பிறந்து அவைகளில் அளவிறந்த புண்ணியங்களைத்திரட்டி அதனுல்(விருப்பத்திற்கும் வெறுப்புக்கும் காரணமாயும் நம்மை நினைக்க வொட்டாமல் விரோதிப்பதாயும் அநாதிகாலமாய்த் தொடர்ந்ததாயு மிருக்கும்) பாவத்தை யொழிக்கிறுகளோ, அவர்கள் முன்

சொன்ன புண்ணியத்தின் வாசிக்குத்தக்கபடி நம்மைச்சரணமடைந்து குண விகாரமான மோஹத்தினின்றும் விடுபட்டவர்களாய் ஜரை மரணம் இவை களை ஒழிக்கவும் பேரின்பத்தை அடையவும் நம்மைக்கிட்டவுமாக முயன்ற வர்களாய், திடமான ஸங்கற்பத்தோடு நம்மையே உபாஸிக்கிறார்கள.

(அ-கை) அதில் எம்பெருமானைச் சேவிப்பவர்களான இம்மூவர்களுக்கும் அவசியம் அறியவேண்டிய விஷயமும் அவசியம் கைப்பற்றவேண்டிய விஷயமும் இன்னதென்கிறார்.

ஜராமரணமோக்ஷாய மாமாஶ்ரித்ய யதந்தியே|
தத்ப்ரஹ்ம தத்விதுஃ க்ருத்ஸ்னமத்யாத்மம் கர்ம சாகிலம்॥உக॥

(உக*) ஜராமரணங்களை யொழித்துப் பிரகிருதிக்குப் புறம்பான ஆத்மாவைக் காணவேண்டி எவர்கள் நம்மை ஆஶ்ரயித்து யத்நம் செய்கிறார்களோ, அவர்கள் அந்தப் பிரம்மத்தையும் அத்யாத்மத்தையும் கர்மங்களையும் சிறிதும் விடாமல் நன்றாய் அறியவேண்டும்.

ஸாதிபூதாதிதைவம்மாம் ஸாதியஜ்ஞம்சயேவிதுஃ|
ப்ரயாணகாலேபிச்சம் தேவிதுர்யுக்தசேதஸஃ॥கo॥

(கo*) நம்மை அதிபூதமாகவும் அதிதைவமாகவும் அதியக்ஞமாகவும் எவர்கள் அறிகிறார்களோ அவர்கள், சரீரத்தைவிட்டுப் போகுங்காலத்திலும் தங்கோரிக்கைக்குத் தக்கபடி நம்மையே நினைக்கிறார்கள். (இம்மூவருக்கும் நித்ய நைமித்திக கர்மங்களான மஹாயக்ஞாதிகள், செய்யவேண்டுங் கடமை யாயிருக்கின்றன. [ஞானிகளிருவர் ஐசுவரியகாமன் ஒருவன் ஆகமூவர்]

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
ஏழாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீஃ

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

எட்டாவது அத்யாயம்.

அவதாரிகை.

ஏழாவது அத்யாயத்தில் யாவரும் உபாஸிக்கவேண்டிய பரப்பிரம்ம மான வாஸுதேவன் சேதநாசேதநங்களுக்கெல்லாம் பதியென்றும், காரணமென்றும், ஆதாரனென்றும், எல்லாப்பொருளும் சரீரமாயிருக்கையாலே ஸர்வப்பிரகாரமாகவு மிருக்கின்ற அவன் எல்லாசப்தங்களுக்கும் பொருளை

(உக-* கo) இந்த சுலோகங்களில் சொல்லுகிற விஷயம் எட்டாவது.அத்தியாயத்தில் விவரிக்கப்படும்.

னறும், யாவரையும் ஆள்பவனென்றும், ஸகலகல்யாண குணங்களாலும் அவ னே மேன்மைப்பட்டிருக்கிறானென்றும், ஸத்வரஜஸ்தமோ மயங்களான தே ஹமாயு மிந்திரியமாயும் மறறும் புசிக்கும்பண்டங்களாயுமிருக்கிற சப்தாதி விஷயங்களால் அவன் மறைக்கப் பட்டிருக்கிறானென்றும், மிகுந்தபுண்ணிய வசத்தால் கிடைத்த பகவதசரணகதியாலே அம்மறைவு நீக்கப்படுமென்றும், புண்ணியத்தின் வாசிக்குத்தக்கபடி இவன் பண்ணும் சரணகதியின் சிறப்பா ல் ஐசுவரியம், கைவல்யம், பகவத்ப்ராப்தி என்று பயன் வேறுபடுகையாலே அதற்குத்தக்கபடி பக்தாகளும் வேறுபட்டிருப்பர்களென்றும் எம்பெருமானை அடையக்கோரியவன் எப்பொழுதும் அவனையே நம்பி அவனிடத்தில் விசே ஷபக்தியைப்பண்ணி எம்பெருமானுக்கு மிகவு மினியனாயிருக்கையாலே அ வன் யாவரிலும் சிறந்தவனென்றும், அப்படிப்பட்டவன் கிடைப்பது அரி தென்றும் அருளிச்செய்து, இம்மூவர்களும் அறியவேண்டுமவற்றையும் கை ப்பறறவேண்டுமவறறையும் அருளிச்செய்தார்.

அப்படி யறியவேண்டியதாயும் அடைய வேண்டியதாயும் பிரஸ்தா விக்கப்பட்டவைகளையே இந்த எட்டாவது அதிகாரத்தில் விவரிக்கிறார்.

கூஜு நஉவாச। கிதஉ ப்³ரஹ்மகிமத்⁴யாத்மம் கிம்கர்மபுருஷோத்த
உ। கயிஹாதிபூதம்வகிம்புரோக்த உயிஹைவம்கீர்வயுதே।கி।
கயியஜ்ஞோகயம்கோத்ர தெஹஸ்மிந்மது⁴ஸூத³ந।
வ்யயாணகாலெவகயம் ஜ்ஞேயொஸிநியதாத்மபி:।।உ।।

(க-உ) அர்ச்சுநன் கேட்கிறான. ஜராமரணங்களை யொழிப்பதற்காக வெம்பெருமானையாஶ்ரயித்து யத்நஞ்செய்யும் மோக்ஷார்த்திகளுக்கு, அவசி யம் அறியவேண்டிய விஷயமானப் பிரம்மமாவதென்ன? அத்தியாத்மமாவ தென்ன? கர்மமாவதென்ன? இவைகளை அருளிச்செய்யவேண்டும். மேலும் ஐசுவரியத்தைக் கோரியவாகளுக்கு அறியவேண்டிய விஷயமான அதிபூ தமாவதென்ன? அதிதைவமாவ தென்ன? இவர்கள் மூவரும் அறியவே ண்டியதான அதியக்ஞமாவதென்ன? அந்த அதியக்ஞத்தின் தன்மையெப்ப டிப்பட்டது? இவர்கள் சரீரத்தை விட்டுப்போகுங்காலத்தில் சலியாமனத்த ராய் தேவரீரை நினைப்பதெப்படி? இவைகளையும அருளிச்செய்யவேண்டும் என்று கேட்டான்.

ஶ்ரீ ஹமவாநுவாச ।। கக்ஷரம்ப்³ரஹ்மபரமம் ஸ்வபாவோத்⁴யாத்ம
உச்யதெ। ஹூதஹாவொத்³பவகரோ விஸர்க³:கர்மஸம்ஜ்ஞித:।।க।।

(க) அதற்குப் பகவான் அருளிச்செய்கிறார். அர்ச்சுந! பிரம்மமாவது $ பரமாக்ஷரம். அதாவது .—பிரகிருதியினின்றும் விடுபட்ட ஆத்மஸ்வரூப

$ கவுகுடிக்ஷரெடியதெகக்ஷரம்தடிஸிமியதெத இத்யாதிஶ்ரு திகளிற சொன்னபடி அக்ஷரமென்று ஜீவஸமூதாயத்தைச் சொல்லுகையா லே பரமாக்ஷரமென்று பிரகிருதியினின்று விடுபட்ட ஆத்மஸ்வரூபதனைச் சொல்லுகிறது.

ம். அத்யாத்மமாவது:—பஞ்சாக்நிவித்தையில் அறியவேண்டியதாகச் சொல்லப்பட்டதும் ஆத்மாவோடு ஸம்பந்திப்பதுமான பூதஸூக்ஷ்மமும் அதின் வாஸனை முதலானதும். [ஆகவிவ்விரண்டிலும் ஒன்றைப் பற்றவேண்டியதாயும் ஒன்றை விடவேண்டியதாயும் மோக்ஷார்த்தியானவன் அவசியம் அறியவேண்டும்.] கர்மமாவது:—மானிடத்தன்மை முதலியவைகளுக்குக் காரணமாய், சாஸ்திரத்தில் சொன்னபடி ஸ்திரீகளுடன் புணர்ந்து வீரியத்தை விடுகை. [மோக்ஷார்த்தி இதையும் வெறுக்கவேண்டியதாயும் ஒழிக்கவேண்டியதாயும் அறியவேண்டும்.] [ஒழிக்கவேண்டுமென்கிற விஷயத்தை யஜுஸ்ஸு தொடர்ந்து உடனே சொல்லப்போகிறார்.]

கூயிஹ்ம தம்க்ஷ்ரொஹாவஷ்ட வாரூஷ்ஷாயிஷெவ திஷ்டி|
கூயியஜ்ஞோ ஹ்யேவாது ஷெஹெஷ்யதாம்வார ||சு||

(சு) ஓ மானிடச்சிங்கமே! ஐசுவரியார்த்திகள் அறியவேண்டியதாகச் சொன்ன அதிபூதமாவது:—க்ஷரபாவம், அதாவது:—ஆகாசம் முதலிய பூதங்களில் ஓர் விகாரமாய் வேறுபட்டுத்தோற்றும் சப்தம் பரிசம் முதலிய குணங்களும் அவைகளின் ஆதாரங்களும். [இதை யறிவதாவது - ஐசுவரியார்த்தி இவைகளைத் தங்கள் பேருக நினைக்கவேண்டுமென்பது.] அதிதைவமாவது:—தைவத்தின் மீதிருப்பது, அதாவது:—இந்திரன் பிரமன் முதலிய வெல்லாத்தேவர்களுக்கும் மேலாயிருப்பது;என்றால் இந்திரன் முதலானோர் அநுபவிக்குமவைகளைக்காட்டிலும் விலக்ஷணமான சப்தாதிவிஷயங்களை யநுபவிக்குமவைகளைக்காட்டிலும் விலக்ஷணமான சப்தாதிவிஷயங்களை யநுபவிக்கும் புருஷனென்றபடி. [அதை யறிவதாவது:—அப்படிப்பட்ட போகங்களைப்புஜிப்பவராகத் தம்மை ஐசுவரியார்த்திகள் நினைக்கவேண்டும்.] அதியக்ஞமாவது:— யக்ஞங்களால் ஆராதிக்கப் படுகிற நாந்தான். [இந்த என்னை யறிவதாவது:—என் சரீரமான இந்த இந்திராதிகளுக்கு அந்தராத்மாவாயிருக்கும் என்னையே யக்ஞங்களால் ஆராதிப்பதாக இம்மூவரும் மஹாயக்ஞம் முதலான நித்யநைமித்திககர்மங்களை யநுஷ்டிக்கும்பொழுதெல்லாம் நினைக்கவேண்டுமென்றபடி.]

சுதகாலெவசாஷெவ ஷ்ரூநூகாகலைவாது|
யஸ்ஸ்யாதிஷஜ்ஞாவம் யாதிநாஷ்ஷ்ருதூஷம்ஸயஃ ||நு||

(நு) அர்ச்சுந! இப்போ நாம்சொல்லப்போகிறவிஷயம் இம்மூன்றிலும் ருக்குமவேண்டியதுதான். அந்திமகாலத்திலும்நம்மையேநினைத்துக்கொண்டு சரீரத்தைவிட்டு எவன்போகிறானோஅவன்நம் ஸ்வபாவத்தை யடைகிறான். அதாவது:—அப்பொழுது நம்மை யெப்படி நினைத்திருக்கிறானோ அப்படிப்பட்ட ஸ்வபாவத்தையடைகிறான். [ஆதிபரதன் முதலானோர் அந்திமகாலத்தில் நினைத்திருந்தபடி மிருகங்களுக்கு ஸமானமான வடிவத்தை யடைந்தாற்போலென்றபடி.]

(அ-கை.) அந்திமகாலத்தில் நினைக்கும் நினைவுக்கு, நினைத்த விஷயத்தைப்போன்ற நிலையை நினைப்பவனுக்குக் கொடுக்கை ஸ்வபாவம் என்கிற விஷயத்தைத் தெளிவாயருளிச்செய்கிறார்.

யம்யம்வாவிஹராநுஹாவம் த்ருஜதத்ருதைகூஹைவாழ்|
தம்தஹிவைதிகூளதைய வஹாதஹ்ரூவஹாவிதஃ||சு||

(சு) அந்திமகாலத்தில் எவ்வித ஸ்வபாவத்தை நினைத்துக் கொண்டு சரீரத்தைவிடுகிறானே அவ்விதஸ்வபாவத்தை மறித்தபின்பு அடைகிறான். அந்த நினைவோ முன்பு இவன் கோரிய விஷயமாய்த்தானிருக்கும்.

தஹாதவெஷுகாலெஷு ஸநுஸ்மராயயுத்|
யத்ருவிதஹிநாவைஜி ஸ்ருஹிவைவைஷ்ருஸ்ருஸம்ஸயஃ||எ||

(எ) புருஷன் முன்பு தான் எந்த விஷயத்தில் பழகியிருக்கிறானே அந்த விஷயமாகவே அந்திமகாலத்தில் நினைவு உண்டாகுமாகையால் எப்போதும் நீ பிரயாணமாமளவும் தினந்தோறும் நம்மைவிடாமல் நினை. நாடோறும் நம் நினைவையுண்டாக்குவதான யுத்தம் முதலிய வர்ணாசிரமாசாரத்தைச்சேர்ந்த சாஸ்திரோக்தமான நித்தியநைமித்திக கர்மங்களைச்செய். இப்படிப்பட்ட உபாயத்தாலே மனதையும் புத்தியையும் நம்மிடத்தில்வைத்து அந்திமகாலத்திலும் நம்மையே நினைத்திருந்து உன் இஷ்டப்பிரகாரம் நம்மையடைவாய்; இதில் ஸம்சயமில்லை.

(அ-கை.) இப்படி தம்மை யடையவேண்டுமானால் அந்திமகாலத்தில் நினைக்கவேண்டுமென்று ஸாதாரணமாய் அருளிச்செய்து, அதற்காகமுற்கூறியமூன்றுபேரும் வேறுவேறுவிதமாய் உபாஸிக்க வேண்டுமென்பதை யருளிச்செய்யத் தொடங்குகிறார். அதில் ஜ்ஞானியார்த்திகள் உபாஸிக்கவேண்டும் பிரகாரத்தையும் அவ்வுபாஸநத்துக்குத்தக்கபடி அந்திமகாலத்தில் சிந்திக்கவேண்டும் பிரகாரத்தையு மருளிச்செய்கிறார்.

சுஹ்ருதாஸயொமய்தெந வெதஸாநாநுமாதிநா|
வாஜிம்வாரூஷிவ்ரும் யாதிவாயுர்நவிதயநு||அ||

(அ) தினந்தோறும் § அப்பியாஸத்தோடும் யோகத்தோடும் கூடியிருக்கையாலே மனது மற்றொன்றையும் நாடாமல் அந்திம காலத்தில் திவ்யபரமபுருஷனான நம்மை இனி சொல்லப்போகிறபடி நினைத்திருந்தால் நம்மையே யடையலாம். [என்றால் ஆதிபரதன் மிருகத்தன்மையை யடைந்தாற்போல் ஜ்ஞானியத்தையடைந்தவனுக்கு நம்மோடு ஸமானமாவானென்றபடி.]

சுவிம்வாரணஹ்ரூணஹாவிதாரு ஹிணைராரணீயாம்ஸஹ்ரூவை
ஹ்ருஃ| ஸவ்ருஸ்ருயாதாரூஹவித்ரு ரூபை ஹாதி த்ருவண்ருஜ்ஜீவ்ஸ்ருவ
ரூஹ்ரா சு||கூ||

வ்ருயாணகாலெஹநவாஹவிதெந ஹக்ருத்ரூயாரூதெகாயொமவைவெ
நதெவ| ஹ்ரூரூவொஹ்ருயெவ்ருவாணஹாவெஸரூவ்ருஸ்ருத்ருக் ஸகம்வெ
ரூம்வெரூரூஷஹ்ரூவெதிஹிவ்ருழ||கo||

---

§ அப்பியாஸமாவது - நித்ய நைமித்திக கர்மங்களுக்கு விரோதமில்லாத ஸகல காலங்களிலும் உபாஸ்யவிஷயத்தை நினைத்துக்கொண்டிருப்பது. யோகமாவது - நாடோறும் யோகஞ்செய்யவேண்டுங் காலத்தில்மாத்திரம் கீழ்ச்சொன்னபடி அநுஷ்டிக்கும் உபாஸநம்.

(கூ-கo) ஸர்வக்ஞனும் அநாதிகாலமாயுள்ளவனும் உலகத்தை யாள்பவனும் அணுவான ஜீவனைக்காட்டிலும் சிறியனும் எல்லாவற்றையும் தரிப்பவனும் யாவையும் படைப்பவனும் ஒன்றோடும் சேராத ஸ்வரூபனும் பிரகிருதிக் கவ்வருகாயும் தனக்கே யானதாயுமிருக்கிற திருமேனியோடு கூடியவனுமிருக்கும் அந்த திவ்யபுருஷனை நாடோறும் பயில்கின்ற பக்தியுடன் கூடிய யோகபலத்தாலே (நன்றாய்த்திருந்தி சலியாமலிருக்கிற) மனதைக்கொண்டு எவன் பிரயாணகாலத்தில் புருவங்களுக்கு நடுவில் பிராணனை வைத்து அங்கே பகவானை இடைவிடாமல் சிந்திக்கிறானே, அவன் அந்த பகவானையே யடைவான்: [என்றால் - அந்த பகவானுக்கு ஸமமான ஐசுவரியத்தை யடைகிறானென்றபடி.]

(அ-கை.) அநந்தரம் கைவல்லியத்தைக் கோரியவன் நினைக்கவேண்டும்படி சொல்லுகிறது.

யதக்ஷரம்வேதவிதோவதந்தி விஶந்தியதயோவீதராகாஃ | யதி
ச்ச²ந்தோப்³ரஹ்மசரியம்சரந்தி தத்தேபதம்ஸங்க்ரஹேணப்ரவக்ஷ்யே||

(கக) வைதிகர்கள் எதையாலல் அக்ஷரமென்று (அதாவது-பருக்காமை முதலிய குணங்களுடன் கூடியதாக) சொல்லுகிறார்களோ, வைராக்கியமுடையரான யதிகள் எந்தஅக்ஷரத்தைப் பிரவேசிக்கிறார்களோ,எதை யடைய க்கோரியவர்கள் பிரம்மசரிய விரதத்தை யநுட்டிக்கிறார்களோ, அந்த ஸ்தானத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். [ஸகல வேதாந்தங்களாலும் அறியவேண்டியதான அக்ஷரமென்னும் நம் ஸ்வரூபத்தை (அதாவது ஜீவனை) எப்படி உபாஸிக்கவேண்டுமோ அதைச் சுருக்கமாய் சொல்லுகிறேனென்றபடி.]

ஸர்வத்³வாராணிஸம்யம்ய மனோ ஹ்ருதி³நிருத்⁴ய ச|
மூர்த்⁴ன்யாதா⁴யாத்மனஃ ப்ராண மாஸ்தி²தோயோகதா⁴ரணாம்||
ஓமித்யேகாக்ஷரம்ப்³ரஹ்ம வ்யாஹரன்மாமனுஸ்மரன்|
யஃப்ரயாதி த்யஜன்தே³ஹம் ஸயாதிபரமாம்க³திம்||கஈ||

(கஉ-கஈ) த்வாரத்துக்கு வழியான செவிமுதலிய வெல்லாப்புலன்களையும் தம்வியாபாரங்களினின்று நிவர்த்திசெய்து, இருதயகமலத்தில் உறைகின்ற அக்ஷரமென்னும் நம்மிடத்தில் மனதை நிறுத்தி, யோகமென்னுந் தாரணையை யடைந்தவனும் நம்மிடத்தில்தானே சலியாமல் நிலைத்து, நமக்கு வாசகமான "ஓம்" என்னு மோர் அக்ஷரப்பிரம்மத்தை உச்சரித்துக்கொண்டு அதற்குப் பொருளான நம்மைச் சிந்தித்துக்கொண்டு தன்பிராணனை உச்சித்தலையில் வைத்து சரீரத்தை விட்டவனும் எவன்போகிறானே, அவன் பரமகதியை அடைகிறான்; [அதாவது:—பிரகிருதிக்குப் புறம்பாய் நமக்கு ஸமமாய் மீண்டும் திரும்பவேண்டாத ஜீவாத்மஸ்வரூபத்தை யடைகிறான். யஸ்மாத்க்ஷரமதீதோஹமக்ஷராதபிசோத்தமஃ | அதோஸ்மி
லோகேவேதேச ப்ரதிதஃபுருஷோத்தமஃ என்று அக்ஷரஸ்வரூபத்தைப் பரமகதியென்று உடனே அருளிச்செய்யப்போகிறார்.]

(அ-கை.) இவ்வாறு ஐசுவரியார்த்தியும் கைவல்யார்த்தியும தாம் அடை யவேண்டிய பயனுக்குத் தக்கபடி எம்பெருமானை உபாஸிக்கவேண்டும் பிர காரத்தை யருளிச்செய்தார். இனி மோக்ஷார்த்தியான ஞானியானவன் பகவா னை உபாஸிக்கவேண்டும் பிரகாரத்தை யருளிச்செய்கிறார்.

ஸநந்வெதாவதாதம் யொகாம்ஸ்வாதிநித்யஸ்ஸ:।
தஸ்யாஹம்ஸுலபோ நித்யயுக்தஸ்யயொகிந:॥கச॥

(கச) ஆரம்பித்த நாள்முதல் நித்தியமாய் எப்போதும் மற்றொன்றை யும்நாடாமல் நம்மையே எவன் சிந்திக்கிறானே (என்றால் நாம் அவனுக்கு மி கவும் இனியோமாகையாலே நம்மை நினைத்தாலொழிய தன்னைத் தரிக்கமா ட்டாதவனுய் கேவலம் இன்பமயமான நம்சிந்தையை யெவன்செய்கிறானே) அந்த நித்தியயோகிக்கு நாம் எளிதில் கிடைக்கிறோம். [அதாவது - எளிதில் அடையக்கூடிய நம் ஸ்வபாவமான ஐசுவரியாதிகளையல்ல நாம் கொடுப்பது; ம ற்றப்படி கேவலம் அருமைப் பெரும்பேறான நாமேஎளிதில் கிடைக்கிறோம். என்றால்-அவன் பிரிவை ஸஹிக்கமாட்டாமல் நாமே அவனை வரித்து நம்மை யடைவதற்கேற்ற பக்குவமான உபாஸநஞ்ஞாநத்தையுமளித்து அதன் விரோ தியையுமொழித்து நம்மிடத்தில் இனிமையான புத்தியையும் உண்டுபண்ணு கிறோமென்றபடி. யதேவெஷவ்ருணுதெதேந லப்ய: என்ற சுருதி யில் சொல்லுகிறதன்றோ? தஷாம்ஸ்ததய்காநாம்ஜ்ஜாதாம்வீதி வம்வஹுகூழ்। ஓஓாதிவைஜியொமஹ்யம்யெநஶ்ரேஷ்டயாஜ்ஞிதெ॥ என் றும், தெஷாமெவாநுகம்பார்தமஹமஜ்ஞாநஜம்தம:। நாஶயாம்யாத்ம ஸ்தோ ஜ்ஞாநதீபெநபாஸ்வதா என்றும் மேலும் சொல்லப்போ கிறார்.]

(அ-கை.) இதற்குமேல் அத்தியாயத்தின் மீதியாலே ஞானிக்கும் கை வல்யார்த்திக்கும் திரும்புதலில்லையென்றும் ஐசுவரியார்த்திக்குத் திரும்புத லுண்டென்றும் அருளிச்செய்கிறார்.

ஆஸ்ருத்வைதத்வாநஜந்ந ஓப்ஸ்வாமயிஸாஸ்வதீ:।
நாவாநவாப்திஹாதாந லம்விஜிம்வாஸாம்ஸதா:॥கஞ॥

(கஞ) நம்மைக் கிட்டியவர்கள் மறுபடியும் எல்லாத் துயரங்களுக்கு மி ருப்பிடமான இந்த அசாசுவதமாயிருக்கிற ஜன்மத்தை யடைவதில்லை. ஏனெ ன்றால்-இவர்கள் பெரியமனதோடு நம்ஸ்வரூபத்தை உள்ளபடியே யறிந்து (மிகுதியும் நம்மையே விரும்பியிருக்கையாலே நம்மைப்பிரிந்தால் தரிக்கமா ட்டாதவர்களாய் நம்மைப்பற்றிக் கிடக்கிற மனதோடு நம்மையே ஆதாரமா கநம்பி) உபாஸ்யனான நம்மையே பெரும்பேறாக வடைகின்றார்கள்.

(அ-கை.) ஐசுவரியத்தை யடைந்தவர், திரும்புவதற்கும் பகவானை ய டைந்தவர் திரும்பாமைக்குங் காரணம் இங்கே சொல்லப்படுகிறது.

கூவ்ருஹ்யவநாலுராகூர்வாநாவதிஷ்டெநாஜ்ஞாந।
ஆஸுவைதாந்தாகுளெஜெயவாநஜ்ஞாநவிஷ்யதெ॥கஞ॥

(௯சு) பிரம்மாண்டத்தில் பிரம்மலோகபரியந்தமாயுள்ள போகைசுவரிய ஸ்தானமான ஸகல லோகங்களும் திரும்புதலோடு கூடியவைகள். ஆகையால் ஐசுவரிய கதியையடைந்தவருக்குப் பேரூன அந்த ஸ்தாநங்கள் நசிக்கும்போது அவர்களுக்கும் நாசமுண்டாகாமற்போகாது.(ஸர்வக்ஞனும் ஸத்யஸங்கல்பனும் ஸகல ஜகத்துக்கும் உத்பத்தி ஸ்திதிலயங்களைச் செய்பவனும் பமகாருணிகனும் எப்பொழுதும் ஒரே ரூபனுயிருக்கிற) நம்மை யடைந்தவர்களுக்கோ நாசமென்கிற வார்த்தையே யில்லாமையால் மறு ஜன்மங்கிடைக்மாட்டாது.

(அ-கை.) பிரம்மலோக பரியந்தமான லோகங்களுக்கும் அவற்றுக்குட்பட்டவைகளுக்கும் எம்பெருமானால் ஏற்படுத்தப்பட்ட உத்பத்தி விநாசகாலங்களின் ஏற்பாட்டை யருளிச்செய்கிறார்.

ஸஹஸ்ரயுகபர்யந்தமஹர்யத்ப்ரஹ்மணோவிது:।
ராத்ரியுகஸஹஸ்ராந்தாம் தேஹோராத்ரவிதோஜநா:॥
அவ்யக்தாத்வ்யக்தயஸ்ஸர்வா: ப்ரபவந்த்யஹராகமே।
ராத்ர்யாகமேப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்தஸம்ஜ்ஞகே॥ கஅ॥
பூதக்ராமஸ்ஸஏவாயம் பூத்வாபூத்வாப்ரலீயதே।
ராத்ர்யாகமேவஶஸ்பார்த பவத்யஹராகமே॥ கக॥

(கஎ-கஅ-கக) மானிடர் முதல் பிரமனளவாகவுள்ளப் பிராணிகளுக்கு நம்மாலேர்ப்படுத்தப்பட்ட "பகல்இரவு"என்கிற ஏற்பாட்டையறிந்தவர்கள், ஆயிரம் சதுர்யுகத்தைப் பிரமனுக்கு ஒருபகலென்பர்கள். அப்படியேராத்திரியும். அதில் பிரமனுக்குப் பகல்வரும்போது மூவுலகத்துக்குட்பட்ட(சரீரம் இந்திரியம் மற்றும் போக்கியவஸ்துக்கள் போகஸ்தாநங்கள் ஆகிய)இவ்வியக்தங்களெல்லாம் அவ்வியக்தமென்கிற பிரமன்சரீரத்திலிருந்துண்டாகின்றன. இரவாகும்பொழுது அச்சரீரத்தில் தானே லயித்துப்போகின்றன. கர்மத்துக்கு வசப்பட்ட அந்த இந்த பூதக்கூட்டம் பகற்காலத்திலுண்டாகியுண்டாகி இராக்காலத்தில் லயமடைந்து மறுபடியும் பகல்வந்தால் உண்டாகின்றது. [அப்படி நூறுவருஷமாலல் கடைசியான ஆயிரயுகத்தில் பிரம்மலோகத்தளவானலோகங்களும் பிரம்மாவும் வ்யதிவ்ருத்யாவ்யதீயதெ குருவெஜ்ஜவிதீயதெ என்கிறக் கிரமமாய் அவ்யக்தம் அக்ஷரம் தமஸ்ஸு என்கிறவனையில் நம்மிடத்தில் தானே லயிக்கின்றன. இப்படி நம்மை யொழிந்தவெல்லாவற்றுக்குங் காலவியவஸ்தையின்படி நம்மிடத்தில் உற்பத்தியும் நம்மிடத்தில்தானே லயமுமாகையால் உற்பத்திவிநாசங்கள் ஒன்றாலு மொழிக்கப்போகாது. ஆகையால் ஐசுவரியகதியைப் பெற்றவருக்கு மீண்டுந் திரும்புதல் வந்தேதீரும்; நம்மை யடைவோருக்கோ அந்த வார்த்தையே கிடையாது.]

(அ-கை.) இனி கைவல்லிய மடைந்தவருக்கும் திரும்புத லில்லையென்கிறார்.

வாஹஸ்ராத்ரஸ்ராவொநுராஉவுகொஉவுகூத்நாதநஃ|
யஸ்யவெஷஸ்ஹமிதஷ நஸுத்நவிநஸுதி॥உ0॥

சுவுகொஉக்ஷராஜ்ஜீவுகூவாஸாம்மதிழ்|
யம்வ்யாவுநநிவதுஷெத §ஸாஉவாஸம்ஜ்ஜ॥உக॥

(சஂ) எனது திவ்யங்களான் இந்த விபூதிகளுக்கு முடிவுகிடையாது; அப்படியிருக்க இப்பொழுது விவரித்ததோ வென்றால் சில உத்தேசங்களைக் கொண்டு சிறிது மாத்திரம் சுருக்கிச் சொல்லப்பட்டது.

யத்யத்விஹ்மதிமத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவவா|
தத்ததேவாவகச்சத்வம் மமதேஜோம்ஸஸம்ஹவ॥சக॥

(சக) ஆளப்படும் தன்மையோடு கூடியதும் செல்வத்தோடுகூடியதும் நன்மைக்கிடமானதுமாய் எதெதுஉண்டோ அந்தப் பூதங்கள்யாவும் நமது ஆளுகை என்கிற சக்திவிசேஷத்தின் அற்பபாகத்தால் உண்டானவைகளென்றறி.

கயவாவைஹ்ரதெநதந கிம்ஜ்ஞாதெநநதவார்ஜுந|
விஷ்டப்யாஹமிதம்க்ருத்ஸ்நமேகாம்ஸெநஸ்திதோஜகத்॥சஉ॥

(சஉ) வாராய் அர்ச்சுன! இவ்வளவுதூரம் சொல்வதென்ன! ஒருசொல்லாய்ச் சொல்லுகிறேரும்; இவ்வுலகெல்லாம் காரணமான நிலையிலும் காரிய மானநிலையிலும் ஸ்தூலமாயும் ஸூக்ஷ்மமாயும் இருப்பதிலும் தரிப்பதிலும் பிரவிர்த்திப்பதிலும் எப்படியானால் நமது இச்சையைக் கடக்கமாட்டாதோ அப்படி,நமது மகிமையின் பதிணையிரப்பங்கின் பதிணையிரம்பங்கிலொருபங்கிலில் இதைத் தரித்துக்கொண்டிருக்கிறேரும் [இப்படியே பராசரபகவானும் யஸ்யாயாதாயாதாம்ஸாம்ஸவிஸ்வஸ்ருகிரிபம்வ்யிதா என்று அருளிச்செய்தார்.]

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
பத்தாவது அத்யாயம் முற்றிற்று.

ஶ்ரீ:

ஶ்ரீமதோமாதாஜாயகம:.

பதிநோவது அத்யாயம்.

அவதாரிகை.

இப்படி பக்தியோகம் நிலைப்பதற்காகவும் அதுவளருவதற்காகவும் ஸகல வஸ்துக்களிலும் வேறுபட்டபகவான் தன்னுடைய அஸாதாரணமான கல்யாணகுணங்களோடுகூட ஸர்வவஸ்துக்களுக்கும் ஆத்மாவாயிருக்குந் தன்மையும், ஆனதுபற்றியே அவனைத்தவிர மற்றவையெல்லாம் அவனுக்குச் சரீரமாய் அவனிட்ட வழக்காயிருக்குந்தன்மையும் சொல்லப்பட்டன. இவற்றை எல்லாம் நேரே எம்பெருமானிடத்திற்கேட்டு இப்படிதானென்று நிச்சயித்து இப்படிப்பட்ட விலக்ஷண ஸ்வபாவத்தோடுகூடிய வெம்பெருமானைப் பிரத்யக்ஷமாய்க் கண்டு அநுபவிக்க வேண்டுமென்கிற வாசையோடு அர்ச்சுனன் கேட்கிறான்.

ஈஜு॒நஉவாச॥ ஜ்ஞா॒ஸ்ரு ஹ்ருயவாஸம் ஶ॒ஹ்ருஜ்ய ஃாதவஸம்ஜ்ஞிதம்| யதயொக்ஷ்யவஸ்வ நொஹாயம்விமதாஜ॥க॥

(க) தேஹமே ஆத்மாவென்று பிரமித்திருந்த அடியேன் விஷயத்தில் கிருபைசெய்வதற்காகவே ஆத்மஸ்வரூபத்தைப்பற்றி யறியவேண்டும் பரமரஹஸ்யாத்தத்தையு மருளிச்செய்தது;அதைக்கேட்டநிறல் அடியேனுக்கு ஆத்மாவின்விஷயத்தில் உண்டாயிருந்த கலக்கங்களெல்லாமொழிந்தன.

ஜவாவ்ருயளஹிஜ்ஞாதாநாம் ஸ்ரு॒தளவிஜ்ஞாஸொயா|
க்ஷேத்ரக்ஷேஜ்ஞயவ்ரதாக்ஷ ஸாஹாத்ருஶவிவாவ்ருயழ॥உ॥

(உ) அஹோ கமலபத்திராக்ஷ! ஏழாவது அத்தியாயந்தொடங்கி பத்தாவதுஅத்தியாயம் வரையில் தேவரீரைத்தவிர மற்றப்பிராணிகளெல்லாம் பரமாத்துமாவான தேவரீரிடத்து நின்றுமே உண்டாய்லயிக்கின்றன வென்கிறவிஷயம் விஸ்தாரமாய்க் கேட்டேனன்றோ? தேவரீர் எந்நாளும் சேதநாசேதநரூபமான ஸகலவஸ்துக்களுக்கும் ஆதாரமாயிருக்குந்தன்மையையும் ஞாநம் பலம் முதலிய ஸகல கல்யாணகுணங்களாலும் தேவரீரே மேலாயிருக்குந்தன்மையையும் ஸகலவஸ்துக்களுக்கும் ஆதாரமாயிருக்குந்தன்மையையும் இமைகொட்டுகிற தென்கிற அற்பப்பிரயத்நமும் தேவரீருடைய ஆதீனம்என்கிற தேவரீருடைய மஹாத்மியத்தின்றன்மையையும் அப்படியே கேட்டேன்.

ஸவவஜ்ஞதஜ்ஞாநஸ்ய ஸ்ரு॒தாநம்வொஸ்ம்யஹம்ஸ்வயம்|
ப்ரவ்ரூஹ்யிஹாஜ்ஞிதாஸ்மிவ ஜ்ஞேஸ்ம்வ்ரு॒ஷ்ணிநந்தந॥க॥

(ங) ஹேபரமேசுவர! தேவரீரைப்பற்றி அருளிச்செய்ததெல்லாம் தெரிந்துகொண்டேன். ஆஸ்ரிதாளிடத்திலுணடான வன்புக்குக்கடலாய் விளங்குகின்ற ஹேபுருஷோத்தம! யாவனையும் ஆஸ்ரயிக்கையிலும் பரிபாலிக்

குந்தன்மையிலும் படைக்குந்தன்மையிலும் அழிக்குந்தன்மையிலும் தரிக்குந்தன்மையிலும் கல்யாணகுணங்களுக்கு இருப்பிடமாயிருக்குந் தன்மையிலும் மேன்மையிலும் எல்லாவற்றிலும் வேறுபட்டிருக்குந்தன்மையிலும் தேவரீர் எழுந்தருளியிருக்கும்படியைக் கண்ணுற்காணவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

உநுவெயழிதஹகூம் யாஉரஷ்டீதிவ்யஹொ।
யொஹ்வரதகாஜெகும் உஸுயாத்தாநஜவுயழிசா॥

(ச) இப்படி எல்லாவற்றையும் படைத்தும் ஆண்டும் தரித்துமிருக்கின்ற தேவரீருடைய ரூபத்தை ஸேவிக்கும்படி அடியேனுல் கூடுமென்று தேவரீருக்குத் திருவுள்ளமானுல் ஓ யோகேசுவர! மற்றொருவருக்குங் கிடைக்க மாட்டாத ஞானம் பலம் ஐசுவரியம் வீரியம் சக்தி தேஜஸ்ஸு இவைகளுக்கு நிதியானவரே! தேவரீரை முழுதும் அடியேன் கண்டனுபவிக்கும்படி ஸேவை ஸாதித்தருளவேண்டும்.

(அ-கை.) இப்படி குதூஹலத்தோடுகூடினவனுய் ஸந்தோஷத்தால் தொண்டையில் வார்த்தை யெழாமற்றடும்படி அர்ச்சுநன் பிரார்த்திக்கப் பகவான் அருளிச்செய்கிறார்.

ஸ்ரீ ஹமவாநுவாச॥ வஜ்ரவைடூர்யவாணி ஸுதஸொமய
லஹஸ்ரஸ்ஃ।நாநாவியாநிஜிவ்ரானி நாநாவணாகூதீநிச॥ரு॥

(ரு) அஹோபார்த்த! எல்லாவற்றிற்கும் ஆதாரமான என்ரூபங்களைக் காட்டுகிறேன்பார்; நூறு ஆயிரங்கணக்காப் பலவிதவர்ணங்களோடும் பலவித உருவங்களோடு மிருக்கிற திவ்யங்களான என்ரூபங்களை நன்ரூய்ப்பார்.

வஜ்ராதித்யாநுவஸுநு ரூத்ரா நஸ்விநளதிரூததா
வஹூநயுத்வடூவஸவாணி வஜ்ராஸ்ரூ ராணிஹாரூத॥சு॥

(சு) என்னுடைய ஒருரூபத்தில் பனிரண்டு ஆதித்தியர்களையும் அஷ்டவசுக்களையும் பதினைரு உருத்திரர்களையும் இரண்டு அசுவனீ தேவர்களையும் வாயுக்களையும் இப்படியே லோகத்தில் பிரத்தியக்ஷமாய்க் காணக்கூடியவைகளையும் சாஸ்திரத்தால் அறியக் கூடியவைகளையும் எந்தெந்த லோகத்தில் எந்தெந்த ஆச்சரியமுண்டோ அவையெல்லாவற்றையும் பார்.

இஹைகஸ்தம்ஜகத்க்ருத்ஸ்நம் வஜ்ராத்வஸுவாஸ்ரத்।
யச்சான்யத்த்ரஷ்டுகாமஸ யத்வாநுத்ருஷ்டீஹஸி॥எ॥

(எ) இந்த என்னுடைய ஒருசரீரத்தில் அதிலும் ஓரிடத்தில், சேதநாசேதந ரூபமான உலகத்தையெல்லாம் நன்ரூய்ப்பார். இன்னும் ஏதாகிலும் பார்க்க வேண்டுமானுல் அதையும் இந்தசரீரத்தின் ஏகதேசத்தில்தானேபார்.

நதுமாம்ஸகேநவைதுஷ்டும் திநநிநவஸவக்ஷுஷா।
திவ்யம்ததாமிதேசக்ஷுஃ பஜ்யமேயோகமைஸ்வரம்॥அ॥

(அ) நான் என்னுடைய சரீரத்தில் ஓரிடத்தில உலகத்தையெல்லாங் காட்டுகிறேன். நீயோ, சிறியதாய் அளவுள்ள வஸ்துக்களைக் காணவல்ல இந்த மாம்ஸ நேத்திரங்களைக்கொண்டு ஸகல வஸ்துக்களிலும் வேறுபட்டு அளவிலாமலிருக்கும் விஷயத்தைக் காணமாட்டாய். ஆகையால் உனக்குத் திவ்யமான கண்களைக் கொடுக்கிறேன். என்னுடைய அளவற்ற ஞானம் விபூதி தொடக்கமானவைகளெல்லாவற்றையும் பார்.

ஸஞ்ஜயஉவாச।ஏவமுக்த்வாததோராஜன் மஹாயோகேச்வரோ ஹரிஃ। உபதர்யாமாஸபார்தாய பரமம்ரூபமைச்வரம்।கூ।

(கூ) இவ்வாறு சொல்லி, தேரோட்டுவதிலிருந்த அர்ச்சுனனுக்கு மாமன் மகனை அந்தக்கண்ணன், மஹாயோகங்களுக்கெல்லாம் ஈசுவரனுய் பரபரம்மமான நாராயணனுகையாலே தம்முடைய பரமேசுவரத் தன்மைக் சிறானரூபத்தை அத்தை மகனை பார்த்தனுக்குக் காண்பித்தருளினர். அதுவோ நாநாவிதமாய் விசித்திரமாய் ஸகல லோகத்துக்கு மிடமாய் எல்லாவற்றையுமாஞமதாயுள்ளது.

அநேகவக்த்ரநயநமநேகாத்புததர்சநம்।
அநேகதிவ்யாபரணம் திவ்யானேகோத்யதாயுதம்।கo॥
திவ்யமால்யாம்பரதரம் திவ்யகந்தானுலேபநம்
சர்வாச்சர்யமயம்தேவ மநந்தம்விச்வதோமுகம்।கக॥

(கo-கக) அதாவது அனேக முகங்களுங் கண்களுமுடையதும் அனேக அற்புதங்களைக்காட்டுவதும் அனேகம் திவ்யாபரணங்களுடையதும் திவ்யங்களான அனேகம் ஆயுதங்களுடையதும் திவ்யமாலைகளும் வஸ்திரங்களுமணிந்ததும் திவ்யகந்தம் பூசியதும் ஸகல ஆச்சரியமானதும் பிரகாசமானதும் மூக்காலத்திலுமுள்ள ஸகலஜகத்துக்கு மிடமாயிருக்கையாலே தேசத்தாலாவது காலத்தாலாவது அளவிடப்போகாததும் எத்தத்திகிலும் முகங்களோடு கூடியது மாயிருந்தது.

திவிஸூர்யஸஹஸ்ரஸ்ய பவேத்யுகபதுத்திதா।
யதிபாஸஸ்ருசஸ்தஸ்ய பாஸஸ்தஸ்யமஹாத்மநஃ॥கஉ॥

(கஉ) ஆகாயத்தில ஆயிரம் சூரியர்கள் ஏககாலத்தில் உதித்தார்களாகில் அந்தமஹாத்மாவின் திருமேனிகாந்திக்கு ஒப்புச்சொல்லலாம். [என்றால் அசக்யமான தேஜஸ்வரூபமாயிருந்த தென்றபடி.]

தத்ரைகஸ்தம்ஜகத்க்ருத்ஸ்நம் ப்ரவிபக்தமநேகதா।
அபச்யத்தேவதேவஸ்ய சரீரேபாண்டவஸ்ததா।கங॥

(கங) (அளவில்லாதஅகலமும் நிகளமுமுள்ளதாய் அந்தமானதிருத்தோள் திருவயிறு திருமுசம் திருக்கண்களுடையதாய் அளவற்ற ஒளியோடு கூடியதாய் அளவறற திவ்யாயுதங்களணிந்ததாய் தனக்குத்தக்கபடி அபரிமிதமான திவ்யாபரணங்களுடையதாய், திவ்யங்களான திருமாலைகளும் திருப்பீதாம்பரங்களும் அணிந்ததாய் திவ்யமான சந்தனம் பூசியதாய் அந்த ஆச்

சரியமயமாயுள்ள) அத்தேவ தேவனுடைய திவ்யத் திருமேனியில், (நாலுவி தங்களாய்ப் பிரிக்கப்பட்டு, பிரமன்தொடங்கி அனேகவிசித்திரங்களான தே வர் திரியக்கு மனுஷியர் தாவரங்களென்கிற புசிப்பவரின் துகையாகவும், பூ மி ஆகாயம் சுவர்க்கம் பாதாளம் அதலம் விதலம் ஸுதலம் முதலிய போகஸ்த் தாநங்களாகவும் புசிக்கும் பண்டங்களாகவும் புசிப்பதற்கு வேண்டுங்கருவிக ளாகவும்) பலவாறுகப் பிரிக்கப்பட்டுப் பிரகிருதி புருஷரூபமாயுள்ள ஸகல லோகத்தையும் எங்கேயோ ஓரிடத்திலிருப்பதாக அர்ச்சுநன் பகவத்கடாக்ஷத் தாலடைந்த திவ்யநேத்திரங்களாலே கண்டுஸேவித்தான்.

தத்ரஸ்தம்விஸ்வமாவிஷ்ட மநேகவிதமாஸ்ரயம்|
பஸ்யாமிதேவதேவஸ்ய சரீரேபாண்டவஸ்ததா||கச||

(கச) அநந்தரம் தநஞ்சயனுனவன்,(மஹாச்சரியமாயுள்ள ஸகல லோகத் தையும் தம்திருமேனியில் ஓரிடத்தில் வைத்து அவைகளே யேவுகின்றவராய் அதிக ஆச்சரியமான அளவிறந்த ஞாநம் முதலிய கல்லியாணகுணங்களுக்கிட மாயுள்ள பகவானைப்பார்த்து ஆச்சரியத்தோடு கூடியவனுய் தேஹத்தில் மயி ர்க்கூச்சறையும்படி தடிபோல் விழுந்து ஸேவித்துக் கைகளைக்கூப்பிக்கொண் டு இந்தவிதம் விண்ணப்பம் செய்கிறான்.

பஸ்யாமிதேவாம்ஸ்தவதேவதேஹே ஸர்வாம்ஸ்ததாபூதவிஸேஷஸங்கான்|
ப்ரஹ்மாணமீஸம்கமலாஸநஸ்த்ம்ருஷீம்ஸ்சஸர்வாநுரகாம்ஸ்சதிவ்யாந்||கஙு||

(கஙு) ஹேஸ்வாமின்! தேவரீருடைய திருமேனியில் ஸகலமானதேவர்க ளையும் மற்றுமுண்டானப்பிராணிகளின் கூட்டங்களையும் அண்டாதிபதியான சதுர்முகப் பிரம்மாவையும் அப்படியே அவருடைய இச்சாநுவர்த்தியான சிவனையும் தேவரிஷிகள் தொடக்கமான வெல்லாருஷ்களையும் வாஸுகி தக்ஷ கன் முதலான அனேகம் ஸர்ப்பங்களையுங்காண்கிறேன்.

அநேகபாஹூதரவக்த்ரநேத்ரம் பஸ்யாமிரூபம்தவதேவவிஸ்வ
நாதம்நபஸ்யாமிதவாதிமத்யம்நசதவாதிம் பஸ்யாமிவிஸ்வ
விஸ்வரூபின்||கசு||

(கசு) அனேகம் கைகால் முதலியக்ரணங்களுடன் கூடி அநந்த ரூபமு யுள்ள தேவரீரை யெங்கும் பார்க்கிறேன். ஹே விச்வேசுவர! விசுவசரீரனுயி ருக்கிற தேவரீருக்கு ஆதி இதுவென்றும் மத்தியமிது வென்றும் அந்தமிது வென்றும் தேவரீரளித்த இந்தத் திவ்யநேத்திரங்களைக்கொண்டும் பார்க்கச் ச க்தியற்றவனுயிருக்கிறேன்.

கிரீடிநம்கதிநம்சக்ரிணம்சதேஜோராசிம் ஸர்வதோதீப்திமந்தம்|
பஸ்யாமிதாம்துர்நிரீக்ஷ்யம்ஸமந்தாதீப்தாநலார்கத்யுதிம்ப்ரமேயம்||கஎ||

(கஎ) தேஜோராசியாய் எங்கும் ஒளிவிடுகின்றவராய் எந்தப்புறத்திலும் பார்ப்பதற்குக்கூடாதவராய் ஜொலிக்கின்ற சூரியன் அக்கினி இவர்களுடை

யகாந்தியோடு கூடியவராய் அளவிட்டறியப்போகாதவரா யிருக்கும் தேவரீரை, கிரீடம் கதை சக்கிரம் இவைகளைத்தரித்தவராகச் சேவிக்கிறேன்.

கவிகூரம்வராஜம்விஷ்ணவம் கவிஷ்வுவிஷ்ணவம்நியாநந்| கவிவ்யஷ்டாஷ்டதயஜ்ஞமொஷ்டா ஷநாதநஷ்கவ்ரவ்ரஷ்டிதாஷ்ஷ

(கஅ) ஸ்வவிஷ்ணவே இத்யாதியான உபநிஷத்துக்களில் அறியவேண்டியதாகச் சொல்லப்பட்ட பரமமான அக்ஷரம் தேவரீரே! இ ஜ்ஜகத்துக்குமுக்கியமான ஆதாரமும் தேவரீரே? தேவரீர் எந்தஸ்வரூபத் தோடும் எவ்விதகுணங்களோடும் எவ்வித விபவத்தோடும் இருக்கின்றதோ அப்படியே எந்நாளுமிருக்கின்றது. நித்தியமான வைதிகத்தருமங்களை யெல் லாம் தேவரீரே இப்படி அவதாராதிகளைச்செய்து காப்பாற்றுகின்றது. வெ ஷாஹரைதம் வ்ரஷ்டிஹராஜம் என்றும் வராதரம் வ்ரஷ்டிஷ்டி என்றும் இப்படி சொல்லப்படும் ஸநாதநபுருஷன் தேவரீரே யென்று அறிந் தது கொண்டேன். [என்முல் இதுவரையில் யதுகுலதிலகமாக நினைக்கப்பட்ட தேவரீரை இப்பொழுது தான் இப்படிப்பட்டவரென் றறிந்துகொண்டேனென் றபடி.]

கநாஷியஸ்ராஜஸநஷவீரஸ் உநஷைவாஹரம்ஸஸிலஸ்ரஸ்நதந்| வஸ்ராதிக்ஷாஜீவஹரதாஸவக்ஷம் வ்ருஷ்தஜ்ஜவாவிஸ்வதிஷ்ஷவஷ்டி॥

(ககக) ஆதிமத்தியம் அந்தம் அற்றவராய் அளவற்ற ஞானம் பலம் வீரிய ம் முதலிய குணங்கள் பொருந்தியவராய் * கணக்கில்லாத கைகால் கண்முத லிய அவயவங்களோடுகூடியவராய் சந்திரனைப்போல் (அடித்தவரைக்) குளி ரநோக்கி சூரியனைப்போல் (கடித்தவரைக்) கடிக்கின்ற திருக்கண்களுடைய வராய் பற்றியெரியும் காலாக்கினிபோல் ஸம்ஹாரத்துக்கேற்ற முகங்களோடு கூடியவராய தேஜஸ்ஸாலே உலகத்தையெல்லாம் தபிக்கின்ற தேவரீரைப் பார்க்கின்றேன். [என்முல்—இப்படி ஸர்வத்துக்கும் கர்த்தாவாயும் ஸர்வாதா ராயும் ஸர்வத்தையும் ஆள்பவராயும் ஸர்வத்தையும் அழிப்பவராயும் ஞான ம் முதலிய அபாரமான குணங்களுக்குக் கடலாயும் ஆதிமத்தியாந்தரஹிதரா யுமிருக்கிற தேவரீரை இப்படிப்பட்ட திருமேனியோடு கூடியிருப்பவராகத் தேவரீர் உபதேசித்தபடி ஸாக்ஷாத்கரிக்கிறேன் என்றபடி.]

(அ-கை.) இப்படியிருக்குந் தேவரீரைப்பார்த்து தேவாதிகளும் அடி யேனும் மிகவும் பயப்படுகிறோமென்கிறான்.

ஷ்ராவாவ்யிவ்யாரிஷ்டஸ்தம்ஹி வ்யாப்தம்க்வயைகேந திஸ்ரஷ்ச வவ்ருஃ| ஷ்ரவ்ஷ்டஸ்தம்ரவிஷ்ரஸ்தவிஸ்ரஸ்தவிஷ்ரஸ்தம் லோகத்ரயம்வ்யதி யிதம்விஹாதஸ்ஸு॥உ०॥

(உ0) மேலுள்ள ஆகாசம், கீழே பூமி, இதற்கிடையிலுளள வெளிகள் இவைகளில், நிலைத்திருக்கின்ற எல்லா உலகங்களையும் தேவரீர் வியாபித்துக்

---

* ஒரு திருமேனியில் கணக்கில்லாத வயிறு முதலியவை யெப்படி கூடு மென்னில், ஒரு இடுப்பிலிருந்து மேலே அனேகம் வயிறு முதலியவைகளும் கீழே அனேகம் பாதம் முதலியவைகளும் கூடுமன்றே?

கொண்டிருக்கிறபடியால் இப்படி அதிகவிசாலமும் உயரமும் நிகளமும் பொருந்திப் பயங்கரமாயிருக்கும் தேவீருடைய திருமேனியைப்பார்த்து, ஓமஹாத்மாவே! பிரம்மா முதலிய தெய்வக்குழாங்கள் பித்ருக்கணங்கள் ஸித்தாள் கந்தர்வாள் யக்ஷாள் ராக்ஷஸாள் இவாளில் பிரதிகூலராயும் அநுகூலராயும் மத்தியஸ்த்தராயுமிருக்கும் இம்மூவுலகத்தவரும் $ நடுநடுங்கிப்போகிறார்கள்.

ஈதீஹிகூவாவ ரவஜூவிஶ்ரு கெஹிதீ தாரீ வ்ராஜ்ஞயொஶ்ர
ணதி | வவ்ரீ தரு கூ ராக்ஷஹவதி ஹ விஜ்வஜ்ஞாஃவ வதிக்ரூாம்வ தி
ஹிரீ வொஷ்டுராஹ்ரீஃ॥உக॥

(உக) இதோ உத்கிருஷ்டாளாகிய சிலதேவகணங்கள் விசுவரூபனுகியதேவரீரைக்கண்டு ஸந்தோஷித்து ஸமீபத்தில் நெருங்குகிறார்கள்; பின்னுஞ் சிலர் தேவரீருடைய பயங்கரமான ஆகாரத்தைப்பார்த்துப் பயந்தவர்களாய் அஞ்சலி பண்ணிக்கொண்டு தங்கள் ஞானத்துக்குத் தக்கபடி ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள்; பின்னுஞ்சில மஹாரிஷிக்கணங்களும் ஸித்தகணங்களும், பரதத்துவத்தையும் அவரதத்துவத்தையு நன்கறிந்தவராதல்பற்றி "ஸ்வஸ்தி" என்று சொல்லி வெகுசாய் ஸ்தோத்திரம் செய்கிறார்கள்.

ரூூராதி தரவஸவொயெவஸாய ரா விஶ்வஶ்ரி நளரூ தஶ்ரா
ஷவாஶ்ச| மருவ்யக்ஷாவஸ்ரூ ரவிஜ்வஜ்ஞா வீக்ஷதெக்ரூாம்விஶ்வி தா
ஶ்சைவஸவெ ரு॥உஉ॥

(உஉ) உருத்திரர் ஆதித்தியர் வசுக்கள் ஸாத்தியர் விசுவேதேவர்கள் அச்சுவனீதேவர்கள் மறுத்துக்கள் பித்ருக்கள் கந்தருவர் யக்ஷர் அசுரர் சித்தக்கணங்கள் எல்லாம் பரமாச்சரியத்தோடுகூடி ஸேவிக்கின்றார்கள்.

ரூூவம்ஹெதவெஹ்ரூவக்ரு நு தம் ஶஹாவொஹாவெஹ்ரூவா
ஹூரூவாஹி| வெஹூஶ்ரூம்வெஹ்ரூஹ்ரூம் வ்ராக்ரூராஷ்ரூம்ஹ்ரூவ்ரா வெரா
க்ரீவ்ரவ்யயிதாவ்யாஹி॥உந॥

(உந) அனேகம் கோரமான பற்களோடு கூடிய தேவரீருடைய ஆகாரத்தைக்கண்டு முன்சொன்னவர்களும் அடியேனும் பயந்தது இவ்வளவவ்வளவல்ல; மிகவும் பயந்திருக்கிறோம்.

நஶ்வ ப்ரூம்தீவ்ரஶ்நகுவணு்ம் வ்யாதா நம்தீவ்விஶ்ரா வெந
தூ| ஶ்ரவ்ரூவ்ரா ஹிக்ரூாவ்ரவ்யயிதாக்ரூாதா ய்ரு்கிம்நவிஹ்ராஜிஶ்ரம்
வவிஷ்ரோ॥உசு॥

(உசு) தஶ்ரூவொவாஶ்ரவெ்ரூஶ்நுஎன்றும், சூஷி தரு்வணு்ஜ
ஶ்வஸ்ரீவாவஸ்ரூாசு் என்றும் கூபஜ்ஞஶ்வரு்ஜ்வஸ்ரீவாராகெ என்றும், யொ

$ அர்ச்சுநனுக்குத்தான் விசுவரூபத்தைக் காணும்படி திவ்ய நேத்திரங் கொடுத்தார். பிரும்மாதிகளுங் கண்டபடி யென்னென்றால் - தனது ஐசுவரியத்தை முழுவதும் அர்ச்சுனனுக்குக் காட்டவேண்டுமென்று, அவர்களுக்குந் தந்தானென்றறிக.

ஸுலை ரூாய ரூக்ஷரீ வரஷெவை ரூாஶநு என்றும், இப்படி சுருதியில் சொல்லப்பட்டுளள பரமபதமென்கிற பரமாகாசம்வரையில் வியாபித்து மஹாப்பிரகாசமாய் அனேகவர்ணங்களுடன்கூடித் திறந்த வாய்களோடும் விசாலமான நேத்திரங்களோடுங்கூடிப் பயங்கரமாயிருக்கிற ஓ விஷ்ணுவே! தேவரீரைப் பாராதது அடியேன் கொஞ்சமும் தரிக்கஇலலேன்; மனம் பதறுகிறது; புலன்கள் கலங்குகின்றன.

ஒ ஂஷ்ட்ரகரரஷாஷா நிவதஜ்வா நிஜ்ஜ்வே வகரா ஜ்ஜவ நிஹா நி| ஜ்ஜிஸ்ரா நஜ்ஜா நந்ஜவஹவஸஜ்ஜ ரூவஸீஜ்ஜெவெஸஜ்ஜ நிவாவஸ்ஜ்ஜ||

(உரு) பிரளயகால அக்கினிபோல் எலலாவற்றையும் நாசஞ்செய்யும்படி கோரமாயிருக்கின்ற நும் திருமுகங்களைப்பார்த்து அடியேனுக்குத் திக்குத் தெரியவில்லை; சுகம்சிறிதும் அடையகில்லேன்; உலகத்துக்கெலலாம் இருப்பிடமாய் பிரம்மாதி தேவர்களுக்கெல்லாம் நாசனுகிய ஓ பகவானே! அடியேனிடத்தில் கிருபைபண்ணி யருளவேணுமிம் [என்றால, அடியேன் தரிக்கும்படி கடாக்ஷிக்க வேண்டுமென்றபடி.]

(அ-கை.) பிராணிகளின் இருப்புத்தரிப்புமுதலியவெல்லாம் தம் ஆதீனமென்று காட்டுவதற்காக எம்பெருமான், துரியோதனன் படையில் ராஜவேஷம்பூண்ட அசுரப்படைகளையெல்லாமொழித்துப் பூமியின்பாரத்தைத் தாமே தீர்க்கப்போகிறதெனகிற தம்முடைய திருவுள்ளத்தை யாச்சுநனுக்குக் காட்டியருளினார்; அவனும் எம்பெருமானுடைய படைக்குந்தன்மை முதலிய ஈசுவரத்தன்மையெலலாம் பார்த்து (அந்தப் பகவானிடத்தில்தானே இனி யழியப்போகிற) துரியோதனாதிகள் மடியும்படியையுங் கண்டவனுய்ச் சொல்லுகிறான்.

கூீஸவெஸ்ய்ரதராஷ்ட்ரஸ்ய வ்ரூத்ரா ஸவைவெஸ்ஸவைஹவாவ நிவாஜ்ஜஸவைஷ்ஷாஃ | ஹீஷ்மாத்ரூாணஸ்ஸூதவ்ரூத்ரஸ்ய தாவாஸள ஸஹாஸ்ஜீயொரவியொய்ஜ்ஜவெவ்ஃ||உசூ||

வக்த்ராணிதக்வரமாணாவிஶந்தி ரூம்ஷ்ட்ராகராளாநிஹயாநகாநி| கெசிச்சிலக்நாதஶநாந்தரேஷு ஸந்த்ருஶ்ய்ந்தெசூர்ணிதைருத்தமாங்கைஃ||உஎ||

(உசூ-உஎ) இதோ திருதராஷ்டிர குமாரர்களும் பீஷ்மரும் துரோணரும் கர்ணனும்,அந்தப் பக்ஷத்தைச்சேர்ந்த ராஜாக்களுடனும் நம்மவர்களைச் சேர்ந்த சிலவீரருடனும் அதிவேகமாய் கோரப்பற்கள நிறைந்த தேவரீருடைய திருவாயில் அழிவார்களாகப் புகுகிறார்களே, அதிற்சிலர் மண்டைசிதறிப் பல்லிடுக்குகளிலகப்பட்டுத் தொங்குகிறார்கள்.

யயா நதீ நாம்பெஹவொஃ ஸ்வாத்ரவெமாஸுத்ரூ தெவாஹித்ரவாத்ரூவதி| தயா தவாதீ நரலொகவீரா விஶந்திவக்த்ராண்யபிவிஜ்வலந்தி||உஅ||

யயாவ்ரூதீவ்ஜ்வலநம்வெதஜ்ஜா விஶந்தி நாஶாயஸமத்ரூவெமாஃ|
தயைவ நாஶாயவிஶந்திலொகாஸ்தவாவிவக்த்ராணிஸமத்ரூவெமாஃ

(உஅ-உக) இந்தராஜாக்களெல்லாம் ஆற்றுவெள்ளம் கடலிற்புகுவதுபோலும் விட்டில்பூச்சி பெருநதியிற் புகுவதுபோலும் தேவரீருடைய வாயில் தாமாய்அழிந்து போவதற்காக வெகுவேகமாய்வந்துவிழ்கிறார்கள்.

லெலிஹ்ருஸெஹ்ரஸமாந்ஸஜ்ஜதோ ஜ்வலந்முகாநுஸமவஹ்ரதே நவ
ஜ்வலஜ்ஜிஹ்வ| தெதஜ்ஜோஹிராவலோகாருஜமதிஹ்ரூம் ஹாஸஹ்ஸவொஹ்ராரிப்ர
தவதீவிஷ்ணோ||கூ0||

(கூ0) அப்படிப்பட்ட அவ்வரக்கர்கூட்டங்களையெல்லாம் ஜ்வலிக்கின்ற திருவாயில் விழுங்கும்பொழுது அதிக கோபத்தோடுகூட மேலுதட்டையும் கீழுதட்டையும் அடிக்கடி நக்குகின்றீர். தேவரீருடைய அதிபயங்கரமான கிரணங்கள் தம் பிரகாசங்களாலே உலகங்களெல்லாம் பரவ, அதனால் பிராணிகள் தவிக்கின்றன.

கூவ ராஹிஸெகொஹவா நாஹ்ரு ரூபவொ நஸொஹ்ஸ தெதெவ
வாவ்ருஸீஷ| விஜ்ஞாத நிஹ்ரூதிஹவதஸாஷ்ரு நஹிவ்ரஜா நா தி தவ
வ்ரவ்ரதீழ்||கூக||

(கூக) ஸ்வாமி! தேவரீருடைய நிரங்குசமான ஈசுவரஸ்வரூபத்தைக் காட்டவேண்டுமென்று அடியேன் வேண்டிக்கொண்டபடி அப்படியே ஸைவைஸாதித்தவர், மறுபடி இந்தக்கோரமான ரூபத்தைத் தரித்தீரே ஈதெதற்காகவோ இதை அடியேனுக்குத் தெரியச்சொல்வதோடு சாந்தமான வடிவத்தையும் அங்கீகரித்தருளவேண்டும்.

(அ-கை) அடியேனிடத்தில் பிரீதியாலே விசுவைசுவரியத்தைக் காட்டினவர் கோரரூபத்தையெடுப்பதற்கு என்ன காரணமென்று கேட்டதற்குப் பகவான் அர்ச்சுனனைப்பார்த்துத் தம் * திருவுள்ளத்தை யருளிச்செய்கிறார்.

ஸ்ரீ ஹ்ருவா நாவாச|| காலொஸ்மிலொகக்ஷயக்ருத்ப்ரவ்ருத்தோ லொகான்
காந்முஸோஹ தாந்ஸமாஹர்துமிஹப்ரவ்ருத்தஃ | ருதேபிகூ நாம்லவிஷ்யந்திஸர்வே
யெஸ்யெவந்ஹிதாஃப்ரதீகேஷ்வவஸ்தாஃ||கூஉ||

தஸ்மாத்த்வ மிஷ்யஸ்வயஸோலபஸ்வ ஜித்வாஸத்ரூன்பும்க்ஷ்வ ராஜ்யம்ஸ
ம்ருத்தம்| மயைவைதெ நிஹதாஸ்பூர்வமெவ நிமித்தமாத்ரம்பவஸவ்யஸாசின்||கூக||

(கூஉ-கூங) அர்ச்சுந! துரியோதனன் முதலிய ஸகல ராஜாக்களுடையவும் வாழ்நாளின் இறுதியை நாம் கண்டிருக்கையாலே அவர்களையெல்லாம் நாசஞ்செய்வதற்காகக் கோரமான உருவத்தோடுவளர்ந்து அவர்களை அழிப்பதேபயணாக இப்பொழுது ஆரம்பித்திருக்கிறோம். உன்னுடைய முயர்ச்சியில்லாமலே இந்தத் துரியோதனாதிகளும் மற்றும் உனக்கு எதிரிகளாய் நின்ற இவ்வீரர்கள் யாவரும் நம்முடைய ஸங்கல்பமாத்திரத்தால் நாசமடையப்போகிறார்கள். ஆகையால் அவர்களை யெதிர்ப்பதற்காக நீ எழுந்திரு; சத்துருக்களான அவர்களைஜயித்து கீர்த்தியைப்பெற்று தர்மமாய்க்கிடைத்த விராஜ்யத்தை அனுபவிக்கப்பார். இந்த துஷ்டர்கள் முன்னமே நம்மால் கொல்லப்பட்டபடியால், இரண்டுகைகளாலும் போர்புரியவல்ல நீ அதற்குக்கொஞ்சம் நிமித்தமாய்மாத்திரம் ஆகவேண்டும். [அதாவது நம்மால் போடப்பட்ட ஆயுதம்போலவிருந்து யுத்தம் புரியவேண்டும் என்றபடி]

---

* அர்ச்சுநனில்லாமலும் இந்தத்துஷ்டர்களை நாம் அழிக்கவே போகிறோமென்கிற தம் திருவுள்ளத்தை அர்ச்சுநனுக்குக்காட்டினால் அவன் யுத்தஞ்செய்யத் துணிவனென்பது எம்பெருமானுக்குத் திருவுள்ளம்.

ஜ்ரணம்வஹ்னிம்வஜயத்ரயம்வ கூண்டுதேயாநராநவிபொய
வீராநு| மயாஹதாம்ஸ்த்வம்ஜஹிமாவ்யதிஷ்டா யுத்யஸ்வஜேதாஸிர
ணேஸபத்நாநு||கூச||

(கூச) துரோணர், பீஷ்மர், கர்ணன் முதலானோர்களும் அபராதிக
ளாகையாலே நம்மாலேயே கொல்லப்படுவார்கள்; ஆகையால் அவர்களைப்ப
ந்துக்களென்றும், ஆசிரியர்களென்றும், போகத்தில் பற்றுடையவர்களென்
றும்நினைத்து இவர்களை நான் எப்படி வதைப்பேனென்று மனதிற்சிறிதும் வ
ருத்தமின்றி ஜயிக்கப்பார். இவர்களைக் கொல்வதில் உனக்குச் சிறிதும் தய
யென்பதேவேண்டாம். மேலும் யுத்தத்தில் ஜயமும் உனக்கே கிடைக்கும் எ
ன்றிவ்வாறருளிச்செய்தார்.

ஸஞ்ஜயஉவாச|| வனத்வாகேஸவமகுஸுவவ்யநம்கிரீடீ|
வேபாநமந்கிரீடீ| நமஸ்க்ருத்வாஹ்ருஷீகேஸமபாஷதகிருஷ்ணம் ஸகத்கதம்ஹி
தமீதமீடவ்யணேவ||கூகு||

(கூகு) ஆஸ்ரிதவாத்ஸல்ய ஸாகரமான வெம்பெருமானிப்படியருளி
ச்செய்யக்கேட்டு அர்ச்சுனன் அவனைத்தெண்டன் ஸமர்ப்பித்து மிகவும் பய
த்தாலே நடுநடுங்கி மறுபடியும் தெண்டன் ஸமர்ப்பித்து விழுவதெழுவதாய்
க்கைகளைக் கூப்பிக்கொண்டு எடுத்த சொல்லை முடிக்கமாட்டாதபடி இந்தவி
தம் விண்ணப்பம் செய்தான்.

ஹ்ருஷீகேஸதவப்ரகீர்த்யா ஜகத்ப்ரஹ்ருஷ்யத்யநுரஜ்யதேச|
ரக்ஷாம்ஸிபீதாநிதிஸோத்ரவந்தி ஸர்வேநமஸ்யந்திசசாரணஸங்கா
ஸித்தாஸங்கூ||கூசு||

(கூசு) வாரீர் இருடீகேச! இந்த யுத்தத்தைக் காண்பதற்காகவந்த தே
வர், கந்தருவர், சித்தர், இயக்கர், வித்தியாதரர், கின்னரர், கிம்புருடர் மு
தலானருள்ளிட்ட ஸகலலோகமும் தேவரீருடைய அனுக்கிரஹத்தாலே ஸர்
வேசுவரனான தேவரீரைச்சேவித்துத் தேவரீருடைய கீர்த்தியைக்கண்டுஸந்
தோஷிக்கின்றது. தேவரீரைக்கண்டு பயந்தவைகளான இவ்வரக்கர்குழாங்க
ளும் மூலைக்குமூலைப் பத்துத் திக்குகளிலும் பயந்தோடுகின்றன. ஆனால்
தேவரீருடைய பெருமைக்கு இவையெல்லாந் தகுந்தவைகளே.

கஸ்மாச்சதேநமஹாத்மந்நாதகர்த்ரேகரீயஸேப்ரஹ்மணோபீ
ஆதிகர்த்ரே|

(கூசூ) பிரமன் முதலானோருக்கும் பெரியனாய் ஆதிகர்த்தாவாயிரு
க்கும் தேவரீரை அந்தப்பிரம்மாதிகள் ஏன் வணங்கமாட்டார்கள்?

அநந்ததேவேஸஜகந்நிவாஸ ஸதஸ்தத்பரம்யத்||கூள||
த்வமாதிதேவஸ்புருஷஸ்புராண ஸ்த்வஸ்யவிஸ்வஸ்யபரம் நி
தாநம்|

(கூள-கூளஉ) ஹே அநந்த! தேவேச! ஜகந்நிவாஸ! நஜாயதேதீ்ய
தெவாவிவஸ்தி்கூஇத்தியாதியாகச்சுருதியிற் சொன்னபடிஅழிவற்ற ஜீவஸ்
வரூபமும் தேவரீரே;ஸத்தும் அஸத்தும் தேவரீரே;அதாவது நாமரூபங்களா
லேபிரித்தறியப்படுகையாலே காரியமான நிலையில் 'ஸத்'என்றும் அப்படி நா
மரூபங்களாலே பிரித்தறியப்போகாமையாலே காரணமானநிலையில் 'அஸத்'

என்றுஞ்சொல்லப்படுகிறப் பிரகிருதியும் தேவரீரே. இப்படிப்பட்டப் பிரகிருதி தத்துவமென்ன இத்தப்பிரகிருதியோடுகலந்த ஜீவதத்துவமென்ன இவ்விரண்டையுங்கடந்த முக்தஸ்வரூபமான தத்துவமெதுவோ அதுவுந் தேவரீரே. ஆகையால் தேவரீரே ஆதிதேவனும், புருஷனும், புராணனும், இவ்வுலகுக்கெல்லாம் ஆத்மாவாய்நின்று தரிக்கின்ற ஆதாரப்பொருளும்.

வேதாவித்³யோவாப்யோ விதா³ஸ்வயாஸி கு³ணத்ரயாதீ³தோ ரூபாதீ³தோ ஜக³த்³ரூபோ ஜக³த்ஸாக்ஷீ ஜக³த்பதி: ॥ ஈ ॥

(ஈ) உலகத்தில் அறியுமவைகளாயும் அறியப்படுமவைகளாயுமிருக்கின்றவெல்லாம்தேவரீரே. இப்படி ஸாவஸ்வரூபனு யிருக்கையாலே யாவராலும் அடையப்படும் ஸ்தானமும் தேவரீரே. சேதநாசேதநரூபமான இவ்வுலகங்களெல்லாம் ஆதமாவான தேவராலே வியாபிக்கப்பட்டிருக்கின்றன.

(அ-கை.) ஆகையால் வாயுமுதலிய சொற்களுக்குப் பொருளாந தேவரீரே யெனகிறான்.

வாயுர்யமோ(அ)க்³நிர்வருணஸ்ஸஸாங்கஸ்தே ப்ரஜாவதிஸ்ஸம்ப்ரவிதாஸி ஹரஸ்ஸ|

(ஈஅ) வாயு யமன், அக்கினி, வருணன், சந்திரன் எல்லாம் தேவரீரே. (ஸகலமானப பிரஜைகளுக்கும் பிதாக்களான பிரஜாபதிகளுக்கும் பிரமனுர் (ஸகலப்பிரஜைகளுக்கும் பிதாமஹன்;) அந்தகைத்த பிதாவாகையாலே அவர ஸகலப்பிரஜைகளுக்கும் பிதாமஹன்;) அந்தகைத்த அவருக்கும் தேவரீர் பிதாவாகையாலேயெல்லாருக்குந் தேவரீர் பிரபிதாமகன்.

நமோ நமஸ்தே(அ)ஸ்த்வஹஸ்ஸ்ரக்ஷே நமோ நமஸ்தே நமஸ்தே ॥

நமஸ்தேஸ்து ஸஹஸ்ரக்ருத்வஸ்தே நமோஸ்து புனஸ்ஸ புனர்நமஸ்தே நமஸ்தே ॥

(ஈக-ஈகஉ) தேவரீரை ஆயிரந்தடவையாய்த் தண்டன் ஸமர்ப்பிக்கிறேன். மறுபடியும் பலதடவையாய் தேவரீரை நமஸ்கரிக்கிறேன். ஹஸ்ரவஸ்வரூப! தேவரீருக்கு முன்னும் பின்னும் பக்கங்களிலும் எங்கும் எல்லாப்படிகளாலும் நமஸ்காரம் உண்டாகுக.

அநந்தவீர்யாமிதவிக்ரமஸ்த்வம் ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வஸ்ஸ ॥சு०॥

(சo) ஓ அளவற்ற வீரியமுள்ளவனே! உமது விக்கிரமத்தை யிவ்வுலகமென்றுஒருவரால் வரையறுக்கப்பேராமோ? ஸகல வஸ்துக்களையும் (ஆத்மாவாய) வியாபித்திருக்கிறீராகையால் ஸர்வமும் நீரே.

ஸகேதி மத்வா ப்ரஸபம்யதுக்தம் ஹே கிருஷ்ண ஹே யாத³வ ஹே ஸகே இதி | அஜாநதா மஹிமாநம்தவேத³ம் மயாப்ரமாதா³த்ப்ரணயேந வாபி ॥ சக ॥

யச்சாவஹாஸார்த²மஸத்க்ருதோஸி விஹாரஸய்யாஸநபோஜநேஷு | ஏகோத²வாப்யச்யுத தத்ஸமக்ஷம் தத்க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம் ॥சஉ॥

(சக-சஉ) ஓ அச்சுத! அளவற்ற வீரியமும் அப்படிப்பட்ட பராக்கிரமமும் ஸகலப்பிராணிகளுக்குப் புருஷனாயிருப்பதும் இனமென்றுமிப்படிப் பலப

டியாகவுமிருக்கின்ற தேவரீருடைய மஹிமைதெரியாமல் அடியேன் அக்ரூரத்தாலும் அதிகபரிசயத்தாலும் தேவரீரைத் தோழனென்று நினைத்து, அடா கிருஷ்ண! அடாதோழா! அடா யாதவா! என்று சிறிதும் விநயமில்லாமல் அழைத்து வந்தேனே! என்னையனே! ஸர்வவிதத்திலும் ஸத்காரிக்கவேண்டிய தேவரீரை இப்படியிழித்துப்பேசினேனே! இன்னும் படுக்கும்பொழுதும் கூடியிருக்கும்பொழுதும் ஸஞ்சரிக்கும்பொழுதும் போஜநஞ் செய்யும்பொழுதும் அடியேன் செய்தபிழை கணக்கில்லை; ஆகையால் அவைகளையெல்லாம் கிருபையாய்ப்பொறுத்தருளவேண்டும் என்னப்பனே!

விதாவிரொகுவை வராவரவை கூவிவைவெஜுஹு முரு முரீயாநு | நகுதஹொவ்தலுயிகரிகு-தொநுரொகுத்
யெவுவுதிவ்வுஹாவு॥சஙட॥

(சஙட) ஒப்பில்லாதப் பிரபாவந்தங்கிய ஓபகவானே! சராசரரூபமானஸகல லோகத்துக்கும் தேவரீரே பிதாவாயும் குருவாயும் இருக்கையால் எல்லாராலும் பூஜிக்கத்தகுந்திருக்கிறது. ஆகையால் இம்மூவுலகத்திலும் கருணை முதலிய எவ்விதக்குணங்களாலும்தேவரீருக்குஸமானமானவாள்கிடையாது; அப்படியிருக்க அதிகரையெ ஒருவனிருப்பதேனவென்கிற ஸந்தேஹத்துக்கு இடந்தானுண்டோ?

தவ்ஹாதணைவுவுணியாயகாயம் வுவாஹயெகுவாவிஹ்ஹீஹு தீவுழி | விதிதவவொதுவஸுவெவவவவொ? வியாயாவஷுவி
ஹெவவொவுழு॥சஙஅ॥

(சஙஅ) யாவர்க்கும் பிதாவாய் யாவராலும் பூஜிக்கப்படும் குருவாய் கருணைமுதலிய குணங்களால் ஸர்வாதிகரையிருக்கையாலே ஸர்வேசுவரனை தேவரீரைத் தண்டன்ஸமர்ப்பித்துக் கெஞ்சுகின்றேன். குற்றஞ்செய்தவரையினும், புத்திரன் பிதாவைவணங்கிரகில் அந்தப்பிதாவும், அப்படியே இஷ்டமானவன் அவன்தோழனைத் தண்டனிட்டு வேண்டிக்கொண்டாரகில் அந்தத் தோழனும், இரங்குவதுபோல் அடியேனிடத்தில் விசேஷகடாக்ஷமுள்ளவரானதேவரீர் பிரியரனை அடியேனுக்காக வெல்லாவற்றையும் பொறுத்தருளவேண்டும்.

கூஹுவுவெவும் ஹுவதிதாவிஹுவுஷ்டா லயெநவவுவுயி
கம்விநாவெ | தவெஹவிவெஹுஸுயவிஹுவரவெவம் வுவலீஹுவெஹுவெஸுஜு
முநிவாலு॥சஙஆ॥

(சஙஆ) ஒருநாளுங்கண்டிராத தேவரீருடைய உக்கிரமான விசுவரூபத்தைக்கண்டு அடியேனுள்ளங் களிசூர்ந்தது. மறுபடியும் பயத்தால் நடுங்கிப்போகிறது. ஆகையால் ஸகலலோகத்துக்கு மிருப்பிடமாய் பிரம்மாதிகளான ஸகலதேவர்களுக்கும் ஈசனான தண்டவனே! அடியேனுக்கு முன்போலவே தேவரீர் ஸௌம்யஸ்வரூபமான திருமேனியோடு லைவைஸாதித்தருளவேண்டும்.

கிரீடிநம்மதிநம்வகுஹுவுஸ்தி வாதிகூவாஹுவுஷ்டஹ்ஹம்தயெவு|
தெவிநவுஸுவெணவுதஹுஸுஜநவஸுவுவொவுஹவவி
பவுஸுமிதுஸு॥சஙக॥

(சசு) ஓஸ்வாமி! முன்போலவே கிரீடமும் கதையும் திருச்சக்கரமு மாகத்தேவரீரை ஸேவிக்க விரும்புகிறேனுகையால் ஆயிரந்திருக்கைகளுள் ளதிந்த விசுவரூபத்தைமாற்றிச் சதுர்ப்புஜமையிருந்த † முன் ஸேவையையே ஸாதித்தருளவேண்டும்.

ஸ்ரீ ப⁴க³வாநுவாச॥ ஸுது³ர்த³ர்ஶமித³ம் ரூபம் த்³ருஷ்டவாநஸி யந்மம। தே³வா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் த³ர்ஶநகாங்க்ஷிண:॥ சஉ॥

(சள) அதற்கு எம்பெருமானருளிச்செய்வது:—அர்ச்சுந! தேஜோ மயமாய் விசுவரூபமாய் ஆதிமத்தியாந்தரஹிதமாய் ஸகலபதார்த்தங்களுக் குமாதியாயிருக்கிற இந்த நம்முடையரூபத்தை உன்னைத்தவிர மற்றொருவ ருக்கும் நாம் காட்டினதில்லை; கேவலம்நம்மிடத்தில் பக்தியுள்ளவனையிருக்கி றுயென்று நமது ஸத்திய ஸங்கல்ப யோகத்தாலே உனக்கு நாம் இந்த துர்ல பமான ஸேவையைத்தந்தோம்.

(அ-கை.) பக்தியைத்தவிர மற்றொன்றாலும் தம்மை உள்ளபடி யறிவ தரிதென்கிறார்.

நவேத³யஜ்ஞாத்⁴யயநைர்ந தா³நைர்ந சாபி³ர்யாபி⁴ர்தபோபி⁴:। ஏவம்ரூபஶ்ஶக்ய அஹம்நृலோகே த்³ரஷ்டும்த்வதந்யேந குருப்ரவீர॥ சஅ॥

(சஅ) அர்ச்சுந! இப்படிப்பட்ட நம்முடைய உண்மையானநிலையை நம்மிடத்தில் பக்திமாணை உன்னைத்தவிர மற்றவர்களால் நிரதிசயமான பக் தியுண்டாகுல் மாத்திரம் அறியலாமேயல்லது மற்றப்படி யக்ஞத்தாலாவது தானத்தாலாவது மற்றுங் கிரியைகளாலாவது உக்கிரமான தவத்தாலாவது எத்தாலும் அறியப்போகாது.

�மா தே வ்யதா²மா ச விமூடபா⁴வோ த்³ருஷ்ட்வா ரூபம் வை ம்ருʼதீத்³ருʼங்மமேத³ம்। வ்யபேதபீ⁴:ப்ரீதமநா: புநஸ்த்வம் தத³ேவ மே ரூபமித³ம்ப்ரபஶ்ய॥ சக॥

(சக) இப்படிப்பட்ட கோரரூபத்தைக் காண்பதனுல் நீ தொந்திரவு பட்டு மயங்கிப்போகாதே; உனக்குப் பழக்கமான முந்திய ஸௌம்மியரூபத் தையே காட்டுகிறேன் அதையேகண்டு ஸேவி.

(அ-கை.) ஸஞ்சயன்சொல்வது.

ஸஞ்ஜய உவாச॥ இத்யர்ஜுநம்வாஸுதே³வ ஸ்ததை²வோக்த்வா ஸகம்ரூ மஹாத்மா। பூ⁴ய: ஸ்வரூபம் த³ர்ஶயாமாஸ பூ⁴ய: ஆஶ்வாஸயாமாஸ ச பீ⁴தமேநம்பூ⁴த்வா॥ ருo॥

---

† ஸர்வேசுவரனை இந்த பரமபுருஷன் லோகோபகாரார்த்தமாகப்பூ மியில் மனுஷ்யனையவதரித்தபோது சதுர்ப்புஜனுகவே அவதரித்தார்; உடனே தேவகீ வஸுதேவர்களிருவரும் வேண்டிக்கொண்டதின்பேரில் கம்ஸனைக் கொல்லுகிறவரையில் இரண்டுதிருத்தோள்களுடனிருந்து பின்னிட்டு நான்கு திருத்தோள்களுடனே யெழுந்தருளியிருந்தார். சத்துருவான சிசுபாலனும் உதாரவீரபதநுஷ்டவாநுஹம்ஸஜவகுமதாயரே என்று ச

(ரூ0) இப்படி பாண்டுகுமாரனைப்பாத்து பகவான் அருளிச்செய்து மறுபடியும் தம்முடைய சதுர்ப்புஜமான திருமேனியோடுகூடி ஸைவஸாதித்தார்; அதுவுமின்றி பழக்கமில்லாத ஸ்வரூபத்தைக்கண்டுபயந்த இவனைப் பழக்கமான திருமேனியோடு கூடியவராயிருந்து ஸமாதானமுஞ்செய்தார்.

ஈஜு॰நஉவாவ॥ஆவ்ஷ்ஒஂமா நஂஷஂஸ்மவம் தவஸளஶ்ஜ்ஞாஒ॰ந| ஐஒா நீஶஸ்விஸம்வ்யதஸ்வெதார்ஃவ்ய கூ்யதிம்மதஃ॥ரூக॥

(ரூக) அர்ச்சுநன் சொல்லுகிறான் - ஓ ஜநார்த்தந! அளவில்லாத அதிசயம்பொருந்திய லாவண்யம் ஸௌந்தர்யம் ஸௌகுமார்யம் முதலான வைகளோடு கூடியதாய் தேவர்களுக்கே உரியதாய் மிகவும் ஸவும்மியமாயுள்ள மனுஷ்யாகாரமான இத்திருமேனியை ஸேவித்தபின்புதான் அடியேனுக்குப் ப்ராணனும் நிலைத்துப் பிரக்ஞையும் வந்தது.

ஸ்ரீ ஹமவாநுவாவ॥ ஸஂஒ॰ஒ॰ஸ்ருஶ்தீஒ॰ஸ்மவம் ஒ்ஜஷ்டவாந வியஂநஶ| ஔவாகூவ்ருஸ்ருஸ்மவஸ்ருநிதர்ஶ்ருஸ்ருநகூாஜ்ஜ்ஞணஃ॥ ॥

(ரூஉ) அதற்கு எம்பெருமானருளிச்செய்வது. அர்ச்சுந! இப்பொழுது உனக்குக்காட்டின இந்த நம்முடைய (யாவனையுமாளும்படியான) ரூபத்தைக்காண்பதற்கு ஒருவராலும் முடியாது. இதை ஸேவிக்கவேண்டுமென்று தேவர்களெல்லாம் எத்தனையோகாலமாய் எதிர்பார்த்திருக்கிறார்களே யல்லது ஒருவராவது ஸேவித்ததில்லை.

(அ-கை.) அதெதிறலென்றால்.—

நாஹம்வேதைர்நதபஸா நதாநேந நசேஜ்யயா|
ஶக்ய ஏவம்விதோத்ரஷ்டும் த்ருஷ்டவாநஸீதாம்யஹம்॥ரூக॥
ஹக்ருஷ்ணநஸ்ருயாஶக்ர ஈஹதேவம்விதோஜ்ஜுந|
ஜ்ஞாதும்த்ரஷ்டும்வதக்ஷ்ணஞ்ச ப்ரவேஷ்டும்ச பரந்தப॥ரூச॥

(ரூக-ரூச) வேதங்களை ஓதுவது ஓதுவிப்பது முதலியவைகளாலாவது யாகத்தாலாவது ஹோமத்தாலாவது தவத்தாலாவது, பக்தியில்லாமல் மற்றெவ்விதத்தாலும் நம்மை உள்ளபடியே காண்பதரிது; மற்றப்படி நம்மையே நாடியபக்தியுண்டானால் மாத்திரந்தான் சாஸ்திரத்தைக்கொண்டு நம்மை உள்ளபடியறியவாவது ப்ரத்யக்ஷமாய் ஸேவிக்கவாவது அடையவாவது கூடும். இப்படியேசுருதியும் நாயஂதாவ்யவஸ்ருநஸ்ருயாநயேயாநவேஹஂநாஸ்ருதநயஶ்ருதவ்யணஂதஸ்ருதநஸ்ருஹ்யஸ்ருவிவக்ஷஸ்ருதாவிவ்யணஂதஸ்ருதநஸ்ரும்வ்யாழ்॥ என்று சொல்லுகிறது.

ஒதஶ்ருகூ்யநதாஸஶோ ஶஸ்ருகஸஹவஜ்ருதஃ|
நிவைழ்ருஸஸவழ்ருஹஸ்ருமேதஷஂ யஸஸாஶ்ரேதிவாணவ॥ரூஞ॥

(ரூஞ) வேதமோதல் முதலான ஸகலகர்மங்களும் நம்முடைய ஆராதநரூபமென்று செய்பவனும், எந்ததொழிலைச்செய்தாலும் எல்லாம் கிருஷ்ண

தர்ப்புஜனாகவே எந்தவேளையும் நினைத்திருந்தான்; ஆகையினால் அர்ச்சுநன் சதுர்ப்புஜனாகவே முன்பு ஸேவித்ததாகச் சொல்லப்படுகிறது.

ணனுக்கென்று செய்பவனும், நம்மிடத்தில் மிகுந்தபக்தியாலே நம்மைப்பாடியும் சிந்தித்தும் அர்ச்சித்தும் பணிந்தும் பொழுதுபோக்குமவனும், இன்னுமிப்படி நம்விஷயமாகவே காலத்தைக்கழிக்காவிடில் தரிக்கமாட்டாமலிருபபவனும், நம்மையேபற்றியிருக்கையாலே மற்றவைகளிற் பொருந்தாதவனும் ஒருப்பிராணியையும் பகைக்காதவனும் (அதாவது:—நம்மைப்பிரிந்தால் துயரமும் நம்மைக் கூடினால்கொண்டாட்டமுமா யிருப்பவனுகையால் தனக்கு ஏதேனும் துயரம் நேரிட்டால் அது தான்செய்தபிழையின் பயனென்று நினைபபதனாலும் ஸகலபூதங்களும் பகவானுகிய நமக்கு ஆட்பட்டதென்று நினைப்பதனாலும் ஒரு பூதத்தையும் பகைப்பதற்குக் காரணமில்லாமையாலே பகைக்காதவனும்) எவனே, அவன் தோஷங்கள் யாவையுமொழித்து எப்போதும் நம்மையே அநுபவிப்பவனுவான்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

பதிநேராவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பனிரண்டாவது அத்யாயம்.

அவதாரிகை.

பக்தியோக நிஷ்டர்களுக்குப்பயலுய் பரப்பிரம்மமாய் பரமபுருஷனுயிருக்கிற ஸ்ரீமந்நாராயணனுடைய, தடையற்ற ஐசுவரியத்தைக் காணவாசைப்பட்டவர்ச்சுநனுக்கு, அளவில்லா வதிசயம் பொருந்திய கருணை, தண்ணளி, வண்மைமுதலிய கல்யாண குணங்களுக்குக் கடலாய் விளங்குகின்றஸத்தியஸங்கல்பனை ஸ்ரீகிருஷ்ணபகவானுல், தம்முடைய ஈசுவரத்தன்மையானது உள்ளபடியே காண்பிக்கப்பட்டதென்றும், அப்படியே எம்பெருமானை உள்ளபடியே சாஸ்திரமுகத்தாலறிவதும் பிரத்தியக்ஷமாய்க் காண்பதும் மறறப்படி எப்போதும் அவன் ஸந்நிதியிலிருப்பதும் எல்லாம் அவனைவிட்டு நீங்காத பக்தியுண்டாகில்தான் கிடைக்குமென்றுஞ் சொல்லப்பட்டது. இப்பொழுது ஆதமப்பிராப்திக்குச் சாதநமான ஆத்மோபாஸநத்தைக்காட்டிலும் பக்திரூபமான பகவத் உபாஸநம் (பலனை வருத்தமின்றி விரைவில்அளிக்குமாகையால்) $ சிறந்ததென்றும், எம்பெருமானை உபாஸிக்கவேண்டுமுபாயங்களினைவையென்றுஞ் சொல்லப்படுகின்றது.

$ சிறந்ததென்கிற விஷயம் பொதிநாலிலவெட்டிஷாஜுதெ நாஞ்சாதாநா|ஸ்ரு ஜாவாநுஜுதெயொசாபஹெயெகுதெசாஜுதெ: என்கிற விடத்தில் சொலலப்பட்டது.

ஈஜு॒நஉவாவ॥ வனவம்ஸ தத்ய॒ கூாயெ ஹ கூாஸ்ஸாம்வாஸ்ய॒॒வா
ஸ்ஸித| யெவாவ்ய॒ கூாஸவ்ய॒ கூம் தெஷாம்கெயொமவித்தோ॥ க॥

(க) அர்ச்சுநன் சொல்வது:—ஓபகவானே! தேவரீர் கீழே அருளிச் செய்தபடி தேவரீரையே யெப்பொழுதும் பெரும்பயனுக நினைத்த பக்தர்களாய், தேவரீரை (ஸகல ஐசுவரியத்தோடு கூடியிருப்பவராகவும், அளவிலா வதிசயம் பொருந்திய ஸௌந்தரியம் ஸௌசீல்யம் ஸர்வஜ்ஞத்வம் ஸத்யஸங்கல்பத்வம் முதலிய வெண்ணிறந்த குணங்களுக்குக்கடலாயிருப்பதாகவும்) எவர்கள்உபாஸிக்கிறார்களோ அவர்களும், எவர்களாலல்அக்ஷரமென்கிறபிரத்யக்ஆத்ம ஸ்வரூபத்தை (அதாவது முக்தஸ்வரூபமானஜீவனை) கண்முதலிய புலன்களாலறியப்படாதென்பதாக உபாஸிக்கிறார்களோ அவர்களுமான இவ்விருதிறத்தாரில் தாங்கோரிய பயனை விரைவில் கிடைக்கப்பெறுவார் யாவர்? அதை யருளிச்செய்யவேண்டும்.

ஸ்ரீ ஹவா நாவாவ॥ யய்வாவெஸ்ய்ஸ்தெ நாயோம் நித்ய்யா கூாஸ்தித| ஸ்ரத்தயாவாயொவெதா ஸ்தெயே கூதஸ்தாஸ்தாः॥

(உ) எம்பெருமானருளிச்செய்வது:—மிகவும் நம்மிடத்தில் பிரீதியாலே மனதை நம்மிடத்தில் வைத்து மிகுந்த சிரத்தையோடு கூடி நித்தியமாய் நம் ஸன்னிதியிலிருப்பையாசைப்பட்டு யாவர்கள் நம்மை உபாஸிக்கிறார்களோ அவர்கள்தான் மிகவும் யுக்தாள்; [அதாவது தாங்கோரிய பயனையிருக்கிற நம்மை விரைவில் வருத்தமின்றி யடையுமவர்களென்றபடி.]

யெகூவகூாஸ்தநிஷ்டாஸ்ய்ய் ஸ்வய்ய் கூம்வாய்॒வாஸ்தித|
ஸவ்ய்தூ்ரமஸ்தவிஷ்ஜ்ய்ய்ம கூேடஸ்ஸுஸ்தஸ்வய்ம்ய்॒॒வழ்॥ ங॥
ஸந்நியஸ்ய்ய்ஸ்ய்ந்த்ரியக்ராமம் ஸவ்ய்தூ்ரஸமபு॒॒ஜயः|
தெவ்ய்ராவ்॒॒வதிஸாதஸ்தவ ஸவ்ய்பூ்தஹிதெ ரதாः॥ ச॥
கூேஸாயிகூதாஸ்தவஷ்டாஸ்தவ்ய்தூ்காஸகூதெவஸாழ்|
கூவ்ய்தூ்காஹிமதிஷ்டு॒॒ர்ஏவம் ஜ்ஞாவஸ்ஸ்ரவாவ்ய்தெ॥ ஞ॥

(ங-ச-ஞ) எவர்கள் பிரத்யகாத்மஸ்வரூபத்தை (அதாவது ஜீவனை) தேவனென்றுவது மனிதனென்றுவது மற்றும் எந்தவிதமாகவாவது குறிக்கத்தகாததாகவும், ஆனதுபற்றியே கண்முதலிய புலன்களுக்குப் புலப்படாததாகவும், தேவர்முதலிய சரீரங்களிலெல்லாமிருக்கச்செய்தே அவ்வவ்விதமாக நினைக்கத்தகாததாகவும், ஆனதினாலே அந்தந்த தேவாதிகளுக்கடுத்த உருவங்களில் கட்டுப்படாததாகவும், விகாரமற்றதாகையாலே தன்வடிவத்தினின்று மாறுபடாததாகவும், ஆனதுபற்றியே நித்தியமானதாகவு மிப்படியெல்லாமிருப்பதாக உபாஸிக்கிறார்களோ, அதுவுமின்றி உபாஸிக்கும்போது கண்முதலிய புலன்களையெல்லாம் தந்தம் வியாபாரங்களினின்றுமடக்கி ஸமபுத்திகளாய், (அதாவது ஆத்மாவானது ஞாநமேவடிவமாய் எங்கும் ஒரே ரீதியாயி

ருக்கிறதென்று நினைத்தவர்களாய்) அதனல் ஸகல பூதங்களிடத்தும் பிரீதி யை யொழித்தவரா யிருக்கிறார்களோ; அவர்கள் ஸம்ஸாரத்தி னின்றும் விடுபட்டு நமக்கு ஸமமாய் விளங்குகின்ற * முக்தஸ்வரூபத்தை யடைகின் றார்கள்.

(அ-கை.) எம்பெருமானை உபாஸிப்பவர்கள்தான் யுக்ததமானென் கிற விஷயத்தைத் தெளிவாயருளிச்செய்கிறார்.

யெ த்வவ்ருணிகுஶ்ருணி ஶயிவஸ்ந்ருஸ்ருஶ்துராஃ|
கூநெநருநெநவயொமெந ஶாம்ய்ராயஜ்ஞெஉவாஸவெத||கூ||
தெஷாஶ்ஹம்ஸ்ஶ்ஜ்வதாம்ர்ஜ்ய தெந்ருஸ்ம்ஸாரஸாகரா|
ஸவாதி நஸீராதாயாம்ர் ஶயிராவெஶிதவெதஸாம்||எ||

(கூ-எ) எவர்களானல் தேஹத்தைத் தரிப்பதற்காகச் செய்யவேண் டுஞ் சில (லௌகிக) கர்மங்களையும், யாகம்,தானம், தவம், ஹோமம் முதலிய வைதிககர்மங்களையும்,அவற்றின் காரணங்களோடும் உத்தேசத்தோடும் நம்மி டத்தில் ஸமர்ப்பித்து நம்மையே பெரும்பயனையெண்ணி வேறுயாதொன்றை யும் விரும்பாமல் நம்மைத்தியானஞ்செய்து உபாஸிக்கிறார்களோ (அதாவது- தியானம் அர்ச்சனம் பிரணமம் ஸ்துதி கீர்த்தனம் முதலியவைகளை ஸ்வயம் போக்கியமாயும் பரமப்பிராப்பியத்துக்கு ஸமமாயுஞ் செய்து வருகிறார்க ளோ) அவர்களை, நம்மோடு சேரவொட்டாமல் விரோதிக்கின்ற யமனை ஸம்ஸாரத்தினின்றும் வெகு சீக்கிரத்தில் விடுவிக்கிறோம்.

ஶயெவ்வஸ்நகூயத்ர ஶயிவ்ஸ்ந்ருஸ்ருஶ்ம்நிவெஶய|
நிவஸிஷ்யஸிஶயெவ்வ கூதஉளய்வ்ம்நஸம்ஶய||அ||

(அ) ஆகையால் எளிதில் விரைவில் கிடைக்கின்ற நிலையில்லாத பெரு ம்பயனையிருக்கிற நம்மிடத்தில்தானே மனதைவைத்து நாமேதான் அடைய வேண்டும் பேறென்கிற வெண்ணங்கொள். இப்படியானல்தான் அதற்குமே ல் நம்மிடத்தில் தானே நித்தியமா யிருந்துவாழ்வாய். இதில் சிறிதும் ஸந் தேஹமில்லை.

கூயதி ந்ம்ஸ்ரோயாந்ம் நஶகோஷ்டிஶயிஷ்யதி|
கூஸ்ருராஸ்யொமெநதெதா ஶாதிவாவ்ம்ய நஜ்ஜயா||கூ||

(கூ) அர்ச்சந! விரைவில் நம்மிடத்தில் சலியாமல் மனம் வைக்க உ ன்னுல் ஆகாதபக்ஷத்தில் அப்பியாஸயோகத்தாலே நம்மை யடையவிரும்பு; [அதாவது - ஸ்வபாவமாகவே எல்லையில்லாத வதிசயம்பொருந்திய ஸௌ

---

* முக்தஸ்வரூபம் எம்பெருமானுக்கு ஸமமாய் விளங்குகிறதென்கி ற விஷயம், ஜிஷ்ணோர்ரூபஸாம்யாபத்திஃ என்று மேலே அருளிச்செய்யப்போ கிறானன்றே? சுருதியும் நிராஜநம்வைஷ்ணவாஸ்ம்ருஜ்ய்வைதிரென்று சொல் லுகிறது. அப்படியே அகூரசப்தத்தால்சொன்ன முக்தஸ்வரூபத்தைக்காட்டி லும் பரப்பிரம்மம் வேறுபட்டிருக்கிறதென்கிற விஷயமும் கூடவுள்ளாகூ ராஸ்ருத்வ உதஜிவ்ராஷ்ஸ்ருர் வாராதத்ர்ஷாஹ்யதஃ என்று மேலே சொல்லப்படுகிறது.

ந்தரியம் ஸௌகுமாரியம் ஸௌஹார்த்தம் வாத்ஸல்யம் காருண்ணியம் மாதுரியம் காம்பீரியம் ஔதாரியம் சௌரியம் வீரியம் பராக்கிரமம் ஸர்வக்ஞத்வம் † ஸத்யகாமத்வம் $ ஸத்யஸங்கல்பத்வம் ஸர்வேசுவரத்வம் ஸகலகாரணத்வம் முதலிய கல்லியாண குணங்களுக்கெல்லாம் ஸாகரமாய், ஸகலஹேயங்களுக்குமெதிர்த்தட்டாயிருக்கும் நம்மிடத்தில் எல்லையில்லாதப் பிரீதியையுட்கொண்ட ஸ்மிருதி ரூபமான அப்பியாஸயோகத்தாலே மனதை ஸ்திரமாகநிறுத்தி நம்மை யடையப்பாரென்றபடி.]

கூஹ்ருாவெஷவ்ருஷஜியெ-ுாவஸி உதுஜு-ுவாரஜொஹவ|
ஜஜய-ுஜவிகுஜ-ுாணி கூவ-ுநுவஸிஜிஜவாவ்ருஸி ||கo||

(கo) இனி யிப்படிப்பட்ட அப்பியாஸஞ்செய்வதிலும் உனக்கு ஸாமர்த்தியமில்லாத பக்ஷத்தில் நம்முடைய கைங்கரியங்களைச்செய்; [அதாவது-திருக்கோயில் சமைப்பது, திருநந்தவனம் வளர்ப்பது, திருவிளக்கு ஸமர்ப்பிப்பது, திருவிலகு சேர்ப்பது, திருநீர்தெளிப்பது, திருமாலைதொடுப்பது, திருவாராதநஞ் செய்வது, திருநாமஸங்கீர்த்தனம் செய்வது, திருப்பிரதக்ஷிணஞ்செய்வது, திருப்பல்லாண்டு பாடுவது, தண்டன்ஸமர்ப்பிப்பது முதலான நம் கைங்கரியங்களை மிகவும் பிரீதியோடு செய்] மிகவும் பிரீதியோடு நம் கைங்கரியங்களைச் செய்துவந்தால் வெகு சீக்கிரத்தில் அப்பியாஸயோகத்தையடைந்து அதனால் நம்மிடத்தில் நிலைபெற்ற மனதுடன்கூடிப் பிறகு (நம்மை யடைவதென்கிற) ஸித்தியைப்பெறுவாய்.

கூயெதஜுவ்ருஸுகோவஸி கூத-ுஂஜெ்ராமஜாஸ்ரித:|
ஸவ-ுகுஜி-ுஸவுதயாகம் ததஃகூரூயதாத்மவாநு||கக||

(கக) அப்படி நங்குணங்களைச் சிந்தித்தபடியேயிருந்து நமக்கே பிரீயமான பக்தியோகத்தையடைந்து அந்த பக்தியின் ஆரம்பதசையான கீழ்ச்சொன்ன நங்கைங்கரியத்தைச் செய்வதற்கும் உன்னுலாகாத பக்ஷத்தில், பரபக்திக்கு ஹேதுவாய் முதல் ஆறு அத்தியாயங்களில் சொல்லப்பட்ட(ஆத்மஸ்வபாவ அநுஸந்தாநரூபமான) அக்ஷரயோகத்தைக் கைப்பற்றி அதற்கு உபாயமாக ஸகலகர்மபலங்களிலும் பற்றை விட்டிரு.

[அப்படி பலாபேக்ஷையின்றி நம்முடைய ஆராதநரூபமாய் அநுஷ்டிக்கப்பட்ட கர்மத்தால் ஸித்தித்த ஆத்மத்தியாநத்தாலே அவித்தைமுதலியவெல்லாமறைவுகளும் நீங்கி,பிறகு நமக்கு ஆளாயிருக்கையேஸ்வரூபமான ஜீவாத்மஸாக்ஷாத்காரம்பிறந்து பிறகு தன்னடையே நம்மிடத்தில் சிறந்தபக்தியுண்டாகுமென்று திருவுள்ளம்.[இப்படியே§மேலேஅருளிச்செய்யப்போகிறார்.]

† ஆசைப்பட்டதை யடையுந்திறமை

$ நினைத்ததைச்செய்து முடிக்குந்திறமை.

§ ஸுகுஜு-ுணாதஜ்ருவ-ுருஸிஜ்ஜிம் விந்துதிராநவ: என்று தொடங்கி விஜ்ஞாநிஜுஷ்டொஷ்டுஹஜ்ஜயாயகூடு தெ ஷ்டுஹஜ்ஜ தஃ ஷ்டுஜஸ்நாதாநஜ்ஜாவதிநகூாஜ்ஜ்தி| ஸஜ்ஜுவெஷுஷ்டுஜ்ஜ தெ ஷ்டுஜிஜ்ஜிம்ஷுஜ்ஜிதவாஸி என்று மளவாக வருளிச்செய்யப்போகிறார்.

ஸ்ரூயொஹிஜ்ஞாநஶ்ரவாஸுஜ்ஞாநஞ்ஞாநம்விஶிஷ்யதெ|
யஜ்ஞாத்தூத்கூர்மவெதத்ராமஸ்தாத்ராமர்ஷ்ஹாதிராநஸ்ரூஷுஃகஉ||

(கஉ) கனத்தபக்தியில்லாமல் (எம்பெருமானை ஸ்மரிப்பதென்கிற) அப்பியாஸயோகம் செய்வது கடினமாகையால் அதைக்காட்டிலும் (ஆத்மாவின் உண்மையைச் சிந்தித்திருந்து அதனால்) அகூரமென்னும் ஆத்மஸ்வரூப ஜ்ஞாநத்காரஞ் செய்வதே (ஆத்மாவுக்கு இதஞ்செய்வதில்) சிறந்தது. (ஸித்தியாகாத) ஆத்மஸ்வரூப ஜ்ஞாநத்கார ஞாநத்தைப்பார்க்க (அதற்கு உபாயமான) ஆத்மஸ்வரூபத்தியாநமே (ஆத்மாவுக்கு நன்மை செய்வதில்) சிறந்தது. (ஸித்தியாகாத) அநத ஆத்மஸ்வரூபத்தியாநத்தைக் காட்டிலும் (அதற்குபாயமான) பலாபேக்ஷையற்ற கர்மாநுஷ்டாநமே சிறந்தது. இப்படி பலாபேக்ஷையின்றிக் கர்மத்தை யநுஷ்டித்தால் உடனே பாவம் நசிக்கையாலே மனதுக்கு சாந்தி பிறக்கும். [அப்படி மனது சாந்தியடைந்தால் ஆத்மத்தியாநம் கைபுகுதும். அநதத் தியாநததால் ஆத்மப்பிரத்தியக்ஷம் பிறக்கும்; ஆதமப்பிரதத்தியக்ஷ ஞாநததால் பரபக்தியுண்டாகுமென்று திருவுள்ளம்.]

[இதனால் பக்தியோகஞ்செய்யச் சக்தியற்றவனுக்கு ஆத்மநிஷ்டையே சிறந்தது; அந்த ஆத்மநிஷ்டையும் மனது சாதுவாகாத பக்ஷத்தில் நிலைக்கமாட்டாதாகையால் அதைக்காட்டிலும் அது நிலைப்பதற்காக ஆத்மக்ஞாநத்தையுட்கொண்டு பலாபேக்ஷையின்றிச் செயயும் கர்மநிஷ்டையே மேலானது எனறதாயிறறு.]

(அ-கை.) பலாபேக்ஷையின்றிக் கர்மயோகஞ் செய்பவனுக்கு வேண்டுங்குணங்கள் சொல்லப்படுகின்றன.

கூடஸ்தஸ்வஸ்வபாவஶ்ச ஜிதாத்மாஜிதஸேந்த்ரியஃ|
நிர்மமோநிரஹங்காரஃ ஸமதுஃகஸுகஃக்ஷமீ ||கக||

ஸந்துஷ்டஃஸததம்யொகீ யதாத்மாத்ருடநிஶ்சயஃ|
மய்யர்பிதமநோபுத்திர்யொமத்பக்தஃஸமெப்ரியஃ ||கச||

(கக-கச) (தன்னைப்பகைத்தாலும் தன விஷயததில் உபகாரஞ்செய்தாலும்) ஒருப்பிராணியையும் பகைக்காமல் "என்னுடைய பிழைகளுத்தக்கபடி எம்பெருமானுரிலைவப்பட்ட விணைகள விரோதிக்கின்றன" வென்றும், அப்படியே "இவைகள் உபகாரஞ்செய்கின்றன" என்றும் நினைத்தவனாய், (தன்னைப பகைப்பதோ தனக்கு உபகாரஞ்செய்வதோ) எந்தப்பிராணியிடத்திலும் ஸ்திரஹபுதியைச்செய்து வந்து, (அவைகளுக்குத் தீயர்மேரிட்டால் அவை சனிடத்திலு) சாருணைபுரியுமவனாய், (சரீரம் இந்திரியம் மற்றும் அவைகளைசேர்ந்தவை நினவையெல்லாவற்றிலும்) எனதென்கிற அபிமானமில்லாமல் (தேஹாதிமதுத்மாவென்கிறப்) பிராந்தியற்றவனாய், துனபதன்பங்களை (முறையே விரும்பாமலும் வெறுக்காமலும்) ஸமமாகவெண்ணியவனாய், (அப்படி யிவ வெண்ணுமிரு நூறும் இவரை வெடிழிக்கப்போகாமல் வருகின்ற சீதோஷ்ணதி

களைப்)பொறுத்தவனுய், தன்னடையே கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷித் தவனுய், எப்போதும் (பிரகிருதிக்குப்புறம்பான ஆத்மஸ்வரூபத்தையே) சிந் தித்திருப்பவனுய், மனதைக்(கண்டபடியோடவொட்டாமல்) அடக்கி,(அத்தி யாத்மசாஸ்திரத்தில் சொன்னவர்த்தங்களில்) திடமானநிச்சயத்தோடு, "பக வானுனை வாசுதேவனே பலாபேக்ஷையின்றி யநுஷ்டிக்கப்படுங் கர்மத்தால் ஆராதிக்கப்பட்டவனுய் எனக்கு ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை யுண்டுபண்ணிக் கொடுக்கப்போகிறுனென்று" மனதையும் புத்தியையும் நம்மிடத்தில் வைத் தவனுயெவனிருக்கிறுனே அந்த பக்தன் நமக்கு இஷ்டன்.

யஸ்மான்நோத்விஜதேலோகோ லோகான்நோத்விஜதேசயஃ|
ஹர்ஷாமர்ஷபயோத்வேகைர்முக்தோயஸ்சஸமேப்ரியஃ||கரு||

(கரு) கர்மநிஷ்டனுனயாவனொருவன் லோகத்திற்குப் பிரதிகூலமா யிருக்கும்படிசிறிதுஞ் செய்யமாட்டானே,எவனைக்குறித்து ஒருப்பிராணியும் விரோதஞ்செய்யமாட்டாதோ,[என்றால் இவன்ஒன்றையும் விரோதமாகநினை ப்பவனல்ல னென்றபடி] இப்படியிருக்கையாலே ஒருவஸ்துவினிடத்திலும் ஸந்தோஷமாவது கோபமாவது பயமாவது பயங்கரமான செயலாவது செ ய்யாதவனுயிருக்கின்ற அப்படிப்பட்ட இவனும் நமக்கு இஷ்டன்.

அநபேக்ஷஃசுசிர்தக்ஷ உதாஸீனோகதவ்யதஃ|
ஸர்வாரம்பபரித்யாகீ யோமத்பக்தஃஸமேப்ரியஃ||கசு||

(கசு) ஆத்மாவைத்தவிர மற்றுன்றிலும் அபேக்ஷையில்லாமல் சா ஸ்திரத்தில் சொல்லிய திரவியங்களைக்கொண்டு சரீரத்தை வளர்த்தவனுய், சாஸ்திரோக்த வியாபாரங்களைத் தேர்ந்தநுஷ்டிப்பதில் ஸமர்த்தனுய், மற் றவைகளில் தட்டாதவனுய்,சாஸ்திரோக்தமான காரியங்களைச் செய்யும்பொ ழுது இவனுல் ஒழிக்கப்போகாதபடி வருகின்ற சீதம் உஷ்ணம் முதலிவை களில் துயரப்படாதவனுய் சாஸ்திரத்தில் சொன்னதைத்தவிர மற்றெந்தகரு மத்தையுங் கைவிட்டவனுய், இப்படி யெவனிருக்கிறுனே அந்த பக்தன் எனக்கிஷ்டன்.

யோநஹ்ருஷ்யதிநத்வேஷ்டி நசோசதிநகாங்க்ஷதி|
ஸுபாஸுபபரித்யாகீ பக்திமான்யஃஸமேப்ரியஃ||கள||

(கள) யாவனொருவன் லோகத்திலுள்ள மனுஷ்யாளுக்கு ஸந்தோஷ ஹே துவாயிருப்பதைக்கொண்டு தான் ஸந்தோஷியாமலும், துவேஷஹேதுவாயி ருப்பதைக்கொண்டு துவேஷப்படாமலும்,துயரத்துக்குக்காரணமான பெண் டுபிள்ளை வகைருக்களின் நாசத்தைக்கண்டு துயரப்படாமலும், அப்படி ஒன் றும் நேராதபக்ஷத்தில் அதை வரட்டுமென்று கோராமலும், பாவம்போல் பு ண்ணியமும் ஸம்ஸாரஹேதுவாகையால் இரண்டையும்விட்டவனுய் எவன் என்னிடத்தில் மாத்திரம் பக்தியோடிருக்கிறுனே அவன் எனக்கு இஷ்டன்.

ஸஜ்ஜநஸுஹ்ருதயாஸாநாவஸாநயோः|
ஸ்ரீதாஷவஷவஹ்ருதீவெஷ வஸ்ஹுவிவஜீகுதः|| கஅ||
தவ்ருநிஹாஸ்திகுளநீ ஸஹ்ருவெஷாயெநகெநவீக|
கநிகெகः ஸ்ரீஸதி ஹுக்திஸாநுஷவ்ரியொநாः|| கக||

(கஅ-கக) * சத்துரு மித்திரன் மானம் அவமானம் சீதம் உஷ்ணம் சுகம் துக்கம் இவைகளில் ஸமனுய், ஒன்றிலும் பற்றின்றி ஆத்மாவிடத்தில் சலியாத மனம்பொருந்தியிருக்கையாலே வீடு முதலியவைகளிற் பொருநதாமல் எனனிடத்தில் பக்தியோடு கூடியவன எனக்கு இஷ்டன்.

(அ-கை) ஆகையால் ஆத்மநிஷ்டனெப்பார்க்க பக்திநிஷ்டன்சிறந்தவனென்பதையருளிச்செய்யா நின்றுகொண்டு, தொடங்கின விஷயத்தைத் தலைக்கட்டுகிறுர்.

யெதுயஜ்ஞாஜ்ஞதநிஷ்ம யயொக்தம்வாவ்ருவாஸஸ்ருஷ்டா|
ஸ்ருஷ்டயாநாஷ்ரவஸாஸ்ருஷ்டா ஸுகாவஸ்ருதீவஷ்ரேஷ்டியாः|| உ0||

(உ0) தர்மத்தைவிட்டு நீங்காமல் அமிருதமயமாயிருக்கின்ற (அதாவது பலனுக்கேற்ற உபாயமாயிருக்கின்ற) இந்த பக்தியோகத்தை எவர்களாலும் சொன்னபடி உபாஸிக்கிறுர்களோ அவர்கள் நமக்கு மிகுதியும் இஷ்டர்கள்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
பனிரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீः.

ஸ்ரீமத்ராமாநுஜாயநமः.

பதிநான்குவது அத்யாயம்.

———:o:———

அவதாரிகை.

முதல் ஆறு அத்தியாயங்களில், பரம பலமாய்பரப்பிரம்மமாயிருக்கிறபகவானுகிய வாஸுதேவனை யடைவிக்கும் உபாயமானபக்தியென்கிற பகவத்உபாஸநத்துக்கங்கமாயிருகிற ஆத்மவிஷயமானவாஸ்தவக்ஞாநமானது, ஞாநயோக கர்மயோகங்களென்கிற இரண்டு நிஷ்டைகளாலும் ஸாதிக்கபடுமென்று சொல்லப்பட்டது. நடுவில் ஆறு அத்தியாயங்களிலோ பரமபலமா

---

* 13 - முதலிய சுலோகங்களில் சத்துருமித்திராதிகளிடத்தில் பகைமை முதலியவைகளைப் பாராட்டாமை சொல்லப்பட்டது. இங்கே அந்த சத்துரு முதலியவாகள் நெருங்கி வந்தாலும் மனந்தாழாமை சொல்லப்படுகிறதென்று விசேஷஞ் சிந்துகொள்க.

னவெம்பெருமானுடைய உண்மையான தன்மையையும் அவன் மஹிமைக ளையும் அறிந்து அவனுக்கே அற்றுத்தீருவதென்கிற பக்தியோகத்தின்நிலை சொல்லப்பட்டது. மிகுந்த ஐசுவரியத்தைக் கோரியவர்களுக்கும், கைவல்வி யத்தைமாத்திரம் கோரியவர்களுக்கும் பக்தியோகமானது அவர்கள் கோரிக் கையைச் சாதிக்குமென்றுங் கூறப்பட்டது. இப்பொழுது இந்த மேல் ஆறு அத்தியாயங்களிலும் முன்னீராறு அத்தியாயங்களிற் சொல்லப்பட்டவைகளா னப் பிரகிருதி புருஷர்களின் சேர்க்கையான பிரபஞ்சத்திலுடையவும் ஈசு வரனுடையவும் உண்மையும், கர்மம் ஞானம் பக்தி இவைகளின் ஸ்வரூபமும், இவைகளை யநுட்டிக்கும்படியும், இவையெல்லாமே சோதிக்கப்படுகின்றன. அதில் இந்த பதின்மூன்றுவது அத்தியாயத்தில் தேஹாத்மாக்களின் ஸ்வ ரூபமும், தேஹத்தின் உண்மையை விசாரிப்பதும், தேஹத்தைக் காட்டிலும் வேறான ஆத்மாவையடையு முபாயமும், (பிரித்தறியப்பட்ட) அவ்வாத்மஸ்வ ரூபசாதநமும், அப்படிப்பட்ட ஆத்மாவுக்கு அசேதநத்தோடு சேர்க்கையுண் டாவதற்குக் காரணமும் அதைப் பிரித்தறியும்விதமும் சொல்லப்படுகின்றன.

ஸ்ரீ ஹமவாந உவாச॥ இதம்ஸரீரங்களெய கௌந்தேய க்ஷேத்ரமி தபி தீயதெ| வஎதவெத்திதம்ப்ராஹுஃ க்ஷேத்ரஜ்ஞ இதி தத்விதஃ॥க॥

(க) எம்பெருமானருளிச்செய்கிறார். அர்ச்சுந! இந்த சரீரம் (அதா வது:—நான் தேவன், நான் மனிதன், நான் பருத்தவன், நான் இளைத்தவன் என்று போக்தாவான ஆத்மாவோடுகூட ஒன்று பட்டுத் தோற்றுகிற இந்த சரீரம்) 'இதைக்காட்டிலும் வேறுபட்டு போக்தாவாயிருக்கிற ஆத்மாவின் போகத்துக்காக ஏற்பட்ட க்ஷேத்திரம்' என்று சரீரத்தின் உண்மை யறிந்த வரால் சொல்லப்படுகிறது. இதைப் பிரித்துப்பிரித்தும் மொத்தமொத்தமாயு ம் 'இதை நான் அறிகிறேன்,' என்று எது அறிகிறதோ அது (அறியப்படுகின்ற) இந்த சரீரத்தைக்காட்டிலும் (அறிவதான) * வேறு பொருளென்று ஆத்மா வின் உண்மையறிந்தபேர்கள் சொல்லுகிறார்கள். [ஆனால் அறிகிறவஸ்துவான இதின் ஸ்வரூபத்தை யோகத்தால் திருந்தியிருக்கிற மனதிலைறியலாமேயல் லது கண் முதலியவைகளாலறியப்போகாதாகையாலேமூடர்கள் (பிரகிருதிவி

---

* குடம் முதலியவைகளை யறியும்போது 'தேவனுகிய நான் அல்லது மனிதனுகிய நான் குடத்தையறிகிறேன்' என்று தேஹத்தையும் ஆத்மாவை யும் ஒன்றுபடுத்தி நினைத்தாலும், தேகத்தையறியும்போது இதை நான் அறிகி றேனென்று அறியப்படுவதாய் பிரித்தறிகையாலே, சரீரங்கூட குடம்முதலி யவைகளைப்போல் ஆத்மாவைக் காட்டிலும் வேறுபட்டதே. ஆனால் தேஹ மும் அதுவும் ஒன்றுய்த் தோன்றுவானேனென்றால் உண்மையில் பசுவும் ப சுத்தன்மையும்போல் ஆத்மாவைவிட்டுப் பிரிந்தால் நிலைக்கமாட்டாமல் சரீ ரம் சேர்ந்திருக்கையாலே ஒன்றெனத் தோன்றக்கூடும்.

காரமான) சரீரத்தையே ஆத்மாவென்று நினைத்துவிடுகிறார்கள். இப்படியே மேலே $ அருளிச்செய்கிறார்.

கேஷதரஜ்ஜுவாவிசாம்விஷி ஸவ்புகேஷதரஷுஹாரவத்|
கேஷதரகேஷதரஜயொஜ்ஜுராநம் யதஹராநம்ஹிதம்ஸ்யாத்॥உ॥

(உ) அர்ச்சுந! தேவர் மனிதர் முதலான வெல்லாச்சரீரங்களிலும் அறிவதே வடிவாயுள்ளவஸ்துவதுவோ அதுவும் (அதாவது ¶ கேஷத்திரக்ஞனென்கிறஜீவனும்)நாந்தானென்றறி. [என்றால்-சரீரமானது ஆத்மாவோடு சேர்ந்திருப்பதே ஸ்வபாவமாய் தனித்து நில்லாமைகொண்டு அதை ஆத்மாவோடு ஒன்றுபடுத்தியே குறிப்பிடுவதுபோல், ஆத்மாவும் பகவானோடு சேர்ந்திருப்பதே ஸ்வபாவமாய் தனித்திராமையாலே பகவானோடு ஒன்றுபடுத்தியே குறிக்கத்தக்கது என்றபடி.]

[மண்முதலியவைகளின் தொகையான சரீரமும் அதற்குப் புறம்பான ஆத்மாவும், (பகவானுக்கு சரீரமாயிருப்பதே ஸ்வரூபமாயும் ஸ்வபாவமாயுமிருக்கிறபடியால்) ப்கவத்ரூபங்களென்று சுருதிகள் சொல்லுகின்றன. எங்ஙனேயென்னில்:—யதீவ்யதிவ்யாம்திஷந்வ்யதிவ்யாகஹதொயம்வ்யதிவீந வெஷயஸ்வ்வ்யதிவீஸரீரே யதீவ்யதிவீஷதொயஷயதிஸ்யதகூதாதொயாஷ்யதஃ என்று தொடங்கி ய கூதநிதிஷ்டாத தொநாதொயஷாதாந வெஷயஸ்யாதாஸரீரம்யகூதாநஷதொயஷயதி ஸ்யதகூதாதொயாஷ்யதஃ இத்தியாதிகள். இப்படி எம்பெருமான் ஆத்மாக்களுக்கு அந்தரியாமியாயிருக்கைதான் அவனை அவைகளோடொன்றுபடுத்திச் சொல்லுவதற்குக்காரணம் என்று கஹரோகாத மஹாகெஸரஸவ்புஹ்ம்தாஸரயஷ்யதிஃ என்றும் நதஷவிவிநாயதாஸ்யாநயாஹ்ம்தம்வராவரே என்றும் விஷ்ணுராஹதிஷ்டம் கூதகெகாம்ஸ்நஷ்யதிதாஜஸ என்றும் மேலுங் கீழும் அருளிச்செய்து, நடுவில் கூதிதாநாஷஹம்விஷ்ணோஃ இத்தியாதியில் ஒன்று படுத்தி யருளிச்செய்தார்.]

ததிதம்யவ்யாஹ்ருவ யஷிகாரிய தஸ்ரயத|

(உ உ) இப்படி சரீரத்தையும் ஆத்மாவையும் பிரித்தறிவதோடு அவையிரண்டும் நமக்குச் சரீரமாயிருக்கையாலே நமது ஸ்வரூபங்கள் என்று அறிவதுதான் ஞாநமென்று நம்முடைய ஸித்தாந்தம்.

இங்கே சிலர் சொல்லுவது:—'கேஷத்திரக்ஞனும் நானே யென்றறி' என்கையாலே ஜீவனுக்கும் பிரம்மத்துக்கும் ஐக்கியம் (அதாவது ஒருமை) தொ

$ உதாஹரணம்ஸ்யாதிதம்வாவிஹாஸ்துராநம்வாஹ்ருணாநிதி| விஷ்ணொராநாநவஸ்ருஜிவஸ்ருஜிராநவகூஷ்வா॥ என்று மேலே அருளிச்செய்கிறார்.

¶ 'கேஷத்திரக்ஞனென்கிற ஜீவனும்' என்கிற உம்மையாலே கேஷத்திரமென்கிற சரீரமும் நாந்தானென்று சொன்னதாய்த் தெரிகிறது.

ன்றுகிறது; ஆகையால் ஈசுவரனுயிருக்கச்செய்தே பரப்பிரம்மத்துக்கு ஜீவத்தன்மையும் வருகிறதென்று ஒப்புக்கொள்ளவேண்டும்; அந்த ஜீவத்தன்மையொழிவதற்காகத்தான் இப்படி ஒன்று படுத்தி உபதேசிக்கிறார்; இப்படி ஆப்தரான பகவானுடைய உபதேசத்தாலே, (இதுபாம்பல்ல பழுதை என்கிற ஆப்தனுடைய உபதேசத்தால் பாம்பென்கிறப்பிராந்தியொழிவதுபோல) ஜீவனென்கிறப் பிராந்தியொழிந்துபோம் என்று சொல்லுகிறார்கள்.

அவர்களைக் கேட்கிறோம். இங்கே உபதேசிக்கின்ற பகவானுகிய பரமேசுவரனுக்கு ஆத்மஸ்வரூபக்ஞானம் பிறந்து அதனால் அக்ஞானம் ஒழிந்ததா? இல்லையா? ஒழிந்தபக்ஷத்தில் - யாதொரு விசேஷமுமில்லாமல் ஞானமாத்திரமாய் தனியே விளங்குகிற ஆத்மாவில் அதற்குவிரோதமான நினைவுபிறக்க இடமில்லாமையாலே குந்திபுத்திரனே வேறுகப்பார்ப்பதும் உபதேசிப்பதும் மற்றுங்கூடாது. இனி ஆத்மஸாக்ஷாத்கார மில்லாமையாலே அக்ஞானம் ஒழியவில்லையென்னும்பக்ஷத்தில் அக்ஞானியாயிருந்து உபதேசிப்பதென்பது சிறிதுங்கூடாது; மேலும் பகவானே "அர்ச்சுன! உனக்கு தத்துவந் தெரிந்தவர்கள் ஞானத்தை யுபதேசிப்பர்கள்" என்று அருளிச்செய்திருக்கிறார். ஆகையால் இப்படிப்பட்ட வாதங்களெல்லாம், ஸ்ருதி, ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம், நியாயம் இவைகளுக்கும் தங்கள் வார்த்தைக்கும் விரோதமாய் லோகத்தை மருளச்செய்வதற்காகச்செய்யும் அக்ஞானிகளின் வாதங்களாகையால் இவைகளை ஆதரிக்கலாகாது.

ஆனால் உண்மையேதென்றால் சொல்லுகிறோம்:—அசித்தும், சித்தும், பிரம்மமும் முறையே போக்கியமும் போக்தாவும் ஈசனுமென்று அவைகளின் ஸ்வரூபத்தைப்பிரித்துச் சில சுருதிகள் சொல்லுகின்றன. அவையாவன:—
கூஹூராநாயீஷ்வரஜிதவிஸ்வஜிதத்விஸ்வாநுராயயாவஸ்நிராஸ்ஃஸோயாதேவ்யக்ஷ்யதிம்விஸ்நுராநாயிநதேஉஹ்வஸ்ஸ்ஃ॥ கூஸ்ம்வ்யாநஜ்ஞதாகூஸ்ம்ஹ்ஸ்ஃகூஸ்ராத்தாநாவீஸ்மதெஜ்வவநகஃ॥லகூஸ்ராணம்கூஸ்ணாயிவாயிவொநவாலுகுஸ்ரிஜ்நிதாநவாயிவஃவ்யாநகெக்ஷத்ஜ்ஜவதிமதேணைஸ்ஃ॥வதிம்விஸ்வஸ்நுராதிஸ்ஸ்ராம்ஸ்ராஸ்ரதம்ஸ்ரிவஜ்வநுர்தே॥ ஜ்ராஜ்ஞளஜ்ராவஜ்ரா வீஸ்ரநீஸ்ரள ॥ நிதெநுர்நிதெநுர்நாம்வெதநஸ்ரத்நாநாம் வனகூரவைஹ்மநாம் வொரிஜயாதிகூரோஸு॥ ஹொகூராஹொஸ்ரும்வ்ருரிதாஸ்ரஜூஜகூரா॥வ்யுஷ்டாதாநம் வ்ருரிதாஸ்ரம்வஜகூரா ஜ்ரூஷ்டஸ்தவெநாஜ்யதக்வஜித்॥ தவொஸ்ரநுர் விவ்யம்வ்ஸாஜுதி கூநஸ்ரநுநெநுராஜஹீவாகுஸீதி ॥ கூஜ்ராஜ்ஞ காம்வொஹித ஸ்ரூகூஜ்ஷராம்வெஹீம் வ்ருஜ்ராம்ஜநயத்ஸீம் ஸ்ரூஸ்ம வாழ்॥ கூஜ்ராவெஹுர்குகூஜ்ரூஷஜ்ராணைராஜ்நஸ்ரவெதஜ்ஹாவெதுர் நாம் ஹ்ரூகூவொஹுமாஜ்ரிஜ்ராஜ்ராநுஃ ॥ மளாநாஜ்ருவ்தவீஸ்ராஜ்நிதீர்லஸ்மதஹாவிநீ॥ ஸ்ரஜ்ராவெநவ்யுக்ஷ்வஸ்ரூஸ்ரூஷ்ரூநிஃஸ்ரொராஜ்நீஸ்ரயாஜ்ரூஹுர்தி ஸ்ரொவஜ்ரா நஃ|ஜ்ரூஷ்டம்யஜ்ரா வஸ்ருதுர்நுநுர்நீஸ்ரஜ்வஸ்ருஜ்ரஹி ஜ்ரநதிதிவீதஸ்ரொகஃ இத்யாதிகள்.

அப்படியே இங்கும் கஹஜாஸஜதீயஜிஹ்நா வ்யக்யதிரஷ்டயா|கவலயதி தவ நாம்வ்யக்யதிம்விஜிஜ்ஞாஸு|ஜீவஹம்தாநிகளஜெயவ்யக்யதிம்யாதிராதிகாஸு॥ கரு கஷயெவ நவ்நாநி கரு ராஷளவிஷ்ணுஜாதுஹஸு॥ வ்யக்யதிம்விஷ்ணுவஷ்டஹ்ருவிஷ்ணுஜாதிவ நாம்நஃ| ஹம்தஹ்ராஜதிஜம்க்ஷ்ணுதி ஷவஸம்வ்யக்யதவ்ஸு ஸாகு| ஜயாயுகெஷணவ்யக்யதி ஷம்யதிதலவஸாவஸு| ஹெத நாதிநகளஜெயஜமஜிவரிவதுதெ ॥ வ்யக்யதிம் வரவஷ ஜெஜ்ஞவவிஜ்ஞ நாதீஉஹாவவி ॥ ஜஜயொநிஜுஹஜ ஹதவ்ஷிநும ஹும்ஷயாஜ்ஞுஹஸு|ஷம்ஹவவ்ஷவுஹம்தாநாம்ததிதாஹவதிஹாரத என்று சொல்லப்படுகின்றது.

இப்படி போக்தாவாகவும் போக்கியமாகவுமிருக்கிற சித்தும் அசித்தும் எந்த நிலையிலும் பரமபுருஷனுக்குச்சரீரமாய் அவனால் ஏவப்படுமதாயிருக்கையாலே அவனை விட்டுப்பிரிந்து நிலைக்கமாட்டாதென்றும், பரமபுருஷன் அவைகளுக்கு ஆத்மாவாயிருக்கிறனென்றும் சில சுருதிகள் சொல்லுகின்றன. எங்ஙனேயென்னில்:— யர்வ்யதிவ்ருதஜிஷ்ணு வ்யதிவ்ருதஸ்தெரோயம்வ்யதிவீநவெஷயஸ்ருவ்யதிவீஸரீரஸ்ய யர்வ்யதிவீஷதெரோயஸ்யதி என்று தொடங்கி யக்ஷுதநிதிஷ்டந்நாதிநாதெரோயஸ்தாநவெஷ யஸ்ருக்ஷுதாஸரீரம் யக்ஷுதாநஸதெரோயஸ்யதி ஸதக்ஷுதாதெர ருஸ்ருஷ்டி: என்றும்: அப்படியே யர்வ்யதிவீஸதெரஸ்ருஷ்ருயஸ்ருவ்யதிவீஸரீரம் யம்வ்யதிவீநவெஷ என்று தொடங்கி யொஷக்ஷரஸதெரஸ்ருஷ்ருயஸ்ருதக்ஷரம்ஸரீரம் யதக்ஷரம்நவெஷ யொஷ்தவ்யதெரஸ்ருஷ்ருயஸ்ருவ்யதவ்யஸரீரம்யம்ஜ்ஞதவ்யம்நவெஷ வனவஷவஸவ்ருஹம்தாதெராதாஉவஹத வாவாஜ்ஞிவெராதெவ வனகோநாராயணஃ என்றும் கதஃவ்யவிஷ்ஷ்வாஜ்ஞாநாநாம்ஸவ்ருதா என்றும் சொல்லுகின்றன.

இப்படி எந்த நிலையிலும் சேதநாசேதநங்களைச் சரீரமாயுடையனாய் அவைகளைப்பிரகாரமாகக்கொண்ட பரமபுருஷனே, காரியமான நிலையிலும் காரணமான நிலையிலும் ஜகத்ரூபமாயிருக்கிறனென்று இவ்வாத்தத்தை யறிவிப்பதற்காகசிலசுருதிகள் (காரியநிலையிலும்காரணநிலையிலுமுள்ள ஜகமானது அந்த பகவானே எனறு) சொல்லுகின்றன. எங்ஙனே யென்னில்:— ஸதெவஸொம்ய ருதமக்ர ஆஸீ தெகமெவாத்விதீயம் | ததைக்ஷத பஹ்வ்யாம் ப்ரஜாயெயெதி ததெதஜ்ஜலமஸ்ருஜத என்று தொடங்கி ஸந்மூலாஸ்ஸொம்ய ருமாஸ்ஸவ்ருஹ்ரீ ப்ரஜாஸ்ஸுகாயதநாஸ்ஸ்வ்ருதி ஷாவெனதஜாத்ருஷ்டிஜம்ஸவ்ரும்ததத்ரும்ஸ கூதாதத்தமஸிஸ்ருவ்தகெதெதா என்றும அப்படியே ஸொகாமயதபஹ்வ்யாம்ப்ரஜாயெயெதிஸதபொதப்யதபஸ்தப்த்வாஇதஸ்ருவ்ஜத என்று

தொடங்கி ஸதஸ்ஸுநாநாதஸ்ஸுஸதஸ்ஸுஜ்ஜவக என்றும் ஹதோஹதஜீவிதாவெஹெவதா கூநநஜீவெநாதநாந்வயவிஸ்ருநாசாஸமவேவஸ்ருகரவாணி। ததஸ்வஷாததெவாந் வாவிஸகுதஉந்வயவிஸ்ருஸதஸ்ருஸ்ருவாஹவக்.....விஜாநந்ஜுவிஜாநந்ஜுஸதஸ்ருஸ்ருநாதஸ்ஜுஸதஸ்ருஜ்ஜவக என்றும் சொல்லுகின்றன.

